விலை ரூபா 30 பக்கங்கள் 52

# உதயன்

சுடர் 31 கதிர் 038 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 18, ஞாயிற்றுக்கிழமை 03.01.2016

29°c - 26°c
தெளிவான வானம்

## தங்கத்தின் விலை குறைவடையும்

கொழும்பு, ஜன.3
தங்கத்தின் விலை குறைவடையும்எனத்தேசியஆபரணங்கள் அதிகார சபையின் முகாமையாளர் சிறிசந்திர எதிரிசிங்க பக். 49

# வலி.வடக்கிலுள்ள படை முகாம்களை இடம்மாற்ற பணிப்பு

## நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 3
வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு படைத் தலைமைக்கு ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி செயலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக, நம்பகரமாகத் தெரியவருகின்றது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேசிய நத்தார் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது, 6 மாத காலத்தினுள் வலி.வடக்கு இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருவேன் என்று தெரிவித்திருந்தார்.
இதன் பின்னரே ஜனாதிபதி செயல கத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு சில அரச அதிபர்கள், மீள்குடியேற்ற அமைச்சு அதிகாரிகள், இராணுவத் தரப்பினர், ஜனாதிபதி செயலக அதிகாரிகள் என்று உயர்மட்டத் தரப் பினர் கலந்து கொண்டனர்.
இந்தக் கலந்துரையாடலில் பக். 49


கோப்புப் படம்

"6 மாத காலத்தினுள் வலி. வடக்கு இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருவேன் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார்."



## ஜனநாயகம்,மனித உரிமையில் 2015 இல் இலங்கை முதலிடம்

ஜனாதிபதி மைத்திரி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 3
கடந்த வருடத்தில் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணத்துடன் செயற்பட்ட நாடுகளில் இலங்கை முதலிடம் வகிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
வெளிநாடு சென்றிருந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம்பான்கீமூனைச் சர்வதேச மாநாட்டில் சந்தித்தபோது இதனைத் தெரிவித்ததாக நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
பொலனறுவை புத்தி மண்டபத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடந்த வரு பக். 49

## இலவச அம்புலன்ஸ் சேவை வடக்கில் ஆரம்பம்

விரிவு பக். 02

## முதலாவது அமைச்சரவைக் கூட்டம் புதனன்று

கொழும்பு, ஜன.3
இந்த வருடத்துக்கான முதலாவது அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.
தனிப்பட்ட ரீதியில் வெளி நாட்டுக்குப் பக். 49

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு இன்று

கொழும்பு, ஜன.3
2015 ஆம் ஆண்டுக்கான ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று வெளியிடப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம். என். ஜே.புஷ்பகுமார அறிவித்துள்ளார்.
இது தொடர்பில் பரீட்சைகள் திணைக் களம் நேற்று பக். 49

## வட்டுவாகல் காணி அபகரிப்பு; பெப்ரவரி இறுதிக்குள் முடிவு

முல்லைத்தீவு, ஜன.3
வட்டுவாகலில் கடற்படை முகாம் அமைந்துள்ள காணிகளின் விடுவிப்புத் தொடர்பில் பெப்ரவரி மாத இறுதிக்குள் முடிவை வெளியிடுவதாகப் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் காணி உரிமையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.
முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் 28 தமிழ் மக்களினதும், 5 சிங்கள மக்களினதும் காணிகளில் அமைந்துள்ள கடற்படை முகாம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளருக்கும் காணி உரிமையாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுக் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
இந்தச் சந்திப்பின் நிறைவில் காணி உரிமையாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் இவ்வாறு கூறியுள்ளார்.
வட்டுவாகல் பகுதியில் மக்களுக்குச் சொந்தமான 626 ஏக்கர் நிலப்பரப்பில் கடற்படையினர் முகாமிட்டுள்ளனர். இதனை மீள ஒப்படைக்குமாறு மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்தபோதிலும் குறித்த காணிகளை மீள வழங்க மறுக்கும் கடற்படையினர் இப் பிரதேசத்தில் ஓர் நிரந்தரக் கடற்படைத் தளத்தை அமைக்க முயன்று வருகின்றனர்.
இந்த 626 ஏக்கர் நிலப்பரப்பையும் முழுமையாக அபகரிக்கத் தடையாக உள்ள காணி உரிமையாளர்களை நேற்றுக் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் ஊடாக அழைத்த பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் இது தொடர்பில் உரையாட முற்பட்டவேளையில் கூட்டத்தின்
ஆரம்பம் பக். 49

முச்சந்தி முரளி


அப்ப ஐயா ஒரு வருச முடிவில கலக்கப் போறார் எண்டிறியளோ....

## தேசிய அரசைக் கவிழ்க்கச் சதி; தீவிர ஆராய்வில் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.3
தேசிய அரசைக் கவிழ்ப்பதற்கு கூட்டு எதிர்க்கட்சியினர் பல்வேறு சதிகளை முன்னெடுத்து வருவதாகப் புலனாய்வுப் பிரிவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்து, சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் ஜனாதிபதி விசேட கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.
மகிந்த ஆதரவாளர்களான கூட்டு எதிர்க்கட்சியினர் தெற்கில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தி மைத்திரி-ரணில் தலைமையிலான தேசிய அரசைக் கவிழ்ப்பதற்கு சதித்திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும், அதற்கமையவே வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராகப் பல்வேறு ஆர்ப்பாட்டங்களைத் தூண்டி விட்டதாகவும் குறிப்பிட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவு கடந்த வாரம் ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பித்திருந்ததாகச் செய்திகள் பக். 49

## டிசெ. 31 முதல் மூடப்பட்டன காணி பறிப்பு அலுவலகங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 3
இராணுவத்தினருக்குத் தேவையான காணிகளைச் சுவீகரித்துக் கொடுப்பதற்காக மாவட்டச்செயலகங்களில் திறந்து வைக்கப்பட்ட காணி சுவீகரிப்பு அலுவலகங்கள் டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் மூடப்பட்டுள்ளன. இது தொடர்பிலான அறிவித்தல், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருக்குக் காணி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
மகிந்த அரசின் காலத்தில் வடக்கு மாகாணத்தில், படையினர் நிலைகொண்டுள்ள காணி பக். 49

## திருட்டு, கொள்ளைகளுடன் தொடர்புடையோர் சிக்கினர்

வல்வெட்டித்துறை ஜன .3
வடமராட்சியில் வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த சில மாதங்களாக திருட்டு, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் எனக் கூறி 16, 20 வயதுகளுடைய சந்தேகநபர்களை நேற்று மாலை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
குறித்த சந்தேகநபர்கள் அண்மையில் மருந்தகம் ஒன்றிற்குள் இரவுவேளை கூரையைப் பிரித்து உள்நுழைந்து திருடிய போது மருந்தகத்தில் பொருத்தப் பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பக். 49

# இலவச அம்புலன்ஸ் சேவை வடக்கில் புதனன்று ஆரம்பம்

## 100 அம்புலன்ஸ்கள் கொண்ட வலையமைப்புடன்

யாழ்ப்பாணம், ஜன. 3
வடக்கு மாகாணத்தில் மருத்துவ நிலையங்களிலிருந்தும், விபத்துக்களின் போதும் நோயாளர்களை விரைவாக வைத்திய சாலைகளில் சேர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட 24 மணி நேர இலவச அம்புலன்ஸ் சேவை எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென 100 அம்புலன்ஸ்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

021 222 4444 அல்லது 021 222 5555 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு இந்தச் சேவையைப் பெறமுடியும் என வடமாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சுகாதார அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சேவை தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அவசர மருத்துவ நிலை மற்றும் விபத்துக்களின்போது நோயாளர்களின் உயிரிழப்பையும், மருத்துவப் பின் விளைவுகளையும் இயன்றளவு குறைக்கும் நோக்குடன் இந்த அவசர அம்புலன்ஸ் சேவை உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கில் இந்தச் சேவையை ஒருங்கிணைக்கும் இடமாக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை இயங்கும். வட மாகாணத்திலுள்ள சகல அம்புலன்ஸ்களும் இந்த வலையமைப்பில் இணைக்கப்படும்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் கொண்ட வடக்கு மாகாணத்தினுள் இந்தச் சேவை வழங்கப்படும். விபத்து ஏற்பட்டாலோ அவசர மருத்துவ நிலை தேவைப்படும்போதோ, அவசர பிரசவ நிலைகளின் போதோ இந்தச் சேவையைப் பெறமுடியும்.

ஆனால் கிளினிக்குகளுக்குச் செல்லவோ, தனியார் வைத்திய சாலைகளுக்குச் செல்லவோ, அவசரமற்ற மருத்துவ நிலைகளின் போதோ இந்தச் சேவையைப் பெற முடியாது.

சேவை வழங்கவென யாழ். மாவட்டதில் உள்ள வைத்திய சாலைகளின் 31 அம்புலன்ஸ்களும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 18 அம்புலன்ஸ்களும், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலுள்ள தலா 17 அம்புலன்ஸ்களுமாக 100 அம்புலன்ஸ்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இதனை ஒருங்கிணைக்கவென ஒவ்வொரு அம்புலன்ஸ்களுக்கும் ஒவ்வொரு கையடக்கத் தொலைபேசி வழங்கப்பட்டுள்ளன. குறித்த கையடக்கத் தொலைபேசிகள் அந்தந்த அம்புலன்ஸ்களுக்கு மட்டும் உரியவை.

அவற்றுக்கு மீள்நிரப்பல் செய்து வைத்திருப்பதோடு அவற்றை எந்நேரமும் இயங்கு நிலையில் வைத்திருக்க வேண்டியது சாரதிகளின் கடமை. அத்துடன் சாரதிகள் இடமாற்றத்தில் செல்லும் போதோ அல்லது விடுமுறையில் செல்லும்போதோ புதிய அல்லது பதில் சாரதியிடம் அதனை ஒப்படைக்க வேண்டும்.

பொதுமக்களிடமிருந்து அவசர அழைப்பு நிலையத்துக்கு அவசர அழைப்புக் கிடைத்தவுடன், அந்த இடத்தை அண்மித்து எந்த அம்புலன்ஸ் உள்ளது என்பதை ஜீ.பீ.எஸ். தொழிநுட்ப உதவியுடன் கண்டறிந்து அந்த அம்புலன்ஸுக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவலை வழங்கி உரிய இடத்துக்கு அம்புலன்ஸ்களை அனுப்பி வைப்பர். அம்புலன்ஸ்கள் நோயாளிகளை ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ஜ-4,9)

# உருளைக்கிழங்குச் செய்கையை யாழில் விஸ்தரிக்க நடவடிக்கை

## 100 ஹெக்ரேயர் இலக்கு

அச்சுவேலி, ஜன.3
யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கையை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு வெளியே உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை உருளைக்கிழங்குகள் விநியோகிக்கப்படுகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்த மூன்று பிரதேச செயலக பிரிவுகளில் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். கடந்த வருடம் 87 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்குச் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த வருடம் உத்தேச உருளைக் கிழங்குச் செய்கையின் அளவு 100 ஹெக்ரேயருக்கு மேற்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பரீட்சார்த்த அடிப்படையில் உருளைக்கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்ட தொல்புரம், சண்டிலிப்பாய், தீவகம், தென்மராட்சி, வடமராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் உருளைக்கிழங்குச் செய்கை எதிர்பாராத வெற்றி அளித்துள்ளதால் இந்த வருடம் உருளைக்கிழங்குச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் ஆர்வம் கொண்டு விவசாயத் திணைக்களத்துக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு 50 வீத மானிய விலையில் விதை உருளைக்கிழங்குகள் தற்போது வழங்கப்படுகின்றன.

பாரம்பரிய உருளைக்கிழங்குச் செய்கைப் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு வெளியேயும் இந்த வருடம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகப் பிரிவுகள் கரவெட்டி, திக்கம், பருத்தித்துறை, பொலிகண்டி, வடமராட்சி கிழக்கு, தீவகம் ஆகிய பகுதிகளுக்கே விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசங்களில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு 20 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தீவகத்துக்குக் கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படுவதோடு பயிர்ச்செய்கை நடைபெறும் தீவுகளில் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-ஜ-11)

# உண்ணிக் காய்ச்சலால் யாழில் கடந்த வருடம் 700 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.3
யாழ். குடாநாட்டில் உண்ணிக் காய்ச்சலால் கடந்த வருடம் சுமார் 700 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் காய்ச்சல் ஏற்படாது இருக்க வேண்டுமாயின் சவர்க்காரம் போட்டு குளித்தால் போதுமானது என்று பிராந்திய தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த நோய்த் தொற்றால் பீடிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துள்ளனர். அவர்களில் அதிகமானோர் வைத்தியசாலை விடுதிகளிலிருந்தே சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். வருட இறுதியிலேயே இந்தத் தொற்று எண்ணிக்கை மிக அதிகமாக இருந்துள்ளது. அதிகமான தொற்று கிராமப் புறங்களிலும் மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளிலுமே காணப்பட்டுள்ளது.

கால்நடைகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்பவர்கள் மற்றும் தொழில் நிமித்தம் காடுகளுக்குச் செல்பவர்களுக்கே அதிகளவில் இந்தத் தொற்று ஏற்பட்டுள்ளது.

அந்தத் தொற்று ஏற்பட்டு காய்ச்சல் ஏற்படாமல் இருப்பதற்கு தினமும் சவர்க்காரம் போட்டுக் குளியுங்கள். உடலை மறைக்கும் அளவுக்கு ஆடைகள் அணிந்து செல்வது பாதுகாப்பானது. எனினும் தொழில் நிமித்தம் வியர்வை உள்ளிட்ட பல காரணங்களால் அது சாத்தியப்படுவது குறைவாகவுள்ளது. எனவே தொற்றுப் பெருகாதவாறு பாதுகாப்பாக இருத்தல் வேண்டும் - என்றனர்.

(ஐ-ஜ-4)

# வீட்டில் அரச சாராயம் விற்றவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.3
பனிப்புலம், குஞ்சம்கலட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் வீட்டில் வைத்து அரச மதுபானப் போத்தல்களை விற்பனை செய்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் 180 மில்லி லீற்றர் மற்றும் 750 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய இரு போத்தல்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

கைதான சந்தேகநபருக்கு எதிராக எதிர்வரும் 6 ஆம் திகதி மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ஐ-ஜ-107)

# வைத்தியசாலையில் திருடியவர் முன்னரும் திருட்டில் ஈடுபட்டவர்

## பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3
யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த வியாழக்கிழமை நகைகளைக் கொள்ளையடித்த நபர், அங்கு முன்னரும் நகைகளைக் கொள்ளையடித்துள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கடந்த வியாழக்கிழமை வைத்தியசாலையில் வைத்து இரண்டே கால் பவுண் நிறையுடைய நகைகளைத் திருடியிருந்தார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. திருடிய நபர் வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்றிருந்த நிலையில் பின்னர் கைது செய்யப்பட்டார். புதிய செம்மணி வீதி கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபரே அவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் முன்னர் திருடிய நகைகளும் சேர்த்து அவர் திருடி விற்றார் என்று கூறப்படும், பதினொன்றரைப் பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களிடம், தான் வைத்தியசாலையில் பணிபுரியும் நபர் போல் இனங்காட்டி, நோயாளர்களுக்கு உதவி செய்வார். மற்றவர்கள் நம்பிக்கை வைத்துக் கொள்ளும் வகையில் நடந்து கொள்ளும் இவர், சத்திரசிகிச்சை மற்றும் இதர பரிசோதனைகளுக்கு செல்லும் போது நகைகளைத் தானே வாங்கி வைத்து பாதுகாப்பது போல் பாசாங்கு செய்து திருடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர்.

வைத்தியசாலை வளாகத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடும் நபர்கள் தொடர்பில் 021 222 2222 என்ற பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(ஐ-4,107)

# திருடப்பட்ட மாடு இறைச்சியாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.3
கரவெட்டிப் பகுதியில் உள்ள மேய்ச்சல் தரவையில் கட்டி வைக்கப்பட்டிருந்த மாடு ஒன்று, துன்னாலை ஞானசாரியார் பகுதியில் உள்ள் பற்றைக்குள் இறைச்சியாக்கப்பட்ட நிலையில் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

ஞானசாரியார் பகுதியில் உள்ள பற்றை ஒன்றுக்குள் மாடு ஒன்று இறைச்சியாக்கப்படுகின்றது என்று பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலை அடுத்து அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்த பொலிஸார், வெட்டப்பட்ட நிலையில் 20 கிலோகிராம் இறைச்சியை மீட்டுள்ளனர்.

இந்த நிலையில் பொலிஸாரின் வருகையை அறிந்து கொண்ட சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ளனர். தப்பிச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கையைக் குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-ஜ-107)

# 2016 முதலாம் தவணைக்காக பாடசாலைகள் நாளை திறப்பு

கொழும்பு,ஜன.3

2016 ஆம் ஆண்டின் முதலாம் தவணைக்காக பாடசாலைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

எனினும் ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு மத்திய நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகள் திறக்கப்படமாட்டா. அவை தவிர்ந்த ஏனைய பாடசாலைகளே கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்படவுள்ளன.

இதேவேளை, விடைத்தாள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வரும் 87 பாடசாலைகள் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்படும்.

கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வரையில் இரண்டு கட்டமாக விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் 87 பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள, 109 விடைத்தாள் மதிப்பீட்டு நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மதிப்பீட்டு நடவடிக்கைகளைக் கிரமமாக மேற்கொள்ளும் நோக்கிலேயே அந்தப் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 5 ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-ஜ-10)

British College Of Beauty Studies Olialakan Studio
இணைந்து நடத்தும் பெண்களுக்கு பொருத்தமான 45 பாடநெறிகள்
சிலரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் அழகுக்கலை பயிற்சி வகுப்பு
அழகுக்கலை ஒரு நாள், 3 நாள் பயிற்சி பட்டறை
கை, கால், தலை பராமரிப்பு (Hand, Foot, Head Spas) Facials, பெரிய முகத்தை, மூக்கை சிறிதாக காட்டுவதற்கான Makeup, New Hair Styles 25, New Eye Makeup.

ஒரு பயிற்சி வகுப்பில் 8 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
பதிவுகளுக்கு முந்துங்கள்
British College of Beauty Studies
Palaly Road, Thirunelvely Junction. T.P: 076 701 1645

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2720 திகதி: 2016-01-02
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 35 38 53 66 Y
போனஸ் இல: 07
திங்கட்கிழமை ஜக்பொட்: ரூ. 18,923,450/-
நீல நிற டிக்கட்டுக்கள் 2016.01.04 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
Web: www.dlb.lk

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 443
சீட்டிழுப்பு திகதி 2016.01.02
வெற்றி இலக்கங்கள்: 09 45 66 72 Z
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 43,378,080/=
Web: www.dlb.lk

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
af
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி


இலங்கையில் FRENCH FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1092 கிளைகள். தலைமை நிறுவனம் 1883 PARIS இல் நிறுவப்பட்டது.
இலங்கையில் AF மட்டுமே INTERNATIONAL DIPLOMAS (DELF A1,A2) ஐ வழங்குகிறது.
எமது A1 சான்றிதழைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சைக்கு தோற்ற வேண்டியதில்லை. A1 பரீட்சைக் கட்டணம் AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 1300/= (02.04.2016 நடைபெறுகிறது) கொஞ்சம் பிரெஞ் படித்தவர்களும் எம்முடன் இணையலாம்.
இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD,BOOKS பாவனை...
யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND... செல்கிறார்கள். பிரெஞ் மொழிபெயர்ப்புகள். பாடசாலை/பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டணம் மிக குறைவு.
ஆரம்பம் : 10.01.2016 உடன் தொலைபேசியில் பதிவு செய்யுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் →புகையிரதகடவை →AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

தென்னந்தோட்டம் விற்பனைக்கு
இயக்கச்சியில் A-9 பாதை அருகில் 48.2 ஏக்கர் நிலம், 2 கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. மின்சார வசதி, நல்ல போக்குவரத்துப் பாதை, என்பன உண்டு.
கேந்திரராஜா: 001 416 321 6411

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேடமாக வடிவமைக்கப்பட்ட குறுகிய கால ஆங்கிலக் கற்கை நெறி.
SPOKEN ENGLISH
Before 7500/= New 2700/= Duration 1 1/2 Month

| Courses | Duration | Fee Before | Fee Now |
|---|---|---|---|
| Dip.in.English | 3 Months | 15,000/= | 9,000/= |
| IELTS | 3 Months | 30,000/= | 18,000/= |
| IELTS-Life Skills | 2 Months | 20,000/= | 12,000/= |
| Spoken Sinhala | Monthly | 2000/= | 1,200/= |

No Admission Fee On or Before - 15th - Jan - 2016
CIL Cambridge Institute of London
No : 17, 3rd Lane, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
Tel : 021 2217774, 0777382108

SPOKEN English With Grammar
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மாணித்தியாலங்களாக 3 மாதங்களுக்கு நடைபெறுவதுடன் பகுதிநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில் இரவு (6-8pm) நேரங்களிலும் நடைபெறும்.
Duration : 3 Months Fee : 13250/=
BRITISH COLLEGE of Education
Hot line 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
39, Convent Rd, Mannar. Tel : 023-4924124
136, A9 Rd, Paranthan, Kilinochchi. Tel : 021-4927497 (10/01/16)

SINGER FINANCE இடமிருந்து மட்டுமே
பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக
அதிகடன் தொகை குறைந்த வட்டி வீதத்தில்

தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
இல.36, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்.

மாபிள்ஸ்
ரெறாசோ (Terrazzo) மாபிள் பதித்தல், கிறனைற் (Granite) சமையலறைத் தட்டு, நில வேலைகள் நவீன முறையில் செய்து தரப்படும்.

Since 1952
தொல்புரம்.
தொடர்புக்கு : 021 225 0186, 077 355 3372, 077 630 6733

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி

Spoken English
Veta Fluency Diploma
யாழ்ப்பாணம்: Mon, Wed, Fri 9.30 a.m.; Mon, Wed, Fri 3.30 a.m.
நெல்லியடி: Tue, Thu 1.30 p.m.; Sat, Sun 3.30 p.m.
சாவகச்சேரி: Tue, Thu 9.30 a.m.; Tue, Thu 8.00 a.m
சுன்னாகம்: Mon, Wed 1.00 a.m.
கிளிநொச்சி: Sat, Sun 8.00 a.m.
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
DMI COMPUTER EDUCATION
IELTS
IELTS Life Skills (A1,B1) திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்
DMI COMPUTER EDUCATION
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில், சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில், சுன்னாகம் Tel.: 021-224 1970
No.111,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655

வடக்கை கணனி மயப்படுத்தி வரும் முன்னணி நிறுவனத்திடமிருந்து வியாபார வர்த்தக நிறுவனங்களுக்கான
POS System தற்போது விற்பனையில்
Free Trial Versionஐ இன்றே உபயோகித்துப் பாருங்கள் | முதலில் வரும் 10 நிறுவனங்களுக்கு 50 % Discount
POS System பயன்படுத்தக் கூடிய வியாபார நிலையங்கள் :
பூட் சிற்றி, சாதாரண பல்பொருள் விற்பனை நிலையங்கள்
புத்தக சாலைகள் (Book shops)
இரும்பகங்கள் (Hardware Shops)
நகைக் கடைகள் (Jewellery Shops)
அழகு சாதன விற்பனை நிலையங்கள் (Fancy Houses)
உணவகங்கள் (Restaurants)
காலணியகங்கள் (Shoe shops)
எமது ஏனைய மென்பொருட்கள் :
பாடசாலைகள், கல்வி நிறுவனங்களுக்கான School Management System
விநியோகிஸ்தர்களுக்கான ... System
எமது ஏனைய சேவைகள் :
Web Development
Agoy Soft (Pvt) Ltd.
20, K.K.S Road, Kokuvil, Jaffna, Sri Lanka.
Mob : 0094 77 430 8010
Colombo : 0094 11 432 0017

# கூட்டமைப்பு-மு.கா கூட்டுக்கு பேராதரவு

*தமிழ் முற்போக்குக் கூட்டணியையும் இணைத்துக் கொள்ளக் கோரிக்கை*

கொழும்பு, ஜன.3

வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் தீர்வை விரைந்து பெற்றுக் கொள்வதற்காக அம்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு முன்வந்துள்ளதைப்போல் இம்மாகாணங்களுக்கு வெளியில் வாழும் சிறு பான்மை இன மக்களின் அரசியல் தீர்வை உறுதிப் படுத்துவதற்காகவும் அம்மக்களின் பிரதிநிதிகள் மேற்படி அணியுடன் ஒன்றிணைந்து செயலாற்ற முன்வரவேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன .

மலையகச் சிறுபான்மை இன மக்கள் உட்பட வடக்கு, கிழக்கிற்கு வெளியில் வாழுகின்ற அத்தனை சிறுபான்மை இன மக்களுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு இதன் மூலம் நடவடிக்கை எடுப்பது மிக இலகுவாக இருக்கும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு சிறுபான்மை இன மக்களின் நீண்ட காலத் தேவையாக இருக்கின்ற அனைத்துத் தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் தீர்வை வழங்குவதற்கான நடவடிக்கைகள் இதுவரை காலமும் மந்தகதியில் இடம்பெற்று வந்த போதிலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இந்த நல்லாட்சியில் அதைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த அரசியல் தீர்வு மற்றும் தேர்தல் முறைமை மாற்றம் எனப் பல விடயங்களை உள்ளடக்கி புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

கொண்டுவரப்படும் அந்தத் தீர்வு பலமானதாகவும் நிலையானதாகவும் பக்கச்சார்பு இல்லாததாகவும் அமைய வேண்டும் என்பதற்காக வடக்கு, கிழக்கு தமிழ் முஸ்லிம் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கடந்த வாரம் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் சந்தித்துப் பேசின.

இந்தச் சந்திப்பை சிறுபான்மை இன மக்கள் வரவேற்றுள்ளனர். இவ்வாறு இரண்டு சிறுபான்மை இனங்களும் ஒன்றிணைந்து நிற்பதன் மூலம்தான் தீர்வு முயற்சியைத் துரிதப்படுத்த முடியும் எனக் கருதுகின்றனர்.

அதேவேளை, தீர்வுத் திட்டத்திற்குள் வடக்கு, கிழக்கிற்கு வெளியில் வாழுகின்ற சிறுபான்மை மக்களும் உள்வாங்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

இந்த விடயத்தில் அந்த மக்களின் பிரதிநிதிகள் தனித்து நின்று செயலாற்றாது வடக்கு, கிழக்கு மக்களுடன் அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டால் அது பெரும் சக்தியாகத் திகழ்வதோடு அவர்கள் முன்வைக்கும் தீர்வுத் திட்ட யோசனையை அரசு ஏற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படும் என புத்திஜீவிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஆகவே, அடுத்து இடம்பெறப் போகும் பேச்சுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் வடக்கு, கிழக்கிற்கு வெளியில் வாழும் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மனோ கணேசன், வேலுசாமி இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம் ஆகியோர் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி கலந்துகொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(கு-சி)

வேலையாள்கள் தேவை
பெயின்ற் வகைகள், ரின்னர் ஆகியன தகரத்தில் அடைப்பதற்கு பெண்கள் தேவை.
வீட்டுவேலை செய்வதற்கு (சமையல்) ஒரு பெண் தேவை.
077 4330 210
ரமேஸ் - பருத்தித்துறை வீதி, வில்லு மதவடி, நீர்வேலி, கோப்பாய்.

வேலையாள்கள் தேவை
மிக்சர் கொம்பனி ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்புக்கு: 077 0067 591
077 6366 723

Vacancies
உடனடி வேலைவாய்ப்பு
- Cook
- Kitchen Helper
- Catering Assi.Manager
- Technician (Plumber & Electrician - Night)
- Store Keeper

TILKO JAFFNA CITY HOTEL
70/6. K.K.S Road, Jaffna.
077 2487 215

# வைத்தியசாலைகளுக்கு டி.எவ்.சி.சி வங்கி உதவி

யாழ்ப்பாணம்,ஜன.3

டி.எவ்.சி.சி வங்கி வடக்கின் மருத்துவ சேவை நிறுவனங்களுக்கு தனது சமூக பொறுப்புணர்வு திட்டங்களை விரிவுபடுத்தியுள்ளது. இதற்கமைவாக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பிராந்தியங்களிலுள்ள இரண்டு பிரதான வைத்தியசாலைகளுக்கு நோயாளிகளின் நலன் கருதி தேவையான தளபாடங்களை வழங்கியுள்ளது.






யாழ்.போதனா வைத்தியசாலைக்குத் தேவையாக இருந்த 30 சக்கர நாற்காலிகளை வங்கியின் பிராந்திய முகாமையாளர் மற்றும் கிளை முகாமையாளர் தலைமையில் வங்கியின் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய பிரமுகர்கள் சகிதம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தியிடம் கையளிக்கப்பட்டுள் ளன.

அத்துடன் வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் வெளிநோயாளர்களின் இருப்பிட வசதிக்காக 200 கதிரைகளையும் வங்கி பணிப்பாளர் மருத்துவர் அகிலேந்திரனிடம் வழங்கியுள்ளார்.

இந்த நன்கொடைகளை கையளிக்கும் நிகழ்வில் டி.எவ்.சி.சி வங்கியின் பிரதி நிறைவேற்று அதிகாரி திரு.லக்ஸ்மன் சில்வா குறிப்பிடுகையில்,

'சமூக அபிவிருத்தித் திட்டம் எமது வங்கியுடன் ஒன்றிணைக்கப்பட்ட பெறுமதி மிக்க திட்டம். நாம் ஒரு முன்மாதிரியான கூட்டிணைந்த பிரஜையாகவும், நாம் இயங்கும் சமூகத் தளத்தில் நீண்டகால சமூக பெறுமானத்தை உருவாக்குவதை நோக்கமாகவும் கொண்டதே இதன் சிறப்பம்சமாகும். இவ்வாறான முன்னெடுப்புக்கள் எமது சமூக கடப்பாட்டையும் ஈடுபாட்டையும் உணர்த்தி நிற்கின்றன'- என்றார்.

(த-ஐ-10)

# வடக்கு-கிழக்கு-மலையக மக்கள் பிரச்சினைக்கு தீர்வு

*ஜனாதிபதி மும்முரம் என்கிறார் பௌசி*

கொழும்பு, ஜன.3

வடக்கு-கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது பொறுப்பின் கீழ் இயங்கும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சின் அதிகாரிகளை மீண்டும் நாளை திங்கட்கிழமை சந்திக்கவு ள்ளார் என்று இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு, மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு இந்த வருடத்துக்குள் தீர்வு காண்பதற்கும் ஜனாதிபதி மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, அதன் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.ஸுஹைர், கலாநிதி. எம். கணேசமூர்த்தி உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் பௌசி கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த டிசம்பர் 20 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தோம். இந்தச் சந்திப்பில் தமது அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி விரிவாக ஆராய்ந்தார். இதன்போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி கூடிய அவதானம் செலுத்தியிருந்தார். அதுமட்டுமன்றி 2016 ஆம் ஆண்டுக்கான திட்டங்களை எமக்கு ஒப்படைத்தார்.

இனம், சமயம், மொழி, சாதி, வயது, பால், பிறப்பிடம் மற்றும் அரசியல் கொள்கைகளை மறந்து, நல்லிணக்கத்தை ஏற்படுத்தி முரண்பாடுகளற்ற ஓர் உறுதியான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்திருந்தார்.

இதற்கமைய தனது தலைமையில் குழுவொன்றை அமைத்து எதிர்வரும் ஜனவரியில் யாழ்ப்பாணம், திருகோணமலை, நுவரெலியா, பதுளை, காலி உள்ளிட்ட பல மாவட்டங்களுக்குப் பயணம்செய்து அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தனக்கு அறிக்கையிடுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருந்தார்.

போராலும் ஏனைய சம்பவங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மக்களின் அபிலாசைகளையும் அறிந்து அவற்றைத் தீர்த்து வைக்கும் வகையிலான திட்டங்களை முன்னெடுக்கும்படி ஜனாதிபதி பணித்துள்ளார். இதற்கமைய எதிர்வரும் சில நாள்களில் தேர்வு செய்யப்பட்டுள்ள பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள அமைச் சின் அதிகாரிகள் மாவட்ட செயலகங்களில் பொதுமக்களையும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், உள்ளூர் அரசியல் வாதிகள் மற்றும் சர்வ மதத் தலைவர்களையும் சந்தித்து அவர்களது கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

சமூக ஒருமைப்பாட்டை ஊக்குவிப்பதனூடாக ஒருமுகப்படுத்தப்பட்ட சமூகத்தைக் கட்டியெழுப்புதல், மாவட்ட ரீதியில் அபிவிருத்தி திட்டமிடல்கள் இணைக்கப்படுவதை உறுதி செய்தல், இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் வாழும் இலங்கையர்களை தேசிய ஐக்கியத்தையும் மீளிணக்கத்தையும் கட்டியெழுப்புவதில் ஈடுபடுத்தல், ஒவ்வொரு இலங்கையரும் மொழி உரிமையை அனுபவிப்பதை உறுதிப்படுத்தல், சமூகங்களுக்கிடையிலான ஆற்றுப்படுத்தல் முறைமைக்கு ஆதரவளித்தல், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தல், நிலங்கள் சரியான உரிமையாளர்களுக்கு மீளக்கையளித்தலை ஊக்குவித்தல், இளைஞர்களையும் சிறுவர்களையும் முன்னிறுத்தி தேசிய ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புதல் என்பனவே அமைச்சின் திட்டங்களாகும்.

இந்த விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன எம்முடன் மீண்டும் கலந்துரையாடவுள் ளார்.

வடக்கு, கிழக்கு, மலையக மக்களது பிரச்சினைகளுக்கு இந்த வருடத்துக்குள் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி மும்முரமாக செயற்பட்டு வருகின்றார்-என்றார்.

(த-சி)

# தமிழர் தீர்வுத் திட்டம் இம்மாத இறுதியிலாம்

*மக்கள் பேரவை கூறுகிறது*

யாழ்ப்பாணம், ஜன.3
தமிழ் மக்களின் தீர்வுத் திட்டம் தொடர்பில் இம் மாதம் இறுதித் தினத்தில் முன்மொழிவு வெளியிடப்பட்டு வல்லுநர்களின் பரிந்துரைகள் , திருத்தத்துடன் மார்ச் இறுதியில் வெளியிடப்படும் என அதன் உறுப்பினர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிப்பதற்கான தமிழ் மக்கள் பேரவையின் உப குழு தமிழ் பேசும் மக்களின் மூன்று மதங்களில் இரு மத வழிபாட்டுடன் நேற்று முதலாவது சந்திப்பை யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் நடத்தியது. இதில் உப குழுவைச் சேர்ந்த 10 பேர் மட்டும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் நிறைவில் கருத்துத் தெரிவிக்கும்போதே சுரேஸ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் தீர்வுத் திட்டம் தொடர்பில் இம் மாதம் இறுதித் தினத்தில் முன்மொழிவு வெளியிடப்பட்டு வல்லுனர்களின் பரிந்துரைகள் , திருத்தத்துடன் மார்ச் இறுதியில் முழுமை செய்யப்பட்டு வெளியிடப்படும். இவ்வாறு தயாரிக்கப்படும் தீர்வுத் திட்டத்துக்கு அனைவரும்தமது ஆலோசனையைச் சமர்ப்பிக்க முடியும்.

இவ்வாறு இம்மாதம் இறுதியில் எம்மால் வெளியிடப்படும் முன்மொழிவுகளின் அடிப்படையில் முஸ்லிம் மக்களின் கருத்தும் உள் வாங்கப்பட்டே முழுமை செய்யப்படும்-என்றார்.

முஸ்லிம் மக்களை உள்வாங்குவது தொடர்பில் உப குழு ஒன்று நியமிக்கப்பட்டு அதன் பரிந்துரையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் என இணைத் தலைவர்களில் ஒருவர் பதிலளித்திருந்த நிலையில் அந்த தீர்மானம் வருவதற்கிடையில் அரசியல் தீர்வுத் திட்டத்துக்கான உப குழு இவ்வாறு பதில் அளித்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

(த-10)

# 12 இலக்க அடையாள அட்டை ஜனவரி 1 முதல் விநியோகம்

*ஆட்பதிவுத் திணைக்களம் அறிவிப்பு*

கொழும்பு, ஜன.3
12 இலக்கங்களைக் கொண்ட புதிய தேசிய அடையாள அட்டை நேற்றுமுன்தினம் முதலாம் திகதி முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக, ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

16 வயதைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகள் அனைவரும் ஆட்பதிவுத் திணைக்களத்தில் தம்மை பதிவு செய்து, அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என அதன் ஆணையாளர் நாயகம் சரத் குமார குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இதுவரையில் 9 இலக்கங்களும், ஆங்கில எழுத்தும் கொண்ட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வந்தன. இந்த அடையாள அட்டைகளில் உள்ள 9 இலக்கங்கள், நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படும்.

இதன்படி முதல் பாகத்தில் உள்ள இரண்டு எண்கள், நபரின் பிறந்த ஆண்டைக் குறிக்கும்.இரண்டாம் பாகத்தில் உள்ள 3 இலக்கங்கள் குறித்த நபர் பிறந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல், அவரது பிறந்த தினம் வரையில் உள்ள நாட்களின் எண்ணிக்கையை குறிக் கும்.

அத்துடன் மூன்றாம் பாகத்தில் உள்ள 3 இலக்கங்கள் குறித்த நபரின் பால்நிலை குறித்த தகவலைக் கொண்டிருக்கும்.

எனினும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 12 இலக்கங்களைக் கொண்ட அடையாள அட்டையில் ஆங்கில இலக்கம் சேர்க்கப்பட மாட்டாது.

பழைய 9 எண்களைக் கொண்ட நடைமுறை பின்பற்றப்படும் போது, 1916ஆம் ஆண்டு பிறந்த ஒருவருக்கும், 2016ம் ஆண்டு பிறந்த ஒருவருக்கும் ஒரே அடையாள அட்டை வழங்கப்படும் நிலை காணப்படுகிறது.

இதனைத் தவிர்ப்பதற்காகவே இந்த 12 இலக்கங்களைக் கொண்ட அடையாள அட்டைகள் அறிமுகப்படுத்தப் படுகின்றன.இதில் முதல் நான்கு இலக்கங்களும் பிறந்த ஆண்டைக் குறிக்கும்.

இந்தப் புதிய அடையாள அட்டை அறிமுகம் தொடர்பாக, அனைத்து வங்கிகள் மற்றும் அரச துறைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், புதிய எண்தொடர் கொண்ட அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளும் வரையில், தற்போதுள்ள அடையாள அட்டை செல்லுபடியாகும்.-என்றார். (த-வ)

# வடக்கு அதிவேக நெடுஞ்சாலை அமைப்பு இவ்வருடம் ஆரம்பம்

திருகோணமலை, ஜன.3
முன்மொழியப்பட்டிருந்த வடக்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைக்கும் புதிய திட்டம் இந்த வருடம் செயற்படுத்தப் படவிருப்பதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திருகோணமலை, முல்லைத்தீவு வழியாக வடக்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைக்கும் புதிய திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் 2016 ஆம் ஆண்டு செயற்படுத்தப்படவுள்ளது. முன்னதாக, வவுனியா, கிளிநொச்சி வழியாக வடக்கு நெடுஞ்சாலை அமைக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிருந்தது.

எனினும் திருகோணமலைத் துறைமுகம் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி கருதியும், நிலங்களைச் சுவீகரிக்கும் வசதி கருதியும், திருகோணமலை, முல்லைத்தீவை இணைத்து வடக்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைக்கத் தற்போது திட்டமிடப் பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

(ஜ-10)

# இசைநிகழ்ச்சிக்கான வரியைச் செலுத்த ஒரு வாரம் அவகாசம்

கொழும்பு,ஜன.3
பிரபல வெளிநாட்டுப் பொப் இசைப் பாடகரை இலங்கைக்கு அழைத்து வந்து இசை நிகழ்ச்சி நடத்தியதற்கான வரி நிதியைச் செலுத்துவதற்குக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 3 கோடி ரூபா நிதியைக் கொழும்பு நகரசபைக்குச் செலுத்துவதற்கு இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரர்களான சங்கக்காரவுக்கும், மஹேலவுக்கும் ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு நகர சபை மேயர் எம். முஸாம்மில் தெரிவித்துள்ளார்.

(த-ஐ)

# புதிய அரசமைப்புத் திருத்தம்; கூட்டு எதிர்க் கட்சிகள் எதிர்ப்பு

புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்து, அடுத்தவாரம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் குழுக் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கும் கூட்டு எதிர்க் கட்சிகள் தீர்மானித்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசமைப்புச் சீர்திருத்தம் எனும் பெயரில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதாகத் தெரிவித்து நாட்டின் ஒருமைப் பாட்டைச் சீர்குலைக்க அரசு முற்படுவதாகவும் எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

அத்துடன் அரசின் புதிய அரசமைப்புச் சீர்திருத்த செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-ஐ-ரி2)

## நன்றி கூறுகின்றோம்

23.12.2015 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப விளக்கு

### திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம்

அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து இறுதிவரை எம்முடன் நின்று பல்வேறு உதவிகளை நல்கிய அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றோம்.

சிறப்பாக யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும், மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமும், பத்திரிகை, துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையங்களை வைத்து தமது சோகத்தையும், அனுதாபங்களையும் வெளிப்படுத்தியோருக்கும், இறுதி நிகழ்வின்போது அஞ்சலிக்கூட்டத்தையும் மற்றும் மரண ஊர்வலத்தையும் ஒழுங்கு செய்த யாழ். வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.மாணிக்கராஜா அவர்களுக்கும் மற்றும் அஞ்சலி உரைகளை நிகழ்த்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இம் மரண வீட்டின்போது முழு நாள்களும் எம்முடன் நின்று பல்வேறுபட்ட வகையிலும் உதவி ஒத்தாசை களை வழங்கிய எமது உறவினர்களுக்கும் உரும்பிராய் மக்களுக்கும் விசேடமாக நன்றி கூறிக்கொள்கின்றோம்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய். (C/28246) (10.17) குடும்பத்தினர்.

**தேவை** தொடர்பு: 077 3867 458
கணினி அறிவுள்ள அலுவலக உதவியாளர் தேவை.

**தேவை** தொடர்பு: 077 803 8567
நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த Q/S மற்றும் T/O தேவை.

**வாடகைக்கு**
நல்லூரில் முற்றிலும் பிரத்தியேகமான வீட்டின் பகுதி (தனியறை, இணைந்த குளியலறை, சமையலறை) வாடகைக்கு உண்டு. தளபாட வசதிகளும் உண்டு. 2பெண்கள் தங்கியிருக்கலாம்
தொடர்பு: 0714 620 806

**6 ஆம் வகுப்பு முதல் O/L வரை கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கில மொழிகளில்**
பிரபல தேசிய கல்லூரிகளில் சிறப்பாகக் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆங்கில மொழிமூல பட்டதாரி ஆசிரியரினால் நேரடிக் கண்காணிப்பில் ஏராளமான பயிற்சிகளுடன் தனிப்பட்ட முறையில் சிறப்பாகக் கற்பிக்கப்படும்.
ஆசிரியர்:
R. பாலசுப்பிரமணியம் B.Sc. PGDE
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். (கேணிக்கு முன்னால்)
தொ.பே: 077 2423400 / 077 887 1217 / 077 5178 727.

**Vacancies**
முன்னனி ஆங்கில பாடசாலையான BIS இன் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் கிளைகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்கின்றோம்
1. English Teachers
2. Montessori Teachers
3. Music / Dance Teachers
4. Primary Teachers
5. PT Teachers
6. Course Coordinator
ஒரு வாரத்தினுள் email மூலம் விண்ணப்பிக்கவும்
email : bis.learning@gmail.com
11/1, Battiya Mw. Dehiwala.
Tel : 077-3830671

**கொக்குவில் வளர்மதி முன்பள்ளி**
**பதவி வெற்றிடம்**
எமது மேற்படி முன்பள்ளிக்கு ஆசிரியர்கள், பயிற்சி ஆசிரியர்கள், முகாமைத்துவ அலுவலகர், துப்புரவுப் பணியாளர் - (பெண்கள்) தேவை.
**தகைமை**
ஆசிரியர்: க.பொ.த (உ/த) சித்தி, முன்பள்ளி டிப்ளோமா, கற்பித்தல் அனுபவம், இசைத்துறை, பரதம், சித்திரம், ஆங்கிலம், கணினி அறிவிற்கு முன்னுரிமை.
முகாமைத்துவ அலுவலகர்: க.பொ.த (உ/த) சித்தி, ஆங்கிலம், கணினி, கணக்கியல் அறிவு, முகாமை செய்யும் ஆற்றல்.
துப்புரவுப் பணியாளர்: நிலையத்தின் துப்புரவுப் பணிகள், பராமரிப்புப் பணிகள் செய்தல்.
தகுதிக்கேற்ற சிறந்த சம்பளம் E.P.F, E.T.F செலுத்தப்படும்
குறிப்பு: ஓய்வுநிலை அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் மேற்பார்வையில் இயங்கும் எமது சகோதர முன்பள்ளியான ஏழாலை வடக்கு திவ்யா முன்பள்ளிக்கும் ஆசிரியர் ஒருவர் தேவை. மேலுள்ள பதவிகளுக்கு தகுதியான விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவ்ரக் கோவையினை கீழுள்ள முகவரிக்கு 10.01.2016 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.
தலைவர். கொக்குவில் வளர்மதி முன்பள்ளி,
சம்பியன்லேன், கொக்குவில்.

**அக்ஷயா அழகு கலை நிலையம்**
★ அழகுக்கலைப் பயிற்சி, இந்திய முறையிலான சாறி வுளவுஸ் கட்டிங் (6), பஞ்சாபி (4), அடிப்படையில் இருந்து தையல் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ★ கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள், கடும் கறை, மஞ்சள் வெள்ளை, கறுப்பு புள்ளிகள் அகற்றும் கிறீம். ★ கழுத்துக் கடும் கறுப்பு, கை, கால் கருமை நீக்கும் கிறீம் ★ கண் கருவளையம் உதட்டுக் கருமை நீக்கும் கிறீம். ★ உடல் எடை கூட்டும் குறைக்கும் குளிசை, பால்மா, கிறீம் ★ ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற்றும் குளிசை ★ இடுப்பு, கால், தொடை பாகங்கள் எடை குறைக்கும் கிறீம். ★ முகத்தில் வளரும் தேவையற்ற முடி அகற்றும் கறீம் ★ மார்பழகு கூட்டும், குறைக்கும் கிறீம், குளிசை, சோப் ★ தலைமுடி வளரச் செய்யும் ஆயுள் வேத எண்ணெ, குளிசை, மேற்குறிப்பிடப்பட்டவை எம்மிடம் விற்பனைக்கு உண்டு. ★ முகத்தில் உள்ள கருமை, கழுத்து கருப்பு ஒரே தடவையில் நீக்கும் பேசியல், முகம் மினுமினுப் பாக்கும் பேசியல், ஐப்றோ சேப், பேஸ் திரெட்டிங் செய்து கொள்ளலாம். அயனிங் பேர்மிங் செய்து கொள்ளலாம். நிச் கேக் (ஒன்று 55/=) ஐசிங் ஓடர் ஏற்றுக் கொள்ளப்படும்.
077 21 06 155
அக்ஷயா
221, நாவலர் வீதி, (பிறவுண் றோட் சந்தி, அருள் கொமினிகேசன் அருகில் - யாழ்ப்பாணம்.)
(66645) (10.17)

## மரண அறிவித்தல்

### திருமதி திரேசா டோமினிக்



கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி திரேசா டோமினிக் 01.01.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - மேரிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - எலிசபெத் தம்பதிகளின் அன்பு மருமகளும், டோமினிக்கின் அன்பு மனைவியும், சேவியர், சாமிளா, சுரேஸ், செல்வின், சுபிதி ஆகியோரின் அன்புத்தாயாரும், சிசில், ஜெமா, பிரான்சிஸ், மேர்சி ஆகியோரின் அன்பு மாமியும், அன்ரன், அகஸ்ரின் ஆகியோரின் பாசமிகு சகோதரி யும், லெற்றிசியா, லீலா ஆகியோரின் மைத்துனியும், சின்ஸ்கா, சரூன், விஷால், அன்ரூ, மொறிஸ், புளோரியன், டேர்வின், அக்ஷயா ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.01.2016) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்திலிருந்து (213, கடற்கரைத்தெரு, நீர்கொழும்பு) பிற்பகல் 4 மணியளவில் புனித செபஸ்தியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் நீர்கொழும்பு பொது மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| தொடர்பு: | தகவல்: |
|---|---|
| 031 222 2317, 077 342 1098, 077 342 1091 | சிசில் (மருமகன்) (67288) (11,15,17) |

## மரண அறிவித்தல்

### சின்னப்பு சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர் (Retired PHI) ,சமாதான நீதிவான்(J.P)



மலர்வு: 30.03.1930

உதிர்வு: 01.01.2016

இல.15, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தியை நிரந்தர வசிப்பிடமாகவும், திருகோணமலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சிவசுப்பிரமணியம் 01.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பு- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் மல்லிகா (ஆஸ்திரேலியா), கிருபாகரன்(சுவீடன்), நிரஞ்சலா( ஆசிரியை - பாரதி தமிழ் வித்தியாலயம்), Dr.சியாமளா(மருத்துவ பொறுப்பதிகாரி, சித்தமருத்துவ போதனா வைத்தியசாலை திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.விஞ்ஞான குலசிங்கம் (ஆஸ்திரேலியா) , பரிமளா(சுவீடன்), துரைமணி ஆகியோரின் மாமனாரும் நீலுஜா, கீர்த்தனன், பபிரோஷன், வைரோஷன், கிரோஸ்மி, சாரங்கன் , துஷாரா, அனாத்தி ரியன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல.15 பலாலிவீதி, யாழ். நகர் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| தொடர்பு: | தகவல்: |
|---|---|
| 076 615 8216 | குடும்பத்தினர். |

## காலை உணவு விசமாகியதால் 250 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு,ஜன.3

தென்னிலங்கைத் தனியார் ஆடைத் தொழிற்சாலை யொன்றில் உணவு விசமானதால் 250 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.


பலாங்கொடை, எல்லஹறாவ பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் ஆடைத்தொழிற்சாலை யொன்றில் பணியாற்றுபவர்களே திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த தொழிற்சாலையில் வழங்கப்பட்ட காலை உணவை உட்கொண்டதை அடுத்தே அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் நோய் அறிகுறியுடன் இருக்கும் பலர் தொடர்ந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வண்ணம் உள்ளனர். இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(த-ஜ-10)

## மரண அறிவித்தல்



### சபாபதி நாகரத்தினம்

தோற்றம் 26.01.1943 மறைவு 29.12.2015

யாழ் காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு ஜமுனாவீதி, சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி நாகரத்தினம் 29.12.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் சின்னத்தம்பி தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மல்லிகாதேவியின்(சுவிஸ்) அன்புக் கணவரும், பாஸ்கரன்(இலங்கை), பிரபா(சுவிஸ்), மோகனதாஸ்(கனடா), சசிகரன்(டென்மார்க்), சுவேந்தினி(சுவிஸ்), ஜதீஸ்மதி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரூபி, சுதன்(சுவிஸ்), ஜெயா(கனடா), துஷி (டென்மார்க்), பொபி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்ஷினி, சுதர்ஷினி, தீபிகா, அக்ஷா, அபி, அஜி, திஷான், அவிநேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ரோமியா, யுரேமிகா, மோஹித், அக்சயன், கிஷாலினி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள S.இன்பம் சேவை மண்டபத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# வங்கிக் கடன்களை செலுத்தத் தவறியோர் மீது சட்ட நடவடிக்கை

அச்சுவேலி,ஜன.3

வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி, அறவிட முடியாத காலம் தப்பிய கடன்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு நீதிமன்றத்தில் வழக்குகளை தாக்கல் செய்கின்றன. சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள சட்டத்தரணிகள் குழுக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

ஏ - 9 பாதை திறக்கப்பட்டதை அடுத்து யாழ். மாவட்டத்தில் அரச - தனியார் வங்கிகள் பல செயற்படத் தொடங்கின. கிராமங்கள் தோறும் வங்கிக் கிளைகள் பலவும் திறக்கப்பட்டன. வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு போட்டி போட்டுக் கொண்டு கடன் வசதிகளை வழங்கின.

பருவ கால விவசாயக் கடன்கள், சிறுதொழில் முயற்சிக் கடன்கள், வாகனங்கள் சொத்துக்கள் கொள்வனவுக்கான கடன்கள், தொழில் முயற்சிக்கடன்கள் என பல இலட்சம் ரூபாவைக் கடன்களாக வழங்கின. வாடிக்கையாளர்கள் ஒரே நோக்கத்துக்காக ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் சமகாலத்தில் கடன்களைப் பெற்றுள்ளனர் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

கடன்களை அறவிடுவதற்கான சாதாரண நடைமுறைகள் குறிப்பிடத்தக்கஅளவுக்குப் பயன்தராத நிலையில் வங்கிகள் தற்போது சட்ட

> “வங்கிகள் விவசாயக் கடன்கள், சிறுதொழில் முயற்சிக் கடன்கள், வாகனங்கள், சொத்துக்கள் கொள்வனவுக்கான கடன்கள், தொழில் முயற்சிக்கடன்கள் என பல இலட்சம் ரூபாவைக் கடன்களாக வழங்கியன”

நடவடிக்கை மேற்கொண்டு நீதிமன்றங்களில் வழங்குகளைத் தாக்கல் செய்து வருகின்றன.

இரண்டரைலட்சம்ரூபாவரையிலான கடன் தொடர்பாக மத்தியஸ்தர் சபைகளில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு இணக்கப்பாடு காணப்படாத விடத்து, இணக்கப்பாடின்மைக்கான சான்றிதழைப் பெற்றும் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

தற்பொழுது பிரதேச செயலகப் பிரிவு வாரியாக செயற்படும் மத்தியஸ்தர் சபைகளில் கணிசமான அளவு அறவிடமுடியாத கடன் தொடர்பான பிணக்குகளும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட் டுள்ளன.

அச்சுவேலியில் உள்ள அரச வங்கி ஒன்று நாடளா விய ரீதியில் கடன் வழங் குவதில் சாதனை படைத்து முன்னணியில் இருந்தது. தற்பொழுது அந்தக் கிளை அறவிடமுடியாத கடன் விட யத்திலும் தேசிய ரீதியில் முதலிடத்தில் இருக்கின்றது என்றும் கூறப்ப டுகின்றது.

வங்கிகள் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு கடன்களை அறவிட முற்படுமிடத்து சட்ட நடவடிக்கை தொடர்பாக வங்கிக்கு ஏற்படும் மேலதிக செலவினத்தையும் கடன் பெற்ற வாடிக்கையாளர்களே செலுத்த வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

வங்கிகள் வழங்கிய நிபந்தனைக்கு உட்பட்ட கடன்களை குறிப்பிட்ட வருடங்களுக்கு இடையில் வாடிக்கையாளர்களிடம் இருந்து அறவிடத் தவறும் இடத்து சட்ட நடவடிக்கை மேற் கொள்வதில் உள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு கடன் வழங்கப்பட்ட கால முன்னுரிமை அடிப்படையில் சட்ட நடவடிக்கை தொடர்பான செயற்பாடுகளும் விரைவுபடுத்தப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-11)

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றனர்

சாவகச்சேரி, ஜன.3

வடமாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு நியமிக்கப்பட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளனர்.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்குதலா3அலுவலர்களும், வவுனியா மாவட்டத்துக்கு இருவரும், மன்னார் மாவட்டத்துக்கு ஒருவருமாக வடமாகாண சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டு நேற்று முன்தினம் அந்தந்த நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

யாழ்.மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக் களத்தால், சாவகச்சேரி, தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு நியமிக்கப்பட்ட பொதுச்சுகாதார பரிசோதகர், நீண்டகாலமாக வெற்றிடமாக காணப்பட்ட மட்டுவில் பிரதேசத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பிராந்திய பயிற்சிப் பாடசாலையில் பயிற்றப்பட்ட எட்டுப் பேரும், மட்டக்களப்பு பிராந்திய பயிற்சிப் பாடசாலையில் பயிற்றப்பட்ட நான்கு பேரும், வடமாகாணத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (ற-ஐ-9)

## கடந்த ஆண்டு தென்மராட்சியில் டெங்குத் தொற்று அதிகரிப்பு



சாவகச்சேரி,ஜன.3

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடம் டெங்குத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 245 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 86 பேர் கடந்த மாதம் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகிச் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது

டிசெம்பர் மாத இறுதியில் பெய்தமழையின்பின்னர், ஒரு வாரத்தில் மட்டும் 20 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த 25 ஆம் திகதி வரை 225 ஆக இருந்த எண்ணிக்கை டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி இருபது பேர் அதிகரித்து 245 ஆகியுள்ளது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் அதிகமாகக் காணப்பட்ட டெங்குத் தொற்றுக் குள்ளாவோரின் எண்ணிக்கை அடுத்தடுத்த மாதங்களில் வீழ்ச்சியடைந் தது. கடந்த ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் சிறிது சிறிதாக அதிகரித்து டிசெம்பர் மாதத்தில்என்றுமில்லாதஅளவுக்கு உயர்வடைந்துள்ளது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களின் பின்னர் கொழும்பு உள்ளிட்ட தென்னிலங்கைப் பகுதிக்கு சுற்றுலா மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களை வழியனுப்பச் சென்றவர்கள், தென்னிலங்கையில் தங்கிப் படிப்பவர்கள், அங்கு கடமைபுரிவோர் போன்றோர் டெங்குத் தொற்றுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் தங்கி வீடு திரும்பிய தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தபலர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி யிருந்தனர். நவம்பர், டிசெம்பர் மாதங்களில் பெய்த மழை வெள்ளம் காரணமாக பிரதேசத்தைச் சேர்ந்த பலர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர். (ற-ஐ-9)

## கிணற்றில் தவறி விழுந்து முதியவர் சாவு

வலி.வடக்கு, ஜன.3

முதியவர் ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை ஏழாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஏழாலை, மயிலங்காட்டைச் சேர்ந்த வெள்ளையன் செபஸ்தியாம்பிள்ளை (வயது-84) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். இவர் 9 பிள்ளைகளின் தந்தையாவார்.

இரவுவேளை கிணற்றில் தண்ணீர் அள்ளச்சென்ற போது இவர் கிணற்றுள் தவறி விழுந்தார் என்றும், அயலவர்களின் உதவியுடன் உடனடியாகக் காப்பாற்றப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்ற பணிப்புரைக்கு அமைவாக நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் உடற் கூற்றுப் பரிசோதனை நடத்திய பின்னர் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-86)

## சில்லாலை - தும்பளைப் பாய் வீதியை மக்கள் பாவிப்பதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.3

இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்த சில்லாலை – தும்பளைப் பாய் வீதி மீண்டும் மக்களின் பாவனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது என சில்லாலை விவசாய சம்மேளனத்தின் தலை வர் அ.தகுணதிலகம் தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகளுக்கும் கடற்படை அதிகாரிகளுக்கும், இடையில் இடம்பெற்ற பேச்சின் அடிப்படையிலேயே குறித்த வீதி மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னர் பாவனையில் இருந்த சம்பில்துறையில் இருந்து தும்பளைப் பாய் வைரவர் ஆலயம் வரையான நெல் வயல்களுக்கு செல்லும் வீதி கடந்த சில காலங்களாக மக்களுடைய போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாமல் தடை செய்யப்பட்டிருந்தது.

போர் முடிவடைந்து ஆறு வருடங்கள் நிறைவடைந்த போதிலும் குறித்த வீதி எந்த விதமான போக்கு வரத்துக்கும் அனுமதிக்கப்படாததையடுத்து, குறித்தவீதியை விவசாய நடவடிக்கைகளுக்காக விடு வித்துத் தருமாறு கோரி சில்லாலை வடக்கு தெற்கு விவசாயிகள் சம்மேளனம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை அடுத்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மற்றும் அரச அதிகாரிகளால் கடற்படை அதிகாரிகளுடன் வீதியை விடுவிப்பது தொடர்பான பேச்சு நடத்தப்பட்டது.

அதையடுத்து குறித்த வீதி மீண்டும் மக்களுடைய பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளதாக சில்லாலை விவசாய சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்தார். (ற-ஐ-21)

## மலக் கழிவுச் சுத்திகரிப்பு நிலையத்தை அகற்றுக

### கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை நலன்புரிச் சங்கம் கோரிக்கை

சாவகச்சேரி பிரதேச சபையால் கொடிகாமம் (மிருசுவில்) பிரதேச வைத்தியசாலைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள மலக் கழிவு சுத்திகரிப்பு நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறு வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கோரியுள்ளனர்.

முன்னர் மத்திய மருந்தகமும், பிரசவ விடுதியும் மட்டும் இயங்கி வந்த வைத்தியசாலையில் தற்போது இரு வைத்திய அதிகாரிகள் நிய மிக்கப்பட்டதால் பெருமளவு நோயா ளர்கள் தினமும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் வைத்தியசாலை வளாகத்தினுள் விடுதிகளுடன் கூடிய இரு மாடி நிர்வாக அலகுக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன. இந்தக் கட்டடத்தின் தளத்தில் இயங்கும் வெளிநோயாளர் பிரிவுக்குத் தினமும் பிரதேசத்தில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற வருகின்றனர்.

இந்த நிலையில் வைத்தியசாலை வளாகத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மலக் கழிவு சுத்திகரிப்பு நிலையத் துக்கு பகல் வேளையில் அடிக்கடி வாகனங்களில் கொண்டு வரப்படும் கழிவுகள் தொட்டிகளில் மாற்றப்படும்போது சகிக்க முடியாத அளவுக்குத் துர்நாற்றம் வீசுகிறது. அதனால் நோயாளர்களும் அங்கு கடமையாற்றுவோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி சிறிது நேரம் வெளியே செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இது தொடர்பாக பிரதேச சபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டபோது பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் அனுமதி தரும் பட்சத்தில் இடம் மாற்றுவது தொடர்பாக முடிவெடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புனர்வாழ்வு அமைச்சின் நிதி உதவியுடன் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட தனங்களப்பு வீதியில் 5 ஆயிரம் லீற்றர் கழிவு சுத்திகரிப்பு தொட்டியுடன் இயந்திரங்களையும் பொருத்தி நிலையத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகள் யாழ்.மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் தற்போது குறைந்த கொள்ளளவுத் தொட்டியைக் கொண்ட சாவ்கச்சேரி பிரதேச சபையால் நிர்வகிக்கப்படும் கழிவு சுத்திகரிப்பு நிலையச் செயற்பாடு நிறுத்தப்படக் கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-ஐ-9)

# துறைமுக வசதிகள் இன்றி மன்னார் மீனவர்கள் சிரமம்

மன்னார், ஜன.3

மன்னார் மாவட்டத்தில் 9 ஆயிரத்து 542 மீனவக் குடும்பங்கள் தமது வாழ் வாதாரத்துக்கு மீன்பிடியை நம்பியுள்ள நிலையில், அங்கு மீனவர்களுக்கு துறைமுக வசதி எதுவும் இல்லை என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்தில் 38 ஆயிரத்து 587 மீனவக் குடும்பங்கள் வாழ்கின்றனர். அவர்களில் 9 ஆயிரத்து 542 குடும்பங்கள் தற்போதுவரை கடற்றொழிலை மட்டுமே நம்பி வாழ்கின்றனர். எனினும் அங்கு துறைமுக வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

> மன்னார் மாவட்டத்தில் 38 ஆயிரத்து 587 மீனவக் குடும்பங்கள் வாழ்கின்றனர். அவர்களில் 9 ஆயிரத்து 542 குடும்பங்கள் தற்போது வரை கடற்றொழிலை மட்டுமே நம்பி வாழ்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டின் புள்ளிவிவரத்தின் பிரகாரம் 9 ஆயிரத்து 272 மீனவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர். அவர்களது தொழில் வளமாக குறித்த மாவட்டத்தில் 163 கிலோ மீற்றர் கடற்கரையோரம் உள்ளது. அவ்வாறு உள்ள 163 கிலோ மீற்றர் நீள எல்லைப் பரப்புக்குள்ளும் மொத்தமாக 52 படகுத் தரிப்பிடங்கள் உள்ளன.

இவ்வாறு உள்ள 52 படகுத் தரிப்பிடங்களில் 3 ஆயிரத்து 782 படகுகள் பதிவில் உள்ளன. இந்த மாவட்ட மீணவர்களின் வழிகாட்டல்களுக்காக 34 கிராமிய அமைப்புக்களும், 40 மீனவர் சங்கங்களும் செயற்படுகின்றன. (ற-ஜ-101)

# பண்டிகையின்போது வங்கிகளில் பணம் பெறுவதில் பெரும் சிரமம்

## முல்லைத்தீவு மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜன.3

பண்டிகைக் காலங்களில் வங்கிகளில் பணம் பெற்றுக் கொள்வது உட்பட வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்வதில்தாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம் என்று முல்லைத்தீவு மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதேவேளை முல்லைத்தீவு மக்கள் வங்கிக் கிளையில், பண்டிகைக்காலத்தில் பணத்தை பெற்று கொள்வதற்கு வாடிக்கையாளர்கள் அசௌகரியங்களை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் குறித்த வங்கியின் முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு முல்லைத்தீவு மக்கள் வங்கி கிளையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்துக்காக குறித்த வங்கியில் மக்கள் தங்களது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு நான்கு கரும பீடங்களில் பணிகள்மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் சம்பள நாள்களிலும், பண்டிகைக் கால நாள்களிலும் இராணுவத்தினர் உட்பட அதிக வாடிக்கையாளர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வங்கிகளுக்குச் செல்கின்றனர்.

அதனால் பொது மக்கள் குறித்த வங்கிகளில் உரிய சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு பல மணித்தியாலங்களைச் செலவிட வேண்டிய நிலை காணப்படுகின்றது. அங்கு இருப்பதற்குப் போதிய இருக்கை வசதிகள் இல்லை. போதிய இடவசதியும் அற்ற நிலையில் ஒருவரோடு ஒருவர் முட்டி மோதிக் கொண்டே நிற்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.- என்று முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தெரிவித்திருந்தனர்.

இது குறித்து முல்லைத்தீவில் இயங்கும் அரச வங்கிகளில் ஒன்றான மக்கள் வங்கிக் கிளை முகாமையாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்–

எமது வங்கி தற்காலிகமாக உள்ள ஒருசிறிய இடத்தில் இயங்குகின்றது. பண்டிகைக் காலத்தில் வங்கிக்கு அதிகமான வாடிக்கையாளர்கள் வருகை தரும்போது, அவர்கள் நிற்பதற்கு வசதிகள் நிறைவாக இருக்கும். இது பண்டிகைக் காலத்தில் மட்டுமே. ஏனைய நாள்களில் இந்தப் பிரச்சினை இருக்காது.

குறித்த தினங்களில் நீண்ட தூரப் பிரதேசங்களில் இருந்து வங்கிக்கு வரும் வாடிக்கையாள்ர்கள், அவர்களது போக்கு வரத்தை சீர் செய்யும் வகையில் வங்கி முகாமையாளராகிய என்னுடன் தொடர்பு கொண்டால், அவர்களுக்கு வங்கியில் உடனடியாக தங்களது தேவைகளைநிறைவேற்றுவதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

எமது வங்கியில் மக்களுடைய தேவைகளை துரிதப் படுத்தும்நோக்கில்தற்போது நான்கு கரும பீடங்களில் பணிகள் இடம்பெறுகின்றன.

2016 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ள மக்கள் வங்கிக்கான காணியில் சிறந்த இட வசதிகளுடன் மக்கள் வங்கிக் கட்டடம் அமைக்கப்பட்டு சேவைகள் வழங்கப்படும்.– என்றார். (ற-ஜ-21,102)

# சக்தி மாலை அணிவித்தலும் இருமுடி செலுத்தலும்

கிளிநொச்சி,ஜன.3

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அடியார்களுக்கு தாயகத்தில் முதன்முதலாக சக்தி மாலை அணிவித்தலும், இருமுடி செலுத்தலும் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

சுயம்பு மேல்மருவத்தூர் ஆதி பராசக்தியின் கிளிநொச்சி வழிபாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில், இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு ஆதிபரா சக்தியின் அருளோடும், ஆசீர் வாதத்தோடும் சக்தி மாலை அணிவித்தலும் இருமுடி செலுத் தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ற-ஜ-426)

# வன்னிப் பிரதேச மாணவர்களின் கல்வியை உயர்த்த வேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார், ஜன.3

வன்னிப் பிரதேச மாணவர்கள் வறுமை நிலையிலும், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் கல்வி கற்று வருகின்றனர். அவர்களின் கல்வி வளர்ச்சியை உயர்த்தி, அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க வேண்டும். – இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தெரிவித்தார்.

முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 350 பாடசாலை மணவர்களுக்கான பாடசாலைக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முசலி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு மாணவர்களுக்கான அப்பியாசக்கொப்பிகளை வழங்கிய அவர், அங்கு உரையாற் றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

வன்னிப் பிரதேசத்தில் கல்வி கற்கும் எமது மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியிலும், துன்பங்களுக்கு மத்தியிலும் கல்வி கற்று வருகின்றனர்.

வன்னி மாவட்டத்தை முன்னிலைப் படுத்தி தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் இன்றி அனைத்து மாணவர்களுக்கும் சம உரிமை அடிப்படையில் உதவிகள் முன்னெடுக்கப்படும்.

மாணவர்களும், வன்னி மாவட்டத்தில் இன, மத பேதமின்றி ஒற்றுமையுடன் கல்வி கற்க வேண்டும். பிறந்துள்ள புது வருடத்தில் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் முன்னேற்றகரமாகக் காணப்படுகின்ற போதிலும், குடும்பத்தில் நிலவும் வறுமை காரண மாக பல மாணவர்கள் மேலதிக கல்வி நடவடிக்கைகளைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த நிலை இனிமேல் ஏற்படாது. அப்படிப்பட்ட மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு உதவிகள் முன்னெடுக்கப்படும். அதற்கு எமது மக்களும் மாணவர்களும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். – என்றார். (ற-ஜ-56)

# வீதி விபத்தில் குடும்பஸ்தர் சாவு

மன்னார், ஜன.3

உயிலங்குளம்–அடம்பன் பிரதான வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் பரப்புக் கடந்தான் கிராமத்தைச் சேர்ந்த குடும் பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மன்னார் பொலிஸ் நிலையத்தின் வீதிப் போக்கு வரத்துப்பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.ஆர்.சுமனசேகர தெரிவித்தார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

இதன் போது சைக்கிளில் பயணித்த ஜோசப்புசந்தியோகு (வயது–51) என்ற குடும்பஸ்தர் உயிரிழந்ததோடு, மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த இருவர் கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குப் பின்னர் மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஜ-56)

# முல்லை. மாவட்டத்துக்கு 9, 50,000 ரூபா நிதி செலவு

## வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.3

2015 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக் கீட்டில் 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஊடாக அவற்றின் தேவை களுக்குப்பயன்படுத்தபட்டுள்ளது என வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந்த வருடமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஏனைய இயங்கு நிலைச் சங்கங்களை ஊக்குவிக்கும் முன்னெடுப்புகள் தொடரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐந்து பிரதேசங்களிலும் உள்ள 42 சங்கங்களுடன் கடந்த நான்கு நாள்களாக இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து ஐந்தாவது நாளாக நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு என ஐந்து பிரதேசங்களிலும் இருந்து பரவலாக 42 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் கிராமங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்ட மக்கள் குறைகேள் சந்திப்புகளில் கிராமத்தவர்களாலும், கிராம அமைப்புகளாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையிலே இந்தச் சங்கங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

கரைதுறைப்பற்று மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசங்களில் இருந்து தலா ஒன்பது சங்கங்களும் ஏனைய மூன்று பிரதேசங்களில் இருந்துதலா எட்டுச்சங்கங்களும் உள்வாங்கப்பட்டு அவற்றுக்கு தலா 25 நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் மிகுதியாகும் 8 நாற்காலிகளும் பாலிநகர், குமாரசாமி வித்தியாலத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அந்தப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐந்து பிரதேசங்களிலும் உள்வாங்கப்பட்ட குறித்த 42 சங்கங்களுக்கும் தலா 25 நாற்காலிகள் மொத்தமாக வழங்கப்பட்டுள்ளன. ஐம்பாதாயி ரம் ரூபாய் நிதியானது தையற் பயிற்சி பெறும் மாணவிகளின் பயிற்சித்துணிக் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2015ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஊடாக அவற்றின் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஏனைய இயங்குநிலை சங்கங்களை ஊக்குவிக்கும்முன்னெடுப்புகள் தொடரும். – என்று தெரிவித்தார். (ற-ஜ-21)

# மகிந்தவின் சீனப் பயணத்தை உன்னிப்பாக அவதானிக்கும் அமெ.

கொழும்பு, ஜன.3

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சீனப் பயணம் குறித்து அமெரிக்கா கவனம் செலுத்தி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதத்தின் இரண்டாம் வாரமளவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சீனாவுக்குப் பயணம் செய்யவுள்ளார்.

மகிந்தவின் சீனப் பயணம் குறித்து ஏற்கனவே அமெரிக்காவின் முக்கிய ஊடகங்கள் தகவல்களையும் அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளன.

சீன அரசுத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் உள்ளிட்டவர்களுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது. கடந்த காலங்களில் சீனா, இலங்கைக்கு வழங்கிய பல்வேறு உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் மகிந்த இந்தப் பயணத்தை மேற்கொள்ள உள்ளார் என்றும், சீன அரசின் அழைப்புக்கு அமையவே மகிந்த இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இது குறித்து அமெரிக்கா மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்று இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)




# தமிழ், முஸ்லிம் மக்களுடன் கைகோர்ப்பதற்குத் தயார்

## அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



கொழும்பு, ஜன.3

தமிழ், முஸ்லிம் மக்களுடன் கைகோர்த்து செயற்பட தாயார் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசியல் பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது-

கடந்த ஆண்டு ஆரம்பம் நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் முக்கியமான ஆண்டாக அமைந்தது. போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் காரணமாக ஐந்து ஆண்டுகளில் நாட்டையும் மக்களையும் அடக்கு முறைக்கு உட்படுத்தி நாட்டைச் சர்வாதிகாரத்தின் பக்கம் கொண்டுசென்ற மகிந்த ராஜபக்ச அரசை வீழ்த்தி ஜனநாயக, மக்கள் நலன் பேணும் அரசை உருவாக்கியுள்ளோம்.

அதேபோல் நாட்டுக்கு எதிரான அழுத்தங்கள், சர்வதேச படையெடுப்புகள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளோம். கடந்த காலங்களில் பொருளாதார ரீதியிலும் வாழ்வாதார முறையிலும் மக்கள் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு பெரும் கஷ்டங்களை அனுபவித்து வந்தனர்.

ஆனால் புதிய அரசின் வரவு - செலவு திட்டம் மக்களைப் பொருளாதாரச் சுமையில் இருந்து காப்பாற்றும் வகையில் அமைந்துள்ளது. அவ்வாறான ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் கடந்த ஆண்டு மக்களுக்கு மிகவும் சிறந்த ஆண்டாக நிறைவடைந்துள்ளது.

அதேபோல் ஆரம்பமாகியுள்ள இந்தப் புது வருடம் கடந்த ஆண்டைப்போல மேலும் பல நன்மைகள் ஏற்படும் வகையில் அமையும் என்ற வாக்குறுதியை எம்மால் கொடுக்க முடியும். மூவின மக்களும் தமது உரிமைகளுடன் வாழக்கூடிய வகையில் நாடு என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணையும் ஒரு ஆட்சியை எம்மால் முன்னெடுக்க முடியும்.

அதேபோல் பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் வளர்ச்சி கண்ட நாடாக இலங்கையை மாற்றும் நடவடிக்கைகளை பிரதான இரண்டு கட்சிகளின் தலைமைத்துவங்களும் மேற்கொள்ளும். குறிப்பாக கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட அரசியல் மற்றும் இன ரீதியான சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் நாம் முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் இந்த ஆண்டிலும் தொடரும்.

புதிதாக அரசியல் அமைப்பு மாற்றம் ஒன்றை ஏற்படுத்த அரசு முயற்சித்து வருகின்றது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் தலைமையில் பிரதான இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து கலந்தாலோசித்து வருகின்றன. ஆகவே புதிய அரசியல் அமைப்பில் நிச்சயமாக அரசியல் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஆட்சி மாற்றத்தின் போராட்டத்தில் தமிழ் மக்கள் மிகப் பெரிய பங்காளர்களாகக் காணப்பட்டனர். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. எம்மை நம்பி எம்முடன் கைகோர்த்தமைக்கு நாம் எப்போதும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

அதேபோல் எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் அரசு என்ற ரீதியில் தமிழ், முஸ்லிம் மக்களுடன் கைகோர்த்துச் செயற்படத் தாயாராக உள்ளோம். கடந்த காலத்தில் விட்ட தவறுகளை இந்த அரசு விடப் போவதில்லை. நாம் வடக்கு, கிழக்கு மக்களை அக்கறையுடன் கவனித்து வருகின்றோம். அதேபோல் சிங்கள, தமிழ் உறவையும் பலப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றோம்.

எனவே இந்த ஆண்டு இறுதிக்குள் அரசியல் பிரச்சினை தீரும். அதேபோல் நாட்டில் மூவின மக்களும் ஒன்றாக வாழக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளோம். அதைதொடர்ந்தும்தக்கவைப்போம் - என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் இலங்கையர் தொடர்பில்லை

## முஸ்லிம் விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.3

இலங்கையிலுள்ள எந்தவொரு முஸ்லிம் பிரசையும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்தவர்கள் அல்லர் என்று தபால் சேவை மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்துள்ளார். அரசியல் இலாபம் பெறும் நோக்கில் சிலர் வெளியிடும் அறிவிப்புக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனவும் - அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்பட்ட இலங்கையர்கள் குறித்து கடந்த காலங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டன. இருப்பினும், அந்த அமைப்புக்கு இலங்கைக்குள் செயற்படுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்று அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில், அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை- இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து கொள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளே காரணம் என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்திருந்தார். (ற)



# கடந்த ஆண்டு உடுவிலில் 90 பேருக்கு டெங்கு தொற்று

வலி.வடக்கு, ஜன.3

உடுவில் சுகாதார வைத்தி அதிகாரி பிரிவில் கடந்த வருடம் 90 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியிருந்ததாகச் சுகாதார வைத்திய அதிகாரியின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத் தாலேயே டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த டிசெம்பர் மாதத்தில் மட்டும் 36 பேர் டெங்குத் தொற் றுக்கு உள்ளாகி வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

குறிப்பாக சுன்னாகம் நகரப் பகுதி, ஏழாலை, உடுவில், இணுவில் பகுதிகளில் ஆகிய பகுதிகளிலேயே டெங்குத் தொற்று அதிகரித்துக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-86)

# வேப்பமரக்குற்றிகள் கடத்தியோர் பொலிஸாரைக் கண்டு தப்பியோட்டம்

*வாகனத்தையும் கைவிட்டு ஓடினர்*

பல லட்சம் ரூபா பெறுமதியான வேப்ப மரக்குற்றிகளை அனுமதி இன்றி வாகனத்தில் ஏற்றிச் சென்ற சந்தேக நபர்கள், நடு வீதியில் வாகனத்தை விட்டு விட்டு தப்பி சென்றுள்ளனர் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஏ9 வீதியூடாக மரக்குற்றிகளை ஏற்றிக் கொண்டு சென்ற வாகனத்தைத் தர்மக்கேணி வீதியில் வைத்து வீதிப்போக்குவரத்துப் பொலிஸார் மறித்துள்ளனர்.

அதன்போது வாகனத்தின் சாரதி வாகனத்தை நிறுத்தாமல் சென்றுள்ளார். அதையடுத்து பொலிஸார் வாகனத்தைத் துரத்திச் சென்றுள்ளனர். மரக்குற்றிகளைக் கடத்திக் கொண்டு சென்றதாகக் கூறப்பட்ட சந்தேக நபர்கள் எழுதுமட்டுவாள் பகுதியில் வாகனத்தை நிறுத்தி விட்டு தப்பி ஓடியுள்ளனர். குறித்த வாகனத்தில் இருந்து 7 அடி கொண்ட 4 வேப்பமரக்குற்றிகள் பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த வாகனமும் மரக் குற்றிகளும் பொலிஸ் நிலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன என்றும், சந்தேக நபர்கள் இது வரை கைது செய்யப்பட வில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ற-ஐ-ரி3,21)

## சுற்றுச் சூழல் தொடர்பில் பயிற்சிப் பட்டறைகள்

சுற்றுச் சூழல் குறித்து ஆர்வமுள்ள தன்னார்வுத் தொண்டர்கள், யாழ். அமெரிக்கத் தகவல் கூடத்துடன் இணைந்து தொடர் பயிற்சிப் பட்டறைகளை நடத்தவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறியின் முதலாவது செயலமர்வு எதிர்வரும் புதன்கிழமை 6 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அறிமுக நிகழ்வாக ஆரம்பமாகவுள்ளது.

இரண்டாவது செயலமர்வு மறுநாள் வியாழக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து மார்ச் மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை, 3 ஆம் திகதி வியாழக்கிழமை, ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை, 26ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை, ஜுலை மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை, 14ஆம்திகதி வியாழக்கிழமை, ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் அமெரிக்க தகவல் கூடத்தில் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன. இந்தப் பயிற்சிப் பட்டறையில் காலநிலைமாற்றத்தின் பின்னணியில் உள்ள அறிவியல், கால நிலை மாற்றததைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள், ஆரோக்கியமான உணவு மற்றும்நுகர்வுபழக்கம், இயற்கை முறையிலான பயிர் செய்கை மற்றும் சாத்தியமான பாவனை முறை, பொது விழிப்புணர்வை வடிவமைத்து செயற்படுத்துவதற்கான முறைகள் போன்ற விடயங்கள் தொர்டர்பில் ஆராயப்படவுள்ளன.

இலவசமாக வழங்கப்படும் இந்தச் செயலமர்வுகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை 23, அத்தியடி வீதியில் அமைந்துள்ள யாழ் அமெரிக்க தகவல் கூடத்தில் மேற்கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ற-ஐ-10)

## தனித்தமிழில் தமிழர் நாள்காட்டி

தனித்தமிழில் தமிழர் நாள்காட்டியை கிளிநொச்சி குமரித்தமிழ்ப் பணி மன்றம் வெளியிட்டுள்ளது. திருவள்ளுவர் ஆண்டு 2047க்கான தமிழர் நாள்காட்டி தைப்பொங்கல் தினமானதை முதலாம் திகதியில் ஆரம்பமாகின்றது.

தமிழர் நாள்காட்டி திருவள்ளுவர் ஆண்டு 2047 என்ற தலைப்புடன் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனாரின் சங்கப்பாடல் அடிகளையும் கொண்டு பல்வேறு தகவல்களையும் உள்ளடக்கி பல வர்ணங்களில் இந்த நாள்காட்டி அச்சிடப்பட்டுள்ளது.

தை - மார்கழி ஆகிய பன்னிரண்டு மாதங்களும் சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவம், கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை என்ற தனித் தமிழ்ப் பெயர்களுடன் பன்னிரண்டு மாதங்களுக்கும் தனியாக அச்சிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வெளிவரும் ஒரே ஒரு தமிழர் நாள்காட்டி இதுவாகும்.

(ற-ஐ-11)

# தேசிய வாசிப்புமாதமும் நூலகத் திறப்புவிழாவும்

வரணி, ஜன.3

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ்வரும் வரணி பொது நூலகம் நடத்தும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் சிறுவர் பகுதி நூலகத் திறப்பு விழாவும் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் திருமதி தர்சினி தயானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் சிறுவர் நூலகம் திறந்து வைத்தல், எழுத்தாளர் கௌரவிப்பு, இலவச அங்கத்துவம் வழங்குதல், நூல்கள் அன்பளிப்பு பெறல், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

(ற-ஐ-122)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

அமரர் குகராணி பாலசுப்பிரமணியம்



மண்ணில் 02.07.1950
விண்ணில் 04.12.2015

எமது அன்புத் தாயாரின் துயரச்செய்தி கேட்டு நேரடியாக வந்து துயர்தனைப் பகிர்ந்து கொண்ட உறவுகளுக்கும், தொலைபேசியில் ஆறுதல் கூறிய நல் உள்ளங்களுக்கும், மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசியின் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், நேரில் வந்து பல வழிகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (03.01.2016) ஞாயிற்றுக்கிழமை கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் கோயில் மணிமண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை எல்லோரும் தயவுசெய்து
தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கட்டப்பிராய்,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்
கே. பாலசுப்பிரமணியம்

றோயல் சேர்விஸ் ஸ்ரேசன், சாயிராம் மோட்டர்ஸ்,
றோயல் ரான்ஸ்போட், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(சி.28241) (13.15)

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

**காணி விற்பனைக்கு** தொடர்பு: 077 617 8297 077 734 4862

தொண்டமனாறு சந்நிதி கோவில் சமீபமாக அக்கரையில் 8 பரப்பு காணி பகுதியாகவும் விற்பனைக்குண்டு. வல்வெட்டித்துறை கிழக்குப் பகுதியில் வீடு அல்லது காணி ஒன்று வாங்குவதற்கும் தேவை.

**விற்பனைக்குண்டு** தொடர்பு: 021 205 1514 078 301 4280

45 நாள் நிரம்பிய அல்ஷேசன் நாய்க்குட்டிகள் ஆண், பெண் விற்பனைக்குண்டு. (67235) (14,15)

6சர்ச் ஒழுங்கை, அராலி வடக்கு.

**காணி விற்பனைக்கு உண்டு** தொடர்பு: 021 221 1140

சாவகச்சேரி வாரிவநாதர் சிவன் கோயில் தெற்கு வீதியில் 5½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. இது சிவன் கோயில் தெற்கு வீதிக்குத் தென்புறமாக சாவகச்சேரி புகையிரத நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ளது. (67198)(11,15)

**Car Sale** 077 674 1213

TATA NANO CX2012, KS XXXX 23000 KMS. Rs.9/50 (67256)(11,15,18)

**காணி விற்பனைக்கு** தொடர்பு: 077 256 3849

யாழ் மருதடி றோட் கை ஒழுங்கையில் 2 பரப்பு வெற்றுக்காணி பனை மரங்களுடன் விற்பனைக்குண்டு.

**VAN விற்பனைக்கு**

NP LK 94XX Year 2012 / White / JMC Light motor Lorry. Milage 56,652 km நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்லவுள்ளதால் உடன் தொடர்பு கொள்ளவும். (67278) (11,15,16)

076 701 6009, இடம்:யாழ்ப்பாணம்.

## தேவை

**தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை** தொடர்பு: 077 077 5546

மாங்குளம் A9 வீதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டட வேலைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் உடனடியாகத் தேவை. தகுதியுடையவர்களும் அனுபவம் மிக்கவர்களும் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். 05.01.2016 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

**தேவை** தொடர்பு: 077 160 7752

மேசன், வயரிங், பெயின்ரிங், பிளம்பிங் வேலைகள் சிறந்த முறையில் செய்து கொள்ளலாம் -அனுபவமான வேலையாள்களுக்கும் வேலை வாய்ப்பும் உண்டு.

**வேலையாள் தேவை (ஆண்)** தொடர்பு: 077 595 8178

வடலியடைப்பில் தங்கி நின்று வீட்டு வேலை செய்யக் கூடிய 45-55 வயதுக்குட்பட்ட ஆண் வேலையாள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். (67286)(11,15,17,18)

**வேலையாள் தேவை** தொடர்பு: 077 606 7894

வயதான ஒருவருடன் வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பெண் வேலையாள் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்புகொள்ளவும்.

**தேவை** தொடர்பு: 077 174 6101

புத்தளம் தென்னந்தோட்டத்துக்குச் சாரதி, பொது வேலையாள்கள் (ஆண்,பெண்), சமையல் உதவியாளர் (பெண்),யாழ்ப்பாணத்தில் பொதி செய்தல் பில்கிளாக் உதவியாளர் (பெண்கள்) தேவை. (67273) (11,15,16)

**பணிப் பெண் தேவை** தொடர்பு: 076 9283179

யாழ்ப்பாணம், நல்லூரிலுள்ள வீட்டுக்கும் மற்றும் கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள வீட்டுக்கும் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.' சம்பளம்- 15, 000 இலிருந்து 20, 000 வரை வழங்கப்படும்

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 இல் பிறந்த, பரணி நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமற்ற, கிரகபாவம் (49) உடைய அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

071 157 6097, 077 434 5654 (67275) (11,15,16)

# ஏனையவை

**விஞ்ஞான வகுப்புக்கள்**

Group Classes - Science
Gr.6 - 11 English Medium
By: Mr.Ragumar

(67206)(11,15) 077 605 9650

**செய்து கொடுக்கப்படும்**

வீடுகள், கட்டடங்களுக்குரிய Electrical wiring வேலைகள் வடிவமைத்துச் செய்து தரப்படும். அத்துடன் வீடுகள் அனுபவம் வாய்ந்த பொறியியலாளர் தலைமையில் கட்டிக் கொடுக்கப்படும்.

Engineer
077 856 1745, 076 903 7423 (67222) (11,15)




**Maths Personal & Group Classes**

C.K.B.Thayalan
Gr.6-11 (Tamil / English Medium)
ஆரம்பம்:06.01.2016

077 749 2794 (67267) (11,15)

**English Classes**

Given by a retired English Teacher from Royal College for school students and adults.

(67258) (11,15,18) 077 130 1080 (Jaffna)

**வேலை வாய்ப்பு**

நிட்டம்புவ, வதுபிட்டிவள, சீதுவ ஆகிய தேங்காய்ப் பால்மா கம்பனிகளுக்கு அனைத்துப் பிரிவுகளுக்கும் 18-40 ஆண், பெண். கிழமை சம்பளம் Rs.10000.00 பெற்றுக் கொள்ளலாம். உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

077 300 2428,077 165 7473, 072 246

நாள் சம்பளம், கிழமை சம்பளம், மாத சம்பளம், நாள் சம்பளம் Rs.1025/= கிழமை சம்பளம் Rs.10000, மாத சம்பளம் Rs.40000/= ஐஸ்கிறீம், தேங்காய்ப் பால்மா, நூடில்ஸ், சோசேஜஸ், பிஸ்கட் ஆகிய தொழிற்சாலைகளின் அனைத்துப் பிரிவுகளுக்கும் உணவு, தங்குமிடம், சீருடை ஆகியவை முற்றிலும் இலவசம்.

077 300 2428, 076 533 2495, 072 223 1518

மீரிகம, படகம பிரதேசத்தில் உள்ள பிரசித்தி பெற்ற மீன் Exporting கம்பனிக்கு அனைத்துப் பிரிவுகளுக்கும் உணவு, தங்குமிடம் இலவசம். கிழமை சம்பளம் Advance ஆக தரப்படும். மாதம் Rs.30000இற்கு மேற்பட்ட சம்பளம். வயது 18- 55. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

077 597 7259, 077 891 0589

பாணதுறை பிரதேசத்தில் உள்ள Paint, Plastic ஆகிய கம்பனிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு. சாப்பாடு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். மாத சம்பளம் Rs.35000 இற்கு மேல் அனைத்துப் பிரிவுகளுக்கும். வயது 18-55. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

077 401 7543, 075 54 6898

**நாய்க்குட்டி விற்பனைக்கு** தொடர்பு: 076 646 7742

5 வாரம் நிரம்பிய டோமன் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**சேவை** தொடர்பு: 076 897 0707

உங்களது அன்பிற்குரிய முதியோரை எங்களது முதியோர் இல்லத்தில் ஆதரவுடனும் அரவணைப்புடனும் வைத்திய தாதியர் சேவையுடன் பராமரிக்க தயாராக உள்ளோம்.

**பெண் உதவியாளர் தேவை** தொடர்பு: 077 613 8964

இடம் யாழ் நகரில் இருந்து 10Km வீட்டில் தங்கி இருக்கக்கூடிய 45 வயதிற்கு மேற்பட்ட குடும்ப பொறுப்புக் குறைந்தவர் தொடர்பு கொள்ளவும்.

**வீடு வாடகைக்குண்டு** தொடர்பு: 076 861 9947

புது வீதி, கொய்யாத் தோட்டத்தில் 3 அறை இணைந்த குளியலறை மற்றும் மாநகரசபை குடிநீர் வசதியுடன் கூடிய புதிதாக திருத்தியமைக்கப்பட்ட வீடு வாடகைக்குண்டு.

**A/L வரலாறு**

M.பத்மன் M.A (History)
அனைத்துப் பிரிவுகளுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன
கற்பிக்கும் இடம்: உயர் கலைக் கல்லூரி, சுன்னாகம்.

**மாபிள் வேர்க்ஸ் செய்து கொடுக்கப்படும்**

திறமையான வேலையாள்களால் தரமான வேலை மலிவான விலையில் செய்து கொடுக்கப்படும்.

1 சதுர அடி 50/=

தொடர்பு: நுவன்: 077 329 1745 (67305) (11,15,18)

**வேலையாள்கள் தேவை**

யாழ்.நகரில் உள்ள ... வரைக்கு வேலையாள்கள் ... ஆண், பெண் இருபாலாரும் ...ம்பத்தக்கது.

077 373 4109,077 930 9991
M&M Fashions
205/7, Kasthuriar Rd Jaffna

**மோட்டார் சைக்கிள் தேவை** தொடர்பு 077 985 9507

Pleasure மோட்டார் சைக்கிள் விற்க உள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். (சி/28216)(11,15,18)

**வகுப்பு (கணிதம்)** தொடர்பு: 077 937 0228

தரம் 4, 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் தரம் 6முதல் O/Lவரையான கணிதம் பலவருட அனுபவம் மிக்க ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து தனி/ குழு வகுப்புகள் சிறந்த முறையில் கற்பிக்கப்படும். (67015) (14,15)

**வேலைவாய்ப்பு**

அரிய சந்தர்ப்பம் FR கம்பனியில் புதிதாகத் திறக்கப்படவுள்ள கிளைகளில் வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.தகைமை O/L, A/L, O/L இல்லாதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். முன் அனுபவம் அவசியம் இல்லை. பயிற்சி அளித்து இணைத்துக் கொள்ளப்படுவர். மேலதிக தகவல்களுக்கு. (67277) (11,15,16)

077 208 3140,077 280 3773, 076 843 3804

**வேலையாள்கள் தேவை**

யாழ்.நகரில் பிரபல்யமாக இயங்கும் மிக்ஷர் கொம்பனிக்கு பொதியிடல் பகுதிக்கு வேலையாள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. அதியுயர் சம்பளம்வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.கிழமை நாள்களில் மட்டும்.

021 568 0854 (67290) (11,17,18)

**வாடகைக்கு** தொடர்பு: 011 250 4281, 071 299 1256

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல.8,புகையிரத வீதி,வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள், இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு. (சி.28303) (13,15)

**தனிப்பட்ட மற்றும் குழுவகுப்புகள்** தொடர்பு: 077 597 2153

பாடம்: விஞ்ஞானம்,ஆங்கிலம்
(English/ Tamil Medium)
ஆசிரியர்: BSc. MSc (pera) (67294) (13,15,17)

உதயன்
உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 493 1111, 021492 7415
advt@uthayan.com

## அறிவித்தல்
## பகிரங்க மூடிய கூறுவிலை

♦ வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான பாவிக்க முடியாத உழவு இயந்திரம், லொறி என்பன மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

♦ மூடிய கூறுவிலை மூலம் விற்பனைக்கு விடப்படும் வாகனத்துக்கான விண்ணப்பப் படிவத்தினைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 500/= (ஐநூறு) செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும். இப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

♦ மேற்கூறிய வாகனங்களை மருதங்கேணி, தாளையடி வீதியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

♦ பார்வையிடும் நேரம் 04-01-2016ஆம் திகதி தொடக்கம் 13.01.2016 ஆம் திகதி வரையும் விடுமுறை நாள்கள் தவிர்ந்த கிழமை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் 4 மணிவரை.

♦ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், வடமராட்சி கிழக்குப் ப.நோ.கூ.சங்கம், மருதங்கேணி, தாளையடி என்னும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'உழவு இயந்திரம், லொறி' விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

♦ இம் மூடிய கூறுவிலைக்கான விண்ணப்பம் 05.01.2016 ஆம் திகதி தொடக்கம் 18.01.2016 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். வாகனங்களுக்கான மூடிய கூறுவிலை 25.01.2016 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு எல்லோர் முன் நிலையிலும் திறக்கப்படும்.

தலைவர்,
வடமராட்சி கிழக்கு,
ப.நோ.கூ.சங்கம், மருதங்கேணி, தாளையடி.

(63609) (11,15,17)



## மொழிகள் கற்கை நெறி

தூதரகப் பரீட்சைகளுக்கான ஜேர்மனி, நெதெர்லாந்து Deutsch- Dutch மற்றும்French. Italian வகுப்புக்களும், திருமணம் முடித்து லண்டன் செல்பவர்களுக்கான ஆங்கில பரீட்சைக்கான வகுப்புகளும், அனைத்து புதிய பிரிவுகளும் 04.01.2016 ஆரம்பமாகின்றன.

விவேகானந்தா அக்கடமி, 221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 4842464
Government Registred Language School
Gov.Reg No- W/A 76795



## நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு அவதானம்

அதிகளவு சீனிப்பண்டங்களை உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்பட்டு விரைவாக மரணம் ஏற்படலாம்.

Sugar kills, consume with care

அனுசரணை: சித்தி விநாயகர் களஞ்சியம்
66.67 மருத்துமனை வீதி, யாழ்ப்பாணம்



## Diploma in Nursing
## Holy Cross School of Health Science

**விண்ணப்ப இறுதித் திகதி : 31.01.2016**

க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான பாடசாலை, இல.767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்துக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்
021 300 1102 / 077 115 9391

(67988) (1,15)


## நல்லாட்சிக்கு எதிராக கறுப்புக் கொடி வாரம்

*உதய கம்மன்பில கூறுகின்றார்*

கொழும்பு,ஜன.3
நாடு தழுவிய ரீதியில் முகப்புத்தகம் ஊடாக கறுப்புக் கொடி வாரத்தை நடத்தி நல்லாட்சி அரசுக்குத் தங்களது எதிர்ப்பைதெரிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக ஒன்றிணைந்த எதிர்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசின் மீது மக்கள் விரக்தியடைந்துள்ளனர். அவர்கள் கறுப்புக்கொடிகளை ஏற்றித் தமது எதிர்ப்பைஅரசுக்கு வெளிக்காட்டவேண்டும். இந்தத் திட்டத்துக்கு பொதுமக்கள் அனைவரும் தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்பாக கிராமங்கள் தோறும் இந்த விடயத்தை கொண்டுசெல்லத் திட்டமிடப்பட்டுள்ளதுஎனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ-ரி2)




SKILLS
COLLEGE OF TECHNOLOGY

Your Path to Success...

- C&G Post Graduate Diploma in Engineering – Level 7
- C&G Graduate Diploma in Engineering – Level 6
- BEng - Final Year – Level 6
- C&G Advanced Diploma in Engineering – Level 5
- C&G Diploma in Engineering – Level 4
- C&G Diploma in Engineering – Level 3
- G.C.E. A/L Maths or Science
- SCOT Certificate in in Engineering
- G.C.E O/L, G.C.E A/L coomerce or Arts

உயர்தரப் பரீட்சையின் பின் நீங்கள் எதிர்பார்ப்பது

- உயர் சம்பளம் பெறும்
- குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யக்கூடிய
- சமூகத்தில் நல் அந்தஸ்த்துள்ள

பாடநெறி

- ஏற்றுக்கொள்ளப்பட்ட அனுபவமுள்ள நிறுவனத்தில்
- நியாயமான விலையில்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு

- Civil Engineering
- Quantity Surveying (QS)
- Motor Vehicle Engineering (Hybrid)
- Electrical & Electronic Engineering
- Mechanical Engineering
- AutoCAD & Revit

அனைத்துடனும் கற்றுக்கொள்ள...

டிப்ளோமா பாடநெறியை பூர்த்திசெய்யும் சகலருக்கும் வேலை வாய்ப்பு

பாடநெறியை பூர்த்திசெய்யும் சகலருக்கும் வேலை வாய்ப்பு / பயிற்சி வசதிகள் !

City & Guilds
Diploma in
Engineering

மேலதிக தகவலகளுக்கு
யாழ்ப்பாணம். 021 4 66 66 99

தேவைப்படும் மாணவர்களுக்கு கணிதம் மற்றும் ஆங்கில இலவச பாடநெறிகள்

City & Guilds APPROVED CENTRE

புதிய பாடநெறி ஆரம்பம்
2016 ஜனவரி

Skills College Of Technology - SCOT

Nugegoda Campus No. 102, Stanley Thilakaratne Mw, Nugegoda 011 4 696 666
Kandy Campus No. 511, Peradeniya Road, Kandy
Kurunegala Campus No. 252, Puttalam Road, Kurunegala 037 3 61 68 68
Jaffna Campus No. 207, Navalar Road, Jaffna 021 4 66 66 99
Matara Campus No. 66, Dharmapala Mawatha, Matara 041 4 501 501

Opening Soon
Gampaha Branch
Ampara Branch


# விழி மடல் மூடி உறைகின்ற நண்பனுக்கு
# வழி ஏதும் இன்றி விழிநீர் சொரிகின்றோம்



நிஜத்தில்
உருவமாக
12 • 08 • 1989

விழிகளில்
கனவாக
30 • 12 • 2015

# அமரர் கணபதிப்பிள்ளை வாகீசன்
## (Electrical and Electronic Engineer )



வாகீசன் நீ ஒரு நட்பின் கீதை.....
யாழ்ப்பாணம் இலங்கையின் தலை என்றால் – வடமராட்சி
அதன் மூளையடா – சொன்னது நீதான் அதற்கு உதாரணமும் நீதான்
'வாகீசன்' அவன் ஒரு நடமாடும் தரவுமையம்
இவ்வாறுதான் பிறர் உன்னை அறிமுகம் செய்தனர்
பொறியியற் பீட விரிவுரை மண்டபங்கள் சொல்லும் – வாகீசனிடம்
விரைவாகப் பாடம் கற்பது எவ்வாறு என்று...
நீ கொடுத்த குறிப்புக்கள் அணையாக் குத்து விளக்காய்
எம் நெஞ்சில் இன்னமும் இருக்கின்றது – இருப்பினும்
நீ அணைந்து விட்டதாய் வந்த செய்தி – கனவாகத் தான்
இருக்க வேண்டுமென்று கடவுளிடமும் வாதிட்டோம்
நல்லவர்கள் இவ்வுலகில் நிலைப்பதில்லை – இது நிதர்சன
உண்மை நண்பா நீ ஒன்றும் விதிவிலக்கல்ல
உன்னைப் பற்றி கவிதை எழுத நினைத்தால் எவராலும் முடியாது! – ஏனெனில்
நீ கவிதையல்ல – "நட்பின் கீதை"

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

விழிகளில் நீர் நிரம்ப

**E/08 Batch**
**Faculty of Engineering, University of Peradeniya**

(c. 18994)(45.7.)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.3

சுதுமலை வடக்கு நாமகள் முன்பள்ளியில் ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்து பாடசாலையில் அனுமதி பெறும் மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் முகாமைத்துவக் குழு உறுப் பினர் எஸ்.ஞானராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தராஜாவும், சிறப்பு விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மலர்மகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-ரி5)

## அரச பொங்கல் விழாவுக்கு பதிவு செய்ய அறிவுறுத்து

அரச பொங்கல் விழாவில் பங்குபற்றுபவர்கள் தமக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு பலாலி கண்ணார் வயல் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர்.

2016ஆம் ஆண்டுக்கான பொங்கல் தினவிழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் குறித்த ஆலயத்தில் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-ரி5)

# கண்ணாடிகளுக்குக் கம்பிவலை பாதுகாப்புடன் இ.போ.ச. பஸ்கள்




யாழ்ப்பாணம், ஜன.3

இலங்கைபோக்குவரத்துச்சபைபஸ்களுக்கு பாதுகாப்பு கம்பி வலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறைச் சாலையூடாகச்செல்லும் இலங்கைபோக்குவரத்துச் சபையின் பஸ்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தும், தமக்கான பாதுகாப்பைத் தாமே உறுதிசெய்யும் முகமாகவுமே இந்தப் பாதுகாப்புக் கம்பி வலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வழித் தடப் பிரச்சினைகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களால் பஸ் சாரதிகளும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதுகுறித்துப் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளபோதும் எமக்கான பாதுகாப்பு இன்னமும் உறுதிப்படுத்தப்படாமலேயே உள்ளது.

பஸ்ஸில் செல்வது போருக்கு செல்வது போன்ற நிலையில் காணப்படுகின்றது. நாம் மக்களுக்காகவும் பாடசாலை மாணவர்களுக்காகவும் சலுகைகளுடனும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றோம். எமக்கான பாதுகாப்பு இன்றுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

எனவே,ஆரம்பக்கட்டமாக பஸ்களின் முகப்புக் கண்ணாடிகளுக்கு கம்பி வலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதுகாப்புக்கள் இனி அனைத்துப் பஸ்களுக்கும் மேற்கொள்ளப்படும். இதனை சட்ட ரீதியாக தவறு என்று எவரேனும் குறிப்பிட்டால் எமக்கான பாதுகாப்பை அவர்கள் உறுதிப்படுத்தட்டும். இனியும் எம்மீதான தாக்குதல்கள் தொடரும் எனில் யாழ். மாவட்டச்செயலகம் முன்பாக பெரும் போராட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி5,101)

## வவுனியாவில் இளைஞர் மீது கத்திக் குத்து

வவுனியா, ஜன.3

வவுனியாவில் கத்திக் குத்துக்கு இலக்கான இளைஞர் ஒருவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். நே.தனுசன் (வயது- 24) என்பவரே காயமடைந்தவராவார்.

வவுனியா கல்நாட்டினகுளப்பகுதியில் வீதியால் சென்று கொண் டிருந்த இளைஞனை நேற்று முன்தினம் மதியம் அவர்களது உறவினர் ஒருவர் குடும்பப் பகை காரணமாக கத்தியால் குத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கத்திக் குத்துக்கு இலக்கானவரைப் பொதுமக்கள் மீட்டெடுத்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ஜ-402)

## யோகா பயிற்சி அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ் யோகா அரங்கத்தினரின் ஏற்பாட்டில் புதிய யோகா பயிற்சி நெறிகளின் அறிமுக நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் தேரடி 63 நாயன்மார் குரு பூசை மடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியானது தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்கு காலை 6 மணி முதல் 7 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரையும், மீண்டும் மாலை 6மணி முதல் 7மணி வரையும் மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

இதில் நீரிழிவு நோயாளருக்கான விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதுடன், பயிற்சி நெறியின் பின்னர் சான்றிதழ் மற்றும் கையேடுகளும் வழங்கப்படவுள்ளன. ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். யோகா அரங்கத்தினர் கேட்டுள்ளனர். (ற-ஜ-ரி5)

## அராலியில் குருதித்தானம்

அராலி, ஜன.3

அராலி மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நேற்று நடைபெற்ற குருதித்தான முகாமில் இளைஞர் யுவதிகள் பலர் குருதிக்கொடை வழங்கியுள்ளனர்.

2008ஆம் ஆண்டு கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்ட தியாகராஜா மகேஸ்வரனின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டுஅராலிமத்தி கிராம அபி விருத்திச் சங்கத்தில் நேற்றுக் காலை முதல் மாலை வரை குருதித்தானம் வழங்கப்பட்டது.

இதில்பங்குபற்றிய இளைஞர்கள் பலர் தாமாக முன்வந்து குருதித்தானம் செய்தனர். (ஐ)

## குருதித் தானம்

யாழ்ப்பாணம், ஜன.3

கொக்குவில்பொற்பதிசனசமூகநிலையத்தில் குருதித்ததானம் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பொற்பதிசனசமூக நிலையத்தின் கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (ற-ஜ-ரி5)

Study in இந்தியா, பங்களாதேஷ், மலேசியா, சீனா, மற்றும் ரஷ்யா
IVS இன் புலமைபரிசில்

பல்கலைகழகங்கள்
- Melaka Manipal Medical College (India & Malaysia)
- Manipal International University (Malaysia)
- Sambhram Institutions (India)
- Lovely Professional University (India)
- PESIT Institute (India)
- Zhengzhou University (China)
- Volgograd State Medical University (Russia)
- University of Science & Technology - Chittagong (Bangladesh)

உயர்தர கல்விக்கு பின்னரான பாடபிரிவுகள்

Medicine
Dental Surgery
Bio Technology
Micro Biology
Audiology & Speech Language
Food Technology
Physiotherapy
Pharmacy
M.L.T.
Fashion Technology
Airline Tourism & Hospitality Management
Hospitality Management
Multimedia
Performing Arts
Fine Arts
Chemical Engineering
Civil Engineering
Computer Science Engineering
Electrical & Electronics Engineering
Electronics & Comm. Engineering
Mechanical Engineering
Business Administration (Finance)
Business Administration (Marketing)
Business Administration (Islamic Finance)
Business Administration (International Business)
Business Admin. (Actuarial Finance)
Business Management
Computer Applications
Hotel Management
Journalism & Mass Communication

அனுமதி இலவசம்

சாதாரணதர கல்விக்கு பின்னரான பாடபிரிவுகள்
பெற்றோர் / பாதுகாவலர்கள் மாணவர்களுடன் அனுமதிக்கப்படுவர்

| | |
|---|---|
| Foundation Studies in Engineering | Architecture Assistantship |
| Foundation Studies in Science | Interior Design |
| Foundation Studies in Business | Fashion Technology |

நேர்முகப்பரீட்சை BMICH 2 - 201 இல்
ஜனவரி 09ம் திகதி 2016, - காலை 10.00 முதல் மாலை 2.00 வரை நடைபெறும்

தொடர்புகளுக்கு:
கலாநிதி. விஜிதா மல்லிகா சேனாநாயக – 0777 444 500

Institute of Vocational Studies (Pvt) Ltd.
No. 476, Kandy Road, Dalugama, Kelaniya.
Direct Dial: 0112 910 323 Fax: 0114 810829
E-mail : ivsltd@hotmail.com Web : www.ivsedu.net

வேலைவாய்ப்பு

இலங்கையில் அமைந்துள்ள நிறுவனங்களுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆண்,பெண்கள் தேவை. வயது 18-55 சம்பளம் OT யுடன் 35000/-சாப்பாடு இலவசம். தேவைப்படும் பிரதேசங்கள் கிளிநொச்சி, மன்னார்,வவுனியா, திருகோணமலை மற்றும் சகல பிரதேசங்களுக்கும். வருகை தரும் நாளில் சேர்க்கப்படுவீர்கள்.

தொடர்புகளுக்கு. 076 541 2260
145/161, People's Park
Pittokoddawa.
(சி.28061) (13.15)

இனி இல்லை நெஞ்சுவலி !!!




தினமும் இலவச ஆலோசனை
செலிங்கோ ஹவுஸ்
வார நாட்கள் மு.ப 9.00 - மாலை 5.00
சனிக்கிழமை மு.ப 9.00 - பி.ப 2.00
மாதாந்த கிளினிக் நாடு முழுவதும்

FAIR PHARMA (PVT) LTD
(Kerala Ayurvedic Medicine)
011 4 388 200, 4 388 100
4 388 101, 4 388 102

செலிங்கோ ஹவுஸ், 11ஆம் மாடி, இல.69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 11.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

# ஐரோப்பிய நாடுகளில் இம்முறை களையிழந்த நத்தார், புதுவருடம்

ஐ.எஸ். பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக இம்முறை ஐரோப்பிய நாடுகளில் நத்தார், புதுவருடக் கொண்டாட்டங்கள் சோபை இழந்து காணப்பட்டன என்று செய்திகள் தெரிவிக்கின்றன. மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய கடுமையான பாதுகாப்பு நடவடிக்கை, முன்னெச்சரிக்கையாகக் கொண்டாட்ட நிகழ்வுகள் நிறுத்தப்பட்டமை ஆகியவை இதற்குக் காரணமாகும்.

பாரிஸில் நடத்தப்பட்ட தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். இப்படியான தாக்குதல் எந்தவோர் ஐரோப்பிய நாட்டிலும் இந்தப் பண்டிகை நாள்களில் நடக்கலாம் என்ற அச்சம் இருந்தது. அந்த நாடு பெல்ஜியமாகவும் இருக்கலாம். பிரிட்டனாகவும் இருக்கலாம். அமெரிக்காவாகவும் இருக்கலாம். அல்லது சவூதி அரேபியாவாகவும் துருக்கியாகவும் இருக்கலாம். சிரியாவிலும், ஈராக்கிலும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான வான் தாக்குதல்களை நடத்திவரும் நாடுகள் அத்தனையும் அச்சத்தில் உள்ளன. நத்தார், புதுவருட தினங்களில் அதிஉச்ச பாதுகாப்பில் இருந்துள்ளன. ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பை எவர் உருவாக்கினார்கள் என்பது தெரியாது. எனினும் ஈராக்கையும், சிரியாவையும் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் அமெரிக்காதான் இவர்களை உருவாக்கியிருக்கலாம் என்பதை நிராகரித்துவிட முடியாது.

ஆப்கானிஸ்தானில் இருந்து 1988-89இல் சோவியத் படைகள் வெளியேறிய சமயம் ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக நடைபெற்ற அதிகாரப் போராட்டத்தின்





போது அமெரிக்காவின் ஒப்புதலுடன் பாகிஸ்தானால் உருவாக்கப்பட்டது தான் தலிபான் அமைப்பு. தலிபான் அரசின் பாதுகாப்பில் இருந்துகொண்டு தான் பின்லேடன் நியூயோர்க் இரட்டைக் கோபுரம் மீது தாக்குதல் நடத்தினார். அதேசமயம் ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகளை விரட்ட அமெரிக்காவால் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டு உருவாக்கப்பட்ட அமைப்புகளில் ஒன்றுதான் அல் குவைதா. இன்று அல்குவைதா தலைவர் பின்லேடன் சுட்டுக்கொலை செய்யப்பட்டுவிட்டார். எனினும், மத்திய ஆசியாவிலும் வட ஆபிரிக்காவிலும் அல்குவைதாவும் அதன் கிளை அமைப்புகளும் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன. இவற்றைப் போன்றே ஐ.எஸ்.பயங்கரவாதிகள் அமைப்பும் உருவாக்கப்பட்டது. ஈராக்கில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோதிலும் அது நிரந்தரமானது அல்ல என்பது அமெரிக்காவுக்குத் தெரியும். அதேபோன்று சிரியாவில் ரஷ்யாவின் ஆதரவுடன் இருந்துவரும் அஸாத்தை வீழ்த்துவது சுலபமானது அல்ல என்பதும் தெரியும். அதனால்தான் மூன்றாவது நாடு ஒன்றை உருவாக்கி அந்த இரு நாடுகளையும் பலவீனமாக்கத் திட்டமிட்டிருக்கலாம். ஆனால், கிணறு தோண்ட பூதம் கிளம்பியது போன்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கே ஐ.எஸ்.அமைப்பு சவால்விட்டு வருகிறது. தலிபான்களுடனும் அல்குவைதாவுடனும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுடனும் மோதும் நிலைமை அமெரிக்காவுக்கு இருந்து வருகிறது. ஐ.எஸ்.பயங்கரவாதிகளும் அந்த நாடுகளில் பதிலடித் தாக்குதல்களை நடத்திவருகின்றனர். இதன் எதிரொலிதான் நத்தார், புதுவருடக் கொண்டாட்டங்களின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள்.

நத்தார், புதுவருட தினங்களில் பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸல்ஸில் வாணவேடிக்கைகள், கொண்டாட்டங்கள் நிறுத்தப்பட்டன. துருக்கி தலைநகர் அங்காராவில் நடை பெறவிருந்த பிரமாண்டமான புதுவருடக் கொண்டாட்டங்கள் தடை செய்யப்பட்டன. பிரான்ஸ் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்தியது. ரஷ்யாவும், லெனின்கிராட் போன்ற குறிப்பிட்ட சில பகுதிக்குள் மக்கள் செல்லத் தடை விதித்தது. குறுகிய காலத்தில் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பால் உலக நாடுகள் குழம்பிப்போயுள்ளன. அமெரிக்கா தூரநோக்குடன் செயற்படத் தவறியதன் விளைவுகள்தான் இவை.

# நேரத்தை வீணாக்காதே

நித்தியா




சேமிப்பு என்றவுடனே அனைவரும் நினைப்பது பணத்தை மட்டுமே. சேமிக்கத்தக்கது செல்வம் ஒன்றுதான் என்ற சிந்தனைப் போக்கு, எமது வளர்ச்சிப் போக்கை ஒரு பக்கப் பரிமாணம் உடையதாக மாற்றிவிடும். வளர்ச்சி எனப்படுவதோ, வெற்றி என்று அழைக்கப்படுவதோ எல்லாப் பக்கங்களிலும் சமவிகிதத்தில் பெருக்கம் அடைவதாகும்.

1. பணம்
2. அறிவு
3. அனுபவம்
4. காலம்

என்று நான்கு விதங்களிலும் சேமிப்புச் செய்யத் தெரிந்து கொள்ளாவிடில் வெற்றியின் வருகை தாமதப்படும். வெற்றியைப்பெற விரும்புவோர், வெற்றி பெற்றோர் இருவருமே முறையான வாழ்வு நடத்த அறிந்திருக்க வேண்டும். வெற்றிக்கு முயலும்போதே முறையான பழக்கங்களை அமைத்துக் கொள்வது மிகுந்த பயனளிக்கும். வெற்றியின் நாயகரான நீங்கள் முறையான வாழ்க்கை நடத்தத் தேவையான சில விதிகளுக்கு அடங்கியே தீரவேண்டும். உங்கள் உடல்நலனைக் கெடுக்கக் கூடியதாக, உங்கள் பொருள் வளத்தை அழிக்கக் கூடியதாக, உங்களுக்கு சமூகத்தில் அவப்பெயர் ஏற்படுத்தக் கூடியதாக உங்கள் காலத்தையெல்லாம் கொள்ளையிட்டு அரிதினும் அரிதான இந்த மனித வாழ்வை ஒரு மாபெரும் கால விரயமாக்கக் கூடியதாக உங்களிடம் எந்தப் பழக்கமாவது உள்ளதா? அந்தப் பழக்கம் உங்களைச் சிறுகச் சிறுக மாபெரும் வீழ்ச்சியில் கொண்டு போய்விடும் என்று இதுவரை நீங்கள் அஞ்சியதே இல்லையா? உங்களுக்கு வெற்றி வேண்டுமா? அல்லது அந்தப் பழக்கத்தினால் கிடைக்கும் கொஞ்சநேர இன்பம் வேண்டுமா? உங்கள் வாழ்க்கை ஒளிவீசுகின்ற நட்சத்திரமாகப் பிரகாசிக்க வேண்டுமென விரும்புகிறீர்களா? அல்லது பழக்கம் என்ற குப்பைத்தொட்டியில் வீசியெறியப்பட்ட கசங்கிய காகிதமாகட்டும் என்று விரும்புகின்றீர்களா? இதைத் தீர்மானிக்க வேண்டியது நீங்கள். உங்கள் வாழ்வை உருவாக்கும் தலைவர் நீங்கள். உங்கள் ஜோதி உங்களிடமே. அதை அணைப்பதும் ஒளி வீசச் செய்வதும் உங்கள் பொறுப்பே. சிலமணி நேரம் தொடர்பு கொண்ட என்னைப் போன்ற ஒரு நண்பன் சொல்லக்கூடியது ஓரிரு சொற்கள் மட்டுமே. மனிதனாகப் பிறந்ததை விட மகத்தான வாய்ப்பு வேறொன்றில்லை. அந்த வாய்ப்பை அன்பு கூர்ந்து பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

எண்ணம் மனத்தில் ஒரு கணப்பிரிவில் தோன்றி மறையும் ஒரு நிகழ்ச்சியாக முடியலாம். வேர்விடாத லேசான ஆசையாய்த் தோன்றி மறையலாம். ஏங்கும் ஆசையாய் பலநாள் இருந்து கரையலாம். எண்ணம் உறுதி பெறும்போது மனத்தில் அது நம்பிக்கையாய் வேர் விடுகின்றது. நம்பிக்கைதான் நோய்களைக் குணப்படுத்துகிறது. நம்பமுடியாத காரியங்களை நடைமுறை அனுபவங்களாக மாற்றுகின்றது.

மூன்று நண்பர்கள் தங்களது நண்பன் ஒருவன் மீது செய்த விளையாட்டைப் பற்றிய கதையை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.

நல்ல மன நிலையுடனும், உடல் நிலையுடனும் அலுவலகத்துக்குச் செல்லப் புறப்பட்ட ஒருவனை அவனது நண்பன் பார்த்து 'என்ன வந்தது உனக்கு? ஏன் இப்படி நோயாளி போல் தோன்றுகிறாய்?' என்றான். அடுத்த நண்பன் தற்செயலாகச் சந்திப்பது போல் அடுத்த தெருவில் நிறுத்தி, அவனது உடல் நிலையைப் பற்றிக்குறிப்பிட்டு, தன் அனுதாபங்களைத் தெரிவித்து விட்டுச் சென்றான். மூன்றாமவன் அலுவலகத்தில் அவனைச் சந்தித்து என்ன நேர்ந்தது உனக்கு? என்று அலறினான். அந்த மனிதன் உண்மையிலேயே அங்கு கிடந்த சோபாவில் சாய்ந்து விட்டான். அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

உண்மையிலேயே பலர் என்னால் முடியாது- என்ற நம்பிக்கையில் ஊறிப் போய் நோய்வாய்ப்பட்டு வாழ்க்கையைக் கழிக்கின்றனர். முடியாது என்று மனத்தை நம்ப வைத்திருக்கின்றனர். திடமான எண்ணங்களை உள்ளே விடுங்கள். உற்சாகம், ஊக்கம் என்னும் ஒளியைத் தூண்டிவிடட்டும். உங்கள் லட்சியப் பாதையில் அது அழைத்துச் செல்லும்.

வேகமாகச் செல், வேகமாகச் செல், உன்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேகமாகச் செல். இந்த வாசகங்கள் எட்டாவது ஹென்றியின் காலத்தில் தபால் பையின் மீது எழுதப்பட்டிருந்தன. தபால் அலுவலகங்களே கிடையாத அந்தக் காலத்தில் அரச தூதர்களே கடிதங்களைச்

“மனிதனாகப் பிறந்ததை விட மகத்தான வாய்ப்பு வேறொன்றில்லை. அந்த வாய்ப்பை அன்பு கூர்ந்து பயன்படுத்திக் கொள்ளுங்கள்.”

சுமந்து செல்வர். அவர்கள் வழியில் தாமதித்தால் அவர்களுக்குத் தண்டனை என்ன? சிரச்சேதம் தவிர வேறில்லை. நாம் சிலமணி நேரத்தில் கடந்து செல்லக்கூடிய தூரத்தை மாதக்கணக்கில் கடந்து செல்லவேண்டிய அந்தக் காலத்தில் சிரச்சேதம் அனாவசியத்தனமானது. ஒரு பெருங்குற்றமாகக் கருதப்படக்கூடாதது. ஆனால் அந்தக் காலத்தில் உள்ளவர்கள் ஒரு வாரத்தில் செய்யக்கூடிய காரியத்தை இன்று ஒரு மணி நேரத்துக்குள் செய்து முடிக்கும் வண்ணம் உலகம் முன்னேறிக் கொண்டிருக்கும் பொழுது அன்று அனாவசியத் தாமதத்துக்கு சிரச்சேதம் தண்டனை என்றால்; இன்று அந்தவிதக் குற்றத்துக்கு என்று எந்தவித தண்டனை விதிப்பது?

நான்வெற்றியடைந்ததற்குக் காரணம், நான் எப்பொழுதும் தயாராக இருந்ததுதான் என்று கூறினார் காப்பட். பத்து மணிக்கு வேலை செய்வதாக இருந்தால் நான் ஒன்பது மணிக்கே தயாராகிவிடுவேன். எனக்காக வேண்டி நான் எவரையும் ஒரு நிமிடம் கூடக் காத்திருக்க விடுவதில்லை என்று அவர் விளக்கம் கூறினார்.

இவ்வாறு வாழ்வில் முன்னேறுகின்றவர்களெல்லாம் தங்களுடைய நேரத்தைக் கண்ணைப்போல் பாதுகாத்துப் பொன்னைப் போல் செலவழிக்கும் பொழுது நாமும் எம்முடைய நேரத்தை அனாவசியமாக வீணாக்காதிருக்க எம்மையே நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தொடரும்.........

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இளம் சமுதாயத்தினரை இலக்கு வைத்து ஒழுக்க நெறியைத் தகர்க்கும் போக்கு

✱ இரண்டு சிறுவர்கள் சேர்ந்து, பெண்ணின் கைப்பையை அபகரித்துச் சென்றனர்.

✱ சைக்கிளில் சென்று கொண்டிருந்த முதியவரிடம் இருந்து மோட்டார் சைக்கிள் இளைஞன் ஒருவன் அவரது கைப்பையைப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டான்.

✱ வைத்தியசாலையில் வைத்து நோயாளிப் பெண்ணிடம் நகைகள் கொள்ளை இடப்பட்டன.

ஆங்கிலப் புதுவருடத்தின் முதலாம் நாளன்று குடாநாட்டில் நடைபெற்ற திருட்டுக்கள், கொள்ளைகள் குறித்த பத்திரிகைச் செய்திகளே மேற்போந்தவை.

அண்மைக் காலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இத்தகைய சம்பவங்கள் பெருகி வருவதை ஊடகத் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

குடாநாட்டின் படித்த இளைஞர்களே, இத்தகைய சமூக விரோதச் செயல்களில் அதிக எண்ணிக்கையில் ஈடுபடுகிறார்கள் என்ற தகவல் மிகவும் கவலைக்கு உரியது. இவை சமூக விரோதமானவையும் ஆகும்.

இத்தகைய நிலைமைக்கான பிரதான காரணங்களில், இளைஞர்களைப் பற்றிக் கொண்டுள்ள நாகரிக மோகமும், டாம்பீக வாழ்வை நாடும் பைத்தியமும் அடங்குகின்றன எனின் தப்பன்று!

தத்தமது பெற்றோர்களின் வருவாய்க்கு உட்பட்ட வாழ்க்கைத் தர நிலைகுறித்துச் சிந்திக்காத, பகுத்துணர முடியாத தன்மை இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வருவதும் பெரும் சாபக்கேடு.

படித்தவர்கள், படியாதவர்கள் என்ற வேறுபாடு இன்றி, டாம்பீகமான வாழ்வு முறைக்கு அடிமைகளாவதும், வாய்ப்பும் வசதியும் உடைய மற்றவர்களின் நிலைக்குத் தாமும் உயரவேண்டும் என்ற நப்பாசை தொற்றிக் கொள்வதும், இதற்கான காரணங்கள் எனலாம்.

தட்டிக்கேட்க ஆள் இல்லையெனில், தம்பி சண்டப் பிரசண்டன் என்ற போக்கில், போரின் பின்னரான இப்போதைய வாழ்நிலை மாற்றத்தினால், இளைய சமுதாயத்தினர் தறிகெட்டு நிற்பதும் இந்த நிலைக்கான பிரதான காரணம் எனக் கொள்ளலாம்.

இதேவேளை --

குடாநாட்டு இளைஞர்களின் இத்தகைய கலாசாரப் பிறழ்வுநிலை குறித்து எமது சமூகத்தின் புத்திஜீவிகளும், நீதித்துறைசார் தரப்பினரும் கவலை தெரிவித்து வருவதுடன் எச்சரிக்கையும் விடுத்து வருகின்றனர். இன்றைய இளம் சமுதாயத்தினரின் -- எமது எதிர்காலச் சந்ததியினரின் -- போதைவஸ்துப் பாவனை, குடிப்பழக்கம், வன்முறைப்போக்கு மற்றும் அடாவடித்தனங்கள் என்பவை பல்கிப் பெருகுவது குறித்தும் அவர்கள் சுட்டிக்காட்டி வருவதும் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

இப்போதைய காலகட்டத்தில் திட்டமிட்ட வகையில், எமது இளம் சமுதாயத்தினரை, இலக்கு வைத்து, சட்டத்துக்கு முரணானதும், தமிழ் மக்களின் ஒழுக்க நெறிகளைத் தகர்த்து எறியும் உள்ளார்ந்த நோக்கத்துடனும், கண்ணுக்குத் தெரியாத வகையில் வெளிச்சக்தி ஒன்று ஊடுருவிச் செயற்படுகிறது எனலாம்.

அதனைத் தடுப்பதற்கும், எமது இளைஞர்களை நல்வழி நடக்கச் செய்வதற்கும் --

பெற்றோர், உற்றார், உறவினர், கற்பித்தல் சமூகத்தினர், புத்திஜீவிகள், சமூக நலன் விரும்பிகள் என அனைத்துத்தரப்பினரும் கூட்டு முயற்சியுடன் செயற்பட வேண்டிய முக்கிய தருணம் இது.

எதிர்பார்க்கலாமா....?

# சிங்களவரின் பிரித்தாளும் முயற்சிக்குக் கைகொடுக்காதீர்

மறவன்புலவு
க. சச்சிதானந்தன்
(இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நடுக்குழு உறுப்பினர்)

2016க்குள் ஈழத் தமிழரின் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிய அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உறுதியளித்துள்ளனர். தலைவர் இரா. சம்பந்தன் மீண்டும் மீண்டும் இந்த உறுதிமொழியைக் கூறி வருகிறார். தீர்வை நோக்கிய





காய்களை நகர்த்துவதாகவும் எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசமுடிந்தால் தீர்வு எட்ட முடியாதென்பதையும் கூறி வருகிறார்.

அரசியலில் இத்தகைய நடைமுறைகள் வழமையே. உயிர்வாழ்வேதமிழருக்குவினாக் குறியான இக் காலத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழுமையான, மனத் தடையற்ற ஆதரவைக் கொடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயம்.

2016 மார்கழி வரை காலக் கெடுவை நோக்கி, கட்டிறுக்கமான செயற்திட்டத்துடனும், சிங்கள அரசியல் தலைவர்களுடன் நல்லுறவைப் பேணியும், முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றும், மலையகத் தமிழர்களுடன் உறவை வளர்த்தும், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் நீதிக்கான அழுத்தப் பின்னணியில் தீர்வை நோக்கித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னேறுகின்றனர்.

தீர்வு எட்டப்படக்கூடாதென்பதிலும், தமிழரைத்தொடர்ந்து அடிமை கொள்ள வேண்டும் என்பதிலும் சிங்களத் தலைமை உறுதியாக உள்ளது. இதற்காகத் தமிழரிடையே கலகத்தைத் தூண்டி விடுகின்றனர்.

சிங்களத் தலைமையின் இந்த முயற்சிக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஈழத் தமிழ் மக்கள் வாக்களித்து மக்களுக்காகப் பணிபுரிய வந்தவர்கள், கடந்த சில மாதங்களாக தனிப்பட்ட தாக்குதல்களும் அழாப்பும் நியாயங்களும், கட்சி பிரித்தலும், நகை முரண்களும் நிறைந்த அறிக்கைப் போரில் ஈடுபட்டுப் பகைமை வளர்ப்பது போன்ற புறத்தோற்றம் இருப்பதால், சிங்களத் தலைமை தங்கள் திட்டம் வெற்றியடைவதாக எண்ணிப் புளங்காகிதம் அடைந்து வருகின்றது.

### பிரித்தாளும் சாணக்கியம்

1965-1968 காலப் பகுதியில் தமிழரைப் பிரித்தாளும்சிங்களத் தலைமையின்சாணக்கியத்தை நேரில் கண்டிருக்கிறேன். அக்காலத்தில் அமைச்சராக இருந்த மு. திருச்செல்வம் அவர்களின் உதவியாளராக இருந்தேன். பெரியவர் செல்வநாயகம், தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம், மு. திருச்செல்வம் மூவரும் பிரதமர் டட்லி சேனாநாயக்காவையும், மூத்த அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவையும் சந்தித்த காலங்களில் அமைச்சர் திருச்செல்வத்தின் உதவியாளராக நானும் அங்கிருந்திருக்கிறேன். தமிழ்த் தலைவர்களை ஒருவருக்கு எதிராக மற்றவரைத் தூண்டிவிடும் அல்லது பயன்படுத்தும் வித்தையைச் சிங்களவர் நன்கறிந்திருந்தார்கள்.

1619இல் ஆட்சியை இழந்து 400 ஆண்டுகளாக ஆட்சி செய்யும் மரபையும் வழக்காறுகளையும் ஈழத்தமிழர் பெருமளவு மறந்து போயினர்.

1815இல் ஆட்சியை இழந்த சிங்களவர், 100 ஆண்டு கால இடைவெளியில் ஆட்சி மரபை இழக்காமல், சாணக்கியங்களை மறக்காமல், வித்தைகளைக் கைவிடாமல் இருப்பதை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

மக்களாட்சி மரபில், கொள்கைக் கருத்துக்குரல்களைக் கேட்போம், அவை மாற்றுக்கருத்தாயிலென்ன எனக் கூறியிருப்பதே தமிழர் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் முதிர்ச்சியையும் சாணக்கியத்தையும் காட்டுகிறது. கொள்கை மாறுபாடுகளை வெளிப்படையாகக் கூறலாம், தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் அதை வரவேற்பர்.

தனிப்பட்ட தாக்குதல்களும் அழாப்பும் நியாயங்களும், கட்சி பிரித்தலும், நகை முரண்களும் சிங்களவரின் பிரித்தாளும் முயற்சிக்குக் கைகொடுக்கும். 2016 மார்கழி வரை காலக்கெடு விதித்து, ஒளிமயமான எதிர் காலத்துக்கான அரசியல் தீர்வை

> “அரசியலில் இத்தகைய நடை முறைகள் வழமையே. உயிர் வாழ்வே தமிழருக்கு வினாக் குறியான இக்காலத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழுமையான, மனத் தடையற்ற ஆதரவைக் கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.”

நோக்கித் தமிழர் தேசியக் கூட்டமைப்பு நகர்த்தும் முயற்சிகளுக்கு அப்பழுக்கற்ற, நெஞ்சார்ந்த, தங்குதடையற்ற ஆதரவைக் காலக்கெடு முடியும் வரை வழங்குவதே ஈழத் தமிழரின் திறமையான ஆட்சி மரபுக்கும், சாணக்கியத்துக்கும் சான்று. அவ்வாறாற்றுவதே எம் அனைவரின் கடன். எமக்காக நாமானால் நாளை எமதாகும்.



சேரலாதன்

# புதிய கட்சி அமைப்பதால் மகிந்த மீண்டெழுவாரா?

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பது தொடர்பான தமது எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போசகராக விளங்கும் அவர், இத்தகைய தொரு முடிவை எடுத்ததில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமே இல்லை. தற்போது அவர் இருக்கும் நிலையில் இவ்வாறான தொரு முடிவை எடுப்பதற்கு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார் என்பதுதான் உண்மை.

மகிந்த ராஜபக்சவின் தந்தையார், பண்டார நாயக்க குடும்பத்துடன் எப்போதுமே நெருங்கிய உறவைப் பேணி வந்தவர். சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்தபோது பலதடவைகள் அமைச்சர் பதவியையும் வகித்தவர். தமது குடும்பத்துக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் உள்ள நெருங்கிய தொடர்புகளை மகிந்த பல தடவைகள் பெருமையுடன் கூறியிருக்கிறார்.

**எதிர்பாராத தோல்வி**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தான் போட்டியிட்டார். ஆனால் அந்தக் கட்சியின் இன்னொரு வேட்பாளரான தற்போதைய ஜனாதிபதியிடம் எவரும் எதிர்பாக்காத வகையில் மகிந்த தோல்வியைத் தழுவ நேர்ந்தது. ஆனாலும், நாடாளுமன்றத் தேர்தலிலும், அந்தக் கட்சியின் சார்பாகவே அவர் போட்டியிட்டார். அதுவும் பிரதமர் பத வியைக் கைப்பற்றுகின்ற நோக்கத்துடன் களமிறங்கியிருந்தார். இறுதியில் வெறும் நாடாளு மன்ற உறுப்பினராக வருவதற்கு மட்டுமே அவரால் முடிந்தது. அதன் பின் நரும் அவரது பதவி மோகம் கலைந்ததாகத் தெரியவில்லை. மைத்திரி-ரணில் இணைந்த ஆட்சியைக் கவிழ்த்து, எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதில் முனைப்புடன் செயற்பட்டார். ஆனால் அவருடன் ஒட்டி உறவாடியவர்கள் அவரைப் பிரிந்து சென்று அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலைதான் உருவானது. அவரது மூத்த சகோதரரும், முன்னாள் சபாநாயகருமான சமல் ராஜபக்சகூட அரசில் சேருகின்ற எண்ணத்தில் உள்ளாரெனத் தற்போது தகவல்கள் கசிந்துள்ளன. இதனால் தாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தொடர்வதால் பயனில்லை என்பதை அவர் உணர்ந்திருப்பார். இதுவே அவர் புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கான கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும்.

**புலிகளைத் தோற்கடித்த வீரர்**

புலிகளைத் தோற்கடித்து போரை வென்ற வீரர் என்ற மாயை தென்பகுதி மக்களிடம் நீண்டகாலம் நீடித்திருக்க முடியாது. போர் ஓய்ந்து ஏழாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள நிலையில், அந்த மக்கள் போரைப் படிப்படியாகவே மறந்து வருகிறார்கள். போருக்கு அப்பால் தமது சொந்தப் பிரச்சினைகள் தொடர்பாகவே அவர்கள் தற்போது சிந்தித்து வருகிறார்கள். இந்த நிலையில் மகிந்த இனியும் தம்மை யொரு போர் வெற்றி வீரனாகச் சித்திரித்துக் கொண்டிருக்க முடியாது என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டிருப்பார்.

இந்தநாடு பொருளாதாரரீதியில் மோசமான தொரு நிலையை எட்டியதற்கு மகிந்தவே மூலகாரணமாக உள்ளார். அவரது ஆட்சிக் காலத்தில் நிகழ்த்தப்பட்ட மோசடிகள் நாட்டின் பொருளாதார வளங்களைப் பெருமளவில் சுரண்டி விட்டன.

ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்திருந்த மகிந்த இவற்றைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. மாறாக இவற்றுக்கெல்லாம் அவரது ஆதரவு இருந்தமை விசாரணைகள் மூலமாகத் தெளிவாகியுள்ளன. அபிவிருத்தி என்ற போர்வையில் பெருமளவு நிதி தனியாள்களின் வசம் சென்ற டைந்துவிட்டது. இவை தொடர்பான விசாரணைகள் முழுவீச்சில் இடம்பெறுமாயின் மகிந்த தரப்பினர் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இருக்க வேண்டியதொரு நிலைதான் உருவாகும். அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனைச் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சதித் திட்டங்களும் எதிர்த்தரப் பினரால் முன்னெடுக்கப்படுவதாக புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதிக்கு அறிக்கையிட்டுள்ளனர். ஜனாதிபதி இதை ஒரு சாதாரண விடயமாகக் கருதமாட்டார். கடுமையான நடவடிக்கைகளை முடுக்கிவிடவே அவர் விரும்புவார்.



மேலும் தற்போது தெற்கில் இனவாதம் மீண்டும் தலைவிரித்தாடுவதைக் காண முடிகின்றது. புதிய அரசமைப்பை உருவாக்கப் போவதாக அரசு தெரிவித் துள்ள நிலையில், அதற்குப் பலமான எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளதைக் காண முடிகின்றது. பிரதமர் கோவணம்கூட இல்லாது ஓடப்போகின்றாரென ஒரு கடுங்கோட்பாட்டுடனான இனவாத அமைப்பு பகிரங்கமாகக் கூறியுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**இனவாதிகள் சகித்துக் கொள்ள மாட்டார்கள்**

பெரும்பான்மை, சிறுபான்மை இனங்கள் ஒற்றுமையுடன் வாழ்வதை இனவாதிகள் ஒருபோதுமே சகித்துக்கொள்ள மாட்டார்கள். தற்போது விகாரைகள்தோறும் கூட்டங்களை நடத்தி வருகின்ற மகிந்தவும் இனவாதக் கருத்துக்களை உதிர்ப்பதற்குத் தவறுவதில்லை. தமிழர்கள் தமக்கு வாக்களிக்காததால் தாம் ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதை அவர் தமது வாழ்நாள் முழுவதும் மறந்து விடமாட்டார் என்பதை அவரது சமீபகால நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

மகிந்த தனிக்கட்சி அமைத்தால், அது இனவாதத்தின் வழியே செல்லும் என்பதை இப்போதே அனுமானித்துக் கொள்ள முடியும். அடிபட்ட புலியாக உறுமிக் கொண்டிருக்கும் மகிந்தவுக்கு இனவாதத்தை விட்டால் வேறு கதியே இல்லை. தம் மீதும், தம்மைச் சார்ந்தவர்கள்மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் களில் இருந்து மீள்வதாயின், அதற்கு ஆட்சி மாற்றமே உதவுமென்பதை அவர் புரிந்து கொண்டிருப்பதால், எதையும் செய்வதற்கு அவர் தயாராகவே இருப்பார். ஆனால் ஆட்சிக் கவிழ்ப்பு என்பது சாதாரண விடயமல்ல. அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளும், இந்தியாவும் இதை ஒருபோதுமே அனுமதிக்கப் போவதில்லை. இதனால் தான் புதிய கட்சியை அமைப்பதான புதிய யோசனை மகிந்தவிடம் எழுந்துள்ளது. ஆனால் இதுவும் தோல்வியில்தான் முடியப் போகின்றது என்பதை இப்போதே கூற முடியும்.

## எமக்கு மட்டும் ஏன் இந்த அதிகரித்த வரி?

வலிகாமம் மேற்கு, மீன் சந்தையில் மீன் வியாபாரம் செய்யும் அனைவரும் கிராமப்புறத்தில் வாழும் வியாபாரிகளே. ஓடக்கரை சங்கானை, வீரவத்தை, கொட்டியாவத்தை, சுழிபுரம், பெரியபுலோ, பல்லசுட்டி, சாந்தை, காரைநகர், ஊரிக்காடு போன்ற கிராமப்புறங்களில் வாழும் கிராமவாசிகளான நாம் அன்றாடம் உணவுக்காகவே மீன் வியாபாரம் செய்து வருகின்றோம். சிலவேளையில் மீன் கொள்வனவு செய்து, வியாபாரம் செய்து நட்டமடைவதும் உண்டு.

கடந்த ஆண்டு நாம் சந்தைவரியை அதிகமாகச் செலுத்தினோம். இந்த முறை நாம் இதுபோல் வரிசெலுத்தமாட்டோம். அதிகரித்த வரி தொடர்பில் எத்தனையோ கடிதங்களை பெரிய உத்தியோகத்தர்கள், உயர் அதிகாரிகள் எனப் பலரிடம் கொடுத்தும் எந்தவித பயனும் இல்லை. இவர்கள் கிராம வாசிகள்தானே?, இவர்கள் படிப்பறிவு அற்றவர்கள்தானே? என்று இருந்துவிட்டார்களோ தெரியவில்லை.

கல்வியங்காடு மீன்சந்தை சந்தையில் எவ்வளவு மீன் கொள்வனவு செய்து விற்றாலும் நூறு ரூபாதான் வரி. அதற்குமேல் இல்லை. கொக்குவில் மீன் சந்தை எவ்வளவோ பெரிய சந்தை. அந்தச் சந்தையில் எவ்வளவு மீன் கொள்வனவு செய்து விற்றாலும் 70 ரூபாதான் வரி. அதற்கு மேல் இல்லை. சங்கானைச் சந்தையில் மட்டும் ஒரு கிலோ மீன் கொள்வனவுக்கு இந்த முறை 5 ரூபா எனவும், கணவாய்க்கு 8 ரூபாவும், பெரிய இறாலுக்கு 10 ரூபாவும் இவடைகையாக 50 ரூபாவும் அறவிட உள்ளதாக கூறுரைத்துள்ளார்கள்.

இந்தச் சந்தையை வியாபாரிகள் ஆகிய நாம் பல லட்சக்கணக்கில் குத்தகை எடுக்கச் சொன்னோமோ? இந்தப் புதுச்சந்தையில் சுமார் 77 கட்டுக்கள் உள்ளன. ஒரு கட்டுக்கு 100 ரூபா எடுத்தாலே ஒருநாளைக்கு 7,700 ரூபா நிதி சேரும். எனவே கிராமப்புறத்தில் உள்ள எங்களின் நிலைமைகளை தங்கள் கவனத்துக்குக் கொண்டு நியாயமான வகையில் வரி அறவீட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அலெக்ஸ் டினோஜன்

## வீதியைப் புனரமையுங்கள்!

எமது வேண்டுகோள் உதயன் பத்திரிகையில் பலமுறை வெளி யிடப் பட்டபோதிலும் அரச தரப்பினரோ அல்லது எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராலேயோ, வட மாகாண சபை உறுப்பினர்களாலேயோ கவனத்தில் எடுக்கப்படாத விடயம் இது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட முள்ளியவளை நாவற்காட்டுக் கிராமத்துக்குச் செல்லும் வீதியில் இருந்து மேற்குப் புறமாகச் செல்லும் பனிச்சையடி வளவு என்னும் ஒழுங்கை கடந்த 40 வருடங்களுக்கு மேலாக எந்தவித புனரமைப்பும் இன்றி குண் டும் குழியுமாக வாய்க்கால் போன்று காணப்படுகின்றது. இந்த ஒழுங்கையின் தலை விதியை மாற்றுவது யார்?

இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள். வன்னி இறுதிப் போரில் உறவுகள் பலரைத் தொலைத்தவர்கள், போரில் உடல் உறுப்புக்களை இழந்தவர்கள் பலபேர் குறித்த இந்த வீதியால் மிகவும் வேதனையுடன் நாள்தோறும் பயணம் செய்கிறார்கள். எனவே சம்பந்தப்பட்ட திணைக்களங்களோ அல்லது அக்கறை உள்ள அமைப்புக்களோ இந்த ஒழுங்கையைப் புனரமைப்புச் செய்ய முன்வாருங்கள்.

- செல்லப்பா மலரவன்

## புதிய ஆண்டிலாவது வீதிக்கு விமோசனம் கிடைக்கட்டும்

மந்திகையிலிருந்து செம்பியன்பற்றுக்குச் செல்லும் வீதியுடன் இணையும் முக்கியமான வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் இதனைப் பயன்படுத்துகின்ற மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வீதியைப் புனரமைத்துப் பல ஆண்டுகள் கடந்து விட்டன. இதனால் மேடு, பள்ளங்கள் நிறைந்ததாக இந்த வீதி காணப்படுகின்றது. மேலும் உடைய கதிர்காமம் பகுதியில் இந்த வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப் படுகின்றது.

தினமும் ஏராளமானவர்கள் பயன்படுத்துகின்ற இந்த வீதியின் அவல நிலை தொடர்பாக எவருமே கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. இந்தப் பகுதி மக்கள் பல தடவைகள் இதனைப் புனரமைத்து வழங்குமாறு கோரிக்கை விடுத்தபோதிலும் எவருமே கவனம் எடுக்கவில்லை. ஆகவே புதிய ஆண்டு பிறந்துள்ள இந்த வேளையில் இந்த வீதியின் அவல நிலை நீங்கி மக்கள் சிரமமின்றிப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதே இப்பகுதி மக்களது எதிர்பார்ப்பாகும்.

தர்மிளா, புலோலி.

# வடக்கு, கிழக்கில் இன்னமும் இடம்பெயர்ந்துள்ளனர் மக்கள்

## அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்கிறார் ஜே.வி.பி. தலைவர்

கொழும்பு, ஜன.3

வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் தமது நிலங்களை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழர் விடயத்தில் அரசின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மிக நீண்ட காலமாக நாட்டில் நிலவும் அரசியல்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. இத்தனை காலமாக ஆட்சி செய்த கட்சிகளும் தமது ஆட்சியைத் தக்கவைக்க வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றினவே தவிர, இதுவரையில் நாட்டைப்பலப்படுத்தும் தீர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனச் சிந்திக்கவில்லை.

போர் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ் சிங்கள உறவு பலப்படும், நாட்டில் நல்லாட்சிக்கான கதவு திறக்கும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் இருந்தது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நாட்டில் இனவாதமும், பிரிவினை வாதமும் மட்டுமே தலைதூக்கி நாட்டை குழப்பத்துக்குள் தள்ளியிருந்தது.

போரின் பின்னர் சொந்த இடங்களையும், வீடுகளையும், உறவுகளையும் இழந்த மக்கள் ஒவ்வொரு ஆண்டும் தமது விடிவை எதிர்பார்த்து இருந்த போதிலும் அவர்களுக்கு எந்த நன்மைகளும் கிட்டவில்லை. அவ்வாறான நிலையில் கடந்த ஆண்டு மிகமுக்கியமான ஆண்டாகக் கருதப்பட்டது.

அதாவது ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்ட போது ஜனநாயகத்தை விரும்பி மக்கள் மாற்றத்தின் பக்கம் நின்றனர். அதேபோல் வடக்கு, கிழக்கு மக்கள் தமது விடுதலையை எதிர்பார்த்து நல்லாட்சி அரசை முழுமையாக ஆதரித்தனர். எனினும் மக்கள் எதிர்பார்த்த மாற்றம் இன்று வரையில் ஏற்படவில்லை.

தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்ற தனது வாக்குறுதியை இந்த அரசு நிறைவேற்றவும் இல்லை. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துவதாகக் கூறி ஒரு வருடம் பூர்த்தி ஆகியுள்ளது. இன்னும் ஒரு சில நாள்களில் அரசு தனது ஒரு வருடப் பூர்த்தியைக் கொண்டாடவுள்ளது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு ஆண்டு நிறைவை அரசு கொண்டாடும் அதேவேளையில் வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் தமது நிலங்களை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழலை உருவாக்கி அதன் மூலம் நாட்டைப் பலப்படுத்த வேண்டும். ஆகவே பிறந்திருக்கும் இந்த ஆண்டிலாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையிலான செயற்பாடுகள் அமைய வேண்டும்.

அரசு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை இந்த ஆண்டு முடிவுக்குள் நிறைவேற்ற வேண்டும். முன்னைய ஆட்சியில் மக்களை ஏமாற்றியதைப் போல இந்த ஆட்சியிலும் மக்கள் ஏமாற்றப்படக்கூடாது.- என்றார். (ற)









சூரியகாந்தி

**கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவர்கள் வானம் ஏறி வைகுந்தம் போகப் போகிறார்களாம்!**

# தமிழர்களே நம்பக் கடவீர்

தி.ராஜ்

சூப்பர் ஸ்ரார் ரஜினி காந் நடிப்பில் வெளியாகிய அருணாச்சலம் திரைப்படத்தில் ஒரு கட்டம். 30 நாள்களில் 30 கோடி ரூபாவை செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ரஜினிக்கு. 3 ஆயிரம் கோடி

பாதுகாப்பதற்காக, 30 நாள்களில் 30 கோடி ரூபாவை செலவு செய்தேயாக வேண்டும். சவாலை ரஜினி ஏற்றுக் கொள்வார்.

அந்தச் சவாலை வெற்றி கொள்வதற்காக 30 கோடி ரூபாவையும் ஊதாரித்தனமாக ரஜினிகாந்த் செலவு செய்வார். ஆடம்பர ஹோட்டலை வாடகைக்கு அமர்த்திக் கொள்வார். நாளுக்கொரு உடுப்பு, சினிமா படம் எடுத்தல், குதிரை

யாமல் – எந்தத் திட்டமிடலும் இல்லாமல் தண்ணீரை வாரி இறைப்பார். செலவு செய்தேயாக வேண்டும் என்பதற்காகப் பணத்தை அள்ளி வீசுவார்.

ஊடகங்களில் வெளியான ஒரு செய்தியைப் பார்த்தபோது இந்தக் காட்சி மீண்டும் மீண்டும் மனக் கண்ணில் தோன்றிக் கொண்டே இருந்தது. 58 நாள்களில் 64 கோடி ரூபா பணத்தைத் தாம்

மாகாண முதலமைச்சர் தெரிவித்த கருத்துத்தான் அந்தச் செய்தி. அதுகூடப் பறவாயில்லை. அந்த நிதிகள் தீட்டிய திட்டங்களுக்குச் செலவு செய்யப்படவில்லை என்றுவேறு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம், "லோ ஆங்கில் கமெராவில்" "கூலிங் கிளாஸ்" போட்ட ரஜினியைப் பார்த்தது போன்ற பிரமிப்பை

**திட்டமும் நடைமுறையும்**

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை – மக்களால் தேர்வு செய்யப்பட்ட சபை அமைந்த பின்னர் முதலாவது பாதீடு சமர்பிக்கப்பட்டது. அதனைச் சமர்பித்து உரையாற்றிய வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், யாரோ தயாரித்துத் தந்த பாதீட்டை நாங்கள் ஒப்புக்கு இங்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்

அவர் யாரோ என்று சொன்னது அதற்கு முன்னர் அவருடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்த மாகாண தலைமைச் செயலாளர் விஜயலச்சுமி ரமேஸ் மற்றும் அப்போதைய ஆளுநர் முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சந்திர சிறி ஆகியோரை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை அமைய முன்னரே அந்தப் பாதீடு தயாரிக்கப்பட்டிருந்ததால் முதலமைச்சர் சொன்னதில் உண்மை இருந்தது.

2014 ஆம் ஆண்டு வடக்கு முதலமைச்சர் மற்றும் அமைச் சர்களினால்தான் பாதீடு தயாரிக்கப்பட்டது. அப்போது நிதி என்னவோ குறித்தொதுக்கப்பட்ட திட்டங்களுக்குச் செலவிடப்படவேயில்லை. இதற்குக் காரணம் தலைமைச் செயலர் தம்முடன் ஒத்துழைத்துச் செயற்படவில்லை என்பதே என்று குற்றஞ்சாட்டினார் முதலமைச்சர். அமைச்சர்களும் உறுப்பினர்களும் அதனை வழிமொழிந்தனர்.

தம்மால் நிர்வாகத்தை திறம்பட முன்னெடுக்க முடியாமைக்குத் தலைமைச் செயலரும் ஆளு நருமே காரணம் என்று முதலமைச்சர் மூச்சுக்கு மூச்சு சொல்லிக் கொண்டிருந்தார். மத்தியில் இருந்த மகிந்தவின் ஆட்சி தமிழர் எதிர்ப்புக் கொள்கையுடனேயே நகர்ந்துகொண்டிருந்ததால் எல்லோரும் முதலமைச்சர் சொன்னதை நம்பத் தலைப்பட்டுக் கொண்டே இருந்தோம்.



**மாற்றம்**

காலம் மாறியது. ஆட்சி மாறியது. கொழும்பில் அமைந்த ஆட்சியும் அதிகாரமும் தமிழர் பகைமை பாராட்டாதவையாக தோற்றமளிக்க ஆரம்பித்தன. ஆளுநர் மாற்றப்பட்டார். தலைமைச் செயலரும் மாற்றப்பட்டார். மாகாண சபையில் ஆட்சியில் இருந்த கூட்டமைப்பு நிர்வாகத்துடன் முரண்டுபிடிக்காத நிலை இந்த இரு பக்கங்களிலும் இருந்து உரு வாக்கப்பட்டது.

அதற்கிடையில் 2014 டிசெம்பரில் மாகாண சபை தானே உருவாக்கிய முதலாவது பாதீட்டை முன்வைத்து விவாதித்து ஏற்றுக் கொண்டது. அதாவது 2015ஆம் ஆண் டுக்குரிய வரவு – செலவுத் திட்டமிடல்கள் முழுக்க முழுக்க வடக்கு அமைச்சரவையினால் தனித்துத் தயாரிக்கப்பட்டது. தமது முன்மொழிவுகளைக்கூட ஏற்றுக்கொள்ளாமல், தம்முடன் கலந்தாலோசிக்காமல் பாதீட்டைத் தயாரித்துவிட்டார்கள் என்று கூட்டமைப்பு மாகாண உறுப்பினர்களே குற்றச்சாட்டுத் தெரிவிக்கும் அளவுக்கு முதலமைச்சரும் அமைச்சர்களும் சேர்ந்து இறுக்கமாக அந்தப் பாதீட்டை உருவாக்கினார்கள்.

எனவே அனைத்தும் சிறப்பாக நகரும் என்றும் மக்களும் மாகாண சபை அதிகாரி களும் எதிர்பார்த்தனர். ஆனால் கதையோ உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன் என்பதாக முடிந்துவிட்டது.

கொழும்பு அரசினால் ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 440 மில்லியனை, தங்களின் திட்டங்களுக்கு ஏற்றவாறு பங்கிடவும், திட்டங்களைத் தயாரிக்கவும் எந்தத் தடைகளும் வடக்கு அமைச்சரவைக்கு இருக்கவில்லை - இருந்திருக்கவில்லை. 2015ஆம் ஆண்டில் - அதனை நடைமுறைப்படுத்துகையில் அவர்கள் முன்னர் கூறி வந்த தடைகளும்கூட இருக்கவில்லை.

**எல்லாம் தலைகீழ்**

வடக்கு அமைச்சரவையே தயாரித்த திட்டங்கள், அதனை நடைமுறைப்படுத்தும் அரச இயந்திரத்தின் அச்சுக்கள் வடக்கு அமைச்சரவைக்கு இணக்கமானது என்கிற நிலையில் 2015ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதிகளைத் தீட்டிய திட்டங்களுக்கு சீராகச் செலவிட்டு வடக்கு அரசு ஏனைய மாகாணங்களுக்கு முன்மாதிரியாகத் திகழும் என்ற எதிர்பார்ப்பு எகிறியது.

இதற்கு மேலாக, முதலமைச்சர் வாசிக்கும் உரைகளில் எல்லாம், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்கள் விசேட கவனிப்புக்கு உள்ளாக்கப்படவேண்டும். இந்த மாகாணங்களுக்கு அதிக நிதிகள் ஒதுக்கப்படவேண்டும் என்று கொழும்பைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இப்படி அவர் மேலதிக நிதிக்கு கோரிக்கை விடுப்பதால், ஒதுக்கிய நிதிகளை செவ்வனே செலவழித்து முடித்துவிட்டு, பாருங்கள் இன்னும் நிதி இருந்திருந்தால் எவ்வளவோ செய்திருப்போம் என்று கொழும்பை நோக்கி குற்றப்பத்திரம் தாக்கல் செய்வார் என்று பார்த்தால், ஏதோ இந்த மட்டுக்கும் செலவழித்ததே பெரிய காரியம்தான் முடிந்தால் அடுத்த வருடம் பார்ப்போம் என்ற வகையில் ஆண்டிறுதியில் எந்தக் குறுகுறுப்பும் இல்லாமல் கருத்துச் சொல்லிவிட்டுப் போய்விட்டார் முதலமைச்சர். இது எந்த மாதிரி டிசைன் என்பது புரியவேயில்லை.

நடைமுறையில் எல்லாம் தலைகீழாகவே இருந்தது. ஒவ்வொரு மாத முடிவிலும், வெளியிடப்பட்ட நிதிக் கூற்று முன்னேற்ற அறிக்கையில் நிதிச் செலவினங்களைப் பார்த்தபோது, அபிவிருத்தித் திட்டங்களே முன்னெடுக்கப்படவில்லையா என்று கேட்கும் அளவுக்கு நிலைமை இருந்தது. ஆமையை விட மெதுவாகவே ஊர்ந்தது வடக்கு மாகாண சபையின் அபிவிருத்தி முன்னெடுப்புக்கள். (ஒருவேளை போரால் பாதிக்கப்பட்ட பகுதியில் வேகமாக அபிவிருத்தி செய்ய முடியாது என்று காரணம் சொல்வார்களோ என்னவோ) ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி இறுதியாக வெளியிடப்பட்ட அறிக் கையில், ஒதுக்கிய நிதியில் 38 சதவீதமே செலவு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

வருடம் முடிவடைவதற்கு 61 நாள்கள் மீதமிருந்த நிலையில் 62 சதவீத நிதி செலவு செய்யப்படாமல் மகாணசபையின் கணக்கில் தேங்கிக் கிடந்தது. அதிர்ந்து போன ஊடகங்கள் செய்தியை வெளியே விட்டன. வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா அதனைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டார். இந்த விடயத்தில் குடைந்து கொண்டிருந்தார். தனது அரசியல் நலனுக்காகவேனும் அவர் கேள்வி எழுப்பினாலும், அவரது கேள்வியில் இருந்த நியாயத்தை மறுக்க வடக்கு அமைச்சரவையால் முடியவில்லை. செலவிடவில்லைத்தான்; ஆனால் முடித்து விடுவோம் (லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா வருவேன் என்று ரஜினி சொன்னது போலவே) என்று அமைச்சர்கள் பதிலளித்து பார்த்துக்கொண்டு காத்துக் கொண்டிருந்த மக்களுக்கு மகா அதிர்ச்சியைக் கொடுத்தார்கள் முதலமைச்சரும் ஏனைய நான்கு அமைச்சர்களும்.

**அதிர்ச்சி வைத்தியம்**

அடுத்த ஆண்டுக்கான - 2016ஆம் நிதியாண்டுக்குரிய - பாதீடு மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டபோது, நிதியைச் செலவு செய்யாமைக்கு சப்பைக் கட்டுக் காரணங்களை வடக்கு அமைச்சரவை முன்வைத்தது. நிதி ஆணைக்குழுவின் அனுமதியில் தாமதம். அதனால் செலவீட்டில் தாமதம் என்று காரணங் களைத் தேடிப் பிடித்தார்கள்.

இப்படி நிதி ஆணைக்குழுவின் மீது பழி சொல்லிக் கொண்டிருக்காமல் ஜனவரி மாதத்திலேயே திட்டங்களுக்குரிய கேள்வி கோரலை மேற்கொள்ள முடியும் என்றும், அமைச்சரின் செயலாளராகத் தான் இருந்த போது இதனையே கடைப்பிடித்தேன் என்றும் குத்திக் காட்டினார் வடக்கு எதிர்க் கட்சித் தலைவர்.

வசதி வாய்ப்புக்களுடன் ஒரு மாணவன் பரீட்சையில் சித்தியடைவதற்கும், வசதி வாய்ப்புக்கள் குன்றிய ஒரு மாணவன் பரீட்சையில் சித்தியடைவதற்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு, வசதிகளின்றி சித்தியெய்திய மாணவனையே கெட்டிக்கார மாணவன் என்போம். அதே போன்றுதான் தடைகள் - தடங்கல்களுக்கு மத்தியில் தீட்டிய திட்டத்துக்கு ஒதுக்கிய நிதியை குறித்த காலத்துக்குள் செலவு செய்வதுதான் கெட்டித்தனம் என்று எதிர் கட்சித் தலைவர் சொன்னது ஆட்சியில் இருந்த யாருக்காவது உறைத்ததா என்பது தெரியவில்லை.

இதற்கிடையில், கேள்விகள் எழும்புகின்றன என்றதும் நிதிச் செலவினம் குறித்த அப்டேட்டை தனது இணையத் தளத்தில் நிறுத்திக் கொண்டது வடக்கு மாகாண சபை. இதையும் தவராசாதான் சபையில் கேட்டார். பதில் வழங்காத அமைச் சர்கள், கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற விசேட அமர்வில் லக்ஸபான கரண்ட் அடித்த ஷொக் கொடுத்தனர். அன்றைய தினம் உரையாற்றிய முதலமைச்சர் திடுதிடுப்பென வடக்கு மாகாண சபையின் பாதீட்டில் 83 சதவீதம் நிதி செலவு செய்யப்பட்டு விட்டது என்றார் அதிரடியாக. கேட்டுக்கொண்டிருந்த எல்லோருக்கும் மயக்கம் வராத குறை.

ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரையில் 38 சதவீதமாக இருந்தது, 58 நாள்களில் 83 சதவீதமானது எப்படி என்பது? கேள்விக்குப் பதிலைத் தேடித் திரிவதற்கு மற்றவர்களை விட்டுவைக்க முதலமைச்சர் விரும்பவில்லை. அல்லது நடந்ததைத் தேடிக் கண்டறிந்து மற்றவர்கள் காறித் துப்புவதற்கு முன்னதாகவே உண்மையைச் சொல்லிவிடுவது நல்லது என்று நினைத்தாரோ என்னவோ, குறித்த திட்டங்களுக்கு நிதி செலவிடப்படவில்லை என்பதை ஒத்துக்கொண்டார்.

45 சதவீத நிதியையும் செலவு செய்து முடிக்கவேண்டும் என்பதற்காகவே செலவிட்டார் கள் என்பதை மாகாண பேரவைச் செயலகம் ஒழுங்கு செய்திருந்த மதிய விருந்து நிகழ்வில் கலந்துகொண்டு அதிகாரிகளுக்குத் தெரிவித்தார் முதலமைச்சர்.

(இந்த விருந்துக்கும் பல லட்சங்கள் செலவிடப்பட்டது என்பது தனிக் கதை) அடுத்த ஆண்டு இப்படி நடக்க விடமாட்டோம் என்றும் மறக்காமல் சொன்னார். (நம்பக் கடவது!)

நீங்கள் தயாரித்த திட்டங்களையே உங்களால் நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றால், உங்களிடம் நிர்வாகத் திறன் இல்லை என்றுதானே பொருள்படும் என்று அங்கிருந்த அதிகாரிகள் யாரும் முதலமைச்சரைப் பார்த்துக் கேட்கவில்லை. பாவம் அவர்கள். எப்படிக் கேட்பார்கள்? எதிர்த்துக் கதைத்தால் 'டிரான்ஸ்பர் ஓடர்' கையில் இருக்கும் என்ற பால பாடத்துக்குள்ளால் வளர்ந்தவர்களாயிற்றே. அதனால் அமைதியாகவே இருந்துவிட்டார்கள். முதலமைச்சர் சொன்னபடி அடுத்த வருடம் எல்லாமும் ஒழுங்காக நடக்கும் என்று தம்மைத் தாமே சமாதானப்படுத்திக் கொண்டார்கள்.

**பொறுப்புக்கூறல்**

தீட்டிய திட்டங்கள் என்ன என்பதையும் அவற்றில் எந்தத் திட்டங்களைக் கைவிட்டு; என்னத்தைப் புதிதாக உள்நுழைத்து (ரஜினி ஸ்டைலில்) செலவிட்டார்கள் என்பதையும் சொல்லாமல் மறைத்துவிட்டார் முதலமைச்சர். இனிமேல் ஏதாவது ஒரு ஊடகம் இதனைக் கிண்டி வெளியே கொண்டு வந்தால்தான் உண்டு.

வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் பேரவையில் இணைந்தது முதல் வெளிப்படைத் தன்மை பற்றி வரிக்கு வரி வாயசைத்து வந்தபோதும், ஏனோ அவருக்கு அது விருந்து நேரத்தில் ஞாபகத்துக்கு வந்து தொலைக்கவில்லை. என்றாலும் பிறிதொரு தருணத்தில் அவற்றையும் அவர் ஒப்புவிப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

எப்படியிருந்தாலும் தமிழ் மக்களுக்கும் வேறு வழியில்லாத காரணத்தால், வடக்கு மாகாண சபைக்குரிய திட்டங்களையே சரியாகப் போடத் தெரியாதவர்கள் அல்லது போட்ட திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது என்று தெரியாதவர்கள் தமிழ் மக்களுக்காக அவர்கள் ஏற்கக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றைத் தலைமையேற்று தீட்டித் தருவர் என்று நம்பக் கடவர். வேறு வழி...?




குத்துச்சண்டையில் எவரையும் எதிர்த்து நிற்கும் துணிச்சல் கொண்ட உக்கிரமான வீரனால் வணிகச் சூழலின் சூழ்ச்சிகளை எதிர்த்து வெல்ல முடிகிறதா என்பதே பூலோகம்.

வட சென்னையில் ஒரு காலத்தில் இடியாப்ப நாயக்கர் பரம்பரை, சார்பட்டா பரம்பரை என்று பல குத்துச்சண்டை குழுக்கள் இருந்தன. அத்தகைய இரண்டு பரம்பரைகளுக்குள் இருக்கும் ஜென்மப் பகையின் தற்கால அத்தியாயம்தான் படத்தின் கரு.

எதிர் பரம்பரை வீரரிடம் தோற்ற அவமானத்தால் தூக்கு மாட்டிக்கொண்டு இறந்துபோகிறார் ஜெயம் ரவியின் அப்பா. அந்த பரம்பரையின் இன்றைய வாரிசை வென்று பழிதீர்க்கத் துடிக்கிறார் ரவி. அதற்காக வெறித்தனமாகப் பயிற்சி செய்கிறார். எதிராளி ஆறுமுகமும் (ராஜேஷ்) இரண்டில் ஒன்று பார்த்துவிடும் முடிவோடு தயாராகிறார்.

பகைமையின் இந்த வெறியைப் பணமாக மாற்ற விளையாட்டு தொலைக்காட்சி அலைவரிசை உரிமையாளர் பிரகாஷ் ராஜ் திட்டமிடுகிறார். அவர் நடத்தும் பெரிய அளவிலான போட்டியில், ரவியின் அடி தாங்காமல் கோமாவில் படுத்துவிடுகிறார் ராஜேஷ். இதனால், ரவிக்கு வெறி மறைந்து குற்ற உணர்வு தலைதூக்குகிறது. குத்துச்சண்டையே வேண்டாம் என ஒதுங்கி சாமியார்போல வாழ்கிறார்.

ரவியின் குத்துச்சண்டை வெறியை வைத்து பல திட்டங்கள் போட்டிருந்த பிரகாஷ் ராஜ், அவரை மீண்டும் சண்டையில் இறக்க முடிவு செய்கிறார். பிரகாஷ் ராஜின் சதி வலையில் விழும் ரவி, அவரது சதிகளைப் புரிந்துகொண்டு, அதே விளையாட்டில் அவரை தோற்கடிக்க முடிவுசெய்கிறார். தன்னைவிட பல மடங்கு பலம் பொருந்திய அமெரிக்க குத்துச்சண்டை வீரரோடு இதற்காக மோதவேண்டி இருக்கிறது. அந்த போட்டியையும் பிரகாஷ் ராஜின் வியூகங்களையும் ரவி எப்படி எதிர்கொள்கிறார் என்பது பூலோகம் கதை.

குத்துச்சண்டையின் வேகத்தையும் வட சென்னையின் பண்பாட்டுக் கூறுகளையும் துல்லியமாக பதிவுசெய்துள்ளார் இயக்குநர் என்.கல்யாண கிருஷ்ணன். சண்டைக்குத் தயாராகும் காட்சிகள், சண்டைக்கு முன்பு அம்மன் கோயிலில் ரவி மேற்கொள்ளும் சடங்கு, சாவின்போது பாடப்படும் கானா பாடல் காட்சி, சாமியாராக வாழும் ரவியை மீண்டும் சண்டையில் இறக்குவது ஆகியவை நன்றாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வழக்கமான நாயக அடையாளங்கள் அதிகம் இல்லாமல் ஆத்திரமும் வேகமும் கொண்ட சராசரி மனிதராக ரவியைச் சித்திரித்துள்ளமை பாராட்டுக்குரியது. எதையும் பணமாக்கத் துடிக்கும் வணிக மோசடியையும் ஊடகங்களின் விரும்பத்தகாத போக்கையும் கதையில் பொருத்தியிருக்கிறார்.

சண்டைகளைக் காட்சிப்படுத்திய விதம் ஆர்வ மூட்டக்கூடியதாக இருக்கிறது. மிகவும் அபாயகரமான ஜார்ஜோடு நடக்கும் குத்துச்சண்டையைவிட, போட்டிக்கான ஒப்பந்தம் போட்டுக்கொள்ளும் காட்சியில் ரவி – பிரகாஷ் ராஜ் இடையே நடக்கும் சொற்போர் விறுவிறுப்பு.

எல்லாம் சரிதான், சிக்கலான வணிக மோசடிகளை ரவி எப்படித் தெரிந்துகொண்டார் என்பது சொல்லப்படவே இல்லை. ஒப்பந்தம் போடும் காட்சி, உச்ச சண்டைக்குப் பிறகு ரவி பேசும் அரசியல் ஆகியவை வசனகர்த்தா எஸ்.பி.ஜனநாதனின் குரலாகவே ஒலிக்கிறது.

அமெரிக்க குத்துச்சண்டை வீரரை பெண் வேடத்தில் அலையவிடுவது, ரவியின் திருமணத்துக்கு அவர் வந்து சவால் விடுவது போன்ற காட்சிகள் படத்தின் வேகத்தைக் குறைக்கின்றன. அமெரிக்க குத்துச்சண்டை வீரரை அழைத்து வந்து மோதவிடுவது, வெவ்வேறு எடைப் பிரிவில் இருப்பவர்கள் மோதுவது போன்ற காட்சிகள் படத்தின் நம்பகத்தன்மையைக் குறைக்கின்றன.

பழிவாங்கும் வெறியோடு கூடிய குத்துச்சண்டை வீரரின் கதாபாத்திரத்தை நன்றாகவே கையாண்டிருக்கிறார் ஜெயம் ரவி. அவரது உடல்மொழி, முகபாவனைகள் பாத்திரத்தின் தேவைக்கேற்ப உள்ளன. வசன உச்சரிப்பில் அவர் இன்னும் பயிற்சி எடுக்கவேண்டும். படம் முழுவதும் வரும் த்ரிஷாவுக்கு சொல்லிக்கொள்ளும்படி எந்த வேலையும் இல்லை. எல்லோரையும் தனது வணிக விளையாட்டின் பகடைக்காய்களாக மாற்றும் வில்லன் வேடத்தில் பிரகாஷ் ராஜ் கச்சிதம். பயிற்சியாளர்களாக வரும் பொன்வண்ணன், சண்முகராஜா மனதில் நிற்கிறார்கள். நாதன் ஜோன்ஸின் தோற்றம் பிரமிக்கவைத்தாலும், நடிப்பு ஏமாற்றம் அளிக்கிறது.



தன் சீடர் இயக்கியுள்ள படத்துக்கு எஸ்.பி.ஜன நாதன் வசனம் எழுதியிருக்கிறார். வழக்கம்போல, படத்துக்கு அது பெரிய பலம். வசனங்களில் தெறிக்கும் அரசியல், கூர்மையும் காரமும் கொண்டுள்ளது. படத்தின் முதல் பாதியில் படத் தொகுப்பு நேர்த்தியாக இல்லை. நம்பகத்தன்மை விடயத்தில் கவனம் செலுத்தியிருந்தால் வணிக அரசியலைப் பேசும் நேர்த்தியான பொழுதுபோக்குப் படமாக அமைந்திருக்கும்.

ஹொலிவூட்டில் இதுபோன்ற பல படங்கள் வந்துள்ளன. குத்துச் சண்டை பெரும் வணிக மதிப்புள்ள விளையாட்டாக அங்கு இருக்கும் பின்னணியில் அந்தப் படங்களின் நம்பகத்தன்மை ஏற்புடையதாக இருந்தது. ஆனால், அதையே திருப்பிப்போட்டு, வடசென்னைக்குள் அதனைப் பொருத்தப் பார்ப்பது சரியானதாக இல்லை. களத்தோடு ஒட்டமாலே நிற்கிறது படம்.

# அச்சுறுத்தக் காத்திருக்கிறது எல் நினோ

சந்திரமோகன்

2016ஆம் ஆண்டு பிறந்துவிட்டது. எனினும், உலகின் பருவ நிலை மீதான தாக்கத்தை எல் நினோ குறைத்துக் கொள்வதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. கிழக்கு மற்றும் மத்திய பசுபிக் கடல் பகுதியின் மேற்பரப்பில் ஏற்படும் வெப்பம் அதிகரிப்பு எல் நினோ என்று அழைக்கப்படுகிறது. உலகம் முழுவதும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது இது.

கொலம்பியா, ஈக்குவடோர், பெரு, இந்தோனேஷியா மற்றும் பப்புவா நியூகினியா ஆகிய ஐந்து நாடுகள், நெருக்கடி நிலையை அறிவித்திருக்கின்றன. மேலும், எல் நினோ பாதிப்பு ஏற்பட்ட 10 நாடுகளுக்குத் தேவையான அவசர உதவிகளைச் செய்துகொண்டிருக்கிறது ஐ.நா.

பொதுவாக, இரண்டு ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை நீடிக்கும் எல் நினோவின் தாக்கம் 2015இல் மிகக் கடுமையாக உணரப்பட்டிருக்கிறது. 1997-98இல் பெரிய அளவில் ஏற்பட்ட எல் நினோவுக்குப் பிறகு, இந்த ஆண்டு ஏற்பட்ட எல் நினோ மிகக் கடுமையானது. 1950க்குப்பின் ஏற்பட்ட எல் நினோக்களில் இதுதான் கடுமையானது என்றும் கருதப்படுறது.



ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவில் கடந்த 50 ஆண்டுகளாகக் கடும் வறட்சி நிலவுகிறது. அந்த நாட்டில் வறட்சியால் மிகக் கடுமையான பாதிப்பைச் சந்தித்திருக்கும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு உதவ உலக நாடுகள் ரூ.6 ஆயிரத்து 500 கோடிக்கும் அதிகமாக நிதியுதவி செய்திருக்கின்றன எனினும், வறுமையில் தவிக்கும் சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான மக்களுக்கு உணவளிக்க சுமார் ரூ. 20 ஆயிரம் கோடி தேவை என்கிறது எத்தியோப்பிய அரசு.

1997-98இல் ஏற்பட்ட பெரும் அளவிலான எல் நினோவின் விளைவுகளை மனதில் கொண்டுதான் கொலம்பியா, பெரு, ஈக்குவடோர் ஆகிய நாடுகள் நெருக்கடி நிலையைக் கொண்டுவந்திருக்கின்றன. கடும் மழைப் பொழிவும், அதனால் ஏற்பட்ட வெள்ளமும் பசுபிக் கடற்கரையோரப் பகுதிகளில் மோசமான சேதத்தை ஏற்படுத்தின. எல் நினோவின் காரணமாக, தனது ஜிடிபி-யில் 15% இழப்பைச் சந்தித்திருக்கிறது ஈக்குவடோர் நாடு.

இந்தோனேஷியா மற்றும் பப்புவா நியூகினியா ஆகிய நாடுகளில், கடந்த 18 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் கடும் பஞ்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது எல் நினோ. ஆறுகள் வறண்ட நிலையில் இருக்கும் பப்புவா நியூகினியாவில் உணவுப் பற்றாக்குறை அதிக அளவில் இருக்கிறது. கடும் உறைபனி காரணமாக, அந்த நாட்டின் பல கிராமங்களில் தோட்டப் பயிர்கள் பெரும் அழிவைச் சந்தித்திருக்கின்றன.

இந்தோனேஷியாவைப் பொறுத்தவரை, காட்டுத் தீ ஏற்படுத்தியிருக்கும் சேதத்தின் தாக்கத்தை மேலும் அதிகரித்திருக்கிறது, அந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் வறட்சி. கடந்த ஜூலை மாதம் முதல் ஏற்பட்டுவரும் காட்டுத் தீயின் காரணமாக 20 ஆயிரம் சதுரகிலோ மீற்றருக்கும் அதிகமான வனப் பகுதிகள் எரிந்து நாசமாகியிருக்கின்றன. இதன் காரணமாக, சுமார் ரூ. 60 கோடிக்கும் அதிகமான பொருளாதார இழப்பு ஏற்பட்டிருக்கிறது. 21ஆம் நூற்றாண்டில் சுற்றுச்சூழலில் ஏற்பட்ட மிகப் பெரிய சேதம் என்றே இது வர்ணிக்கப்படுகிறது.

மேற்கண்ட பாதிப்புக்கள் இந்த ஆண்டும் தொடரும் என்றே கணிக்கப்படுகிறன. அதன் அடிப்படையில், 2016ஆம் ஆண்டு மிக வெப்பமான ஆண்டாக அமையலாம் என்று வானிலை நிறுவனங்கள் தெரிவித்திருக்கின்றன.

அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

# நெருப்புத் தின்னிகள்

சிறுகதை

"டேய் பொடியள்! நான் வரும் வரைக்கும் வீட்டை விட்டு வெளிக்கிடப் படாது. ஒழுங்கா புத்தகத்தை எடுத்து வைச்சுப் படியுங்கோ.."

வழக்கம்போல அவள் வேலைக்குப் போகும்போதுகூறும் வார்த்தைகள்தான். பொடியளும் நல்ல பிள்ளைகளாகத் தலையாட்டிவிட்டு, தாயின் மிதி வண்டி ஒழுங்கையில் ஏறி... சந்தியால் திரும்பியதும் மூத்தவனும் சின்னவனும் ஆளுக்கொரு பக்கமாக கிரிக்கெட் விளையாடச் சென்று விடுவார்கள்.

அவளுக்கும் இது ஒன்றும் தெரியாத விடயமல்ல!

தகப்பன் இல்லாத பிள்ளைகள் எவரது கட்டுப்பாடுமற்ற வகையில், தான்தோன்றித்தனமாக வளர்ந்து விடக் கூடாதே என்ற கவலையில், அவ்வப்போது கண்டிப்பான வார்த்தைகளை அவள் உச்சரிப்பதுண்டு.

அவளுக்கு தன் இரு பிள்ளைகளைக் குறித்து அவர்களது எதிர்காலத்தைக் குறித்து கனவுகள் பல இருந்தன; கவலைகளும் நிறைய இருந்தன.

எப்படியாவது இனியாவது வாழ்க்கையில் நிமிரத்தான் வேண்டும் எனும் உறுதிப்பாடு அவளது உள்ளத்தில் வீரியமாய் எழுந்து நின்றது. தன்முன்னே எழும் தடைகளை துயர்களை தன்பிள்ளைகளுக்காக அவள் துச்சமென வாழத் தலைப்பட்டாள்

"படிக்கிற பொடியள் ரண்டும் வளர்ந்து ஆளாயிட்டுதுகளெண்டால் எனக்கெப்பன் நிம்மதி.." என்ற நம்பிக்கையை மட்டும் அவள் தன் மனதிலிருந்து சிதறிப்போக விடாமல், உடலில் இருக்கும் வலுவோடும் உள்ளத்தில் உறைந்த ஓர்மத்தோடும் போராடிக் கொண்டிருந்தாள்.

தெருவில் வீசும் காற்றுக்கு எதிரான திசையில் மிதிவண்டியின் மிதிகட்டைகளை மிதிக்க அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. நேரத்துக்குப் போக வேண்டும் என்ற எண்ணத்தில், அவள் தன்பலம் கொண்ட மட்டும் மிதித்தாள்.

தூரத்தே தெரிகிறது அவள் பணிபுரியும் நிறுவனம்.

"இனி எத்தனை மணிக்கு சமையல் முடியப்போகுதோ? உத்வியாய் நிற்கிற மற்றப் பொம்புளையளும் வந்திட்டுதுகளோ.. அல்லது இனித்தான் வருங்களோ?"

அவள் தனக்குள் சிந்தித்தவாறு அந்த நிறுவனத்தின் சமையல் கட்டுப் பகுதிக்குள் நுழைகிறாள். அங்கு ஏற்கனவே அவளுக்கு உதவி ஒத்தாசையாகப் பணிபுரிகிற இரு பெண்களும் வந்து இரவுச் சாப்பாட்டுக்கான ஆயத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அவளைக் கண்டதும் அந்த இரு பெண்களின் முகங்களும் மலர்ந்து கொண்டன.

"என்ன பிள்ளை இண்டைக்குப் பிந்தியிட்டுது?"

"ஓமக்கா படுத்தாப்போல நித்திரையாப் போனன்"

"நெடுக உப்பிடியே நெருப்பு வெக்கேக்கை கிடந்து நெருப்தைத் திண்டு கொண்டிருந்தால், உடம்பில சூடேறி நித்திரை வரத்தானே செய்யும்"

பதிலுக்கு இரண்டாமவள் கூறுகிறாள்.

"இப்படியே நெருப்பைத் திண்டு திண்டு சாகவேண்டியதுதான்"

முதலாமவள் சிரித்தபடி கூறினாலும், அந்த வார்த்தையின் கனதியை அவளால் புரிந்து கொள்ள முடிகிறது.

அவள் சமையலில் கவனம் செலுத்தத் தொடங்கினாள். இரவுச் சாப்பாட்டுக்காக இடியப்பமும் அதற்கான கறிக்காக பருப்பு, உருளைக்கிழங்கு மற்றும் பாற்சொதி என்பவற்றைத் தயாரிக்கும் செயற்பாடுகளில் அவள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதிலும், உதவிப் பெண்களில் ஒருத்தி கூறியது போன்று, இந்தச் சமையல் நெருப்புத்தான் என்னையும் என் போன்றவர்களையும் திண்டு சாகடிக்குமோ... என்ற சிந்தனையில் இருந்து விடுபட முடியவில்லை.

தனித்துப்போன துயர வாழ்வுக்குள் அவள்பட்ட; படுகின்ற அவலமும் அந்தரிப்பும் பலவகையானவை. அவளின் வறண்ட வாழ்க்கையைக் கண்டு, வெருண்டு விலகிய உறவினர்களின் பின்னால் ஊர்ந்து செல்லவோ அன்றி உதவிகள் பெறவோ அவள் விரும்பவில்லை.

தனக்கென்றொரு தன்மானத்துடன் சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமென்ற எண்ணத்துடன், அந்த நிறுவனத்தில் உள்ள வெளிமாவட்டப் பணியாளர்கள் பத்துப் பேருக்கு மூன்று வேளைகளுக்குமாக சமைத்து கொடுக்கும் பணியில், அவள் தன்னை இணைத்துக் கொண்டாள். ஆரம்பத்தில் தொழில் ஒன்று கிடைத்ததென்ற சந்தோசம் அவளது உள்ளத்தில் நிறைந்து கொண்டாலும், நாளடைவில் அந்தப் பணியின் சுமை அவளைப் பாதிக்கவே செய்தது. உதவிக்கு வேறு அவளைப்போன்று இரு விதவைப் பெண்களை நிறுவனம் நியமித்திருந்த போதிலும், மூன்று வேளைக்கும் ஒன்றரை மணித்தியால இடைவெளி ஓய்வைத் தவிர, மற்றைய நேரங்களில் நெருப்புக்கு முன்பாக நின்று போராட வேண்டியிருந்தது.

படிக்கும் வயதில் இரு ஆண் பிள்ளைகள் வேறு இருந்ததால், அவர்களுக்காக அவள் அடுப்பு வெக்கையோடு சிரமப்பட்டாள். கடந்த கால இடர் சூழ்நிலைகளுக்கு நடுவில், அவள் தன் கணவனைப் பறிகொடுத்ததோடு, மூத்தமகள் காணாமற்போன நிகழ்வும் அவள் மனதைத் தொடர்ந்து சித்திரவதை செய்து கொண்டிருந்தது.

அடுப்பிலே உள்ள இட்லிச் சட்டியினுள் இடியப்பங்கள் அவிந்தபடியிருந்தன. உதவிப் பெண்கள் இருவரும் வெற்று இடியப்பத் தட்டுக்களில் மாவைப் பிழிந்த வண்ணமிருக்க, அவளோ கறிகளுக்கான செயற்பாட்டில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

"மெய்யே! இந்த நிறுவனமும் வேலை முடிஞ்சு வேறை இடத்துக்குப் போகப் போகுதாமே...?"

இடியப்பம் பிழிந்து கொண்டிருந்த பெண்களில் ஒருத்தி மற்றவளோடு கதைக்க ஆரம்பித்தாள்.

"எனக்கென்னவோ ஒண்டுமாத் தெரியேல்ல..." இரண்டாமவள் கூறுகின்றாள்.

"ஊருக்குள்ள றோட்டுப் போடுற வேலையளும் குறைஞ்சு கொண்டு போகுது. அதுதான் நிறுவனம் வேறை இடத்துக்குப் போகப் போகுது போலை..."

"............"

"அப்பிடிப் போச்சு தெண்டால் நம்மட பாடும் அதேகதிதான்..."

"என்னாலும் வரவர ஏலாதாம். நெடுக நெருப்புக்கு முன்னாலை கிடந்து அவிய ஏலுமே?"


உதவிப் பெண்கள் இருவரினதும் உரையாடல்கள் அவளது செவிகளில் விழ, அவளுக்கு ஒரு கணம் தடுமாற்றமடைகிறது மனம்.

> "ஆ... கடவுளே..! அங்கை நான் நெருப்புக்கைக் கிடந்து சாகிறது பத்தாதெண்டு இது வேறை எனக்கு.." ஆத்திர உணர்வோடு கத்திய அவள், பழந் துணியொன்றை எடுத்துக் கிழித்தச் சின்னவனின் பாதத்தைக் கட்டினான்.

அடுப்பில் வெந்து கொண்டிருந்த பருப்புக் கறிக்கு பாலூற்றிக் கொண்டிருந்த அவள், திரும்பி அவர்கள் இருவரையும் பார்க்கிறாள். பெண்கள் இருவரும் தம்மிடையே கதைத்தபடி.. தம் பணியில்கவனமாயிருப்பது தெரிந்தது அவளுக்கு.

கடவுளே! இந்த நிறுவனம் வேலை முடிஞ்சு வேறை இடத்துக்குப்போனால்என்ரை நிலை...? மனக்குழப்பங்களுடன் அவள் தன் பணியை முடித்துவிட்டு நிமிர்ந்தபோது, இரவு ஏழு மணியாகி விட்டிருந்தது. செய்து முடித்த சாப்பாட்டை உரியவரிடம் பொறுப்புக் கொடுத்துவிட்டு, அந்தப் பெண்கள் மூவரும் அவரவர் தம் இருப்பிடங்களை நோக்கி திரும்பிக் கொண்டிருந்தார்கள்

அவளுக்கு மனநிலை ஒரு முகமாயில்லை. தற்போதைய சமையல் பணி நிரந்தரமில்லை என்பது அவளுக்குத் தெரிந்த விடயம் என்றாலும், அது சடுதியாக நிறுத்தப்பட்டால் என்ன செய்வது? என்ற துயரிலூறிய சிந்தனைகளோடு தன் குடிசையை நெருங்கினாள். குடிசையின் வாசலுள் எரிந்துகொண்டிருந்தகுப்பிவிளக்குக்கு முன்பாக அவளது சின்னவன் அழுதபடி... இருந்தான்.



அவள் மனம் பதறியவளாய்... தனது மிதிவண்டியை அவசரமாக குடிசையின் முன் நிறுத்தி விட்டு, சின்னவனுக்குக் கிட்ட நெருங்கினாள். சின்னவனின் வலது பாதத்தின் கீழ இரண்டு அங்குல நீளத்தில் சதை பிளந்த நிலையில்குருதிகொட்டிக்கொண்டிருந்தது.

"என்னடா நடந்தது..?" அவள் திகிலுடன் கேட்டாள்.

"கிரிக்கெட் விளையாடப் போன இடத்தில் பிசுங் கான் ஓடு வெட்டிப் போட்டுது..." கூறியபடி பக்கத்தில் வந்து நின்றான் அவளின் மூத்தவன்.


"ஆ... கடவுளே..! அங்கை நான் நெருப்புக்கைக் கிடந்து சாகிறது பத்தாதெண்டு இது வேறை எனக்கு.."

ஆத்திரஉணர்வோடுகத்தியஅவள், பழந்துணியொன்றை எடுத்துக் கிழித்தச் சின்னவனின் பாதத்தைக் கட்டினான்.

திரும்பவும்–

அந்த நேரத்தில்... அந்த இரா இருட்டுக்கூடாக, மிதிவண்டியின் பின்புறத்தில் அவனை ஏற்றிக்கொண்டு விரைந்து கொண்டிருந்தாள் வைத்தியசாலையை நோக்கி.....

சந்திரசேகர ஆசாத்



# தனிப்படுத்தப்படலும் தாமாகவே தனிமைப்படலும்

எந்த ஒரு ஜனநாயக நடவடிக்கையிலோ அல்லது ஆயுதப் போராட்ட நடவடிக்கையிலோ எதிரிகளைத் தனிமைப்படுத்தித் தோற்கடிப்பது என்பது பிரதானமாகக் கைக் கொள்ளப்படும் சூத்திரமாகும்.

ஒரு பொதுக் கொள்கையை வகுத்து அதன் அடிப்படையில் ஐக்கியப்படக்கூடிய சக்திகளையும் ஐக்கியப்படுத்தி முன்செல்வது என்பதே வெற்றியை நோக்கி முன்செல்லும் தந்திரோபாயமாகக் கருதப்படுகிறது.

அவ்வகையிலேயே நாடுகள் மத்தியில் என்றாலென்ன, கட்சிகள் மத்தியிலென்றாலென்ன கூட்டணிகள், ஐக்கிய முன்னணிகள் என்பன உருவாக்கப்படுகின்றன. ஒரு முக்கிய உதாரணமாக ஹிட்லரின் தலைமையிலான ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகள் உலக நாடுகளை ஆக்கிரமிக்கும் இரண்டாம் உலகப் போரைக் கட்டவிழ்த்து விட்டபோது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் அவற்றுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்ட சோவியத் யூனியனும் ஓர் அணியில் இணைந்து நின்று போரிட்டு வெற்றி பெற்றன.

இலங்கையிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற ஒரு கூட்டணியை உருவாக்கி ஒரு பலமான அரசாக ஆட்சி செய்ததை நாமறிவோம். இன்றும்கூட ஆட்சியில் இருப்பது ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த ஒரு கூட்டாட்சியேயாகும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியினர் தனிமைப்படுத்தப்பட்டு பலவீனப்படுத்தப்பட்டுள்ளனர்.

### தேசிய அரசு என்ற கூட்டமைப்பில்

ஒன்றுக்கொன்று நேரெதிரான கொள்கைகளைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இன்று தேசிய அரசு என்ற ஒரு கூட்டமைப்பில் ஒன்று சேர்ந்துள்ளன. தேசிய முதலாளித்துவக் கொள்கையைக் கொண்டிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொண்ட பின்பு ஒன்றிணைவு என்பது ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை.

இவ்வாறுதான் தமிழ் மக்களின் அரசியலிலும் தமிழ் மக்களின் ஒரு பலமான சக்தியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழீழக் கோரிக்கையின் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி அந்தக் கொள்கையைக் கைவிட்ட நிலையில் அதன் தலைவர்கள் சிலர் விடுதலைப் புலிகளால் தண்டிக்கப்படும் நிலை உருவானது. இதேபோல் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ போன்ற அமைப்புக்களும் இந்திய அரசின் கைப்பொம்மைகளாக மாற்றப்பட்ட நிலையில் அவர்களும் விடுதலைப் புலிகளால் வேட்டையாடப்படும் நிலை உருவாகியது. ஆனால் ஆயுதப்போராட்டம் பெரும் வெற்றிகளைப் பெற்று, விடுதலைப் பிரதேசங்கள் உருவாக்கப்பட்ட நிலையில் அதே தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகளை ஒன்றிணைத்து விடுதலைப் புலிகளின் ஜனநாயக அரசியல் குரலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அரசியல் அரங்கில் இல்லாத நிலையில் தமிழ் மக்களின் ஒரே தலைமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்குகிறது. அதாவது விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியாக உரிமைப் போராட்டத்தை ஜனநாயக வழியில் முன்னெடுக்கும் கடப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்களால் வழங்கப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தல்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல் எனச் சகல தேர்தல்களிலும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது பேராதரவை வழங்கினர். அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஒரே தலைமைச் சக்தியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏகதலைமையாக ஏற்று தமிழ் மக்கள் தங்கள் ஐக்கியத்தை வெளிப்படுத்திய போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் இல்லாமற்போய் விடவில்லை.

குறிப்பாக தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கப் போக்கும் ஏனைய அமைப்புக்கள் அதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் முரண்பாடுகளின் அடிப்படையாக அமைந்தன. அந்த அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும் பிரச்சினையும் நிறைவேற்றப்படாமலே இழுபட்டது.

### முரண்பட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன்

இந்த நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் முரண்படும் ஒரு நிலை உருவாகியது. அதே நேரத்தில் அவரை ஓரங்கட்டும் முயற்சிகள் தமிழரசுக்கட்சித் தரப்பால் மேற்கொள்ளப்படவில்லை என்று சொல்லிவிடவும் முடியாது.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் இந்தியத்தூதுவரின் பரிந்துரையின்பேரில் வடமாகாணசபை முதலமைச்சர் வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நிறுத்தப்பட்டு பெரும் வெற்றி பெற்றார்.

புதிய அரசு ஏற்பட்ட பின்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் உள்ள சிலருக்கும், முதலமைச்சருக்குமிடையில் சில முரண்பாடுகள் தோன்றின. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதலமைச்சரை ஒரு பொய்யர் எனக் குற்றம் சாட்டியபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை உண்மையைக் கூறி முதலமைச்சரை நியாயப்படுத்தத் தவறியதிலிருந்தே இந்த முரண்பாடு ஆரம்பமாகியது. இது மெல்ல மெல்ல வலுவடைந்து முதலமைச்சர் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பரப்புரை செய்ய மறுப்பது வரை சென்றது.

அதன் பிறகு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும், முதலமைச்சரும் ஒருவரை ஒருவர் ஊடகங்களில் விமர்சிக்கும் அளவுக்கும் முரண்பாடு வலுவடைந்தது. மாகாண சபைக்குள்ளும் முதலமைச்சருக்கு எதிராக ஓர் அணி உருவாகும் தோற்றப்பாடும் ஏற்பட்டது.

இப்படியாக சுரேஷ் பிரேமச்சந்திரனும், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்படும் நிலையில் ஓரங்கட்டப்படும் நிலையும் உருவாகிய போதே திடீரென தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டது. இதன் இணைத்தலைவர்களில் ஒருவராக முதலமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுத்துவிட முடியாது. எவ்வளவுதான் நேர்மையான அரசியல் இருந்தபோதும், நியாயமான செயற்பாடுகள் இருந்தபோதும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபடுவதையோ, இன்னொரு அரசியல் தலைமை உருவாவதையோ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் முன்னாள் போராளிகள் அமைப்புக்கும் தமிழ் மக்கள் தெளிவாகவே அதை வெளிப்படுத்தியிருந்தனர். ஏனெனில் இன்று தமிழ் மக்களுக்கு உள்ள பலம் தமிழ் மக்களின் ஐக்கியம் ஒன்று மட்டும் தான்.

### நூறுவீதம் சரியானது அல்ல

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் நூறுவீதம் சரியானவை என்று எவரும் சொல்லிவிட முடியாது என்பதும் உண்மை. உலகின் எந்த ஓர் அம்சத்திலும் சரிக்கும் பிழைக்கும் இடையிலான போராட்டம், நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடையிலான போராட்டம் என்பவை தவிர்க்க முடியாததே. இப்படியான முரண்பாடு இல்லாத எந்த ஒரு அம்சமும் உலகில் இருக்க முடியாது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் எப்படி விதிவிலக்காக முடியும்? ஆனால் அந்த முரண்பாட்டில் வளரும் அம்சம் எது, தேய்ந்து போகும் அம்சம் எது என்பது தான் முக்கியம்.

சரியான அம்சம் பலவீனமடையும் போது பிழையான அம்சம் மேலோங்கும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

தற்சமயம் உள்ள நிலையில் முதலமைச்சரோ அல்லது சுரேஷ் பிரேமச்சந்திரனோ கூட்டமைப்பை விட்டு வெளியேறாவிட்டாலும் அதற்குள் அவர்களின் குரல்கள் வேறு விதமாகவே அர்த்தம் கொள்ளப்படும்.

அதாவது பலவீனமானவையாகவே விளங்கும். ஆனால் தமிழ் மக்கள் பேரவை போன்ற ஓர் அமைப்பை ஆரம்பிக்காமல் இருந்தால் அவர்களின் கருத்துக்களை அவ்வளவு இலகுவாக நிராகரித்து விட முடியாமல் இருந்திருக்கும். ஏற்கனவே அவர்களைத் தனிமைப்படுத்தும் முயற்சிகள் ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்டன என்பதை மறுத்துவிட முடியாது. ஆனால் இவர்களின் நடவடிக்கைகள் அந்த நோக்கத்துக்கு சாதகமாகத் தங்களைத் தாமே தனிமைப்படுத்தும் நிலைக்கு இட்டுச் செல்கின்றன என்பது முக்கிய விடயமாகும்.

குறிப்பாக முதலமைச்சர் அண்மையில் வெளியிட்ட ஒரு கருத்து தமிழ் மக்கள் பேரவையின் செல்வழி தொடர்பாகப் பெரும் கேள்வியை எழுப்பியுள்ளது. அதாவது டக்ளஸ் தேவானந்தா, கருணா ஆகியோரும் தமிழ் மக்கள் பேரவையில் இணைய விரும்பினால் அதை வரவேற்பதாகத் தெரிவித்திருந்தார். கருணா, தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைய விருப்பம் தெரிவித்தபோது அதன் தலைவர் வீ. ஆனந்தசங்கரிகூட அதை ஏற்கவில்லை.

### கருணாவையும் டக்ளஸையும் இணைத்துக்கொள்வதா?

கருணா, டக்ளஸ் தேவானந்தா ஆகிய இருவரையும் தமிழ் மக்கள் என்றுமே மன்னிக்க முடியாத துரோகிகளாகவே பார்க்கின்றனர். இருவரும் துணை இராணுவக் குழுக்களாகச் செயற்பட்டு ஏராளமான தமிழ் மக்களை வீதி வீதியாகவும் வீட்டு முற்றங்களிலும் கொன்று போட்டவர்கள் என நம்பப்படுபவர்கள். ஆள்கடத்தல், காணாமற்போகச் செய்தல் என்பவற்றில் ஈடுபட்டவர்கள் என மக்கள் காணாமற்போனோர் ஆணைக்குழுவில் சாட்சியங்களை வழங்கியுள்ளனர். வெற்றியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த விடுதலைப் போராட்டத்தின் ஆயுத வடிவத்தைச் சிதைப்பதில் மகிந்த ராஜபக்சவின் நம்பிக்கைக்குரிய பங்காளிகளாகச் செயற்பட்டு பெரும் துரோகமிழைத்தவர்கள். இவர்களை இனிப்பிறக்கப்போகும் குழந்தைகூட மன்னிக்காது.

அப்படிப்பட்டவர்களைத் தமிழ் மக்கள் பேரவை இணைத்துக் கொள்ளத் தயாரென்றால் அவர்களின் மட்டத்துக்கே தமிழ் மக்கள் பேரவையும் தன்னைத் தாழ்த்திக் கொள்ளத் தயாராகிவிட்டது என்பது தான் அர்த்தம்.

தமிழ் மக்களின் மதிப்புக்கும் கௌரவத்துக்கும் உரியவராக தமிழ் மக்களின் பேராதரவு பெற்ற முதலமைச்சர் தவறான வழிமுறைகள் மூலம் தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொள்வது அவரை அரசியல் களத்தில் செல்லாக்காசாக்கும் நிலையையே ஏற்படுத்தும். அவைத் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்துக்கு ஆரோக்கியமான விளைபயனைத் தரப்போவதில்லை.

# நாடக நடிகர் நல்லதம்பி!

## அறிமுகப்படுத்துகிறோம் - 02

கலாபூசணம் பகிடிப்பரமார்

என்ன ஆள் புதுசா இருக்கிறாரே.... என்று யோசிக்கிறீர்களா? வெளியில் சத்தம் போட்டுச் சொல்லிப் போடாதேங்க.... அவரின் காதில் விழுந்து விட்டால் மனிதர் பெரிசா மனம் வருந்திச் சாம்புவார். அவர் தானே பிரபல நாடக நடிகரென்று தன்னைத் தான் புகழ்ந்து கொண்டு திரிகிறாரே.....நீங்க ஒண்டு!

இனி நாடக நடிகரை அறிமுகம் செய்து வைக்கப் போகிறேன் பாக்கிறீர்களா? ஒரு புதிய கோணத்தில் அவரைப் பார்க்கலாம். சீவியகால இறுதிக்கே வந்திட்ட ஜீன்ஸ், தன்னில் தெருப் புழுதிகளை உள்வாங்கி வைத்திருக்கும் ரீசேட், குதி தேய்ந்து கால் தரையில்படும் மில்றேரி காலத்துச் சப்பாத்துக்கள், பொக்கட்டில் பழங்கால சுவான் பேனாமூடி இத்தனைக்கும் சொந்தக்காரனே திருவாளர் நாடக நடிகர் நல்ல தம்பி.

இவைகளைத் தவிர்த்துப் பார்த்தால் இந்தப் பரந்த பிரபஞ்சத்தில் அவருக்கு உரிமையென்று சொல்லக்கூடிய ஒன்றுண்டு. அதுதான் நடிப்புக்கலை என்றால் மிகை இருக்காது.

எப்போதோ பல வருடங்களுக்கு முன்பாக நடமாடி என்னும் நாடகத்தில் நடமாடி என்ற கதாபாத்திரத்தை ஏற்று பாத்திரமாகவே மாறிவிட்ட இவர் வாழ் நாள்களிலும் நடமாடியாக மாறிவிட்டதில் ஆச்சரியமொன்றும் கிடையாது.

அதோ! வீதிகள் எல்லாம் அலைந்த களை முகத்தில் எழுதி ஒட்டி இருக்க இன்னமும் எங்கோ முக்கிய வேலைக்குச் செல்பவர்போல செல்கிறாரே! வேறு எங்குமில்லை அவரது நாடக நடிக நண்பரொருவரைச் சந்திக்கவேதான்.

விழுந்து கட்டிப் பாய்ந்து போனாலும் நடையின் தாளம் பிசகாது. நடையே அவரது தனி அழகு. பிரபல நாடக விமர்சகர் நாடக நடிகர் நல்லதம்பியின் நடையே ஒரு நாட்டியம் என்று வர்ணித்து இருந்ததை உங்கள் பார்வைக்கும் விட்டு விடுகிறேன்.

இவர் மற்றவர்களைக் கிண்டல் செய்வதில் அவருக்கே உரிய தனிக்குணம் அது. அதாவது கிண்டல் தோரணையில் எதையாவது கூறிவிட்டு தானே விழுந்து விழுந்து சிரிப்பார். இத்தகைய விசித்திரப் பிறவி எவ்விதம் நடிப்புக்கலையில் ஆர்வம் பூண்டாரென எண்ணுகிறீர்களா?

அப்படியானால் நீங்கள் அத்தனை தூரம் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளத் தேவையில்லை! கொஞ்சம் நெருங்கி வந்து காதைத் தாருங்கள். கடிச்சுப் போடுவன் என்று பயப்பிட வேண்டாம். இன்றைய கலைப் புலகே இத்தகைய விசித்திரப் பிறவிகளிடம் சிக்கித் திணறுகிறது என்கின், நீங்க ஆச்சரியம்தான் அடைவீர்கள்; ஆனால் உண்மை அதுதான் பாருங்கோ!

என்னதான் நடக்கும் நடக்கட்டுமே..... என்றெங்கோ வானொலி ஒன்றில் இருந்து காற்றோடு கலந்து வந்த சினிமாப் பாடலைக் காதுகளில் வாங்கிக் கொண்ட நாடக நடிகர் நல்லதம்பி நடையைத் தளர்த்தி பாட்டுக்கேற்ப வாயசைப்பதுடன் முக பாவங்களையும் மாற்றி, மாற்றி நடிப்புக் கலையின் பெருஞ்சாதனையை நடுவீதியிலே காட்டியதால் பெருங்கூட்டமே திரண்டு விட்டது; அவரது நவரச நடிப்பைப் பார்த்து ரசிக்க..... இத்தகைய கலைப் பொக்கிஷம் நல்லதம்பி.

அவர் பெண்களை நோக்கும் பாணியே தனிதான். பெண்களை எவரும் குறைத்துக் கதைத்து விடக்கூடாது. மூக்கைப் பொத்துக் கொண்டு முன்பாயும் கோபா வேஷம். பெண்களைப் பொருட்படுத்தாமல் கதைப்பவர்களிடம் இப்படிக் கூறுவார். பெண்களது ஒரு அசைவிலே கலைகள் அத்தனையையும் அனுபவிக்கலாம். இதனைக்கேட்டு பலர் பிரமித்தும் விடுவர்.

என்ன வாசகர்களே! நீங்களும் பிரமித்து விட்டீர்களா? இல்லையா, சரிவிடயத்துக்கு வருவோம். இத்தகைய விசித்திரப் பிறவியின் வாயிலிருந்து அந்த வார்த்தைகள் வெளிவந்தால் நீங்களென்ன எவர்தான் பிரமிக்க மாட்டார்கள்? அதுகளெல்லாம் அவருடைய சொந்தச் சரக்கல்ல; எங்கோ பொறுக்கியவைதாம்.

இது மட்டுமா அவரொரு புத்தகப் பூச்சியுங்கூட! காலையில் புத்தகக் கடைகள் திறந்த மாத்திரத்தில் இவரே முதல் முதலில் தரிசனம் கொடுப்பார். நாடக நடிகர் நல்லதம்பியைப் போலவே இன்னும் சிலர் இருந்தால் புத்தகக் கடைக் காரர்களுக்கு என்ன குறை? என்று மட்டும் நினைத்து விடாதீர்கள்.

இவரைப் போல சிலர் இருந்துவிட்டால் புத்தகக் கடைகளை இழுத்து மூட வேண்டியது தான். பணம் கொடுத்து வாங்கிப் படிக்கும் வழக்கம் இல்லையே நாடக நடிகர் நல்லதம்பியிடம். தொங்க விட்டுள்ள; அலுமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை மெதுவாகப் பற்றி வாசித்து விட்டு மீண்டும் அந்தப் படியே வைத்து விட்டு நழுவிவிடுவார். கடைக்காரகள் சொல்லுந்தரமும் சொல்லிப் பார்ப்பார்கள். உணர்ச்சியற்ற ஜடமாக பிசினைப்போல ஒட்டி நின்று புத்தகங்கள் ஒன்று விடாமல் வாசித்து விட்டுத்தான் போவார். இவரைப் புகழேந்தி என்றும் கூறலாம்.

அதிகமேன் அவரது ஜீன்ஸ், ரீசேட்களில் இருக்கும் பொக்கட்டுக்களைச் சோதித்தால் புரிந்து விடும். முழுக்க முழுக்க அவர் நடித்த ஒரே நாடகத்தின் துண்டுப் பிரசுங்கள், காட்சிப் படங்கள், விமர்சனத் துணிக்கைகளைப் பெறலாம். அவைகளை தன்னுடைய நடிப் புலகச்



சாதனைகளாக மற்றவர்களுக்கு தம் பட்டம் அடிக்கும் நற்சான்று களாகக் கருதுகிறாராம். நாடக நடிகர் நல்லதம்பியைப் பற்றி இப்படி அறிமுகப் படுத்திக் கொண்டே போகலாம். ஆனால் பின்னுக்கு வரிசையில் நிற்கும் ஏனைய கலைஞர்கள் துரிதப் படுத்துகிறார்களே! அதோ, புகைப்படக் கலைஞர் புண்ணியலிங்கம் தலையைக் காட்டுகிறார்.... ஆமாம் தன்னையும் அறிமுகம் செய்து வைக்கும்படி துடிக்கிறார். சரி அடுத்து அவரைச் சந்திக்க ரெடியா?

# நம்முடைய முன்கதை - 1

வரலாறு பலருக்கு வேப்பங்காய். குளம் வெட்டினார்; இவரோடு அவர் சண்டையிட்டார் என்று மன்னர்களைப்பற்றியும், வருடங்களையும் தெரிந்துகொண்டு என்ன செய்யப்போகிறோம் என்பது தான் பலருடைய கேள்வி. நமக்குத் திரும்பத் திரும்பச் சொல்லப்படும் வரலாற்று தகவல்கள் சற்றே புளித்துப்போனவையாக இருக்கலாம். ஆனால், அத்துடன் எல்லா வரலாறும் முடிந்து போவதில்லை. நம்முடைய முன்கதை மிகுந்த சுவாரசியமானது.

திராவிட நாகரிகம் தோன்றி வளர்ந்ததாகக் கருதப்படும் சிந்து சமவெளி நாகரிகம் பற்றிய பல செய்திகள் மிகவும் சுவாரசியமானவை.

உலகின் மிக முக்கியமான பண்டைய நதிக்கரை நாகரிகங்களில் சிறப்புகள் பல கொண்டது சிந்து சமவெளி நாகரிகம். சிந்து சமவெளியின் முக்கிய நகரம் மொகஞ்சதாரோ. உள்ளூர் மக்கள் வைத்த இந்தப் பெயருக்கு, "பிணக் குவியல்' என்று பொருள்.



பிரிட்டன் இராணுவப் பணியைவிட்டு ஓடிவந்தவர் சார்லஸ் மேசன். 1844இல் இவர் எழுதிய பலுசிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் பஞ்சாப்பில் மேற்கொண்ட பலபயணங்களின் உரைச் சித்திரம் என்ற புத்தகத்தில் ஹரப்பா நகரச் சிதிலங்கள் பற்றி முதலில் விவரித்திருந்தார். உள்ளூர் மக்கள் தெரிவித்த தகவலின் அடிப்படையில் மண்ணுக்கு அடியில் இருக்கும் 40 கி.மீ. தொலைவுள்ள பண்டைய நகரமான ஹரப்பா பற்றி அவர் எழுதியிருந்தார். இவருடைய உண்மைபெயர் ஜேம்ஸ் லூயி என்பது தனித் தகவல்.

ஆனால், கிட்டத்தட்ட 80 ஆண்டுகளுக்குப் பிறகே முறைப்படியான அகழ்வாராய்ச்சி அந்தப் பகுதியில் நடைபெற்றது. இந்தியத் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராக இருந்த சர் ஜான் ஹியூபர்ட் மார்ல் தலைமையில் 1921ஆம் ஆண்டில் சிந்து பகுதியில் அகழ்வாராய்ச்சி தொடங்கியது. மொகஞ்சதாரோ, ஹரப்பா பண்டைய நகரங்கள் அப்போதுதான் உலகின் வெளிச்சத்துக்கு வந்தன.

சிந்து நதி பாய்ந்த சமவெளியை ஒட்டி ஆயிரக்கணக்கான ஊர்களில் நாகரிகம் தழைத்திருந்தது. முக்கிய நகரங்கள்: மொக்ஞ்சதாரோ, ஹரப்பா (இரண்டும் பாகிஸ்தானில் உள்ளன), தோலாவிரா, லோத்தல் (இரண்டும் குஜராத் மாநிலத்தில் உள்ளன).

நைல் நதி நாகரிகமும், மெசபடோமிய நாகரிகமும் சிந்து சமவெளி நாகரிகத்தின் சமகாலத்தவை. மூன்றும் நதிக்க ரை நாகரிகங்கள். இவற்றுக்கு இடையே வாணிபமும் நடைபெற்றிருக்கிறது.

அதேநேரம், நைல் நதி நாகரிகத்தை விடவும் சிந்து சமவெளி நாகரிகம் பெரிது. சிந்து சமவெளி நாகரிகத்தின் காலம், வெண்கலக் காலம். சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன். அது கி.மு. 3300இலிருந்து கி.மு. 1700 வரையானதாக இருக்கலாம்.

இந்த நாகரிகத்தின் மொத்தப் பரப்பு சுமார் 10 லட்சம் சதுர கி.மீ. சிந்து சமவெளியில் இருந்த மக்களின் எண்ணிக்கை அண்ணளவாக 10 முதல் 50 லட்சம்.

இந்தப் பகுதியை அரசர் ஒருவர் ஆண்டது போலத் தெரியவில்லை. பொது மக்கள் சபை ஆட்சி செய்திருக்கலாம்.

இங்கே நாணயமுறை எதுவும் கண்டறியப்படாததால், பண்ட மாற்று முறை பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.

நட்சத்திரங்களைத் திசை காட்டும் கருவியாகப் பயன்படுத்தி, இந்த நாகரிக மக்கள் திசைகளைக் கண்ட றிந்தனர்.

மொகஞ்சதாரோவில் அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸ்கூட இருந்துள்ளது.

இந்த நாகரிகத்தின் சில ஊர்கள் வெள்ளத்தில் மூழ்கியோ, பஞ்சத்தாலோ அழிந்திருக்கலாம். ஆரியர்கள் எனப்படுகிற இனக்குழுவின் படை யெடுப்பால் அழிந்திருக்கலாம் என்கிறது பிரிட்டன் தொல்லியல் ஆராய்ச்சியாளர் சர் மார்டைமர் வீலரின் ஆய்வு. (இன்னும் தோண்டிப் பார்க்கலாம்)





## செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் 12

# பயிற்சிக்களமாக விளங்கும் மாகாண பத்திரிகைகள்



பொதுவில் பிராந்திய பத்திரிகைகள்தான் பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிக் களமாக இந்தக்காலத்தில் விளங்குகின்றன.
குறிப் பாக 60களுக்குப் பிறகு ஏராளமான பத்திரிகையாளர்கள் அப்போதைய ஈழநாடு பத்திரிகையில் பயிற்சி பெற்று வெளியேறியிருக்கிறார்கள். அவர்களில் இன்று குறிப்பிட்டுக் கூறக்கூடிய பலர் தலைநகரிலிருந்து வெளி யாகும் பத்திரிகைகளில் பணிபுரிகிறார்கள்.
போர் நடைபெற்ற காலத்தில் வெளிநாடுகளுக்கு சென்ற பல பத்திரிகையாளர்கள் இங்கே ஈழநாடு பத்திரிகையில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு அங்கேயும் தமிழ்ப் பத்திரிகைகளை ஆரம்பித்தது மட்டுமன்றி தமிழ் ஊடகத்துறைகளிலும் பணிபுரிகிறார்கள்.
ஒரு விசித்திரம் என்னவென்றால் தலைநகர்களில் இருந்து வெளிவரும் தேசிய பத்திரிகைகளில் பணி புரிவதற்கு முன்பதாக பிராந்திய பத்திரிகைகளே பயிற்சிக் களங்களாக இப்போது இங்கு மாறியிருக்கும் அதே நேரம் மாகாண பத்திரிகையான ஈழநாடு பத்திரிகையை செய்திப் பத்திரிகையாக வளர்த்தெடுப்பதற்கு ஆரம்ப காலத்தில் கொழும்பிலிருந்தே பயிற்சி பெற்ற பத்திரிகையாளர்கள் இங்கு வந்ததார்கள் என்பதுதான்.
பொதுவில் வெளிநாடுகளில் குறிப்பாக பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் பிராந்திய பத்திரிகைகளே பத்திரிகையாளர்களுக்கு பயிற்சிக்களமாக வெகுகாலமாக இருந்து வருகின்றன.
ஈழநாட்டில் பயிற்சி பெற்று கொழும்புப் பத்திரிகைகளில் இப்போதும் பணியாற்றுகிறவர்களாக, அனந்த கிருஷ்ணன் பாலகிட்னர், பிரபாகன், சிவகணேசன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். வெளிநாடுகளில் பாரிஸ் ஈழநாடு காசிலிங்கம், லண்டனில் பாமா ராஜகோபால் என்று இன்னும் பலர் தமிழ் ஊடகப் பரப்பில் இருக்கிறார்கள்.
ஆகவே, மாகாண பத்திரிகைள் இப்போதும்கூட எதிர்காலத்தில் உன்னத பத்திரிகையாளர்களாய் வரக்கூடியவர்களுக்கு நல்லதொரு பயிற்சிக் களமாகவே திகழ்கின்றன. 60 வதுகளில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்பட்ட பத்திரிகைத்துறை கற்கை நெறியில் இணைந்து பயின்ற பலரும் இப்போது துறைசார் பத்திரிகையாளர்களாய் விளங்குகிறார்கள். 90களில் யாழ். பல்கலைக்கழகத்தினால் வெளிவாரி கற்கை பிரிவில் ஓர் அலகாக நடத்தப்பட்ட இதழியல் கற்கைப் நெறியில் பயின்ற பலர் இன்று பத்திரிகைத்துறையில் பணியாற்றுகின்றார்கள்.
60 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த விதமான வசதிகள் இருந்ததில்லை. இப்பொழுது பல்கலைக் கழகங்களாலேயே ஊடக பயிற்சிமையங்கள் நடத்தப்படுவது வரவேற்கத்தக்கதொரு அம்சம் - ஊடகவியலாளர்கள் முறையான அறிவைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.
மாகாண பத்திரிகைகள் தேசிய பத்திரிகைகளைவிட உள்ளூர் செய்திகளை விவரமாகவும் விரிவாகவும் மட்டுமல்ல சூட்சுமமாகவும் வாசகனுக்கு வழங்கமுடிகின்றது. மிக முக்கியமானதொரு அம்சம் உள்ளூர்ப் பத்திரிகைகளில் என்னவென்றால் உள்ளூராட்சி மன் றங்கள் மற்றும் மாகாணசபை செய்திகளை அவைகளால் முக்கியத்துவம் கொடுத்து முந்திக் கொண்டு வழங்க முடிகின்றது. இந்த அமைப்புக்களில் நடக்கும் விவாதங்கள், சொற்போர்கள் தேசிய பத்திரிகைகளுக்கு அதிக

> மறைந்து கிடப்பவைகளை வெளிக்கொணர்வதன் மூலமே பத்திரிகைத் துறை உயிர் வாழ்கிறது என்று டிலானே என்ற புகழ்பெற்ற பத்திரிகையாளர் ஒருமுறை கூறியிருந்தார். அது உண்மைதான்.

அக்கறையானவையாக இருப்பதில்லை.
பொதுவில் மாகாண மட்ட ஜனநாயக அமைப்புக்களின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டுக்கும் மாகாணப் பத்திரிகைகளால் கணிசமான அளவு பணியாற்ற முடிகின்றது.
ஒரு மாகாணப் பத்திரிகையின் நிருபர் அல்லது இருவர் இந்த மன்றங்களின் மற்றும் நீதிமன்றங்களின் நிகழ்ச்சிகளை அன்றாடம் சென்று கவனித்து குறிப்பெடுத்து அறிக்கை இடுவார்கள். சில சமயம் இந்த மன்றங்களின் விவாதங்கள், குழுநிலை ஆய்வுகள், சொற்பொழிவுகள் பலமணிநேரம் நீடிப்பதுண்டு. விவாதங்கள்




தொடர்ந்து சில நாள்களுக்கு நீடிக்கவும் செய்யும். அவைகளை அலுப்புத்தட்டினாலும் அயர்ந்துபோகாமல் நிருபர்கள் தங்கியிருந்து குறிப்பெடுத்து வழங்குகிறார்கள்.
எவ்வளவுதான் விவாதங்கள் நீடித்தாலும் இழுபறிப்பட்டாலும் தனது பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டியதை மட்டும் தனது பத்திரிகை வாசகனுக்கு அக்கறையானதை மட்டும் கவனித்து வழங்கும் பத்திரிகையாளரின் பணி மகத்தானது. அதில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத்தான் தெரியும் அதன் அருமை.
லண்டன் போன்ற நகரங்களில் நகரசபைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் பெரிதாகக் கலந்து கொள்ளாவிட்டாலும் பொதுமக்கள் சார்பில் அவர்களின் பிரதிநிதிகளாக பத்திரிகைகளில் இருந்து "கனவான்கள்" கலந்து கொள்வதை எதிர்பார்க்கிறார்கள் என்று டெனிஸ்தோமஸ் தம் நூலில் குறிப்பிடுகின்றார். அங்கு அவர்கள் பத்திரிகைக் கனவான்கள் என்றே இன்றும்கூட மரியாதையுடன் அழைக்கப்படுகிறார்கள் என்கிறார் அவர்.
உள்ளூராட்சி மன்றங்களின் மாநாட்டு மண்டபங்களில் பத்திரிகையாளர்களுக்கென்று ஒரு பகுதி ஒதுக்கி மேசை, நாற்காலி போடப்பட்டிருக்கும். பென்சில் மற்றும் குறிப்புப் புத்தகங்களுடனும் வழமையான புன்சிரிப்புடனும் தமக்குரிய பகுதிகளில் பத்திரிகை யாளர்கள் வந்தமர்ந்து நிகழ்ச்சிகளை குறிப்பெடுப்பதை மன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல பொதுமக்களுக்கும் வரவேற்கிறார்கள்.
நிகழ்ச்சிகளைப் பார்க்க, பொதுமக்கள் ஏன் போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள்கூட வராது போனாலும் குறிப்பெடுக்கும் பத்திரிகையாளர்கள் இருந்தால்போதும் உறுப்பினர்கள் தம் கருத்துக்களை விளாசித் தள்ளுவார்கள். காரணம் அவை அனைத்துமில்லாவிட்டாலும் அவர்கள் கூறும் முக்கிய விட யங்கள் அதேநாள் பத்திரிகைளில் செய்தியாக பொதுமக்கள் பார்வைக்கு கிடைத்து விடும். அதன்மூலம் அவர் கள் எதிர்பார்க்கும் பொதுமக்கள் கருத்து உருவாகவும் உதவியாய் இருக்கும்.
அது மட்டுமல்ல இந்தமாதிரி மன்றங்களால் மேற் கொள் ளப்படும் நற்காரியங்கள், நல்ல செயற்றிட்டங்கள் பற்றி பொதுமக்களுக்கு அறிக்கையிடுபவர்களாக இருக்கும் அதேசமயம் அங்கு இடம்பெறும் ஊழல்கள், முறைகேடுகள், நிர்வாக சீர்கேடுகளை பகிரங்கப்படுத்துபவர்களும் இந்தப் பேனா மன்னர்களே.
மறைந்து கிடப்பவைகளை வெளிக்கொணர்வதன் மூலமே பத்திரிகைத் துறை உயிர் வாழ்கிறது என்று டிலானே என்ற புகழ்பெற்ற பத்திரிகையாளர் ஒருமுறை கூறியிருந்தார். அது உண்மைதான்.
அந்தத் துறையினருக்கு வெளியில் இருந்து கிடைக்கின்ற எந்த ஒரு விடயமும் எமது காலத்தின் அறிவு பொக்கிஷத்தின் மட்டுமல்ல வரலாற்றினதும் ஒரு பகுதியாகி விடுகின்றது என்பார் டிலானே. பத்திரிகையாளனைப் பொறுத்தவரை அவனது கடமையானது ஒரு வரலாற்று ஆசிரியரின் கடமையைப் போன்றதே - எல்லாவற்றையும்விட உண்மையைக்கண்டறிவது. அதனை மறைப்பு ஒளிப்பு இன்றித் தனது வாசகனுக்கு வழங்கி விடுவது பத்திரிகையாளனின் கடமையாக இருக்கின்றது என்பது அவர் கருத்து.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மகிந்தவை படுகுழிக்குள் தள்ள முயலும் மைத்திரி

முபாரக்



மகிந்தவின் ஆட்சி வீழ்ந்து - புதிய நல்லாட்சி மலர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாவதற்கு இன்னும் ஓரிரு நாள்கள்தான் இருக்கின்றன. இந்த ஒரு வருடத்துக்குள் இந்த நாடு - இந்த நாட்டு மக்கள் அடைந்த நிம்மதி ஒப்பீட்டளவில் மிகப் பெரியதாகும்.

இந்த நிம்மதியை இழப்பதற்கு இந்த நாட்டு மக்கள் தயாரில்லை. இருந்தும், அந்த நிம்மதியக் கெடுப்பதற்கும் மீண்டும் சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டுவதற்கும்மகிந்ததரப்புவிடாமுயற்சியுடன் செயற்பட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

தமது சுய கௌரவத்தை இழந்தாவது ஆட்சி அதிகாரத்தை மீண்டும் பிடிக்க வேண்டும் என்று மகிந்தவும் அவரது தரப்பினரும் ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். மகிந்தவை மீண்டும் சுதந்திரக் கட்சியின் தலைவராக்கி அந்தக் கனவை நிறைவேற்ற அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

2015 ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த மண் கவ்வியதும் அவரது அம்பாந்தோட்டை வீட்டுக்கு அவர் அனுப்பப்பட்டார். புதிய ஜனாதிபதி மைத்திரியிடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுடன் நின்றவர்கள் மகிந்த தோற்றதும் 'பல்டி' அடித்து மைத்திரியுடன் இணைந்தனர். மைத்திரியை சுதந்திரக் கட்சியின் தலைவராக்கி மீண்டும் சுதந்திரக் கட்சியை ஆட்சி பீடமேற்றி ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களாக தாமும் ஆட்சி அதிகாரத்தில் இருப்பது ஐக்கிய தேசியக் கட்சியையும் ஆட்சிபீடம் ஏறவிடாமல் தடுப்பது என்று அவர்கள் திட்டம் தீட்டினர். ஆனால், மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையிலான நாகரிகமான இணக்கப்பாட்டின் அடிப்படையில் இரண்டு கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைப்பதிலேயே மைத்திரி குறியாக இருந்தார்.

இதற்கிடையில் சுதந்திரக் கட்சியின் சிலர் தொடர்ந்தும் மகிந்தவுடனேயே இருந்தனர். சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் பதவி மகிந்தவிடம் இருந்து பறிக்கப்பட்டாலும்கூட ஏதோவொரு வகையில், மகிந்தவை கட்சிக்குள் நுழைத்து ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்கு மகிந்த தரப்பினர் மீண்டும் முயற்சி செய்தனர். அதற்கு எதுவாக நாடாளுமன்றத் தேர்தல் வந்தது.

நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்தவை சுதந்திரக் கட்சியில் முதன்மை வேட்பாளராக இறக்கி அவரைப் பிரதமராக்குவதற்கு மகிந்த தரப்பினர் திட்டமிட்டனர். ஆனால், அவரைப் போட்டியிட அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் மைத்திரி முதலில் இருந்தார். ஆனால், கட்சிக்குள் மகிந்தவுக்கான ஆதரவு வலுக்கத் தொடங்கியது. மகிந்தவுக்கு அனுமதி வழங்காவிட்டால் தனிக் கட்சி ஒன்றைத் தொடங்கி களமிறங்குவதற்கும் மகிந்த தரப்பினர் முயற்சித்தனர். இதனால், கட்சி பிளவுபட்டுவிடக்கூடாது என்ற நோக்கில் மகிந்தவுக்கு மைத்திரி அனுமதி வழங்கினார்.

அவ்வாறு அனுமதி வழங்கியபோதிலும், அவர் வெற்றி பெறக்கூடாது என்பதிலும், சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றால் அந்த வெற்றி மகிந்தவுக்குச் சொந்தமாகிவிடக்கூடாது என்பதிலும் மைத்திரி குறியாக இருந்தார். மகிந்தவுக்குப் போட்டியிட அனுமதி வழங்கிவிட்டு மறுபுறம், அவரது வெற்றியைத் தடுப்பதற்குக் களமிறங்கினார். தொலைக்காட்சியில் தோன்றி மகிந்தவுக்கு எதிராகப் பேசினார். அவரைத் தோற்கடிக்கும் விதத்தில் உரையாற்றினார்.

இதனால், மகிந்தவின் மக்கள் செல்வாக்கு சரியத் தொடங்கியது. மகிந்த வென்றாலும் அவருக்குப் பிரதமர் பதவி கிடைக்காது என்பது அந்த உரையில் உறுதியானது மாத்திரமன்றி, சுதந்திரக் கட்சிகூட வெற்றி பெறாது என்பது புரிந்தது.

சுதந்திரக் கட்சியின் வெற்றியை விடவும் மகிந்தவின் தோல்விதான் மைத்திரிக்கு முக்கியமானதாகத் தெரிந்தது. சுதந்திரக் கட்சி வென்றாலும் ஒன்றுதான் தோற்றாலும் ஒன்றுதான் என்ற நிலைப்பாட்டில் மைத்திரி இருந்தார். சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சி அமைப்பது என்ற இணக்கப்பாட்டில் மைத்தியும் ரணிலும் இருந்தமையே இதற்குக் காரணம். ஆகவே, மகிந்தவை வெறும் நாடாளுமன்ற உறுப்பினராக மாத்திரம் ஆக்கி அவரை அரசியலில் இருந்து வீழ்ச்சியின் விளிம்புக்குத் தள்ளுவதே மைத்திரியின் திட்டமாக இருந்தது.

மைத்திரியின் திட்டப்படியே எல்லாம் நடந்தன. இருந்தாலும், மஹிந்தவை எப்படியாவது சுதந்திரக் கட்சிக்குள் நுழைத்து மீண்டும் ஆட்சியைப் பிடிப்பது என்ற

> மகிந்த அவரது ஆட்சியைப் பலப்படுத்து வதற்காக எவ்வாறு ஏனைய கட்சிகளை துண்டு துண்டாக உடைத்தாரோ அவ்வாறே அவரது தரப்பினரும் உடைக்கப் படுகின்றனர். இந்த அரசின் மக்கள் நேய செயற்பாடுகள் மேலும் விரிவாக்கப்பட்டால் மகிந்தவின் அரசியல் படுகுழியை நோக்கிச் செல்வது நிச்சயம்.

மகிந்த தரப்பின் முயற்சி கைவிடப்படவில்லை. எதிர்வருகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்தவின் பலத்தை நிரூபித்து மேற்படித் திட்டத்தை நிறைவேற்ற அவர் கள் முயற்சிக்கின்றனர்.

இந்த வருடத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி வெற்றி பெற வேண்டுமென்றால் மகிந்தவையும் இணைத்துக்கொண்டே சுதந்திரக் கட்சி களமிறங்க வேண்டுமென்று மகிந்த தரப்பினர் சந்திரிகா அம்மையாரிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இதை சந்திரிகா நிராகரித்துள்ளார். மைத்திரிக்கும் இதில் உடன்பாடில்லை. இந்தத் தேர்தலிலும் சுதந்திரக் கட்சியின் வெற்றி ஏன்பதைவிட மகிந்தவின் தோல்வி என்பதுதான் மைத்திரிக்கு முக்கியமானதாகப்படுகின்றது.

அதற்காக இரண்டாவது தடவையும் சுதந்திரக் கட்சி தோல்வியடைவது கட்சிக்கு நல்லது அல்ல என மைத்திரி மறுபுறம் சிந்திக்கின்றார். மகிந்தவைத் தோற்கடிப்பதற்காக நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெறுவதற்கு மைத்திரி ஒத்துழைத்ததுபோல் இந்தத் தேர்தலிலும் அவரால் அவ்வாறு செயற்பட முடியாது. அவ்வாறு செய்தால் அது கட்சிக்குள் இனி சிக்கலை உருவாக்கும். அவரது தலைமைத்துவப் பண்பை - ஆளுமையை அது கேள்விக்குட்படுத்தும். ஐக்கிய தேசியக் கட்சியிடம் சுதந்திரக் கட்சியை அடகுவைத்துவிட்டார் என்ற அவப் பெயர் அவருக்கு ஏற்படும்.


இதனால், மகிந்தவை இந்தத் தேர்தலில் இணைக்காமல் சுதந்திரக் கட்சியை வெல்ல வைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மைத்திரி இப்போது உள்ளார். இந்தத் தேர்தல்தான் கூட்டணி அரசின் முக்கிய பங்காளிகளான சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான உண்மையான பலப்பரீட்சையாக இருக்கும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது ஏனைய தேர்தல்களை விடவும் சற்று வித்தியாசமானது. கட்சிகளைப் பற்றிக் கணக்கில் எடுக்காது வேட்பாளர்களாகக் களமிறங்கும் நண்பர்களையும் உறவினர்களையும் ஆதரிக்கும் தேர்தல்தான் இது.

இப்படியானதொரு நிலையில், மைத்திரி ஜனாதிபதியாக - சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கும்வரை மகிந்தவின் அரசியல், வீழ்ச்சிப் பாதையில் செல்வது நிச்சயம். மகிந்த தரப்பினரின் எண்ணிக்கை ஆரம்பத்தில் அதிகமாகக் காணப்பட்டபோதிலும், அது இப்போது மெல்ல மெல்லக் குறைந்து கொண்டு போவதை அவதானிக்கலாம்.

மகிந்த அவரது ஆட்சியைப் பலப்படுத்துவதற்காக எவ்வாறு ஏனைய கட்சிகளை துண்டு துண்டாக உடைத்தாரோ அவ்வாறே அவரது தரப்பினரும் உடைக்கப்படுகின்றனர். இந்த அரசின் மக்கள் நேயச் செயற்பாடுகள் மேலும் விரிவாக்கப்பட்டால் மகிந்தவின் அரசியல் படுகுழியை நோக்கிச் செல்வது நிச்சயம்.

ஜோசப் ஸ்டிக்ளிட்ஸ்




# அமெரிக்கா உண்மையில் வளர்ந்த நாடு தானா?

பொருளாதாரத்துக்கான நோபல் நினைவு விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார், பிரிட் டிஷ் - அமெரிக்கப் பொருளாதார வல்லுநர் ஆங்கஸ் டீட்டன். நுகர்வு, வறுமை, நல்வாழ்வு தொடர்பாக அவர் ஆராய்ச்சி செய்து ஆய்வறிக்கை அளித்திருக்கிறார்.

ஒக்ரோபர் மாதம் இந்த விருது குறித்த அறிவிப்பு வெளியான அதே நேரத்தில், அமெரிக்க மக்களின் வாழ்க்கைத்தரம் குறித்து புள்ளிவிவரங்களுடன்கூடிய அதிர்ச்சி அளிக்கும் தகவல்களை அவர் வெளியிட்டார். ஆன் கேஸ் என்பவரும் அவருடன் இணைந்து அந்த ஆய்வில் பணியாற்றியிருக்கிறார். நோபல் விருது நிகழ்ச்சி அளவுக்குக் கவனத்தைப் பெற வேண்டிய அறிக்கை அது.

அமெரிக்கர்களின் வருமானம், வயது, அவர்களுடைய நோய் விவரங்கள், இறக்கும் வயது ஆகியவற்றைப் பதிவு செய்து ஒப்பிட்டுப் பார்த்து விரிவாக அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

நடுத்தர வகுப்பைச் சேர்ந்த அமெரிக்கர்களின் சராசரி ஆயுள் குறைந்து வருகிறது என்ற உண்மையை அது சுட்டுகிறது. அதிலும் வெள்ளை நிறத்தவர்களைவிட ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் (கறுப்பினம்) ஆயுள் குறைந்து வருகிறது. பாடசாலை இறுதி வகுப்பு வரை மட்டுமே படித்த, நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தற்கொலை, போதை மருந்துப் பயன்பாடு, மதுப் பழக்கம் ஆகியவற்றால் அதிகம் இறக்கின்றனர்.

**வெட்டிப் பெருமை**

உலகிலேயே செல்வ வளத்தில் முன்னணியில் இருக்கும் நாடு என்று அமெரிக்கா தன்னைப் பற்றிப் பெருமை பேசுகிறது. 2009 ஆம் ஆண்டைத் தவிர்த்து பிற ஆண்டுகளில் நபர்வாரி ஜி.டி.பி. அதிகரித்தேவருகிறது. செல்வ வளம் என்பது மக்களுடைய ஆரோக் கியத்திலும் ஆயுள்காலத்திலும் எதிரொலிக்க வேண்டும். வேறெந்த நாட்டைக்காட்டிலும் அமெரிக்காதான் மருத்துவத்துக்கு ஒரு நபர் என்ற அடிப்படையில் அதிகம் செலவிடுகிறது.

பிரான்ஸில் இந்தச் செலவு அதன் மொத்த உற்பத்தி மதிப்பில் 12% அமெரிக்காவிலோ 17%. அப்படியும் பிரெஞ்சுக்காரர்களைவிட அமெரிக்கர்களின் சராசரி ஆயுள் 3 ஆண்டுகள் குறைவு. அமெரிக்காவில் பல்வேறு மத. இன, மொழிக் குழுக்கள் இருப்பதால்தான் இப்படி என்று பல ஆண்டுகளாக வாதிட்டு வரு கின்றனர். ஆப்பிரிக்க – அமெரிக்கர்களின் சராசரி ஆயுள்காலம் வெள்ளை அமெரிக்கர்களைவிடக் குறைவு.

நிற அடிப்படையிலான இந்த வேறுபாடு கற்பனையல்ல, உண்மை. 2014இல் எடுத்த கணக்கெடுப்பின்படி சராசரி ஆயுள்காலம் வெள்ளை நிற ஆண்களைவிடக் கறுப்பின ஆண்களுக்கு 5 வயது குறைவாகவும், பெண்களுக்கு 4 வயது குறைவாகவும் இருக்கிறது. அமெரிக்க சமூகத்தில் காணப்படும் நிற வேற்றுமைக்கு இது மற்றொரு அடையாளம்.

சராசரி வருவாயைப் பொறுத்தவரை வெள்ளைக் குடும்பங்களைவிட ஆப்பிரிக்க - அமெரிக்கக் குடும்பங்களுக்கு 60% குறைவு. பணக்கார நாடுகளில் அமெரிக்காவில் மட்டும்தான் குடும்ப சுகாதாரம் என்பது அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்படவில்லை.

கறுப்பின இளைஞர்கள் இள வயதிலேயே இறப்பதற்கு அரசோ அதன் கொள்கைகளோ காரணம் அல்ல, மாறாக அந்த இளைஞர்களின் பழக்க வழக்கங்கள்தான் என்று கூறுகின்றனர் சில வெள்ளை இனத்தவர்கள். இது ஓரளவுக்கு உண்மைதான்; குடிப்பது, போதைமருந்துகளைப்பயன்படுத்துவது போன்றவை கறுப்பின இளைஞர்களிடம் வெள்ளை அமெரிக்கர்களைவிட அதிகம்தான் இதற்கும் காரணம் அவர்களுடைய குறைந்த வருவாயும், சமூக ரீதியாக ஏற்படும் மன உளைச்சல்களும்தான். குறைந்த வருவாயில் வாழ்வது கடினமாக இருப்பதால் மலிவாகக் கிடைக்கும் போதைப் பொருள்களையும் மதுபானங்களையும் குடித்துத் தங்களுடைய கவலைகளை மறக்க முயற்சிக்கின்றனர்.

**ஆய்வு தரும் தகவல்**

இப்படி நிற அடிப்படையிலான மக்களின் வாழ்க்கை முறை, பழக்கங்களை மட்டும் குறைகூறிக்கொண்டிருக்க முடியாது. அமெரிக்க சமூகத்தில் பிளவு வலுத்து வருகிறது. அது வெள்ளை, கறுப்பு என்ற நிற அடிப்படையிலானது மட்டுமல்ல, உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரர்களாக இருக்கும் 1% அமெரிக்கர்கள் மற்றும் அப்படியல்லாத இதர அமெரிக்கர்கள் என்றும், அதிகம் படித்த அமெரிக்கர்கள், கல்லூரிகளுக்குக்கூடச் செல்ல முடியாத அமெரிக்கர்கள் என்றும் பிளவுபட்டு வருகிறது. இந்த வேறுபாடுகளை அவரவர் பெறும் ஊதியங்களால் மட்டுமல்ல, அவரவர்களுடைய சராசரி ஆயுள் மூலமும் அளவிடலாம். வெள்ளை அமெரிக்கர்களிலும் வருவாய் குறைந்தவர்கள் பணக்கார வெள்ளை அமெரிக்கர்களைவிட விரைவில் இறக்கிறார்கள்.

படிப்பிலும் இந்த ஏற்றத்தாழ்வு அப்பட்டமாக வெளிப்படுகிறது. முழு நேரம் வேலை செய்யும் ஆண்களுடைய சராசரி வருமானம் உண்மை மதிப்பில் 40 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிடக் குறைவு. பாடசாலை இறுதி வரை மட்டுமே படித்த ஆண்களின் வருமானத்தின் உண்மை மதிப்பு 19% குறைவாக இருக் கிறது.

செலவுகளைச் சமாளிக்க வழி தெரியாமல் ஏராளமான நடுத்தரக் குடும்ப அமெரிக்கர்கள் வங்கிகளிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கிவிட்டு திரும்பச் செலுத்த முடியாமல் தவித்துவருகின்றனர். வேலையில்லாமல் இருப்பவர்கள் - குறுகிய காலத்துக்கு மட்டுமே அப்படி இருக்க நேரும் என்ற அடிப்படையில் - வேலையில்லாதோருக்கான காப்பீட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. பிறகு அதுவும் கைகொடுக்காமல்போனதால் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பே இல்லாமல் போய்விட்டது.

வேலைக்குப் போகும்போது கிடைத்து வந்த பல சலுகைகள் இப்போது பறிக்கப்பட்டுவிட்டன. நடுத்தர வகுப்பைச் சேர்ந்த அமெரிக்கர்கள் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் திணறிவருகின்றனர். இதனால் கல்வி, சுகாதாரம், உணவு ஆகியவற்றின் செலவுகளைக் குறைத்துக்கொள்கின்றனர்.

இது அவர்களுடைய சராசரி ஆயுளில் எதிரொலிக்கிறது. குழந்தைகளைக் கல்லூரியில் படிக்க வைக்க வங்கிகளில் கடன் வாங்கினால்தான் முடியும் என்ற நிலை நடுத்தர வகுப்புக்கு இருக்கிறது. ஆனால், அந்தக் கடனுக்கான வட்டியோ அதிகமாகவே இருக்கிறது. அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தாமல்விட முடியாது. மற்றெல்லா கடன்களைவிட கல்விக் கடன்கள்தான் அதிகமாகவும் அதிகம் அடைபடாமலும் இருக்கிறது.

**அன்றைய ரஷ்யாவிலும் இப்படி**

1990களில் நான் உலக வங்கியின் முதன்மைப்பொருளாதார ஆலோசகராக இருந்தபோது ரஷ்யாவிலிருந்தும் இதேபோன்ற தகவல்கள் வந்தன. சோவியத் ஒன்றியம் சிதைந்து சின்னாபின்னமான பிறகு, ரஷ்யாவின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு (ஜி.டி.பி.) 30% சரிந்தது. உலக அளவில் ஆண்களின் சராசரி ஆயுள்காலம் அதிகரித்தபோது ரஷ்யாவில் மட்டும் குறைந்தது.

ஒரு நாடு எல்லா வகையிலும் வளர்ச்சி பெற்றிருக்கிறதா, மக்கள் நிம்மதியாக, மகிழ்ச்சியாக வாழ்கிறார்களா என்பதை அளவிட ஜி.டி.பி. என்பது ஒருபோதும் சரியான அளவுகோலாக இருக்காது என்று சமூக வளர்ச்சி – பொருளாதாரச் செயற்பாடுகளை அளப்பதற்கான சர்வதேச ஆணையம் என்ற அமைப்பின் தலைவராக இருந்தபோது வலியுறுத்தினேன். அப்போது இணைத் தலைவராக என்னுடன் பணியாற்றினார் டீட்டன். அதையேதான் டீட்டன் இப்போது அமெரிக்க நடுத்தர வகுப்பு மக்களைப் பற்றிய தரவுகள் மூலம் நிரூபித்திருக்கிறார்.

அமெரிக்காவில் அடுத்த நிலைக்கு முன்னேறப்போகும் வர்க்கமாகப் பார்க்கப்பட்ட நடுத்தர வர்க்கம் இப்போது போகும் நிலையைப் பார்த்தால், நடுத்தர வர்க்கம் என்ற ஒன்றே இல்லாமல் 1% பெரும் பணக்காரர்கள், எஞ்சியோர் ஏழைகள் என்று ஆகிவிடும்போலத் தெரிகிறது.

*(கட்டுரையாளர் கொலம்பியா பல்கலைக்கழகப் பொருளாதாரப் பேராசிரியர்; 2001இல் பொருளாதாரத்துக்கான நோபல் விருதைப் பெற்றவர்.)*

*நன்றி: தி இந்து தமிழ்*

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# ஆண் பெண் உறவு

ஆண் பெண் சமூக உறவுகள் அப்பா மகள் என்பதில் தொடங்கி தெருவில் கடந்து போகும் அறிமுகமில்லா ஓர் ஆணின் அல்லது பெண்ணின் மெல்லிய புன்னகையோடு கூடிய தலையசைப்பு வரை. இந்தச் சமூக உறவுகளும் அன்னியோன்னியங்களும் எப்படி எங்களை வளர்த்துக்கொள்ள, சம நிலைப்படுத்த உதவுகிறது என்பது சில சமயங்களில் ஆச்சரியப்படுத்துகிறது. சில வேளைகளில் இந்த நெருக்கம் எல்லை கடக்கும் போது முகம் சுளிக்கவும் வைக்கிறது.

பொதுவாகவே பெண்கள் மனதில் பதிந்து போன ஓர் விடயம், அப்பா, அண்ணா, தம்பி இப்படியான ஆண்களின் உறவுகள் துணிச்சலைக் கொடுக்கும் அல்லது எல்லை மீறல் பற்றிய பயத்தைக் கொடுக்கும்.

அதுவும் தமிழ் கலாசாரத்தில் கேட்கவே வேண்டாம், பெண்களைக் கை நீட்டி அடிப்பது வரை அது நீளும்.

கலாசாரத்தைக் கட்டிக்காக்கும் பெரும் பொறுப்பு காலங்காலமாகப் பெண்களிடமே சுமத்தப்பட்டிருக்கிறது. இந்த வாழையடி வாழைச் சம்பிரதாயங்கள் தாண்டிப் பெண்களுக்கு துணையாய், ஆதரவாய் நின்று தைரியம் கொடுக்கும் ஆண்கள் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கின்றோம்.

ஒரு பெண் எந்த உறவாகவும் இருக்கட்டும். அவள் உங்களிடம் (ஆணிடம்) எதையும் பயமோ, தயக்கமோ இன்றிப் பேசுமளவுக்கு உங்களை வெளிப்படுத்திக் கொள்ளுங்கள். பெண்களுக்குத் தெரியும் தாங்கள் எதை அப்பாவிடம் சொல்லவேண்டும், எதை அம்மாவிடம் சொல்லவேண்டும் என்பது. சில சமயங்களில் இவர்கள் இருவரிடமும் சொல்ல முடியாததை ஒரு சகோதரனிடம் தயக்கமின்றிச் சொல்லத் துணிவார்கள்.

கணவன் அல்லாத ஓர் உறவிடம் பெண்கள் பெரும்பாலும் இப்படிப்பட்ட உளவியல் சார்ந்த நெருக்கத்தை எதிர்பார்ப்பார்கள். சில சகோதர, சகோதரிகள் உறவில் இப்படி எதையாவது சொல்லிவிட்டு, அவர்கள் அதைப் பெற்றவர்களிடம் பற்ற வைத்துவிட்டு வேடிக்கை பார்ப்பார்கள்.

எனது அண்ணனிடம் அல்லது தம்பியிடம் எனது பிரச்சனையைச் சொல்லமுடிகிறது என்பது பெண்களுக்கு ஓர் மனத்துணிவைக் கொடுக்கும். சில பெண்கள், இதை எனது அண்ணாவிடம் சொல்வதை விடத் தூக்குப்போட்டு சாகலாம் என்று சொன்னதைக்கூடக் கேட்டிருக்கின்றோம்.

இப்படிப்பட்ட உறவில் பெரும்பாலும் ஓர் தடையும் இறுக்கமுமே மிஞ்சும். இந்த அன்னியோன்னியம் வீட்டில் கிடைக்கா விட்டால், வீடு கடந்து தேடத் தோன்றும் . சில வேளைகளில் அது அவர்களை மீள முடியாத பிரச்சனைகளுக்குள் தள்ளிவிடும்:

வீட்டில் புரிந்துகொள்ளப் படாத இந்த ஆண், பெண் உறவு, காதல் அல்லது கல்யாணம் என்று வரும் போதும் அது பிரச்சனைகளை உருவாக்கலாம். வீணான மன உளைச்சலுக்கு ஆளாக நேரிடும். இந்த இரண்டு உறவுகளிலுமே உடல், உள ரீதியான அன்னியோன்னியம் பெரும்பாலும் இருக்கும்.

பெண்களுக்கு காதலிலும் சரி, கல்யாணத்திலும் சரி எப்போதுமே ஓர் ஆண் உத்தரவாதம், உறுதிமொழி மூலம் தனது அன்பை நிரூபித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். கொஞ்சம் யதார்த்தம் மீறிய உறுதி மொழியை ஆண்களிடம் எதிர்பார்த்துச் சோர்ந்து, துவண்டு வாழ்க்கையைச் சீரழித்துக் கொள்ளும் பெண்களும் உண்டு.

பெண்களுக்கு வெற்றுச்சமாதானம் எல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. கூடவே பத்து உறுதி மொழிகளையும் எதிர்பார்ப்பார்கள். மனைவி அழுதால் ஆண்கள் போனால் போகிறது கடனே என்று பொறுத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஓர் சலிப்புடன், என்னப்பா உன் பிரச்சனை என்று சலிப்பாய், வெறுப்பாய் விசாரிப்பார்கள். அதுவே ஓர் காதலி அழுதால் சொல்லவே வேண்டாம். அங்கே காதல் ஆட்சி செய்யும். மாய்ந்து, மாய்ந்து தேற்றுவார்கள். மனோதிடமுள்ள பெண்கள் ஒன்றிரண்டு நிமிடங்கள் அழுது விட்டு, கண்ணீரைத்துடைத்து விட்டு ஆக வேண்டியதைப் பார்ப்பார்கள்.

கொஞ்சம் பலவீனமான பெண்களுக்கு நிச்சயம் ஓர் ஆணின் குறைந்தபட்ச உளவியல் உந்துதல் தேவைப்படும். ஆனால், எத்தனை ஆண்களுக்குப் பெண்களின் கண்ணீரையோ புலம்பல்களையோ கேட்க நேரமும் பொறுமையும் இருக்கிறது என்று தெரியவில்லை.

இதெல்லாம் செவிடன் காதில ஊதுகிற சங்கு என்று நினைத்து பெண்கள் தாங்களாகவே ஓய்ந்து விடுவார்கள். ஆனால், நிச்சயமாய் புரிந்துணர்வுடன் கூடிய ஓர் அன்னியோன்னியத்தை இது உருவாக்கப்போவதில்லை. பெண்ணின் கஷ்டங்களை ஆணும், ஆணின் கஷ்டங்களை பெண்ணும் புரிந்துகொள்ளும் போது தான் உறவில் நெருக்கம் அதிகமாகும். அதில் ஓர் தெளிவு பிறக்கும்.

நட்பு என்ற எல்லைக்குள் இந்த அன்னியோன்னியம், எப்படிக் காப்பாற்றப்படுகிறது அல்லது சிதைக்கப்படுகிறது என்று யோசிப்பதும் உண்டு. வீட்டில் எவரிடமும் சொல்லமுடியாத பிரச்சனைகளை நட்பின் நம்பிக்கையில் பெண்கள் ஓர் ஆணிடம் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பங்களும் இந்தத் தலைமுறையில் உண்டு.

வயது காரணமாகவோ அல்லது உணர்வுகளால் மட்டுமே உந்தப்பட்டு நட்பின் எல்லைகளைக் கடந்து காதலில் விழுந்து நிலை மாறிப்போகும் அர்த்தம், அபத்தம் இரண்டும் கூட உண்டு. எதுவானாலும் புரிதல் என்பது இருவருக்குமிடையில் சமபங்கு இருக்குமேயானால் குறையில்லாத அன்னியோன்னியமும் இருக்கும்.

**இணையவள்**



## பெண்ணுக்கு உரிமை வேண்டும்

மண்ணில் பிறந்திட்ட
மனிதருக்குள்
பெண்ணென்றும்
ஆணென்றும் பேதமில்லை
பெண்ணுக்கு நாம்
அளிக்கும் உரிமை என்ன?
பொறுமை என்னும்
இலக்கணத்தைப் போதிக்கின்றோம்
பெண்ணுக்கு இல்லத்தில்
உரிமை வேண்டும்
பேசுதற்கும் ஏசுதற்கும்
உரிமை வேண்டும்
அன்பென்றும் அறமென்றும்
கூற உரிமை வேண்டும்
பண்புக்கும் பயனுக்கும்
பதிலளிக்க உரிமை வேண்டும்
இல்லத்தின் தெய்வத்தைப்
போற்ற வேண்டும்
இதயத்தின் தெய்வமென
ஏற்ற வேண்டும்
இன்பத்தின் வழிகாட்டியென
வாழ்த்த வேண்டும்
துன்பம் துடைக்கும்
துணைவியெனப் பாராட்ட வேண்டும்
போதைதரும் கள்ளல்ல
பெண்மை இன்பம்
கண்ணாக மணியாக
ஒளிரும் பெண்கள்
கண்ணியமாய் வாழுதற்கு
உரிமை வேண்டும்
பெண்களுக்கு எங்கும்
எதிலும் உரிமை வேண்டும்.

## வரலாற்றில் இன்றைய தினம்


1780 - 'கொங் கிறிஸ்ரியன் எனத் தொடங்கும் டென்மார்க் தேசிய கீதம் முதன் முதலில் பாடப்பட்டது.
1833 - தென் அத்லாந்திக் போக்லாந்து தீவுகளின் கட்டுப்பாட்டை பிரித்தானியா கையகப்படுத்தியது.
1870 - நியூயோர்க் நகரின் புறூக்லின் பாலம் அமைப்பு தொடங்கப்பட்டது. (1883 மே 24 இல் பூர்த்தி
1910 - நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலை கோரி பிரித்தானிய சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.
1921 - துருக்கி ஆர்மேனியாவுடன் சமாதானமாகியது.
1925 - பெனிரோ முசோலினி இத்தாலிய நாடாளுமன் றைக் கலைத்து சர்வாதிகாரியானார்.
1941 - 99 வருட குத்தகை அடிப்படையில் கனடாவும் அமெரிக்காவும் நியூபவுண்ட் லாண்டில் விமானத் தளங்களைக் கையகப்படுத்தின.
1943 - வட ஆபிரிக்காவுக்கு கனடா தேசத்துத் துருப்புக்கள் வந்தடைந்தன.
1945 - பிரித்தானியப் பிரதமர் வின்சன் சேர்ச்சில் பிரான்ஸ் சென்றார்.
1956 - ஈபிள்கோபுர உச்சிப் பகுதி தீயினால் சேதம்.
1957 - முதலாவது மின்சாரக் கைக் கடிகாரம் லான்கேஸ்ரரில் அறிமுகம்.
1961 - கியூபாவுடன் ராஜதந்திர உறவை அமெரிக்கா முறித்துக் கொண்டது.
1970 - கொங்கோ ஆட்சியை மார்க்சிஸ அரசு பொறுப்பேற்பு.
1974 - பர்மா- தனது அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டது.
1988 - கடந்த நூற்றாண்டில் நீண்ட காலம் பணியாற்றிய பிரித்தானிய பிரதமரானார் மார்க்கிரட் தாட்சர்.
1991 - 23 ஆண்டுகளின் பின் ரஷ்யாவில் இஸ்ரேல் உயர்ஸ்தானிகராலயத்தை மீளத் திறந்தது.
1994 - வெனிசுவெலா சிறைச்சாலைக் கிளர்ச்சியில் 100 பேர் கொல்லப்பட்டனர்.
1993 - பூநகரியூடான பாதை திறப்புக் குறித்து ஐ.நா. அதிகாரிகள் ஜெனீவாவில் தீவிர ஆலோசனை.
1993 - சோபித தேரர் உள்ளிட்ட பௌத்த கிறிஸ்தவ இந்து இஸ்லாமிய குருமார் ஜா.எலவில் பிரார்த்தனை.
1993 - நாடு வளர்ச்சியடையாது விட்டால் இன்னும் 15 ஆண்டுகளில் இன்னுமொரு இரத்த ஆறு ஓடும் என சண்டே ஒப்சேவருக்கு றொனி டி மெல் பேட்டி.
1993 - இனப்பிரச்சினைக்கு யதார்த்தமான தீர்வுதான் தேவையென கண்டி மேற்றிராணியார் கருத்து.
1994 - எம்பிலிப்பிட்டியாவில் கைதாகிக் காணாமற்போன 32 மாணவர்கள் பலரின் எலும்புக் கூடுகள் இராணுவக் காவலரண் பகுதியில் மீட்பு.
1994 - அரசியல் தீர்வுக்கான யோசனையை கல்விமான்கள் குழுவொன்று சமர்ப்பித்தது.
1995 - எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற ஈழ அறிஞர்களான பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் சண்முகதாஸ் உள்ளிட்ட அறிஞர்களைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை.
1995 - அரசு - புலிகள் இரண்டாம் கட்டப் பேச்சு ஆரம்பம்.
2000 - பிரபாகரனுடன் பேசுவதற்குத் தயாராகவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு.
2000 - புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கென அரச பிரதிநிதிகளுடன் ஹெலி யாழ்.சென்ஜோன்ஸ் மைதானத்தில் வந்திறங்கியது.
2004 - எகிப்திய விமான சேவையைச் சேர்ந்த விமானம் ஒன்று செங்கடலில் மூழ்கியதில் விமானத்திலிருந்த 148 பேரும் சாவு.

## பசு மாடு பற்றிய தகவல்கள்


- பசு மாட்டால் மாடிப்படியை ஏறமுடியும். ஆனால் இறங்க முடியாது.ஏனென்றால் அதன் முழங்கால் சரியாக வளைந்து கொடுக்காது.
- பசு மாடு முதன் முறை குட்டி ஈன்ற பிறகு தான் பால் கொடுக்கும்.




- பசு மாடு தனது வாழ்நாளில் கிட்டத்தட்ட 2 - 4 லட்சம் லீற்றர் வரை பால் கொடுக்க வல்லது.
- ஒருநாளில் 10 - 15 முறை கீழே உட்கார்ந்து எழுந்திருக்கும்.
- சாதாரணமாக 500 கிலோ நிறை உள்ள பசு மாடு ஆண்டுக்கு சுமார் 10 தொன் சாணியைக் கொடுக்கும்.
- ஒரு நாளில் 6 -7 மணி நேரம் இரை உண்ணவும் 7 - 8 மணி நேரம் அதனை அசைபோடவும் பசுவுக்குத் தேவை.
- அசை போடும் போது நிமிடத்துக்கு சுமார் 40 - 50 முறை தாடையை அசைக்க வேண்டி வருகிறது. இப்படி ஒரு நாளைக்கு 40 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் முறை தாடையை அசைக்கிறது.
- ஒரு பசு மாடு நாள் ஒன்றுக்கு 10 - 12 லீற்றர் சலத்தையும் 15 - 20 கிலோ சாணியையும் வெளியேற்றுகிறது. இன்னும் பெரியமாடாக இருந்தால் இது அதிகமாகும்.
- பசு மாடு ஒரு நாளில் சுமார் 100 லீற்றர் வரை தண்ணீர் குடிக்க வல்லது.
- மாடு பற்களால் புல்லைக் கடிப்பதில்லை. நாக்கு மற்றும் ஈற்றால் பிடுங்கிச் சாப்பிடுகின்றது.
- பசு மாட்டுக்கு ஒரு வயிறுதான் உண்டு. ஆனால் அதில் உணவை ஜீரணிப்பதற்காக 4 பகுதிகள் உள்ளன.
- மாட்டின் கண்கள் முகத்தின் இருபுறமும் அமைந்துள்ளதால் கிட்டத்தட்ட 4 பக்கமும் (360 டிகிரி முழு வட்டம்) ஒரே சமயத்தில் பார்க்க வல்லது.
- பசு மாட்டின் நுகருணர்வு மிகவும் கூர்மையானது. சுமார் 6 - 8 கி.மீ. தூரத்திலுள்ள பசுமையை நுகர்ந்து கண்டு கொள்ளும்.
- கறக்கும் பசு மாடு நாளுக்கு சுமார் 40 - 50 லீற்றர் உமிழ் நீரைச் சுரந்து ஜீரணத்துக்கு பயன்படுகிறது..
- உலகத்தில் உற்பத்தியாகும் மொத்த பாலில் 90 சதவீதம் பசும்பால்.
- உலகத்திலேயே அதிகமாக பால் சுரந்த பெருமை ஹோல்ஸ்டைன் இனத்தைச் சேர்ந்த மாட்டைச் சேரும். .
- ஒரே நாளில் 97 லீற்றர் பாலைச் சுரந்து உலக சாதனை செய்த மாட்டின் பெயர் உர்பே ஆகும்.இது வரை அதிக நாள்கள் வாழ்ந்த மாட்டின் வயது 48 ஆண்டுகள், 9 மாதங்கள் ஆகும்....!!!




எஸ்.நிலானி,
தரம் - 3
ஏழாலை சைவ சன்மார்க்க வித்தி.



எஸ். ஹரிஸ்ராம்,
உடுவில் மகளிர் கல்லூரி.



ஜே.லிதிஷா,
அஸ்ரன் சர்வதேச பாடசாலை.



சிவகுகன் பிருத்வி,
வளர்மதி கொக்குவில் முன்பள்ளி.

## தளபதி மாறன் கொடுத்த பயிற்சி!

சுவர்க்கா என்ற நாட்டின் இராணுவத் தளபதியாய் இருந்தார் மாறன்.

அவர் பத்தாயிரம் குதிரைப்படை வீரர்களை வழி நடத்திச் செல்லும் தலைமைத் தளபதி.

ஒரு சமயம் மாறன் தனது படை வீரர்களுக்குப் பெரிய மைதானமொன்றில் பயிற்சியளித்துக் கொண்டிருந்தார்.

சுற்றிலும் குதிரைப் படை வீரர்கள் சூழ்ந்து நிற்க, ஒரு வீரனுக்குக் குதிரை மீது இருந்தபடியே வாள் சண்டைப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது -

அவரது இடையில் செருகப்பட்டிருந்த குறுவாள் நழுவிக் கீழே விழுந்தது.

அதைக் கவனித்த தளபதி மாறன் உடனே பயிற்சியை நிறுத்தினார். பிறகு குதிரையில் இருந்து சட்டென்று கீழே குதித்துக் குறுவாளை எடுத்து மறுபடி இடுப்பில் செருகிக் கொண்டார். பின்னர் குதிரை வீரனுக்குப் பயிற்சியைத் தொடர எண்ணி, தனது குதிரையில் ஏறினார்.

இந்தக் காட்சியைக் கவனித்துக் கொண்டிருந்த குதிரை வீரர்களில் ஒருவன் தளபதி மாறனைப் பார்த்து, ஐயா! தளபதி அவர்களே! இந்த ஒரு சிறு காரியத்துக்கு தாங்கள் குதிரையில் இருந்து இறங்க வேண்டுமா? ஒரு சமிக்ஞை செய்திருந்தால் போதுமே. நாங்கள் யாராவது அந்தக் குறுவாளை எடுத்துத் தங்களிடம் கொடுத்திருப்போமோ!" என்று சொன்னான்.



அதைக் கேட்ட தளபதி மாறன் அந்த வீரனைப் பார்த்து முறுவலித்து, வீரனே! நான் உங்களுக்கெல்லாம் தலைவன். நான் ஒரு சிறு சமிக்ஞை செய்தாலும் எனக்கு உதவ பத்தாயிரம் பேரும் ஓடி வருவீர்கள். இந்தக் குறுவாளை எடுக்கும் விடயத்தில் கூட உங்களில் யாரையாவது நான் ஏவியிருக்கலாம். ஆனால் அப்படி நான் செய்யாததற்குக் காரணம் என்னால் முடியக் கூடிய வேலைக்கு நான் யாருடைய உதவியையும் என்றும் எதிர்பார்ப்பதில்லை. எதிர்பார்க்கவும் கூடாது. அப்படி எதிர்பார்த்தால் சிறிய காரியங்களில் இருந்து பெரிய காரியங்கள் வரை எல்லாவற்றுக்குமே பிறர் உதவியை எதிர்பார்க்கும் வழக்கம் வந்துவிடும்.

இந்த வழக்கம் வந்து விட்டால் பெரிய வேலைகளில் ஈடுபடும் போது, பிறர் உதவி கிடைக்காவிட்டால் எம்மால் தோல்வியைத் தவிர வேறு எதையுமே சந்திக்க முடியாது. எப்பொழுதும் என்னை நானே நம்புகிறவன்.

நான் மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னையே நம்ப வேண்டும். அப்படிப்பட்டவனால்தான் இவ்வுலகில் சாதனைகளை நிகழ்த்த முடியும். பிறரது உதவியை எதிர்பார்த்தே காரியங்களில் இறங்கிப் பழக்கப்பட்டவனால் இந்த உலகில் அடிப்படை வாழ்க்கையையே அமைத்துக் கொள்ளமுடியாது!" என்று கூறி முடித்தார்.

குதிரை வீரர்களுக்கு வீரப்பயிற்சி மட்டுமன்றி உள்ளத்தை உரமேற்றும் பாடமும் கிடைத்ததில் பெரும் மகிழ்ச்சி கொண்டனர்.



# இந்த வாரம் 03.01.2016 முதல் 09.01.2016 வரை
# உங்களுக்கு எப்படி?



## மேடம்

ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். அக்கம் பக்கத்தவர் அன்பினால் மனம் நெகிழ்வீர்கள். புதிய வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற ஆலோசனை சொல்வீர்கள். நடக்காதோ என நினைத்த செயல் அனுகூலம் தரும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். வெளியூர்ப் பயணம் மனதில் மாற்றம் உருவாக்கும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி அதிகமாக இருக்கும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பெண்கள் குடும்ப நலன் பேணுவதில் அக்கறை கொள்வர். மாணவர்கள் வெளியில் சுற்றுவதை குறைத்தால் வெற்றி கிடைக்கும். விநாயகர் வழிபாடு, வினை தீர்க்கும்.



## கடகம்

ராகு, சுக்கிரன், புதனால் நன்மை உண்டாகும். பண வரவு குறையும் என்றாலும் செலவில் தாராளமாக இருப்பீர்கள். இதை சிலர் பரிகாசமாக பேசுவர். சிக்கனம் அவசியம். தம்பி, தங்கையினால் உதவி உண்டு. பணிகள் அதிக முயற்சியால் நிறைவேறும். புத்திரர்களின் மனதில் நல்ல சிந்தனை வளரும். உறவினர்களின் பாசம் மகிழ்ச்சி தரும். மனைவியின் நற்செயல் பெருமை தேடித்தரும். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணியில் குளறுபடி வராமல் செயற் படவும். பெண்கள், வீட்டுச்செலவுக்கு திண்டாட நேரிடும். மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர். அம்பிகை வழிபாடு, இடர் நீக்கும்.



## துலாம்

சுக்கிரன், கேது, சந்திரனால் நற்பலன் கிடைக்கும். சமூக நிகழ்வு மனதில் விரக்தியை உரு வாக்கும். பேசுவதில் கோபத்தைத் தவிர்க்கவும். புத்திரர்கள் புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். உடல்நலம் சீராக இருக்கும். மனைவியின் செயல் குடும்பத்துக்குப் பெருமை சேர்க்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற புதியவர்களின் ஆதரவு துணை நிற்கும்.

பணியாளர்கள் நிலுவைப் பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவர். பெண்களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் நன்றாகப் படிப்பர். வைரவர் வழிபாடு, மங்களத்தைத் தரும்.



## மகரம்

கேது, குரு, சனி, சுக்கிரன் அளப் பரிய நற்பயன்கள்ள தருவர். எந்தச் செயலையும் பலமுறை யோசித்தே தொடங்குவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். தம்பி, தங்கைகளுக்கு உதவுவீர்கள். பயணங்கள் குறையும். புத்திரர்களின் செயற்பாடு பயனுள்ளதாக இருக்கும். வழக்கு விவகாரத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவி அன்புடன் நடந்து கொள்வார். அவர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் அலுவலகத்தில் நற்பெயரைத் தக்க வைத்துக் கொள்வர். பெண்கள், பிறர் விடயத்தில் தலையிட வேண்டாம். மாணவர்கள் படிப்பில் மேம்படுவர். வைரவர் வழிபாடு, சங்கடம் தீர்க்கும்.



## இடபம்

குரு, செவ்வாய், புதன், கேது அளப்பரிய நன்மை தருவர். பேச்சும், செயலும் வசீகரமாக இருக்கும். புதியவர்களின் நட்புக் கிடைக்கும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகும். குடும்பத் தில் மங்கள நிகழ்வு ஏற்படும். பயணங்கள் இனிதாக அமையும். புத்திரர்கள் விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். மனைவியின் குறையை இதமாக சரி செய்வீர்கள். தொழில் வளர்ச்சி பெற, புதிய உத்திகளை பயன்படுத்து வீர்கள். பணியாளர்கள் தொழில்நுட்ப அறிவில் மேம்படுவர். பெண்களுக்கு உடல்நலம் நன்றாக இருக்கும். மாணவர்கள் அதிக முயற்சியால் படிப்பில் முன்னேறலாம். பெருமாள் வழிபாடு, செல்வ வளம் தரும்.



## சிங்கம்

குரு, சுக்கிரன், செவ்வாய் நற்பலன் வழங்குவர். லட்சியம் நிறைவேற்ற மன உறுதியுடன் பணி புரிவீர்கள். உடன்பிறந்தவர்களுக்கு மங்கள நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டாகும். புத்திரர்களின் உடல்நலத்துக்குச் சிகிச்சை தேவைப்படலாம். பகைவர்களிடம் விலகுவதால், சிரமம் வராமல் தவிர்க்கலாம். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் உதவுவர். பயணங்கள் இனிய அனுபவம் தரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி மேற் கொள்வீர்கள். பணியாளர்கள் திறம்பட செயற்பட்டு நற்பெயரும், சலுகையும் பெறுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் மனதில் தைரியமும், படிப்பில் முன்னேற்றமும் ஏற்படும். ஆஞ்சநேயர் வழிபாடு, வெற்றியளிக்கும்.



## விருச்சிகம்

ராகு, குரு, சுக்கிரனால் அதிக நன்மை வந்து சேரும். எவரிடமும் மதிநுட்பமாக பேசி ஆதாயம் பெறு வீர்கள். பயணங்களால் நன்மை ஏற்படும். புத்திரர்கள் உங்கள் சொல்லுக்கு முக்கியத்துவம் தருவர். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். சீரான ஓய்வே ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். மனைவி பாசத்துடன் பணமும் தந்து உதவுவார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க, சில மாற்றங்களை செய்வீர்கள். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை உண்டு. பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் பெறுவர். துர்க்கை வழிபாடு, நன்மைகளை அதிகமாக்கும்.



## கும்பம்

சூரியன், புதனால் நன்மை கிடைக் கும். வாழ்வில் வளர்ச்சி பெற, புதிய வாய்ப்பு உருவாகும். எதையும் ஆர்வமாகச் செய்து பலன் பெறுவீர்கள். வீடு, வாகனத்தில் அறி முகம் இல்லாதவருக்கு இடம் தர வேண்டாம். புத்தி ரர்கள் மகிழ்ச்சியான எண்ணங்களுடன் தகுதி, தி றமைகளை வளர்த்துக் கொள்வர். கூடுதல் சொத்து வாங்க யோகம் உண்டு. உடல்நிலையில் முன்னேற் றம் உண்டு. மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழித்துப் பணவரவு கூடும். பணியாளர் களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்ப எதிர்கால நலனில் அக்கறை கொள்வர். மாண வர்கள் நன்றாகப் படித்து பாராட்டு பெறுவர். முருகன் வழிபாடு தைரியம் வளர்க்கும்.



## மிதுனம்

சனி, சந்திரன் ஓரளவு நற்பயன் தருவர். கடந்த நாள்களில் எடுத்த சில முடிவுகளை, மறுபரிசீலனை செய்வீர்கள். புத்திரர்களின் செயலில் குளறுபடி ஏற்படலாம். பணவரவு சுமார் என்பதால் செலவில் சிக்கனம் வேண்டும். பிறரால் வருகின்ற எதிர்ப்பைச் சரி செய்வீர்கள்.

மனைவியின் செயல்கள் மனதுக்கு வருத்தம் தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற வாய்ப்பு கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகைகள் கிடைப் பது தாமதமாகும். பெண்களுக்கு தோழிகள் மூலம் சிக்கல் வர வாய்ப்புண்டு. மாணவர்கள் படிப்பில் பின்தங்கும் நிலை உள்ளதால், நட்பு வட்டாரத்தைத் தவிர்க்கவும். சனீஸ்வரர் வழிபாடு, சங்கடம் தீர்க்கும்.



## கன்னி

சனி, சுக்கிரன் ஓரளவு நன்மை தருவர். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயற்றி றன் உங்களை மகிழ்விக்கும். உடல்நிலை ஆரோக்கியம் பெறும். மனைவியின் பாசம் மன்தில் நெகிழ்ச்சி தரும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் வளரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழித்து பணவரவு கூடும். பணியாளர்களுக்கு சக பணியாளர்களின் உதவி கிடைக்கும். பெண்கள், கணவருடன் இணக்கமாக இருப்பர். மாணவர்கள் ஞாபகத் திறனால் அதிக புள்ளி பெறுவர். சாஸ்தா வழிபாடு, ஒற்றுமையை வளர்க்கும்.



## தனுசு

சந்திரன், செவ்வாய், சுக்கிரன் நற் பயன் தருவர். மனதில் குழப்பம் ஏற்படலாம். செயல்களில் நிதானம் வேண்டும். உடன் பிறந்தவர்கள் உதவுவர். வாகனத்தில் பராமரிப்புத் தேவைப்படும். புத்திரர்களின் செயற்றிறன் வளர ஆலோசனை சொல்வீர்கள். பூர்வ சொத்தில் வளர்ச் சியும், பணவரவும் கூடும். நோய் தொந்தரவு குறை யும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி குடும்பப் பணிகளில் உற்சாகமாக ஈடுபடு வார். குடும்பத்தினரின் தேவையை நிறைவேற் றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புத் தேடி வரும். பெண்களுக்கு நகை, பிறந்த வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் பெற்றோர் ஆசிரி யரின் வழிகாட்டுதலை பின்பற்றுவர். தட்சிணாமூர்த்தி வழிபாடு, சுமுக வாழ்வு தரும்.



## மீனம்

குரு, சுக்கிரன், சூரியன், புதன் வியத்தகு பயன் தருவர். மனதில் மகிழ்ச்சியும், உற்சாகமும் கூடும். செயல் கள் வெற்றியாகும். உறவினர்கள், நண்பர்கள் உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவர். வீடு, வாகனத்தில் வசதி பெற, சில மாற்றம் செய்வீர்கள். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். தர்மப் பணிகளில் ஈடுபடுவீர்கள். இஷ்ட தெய்வ அருள் கிடைக்கும். சிரமம் அணுகாத சுமுக வாழ்வு அமையும். முக்கியஸ்தரின் ஆலோசனை நம்பிக்கை தரும். மனைவி கருத்து இணக்கம் கொள் வார். தொழில், வியாபாரம் செழித்து சமூக அந்தஸ்து உயரும். பணியாளர்களுக்கு பணவரவு கூடும். மாணவர்கள் படிப்பில் சிறந்த சாதனை நிகழ்த்துவர். சிவன் வழிபாடு, சகல வளமும் தரும்.

எம்.தர்மிகா

# குறிக்கோள் முக்கியம்!

வாழ்க்கை வெறுத்து விட்டது. வாழ்வதில் எந்தப் பயனும் தெரியவில்லை. எதுவும் மாறும் என்ற நம்பிக்கை இல்லை. எந்தப் பிடிமானமும் தெரியவில்லை. சாவதைப் பற்றி யோசிக்கிறேன்.

இப்படி எண்ணுவோர் எண்ணிக்கை பெருகிவருவது கவலை அளிக்கிறது. வாழ்வில் நம்பிக்கை இழந்து, பிடிமானம் தெரியாமல், ஒரு விளிம்பு நிலையில் மக்கள் யோசிப்பது பெருகிவரும் நுகர்வுக் கலாசாரத்தின் பின்விளைவு என்றும் சொல்லலாம்.

பொருள்களின் மதிப்பு உயர்ந்தும் மனிதர்களின் மதிப்பு குறைந்தும் ஓர் அசுர வேகத்தில் பொருள் குவிப்பில் மக்கள் ஓடுவதில் முதலில் நசுங்கிப்போவது மனித உறவுகளே. இல்லாமையில் வாழும் மக்கள் கூட்டங்கள் சாவைப் பற்றி யோசிப்பதில்லை. சாலையில் தூங்கும் மனிதர்கள்கூட நாளையைப் பற்றிய நம்பிக்கையில்தான் ஆழ்ந்து உறங்குகிறார்கள். பொருள் வசதியும் தனிமையும் கொண்டோர்தான் அதிகம் சாவைப் பற்றி யோசிக்கிறார்கள்.



### துக்கமும் மனமும்

தற்கொலைக்குப் பல காரணங்கள். துக்க நோய், மனச்சிதைவு, ஆளுமைக் குறைபாடுகள் போன்ற மனநோய்கள், குடி, போதைப் பொருள்களுக்கு அடிமையாதல், குடும்பப் பிரச்சினைகள் என நிறைய உள்ளன. ஆனால் இந்த சமூகக் காரணிகளில் நகர வாழ்வின் அன்னியத்தன்மை கொண்ட வாழ்முறை முக்கியமானது.

சமூக உறவுகள் இற்றுப்போய், குடும்ப உறவுகளிலும் இடைவெளி வந்து, வேலை சார்ந்த உறவுகள் இயந்திர கதியாக இயங்கும்போது, துக்கப்படும் மனம் பிடிமானம் இன்றித் தவிக்கிறது.

இருத்தலியல் தத்துவத்தின்படி வாழ்க்கைக்கு என்று பெரிய அர்த்தமில்லை. நாம்தான் அதற்கு அர்த்தம் கொடுக்கிறோம். வாழ்வில் சலிப்புத் தன்மை வரும்போது குறிக்கோள் இல்லாமல்திரியும் மனம், வாழ்க்கையின் சகலத்தையும் துப்பி விட்டு எங்காவது போகலாம் என்று தோன்றும். இதைக் குமட்டல் என்று சொல்வார்கள் இருத்தலியல் தத்துவத்தின் ஆதரவாளர்கள்.

### கொடுப்பதுதான் மருந்து

நான் வாழ்ந்து யாருக்கு என்ன லாபம்? என்று கேட்போர் உண்டு. வேலை, குடும்பப் பொறுப்புகள் முடிந்துவிட்டால் அடுத்து என்ன செய்ய என்று தெரியாத பல பெரியவர்களைப் பார்க்கிறோம். எந்த வயதிலும் வாழ்க்கை அசதியாகவும் அர்த்தமில்லாததாகவும் தோன்றலாம்.

ஆனால் மனித வாழ்க்கை எவ்வளவு மகத்தானது? பல லட்சம் ஆண்டுகள் பரிணாம வளர்ச்சியில் நமக்குக் கிடைத்த அற்புத வாய்ப்பு. நம் உடலும் மனமும் கொண்டுள்ள சக்திதான் மனித இனத்தை இந்த உலகத்தின் தலைமையாக ஆக்கி உள்ளது.

நம்மால் என்ன செய்ய முடியாது? மனம் நினைக்கின்ற அனைத்தையும் செய்துமுடிக்க வல்லவர்கள் நாம். என்னவெல்லாம் இல்லை என்னிடம் என்று பட்டியல் இடுவதற்குப் பதில் என்னவெல்லாம் என்னிடம் இருக்கிறது என்று பட்டியல் போட்டால் அது வாழ்க்கையின் கண்ணோட்டத்தையே மாற்றிவிடும்.

உங்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்க ஒன்று செய்யலாம். உங்களால் பிறருக்கு என்னவெல்லாம் செய்ய முடியும் என்று யோசியுங்கள். கொடுப்பது தான் மன நலத்தைக் காக்கும் பெருமருந்து.

(39 ஆம் பக்கம் பார்க்க....)

## சொற்சிலம்பம் - போட்டி இல: 401

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | ■ | 11 | | |
| | ■ | 12 | | 13 | | ■ | |
| ■ | 14 | ■ | 15 | | ■ | 16 | |
| 17 | | 18 | | ■ | 19 | | ■ |
| 20 | | | ■ | 21 | | | 22 |
| 23 | | ■ | 24 | | | | |

அனுப்புபவர் பெயர்:........................................................

பூரணமான தபால் விலாசம்: ........................................................

........................................................

கையொப்பம்:........................................................

### இடமிருந்து வலம்

1. வாதம் செய்தல்
4. அமிர்தம்
7. தமிழர்களின் பாரம்பரிய ஆடைகளில் ஒன்று
8. பலர் கூட்டுச் சேர்ந்து அமைப்பது
9. எரிச்சலால் வருவது
11. உலோகத்தினால் ஆனது
12. புத்த சமயத்தின் வழிகாட்டி
15. வலிமை
16. ஆபரணம்
17. வெட்டி விடு
19. பொதுசன இருப்பு
20. பலகைக்கு உகந்த மரம்
21. கடலின் நடுவே உள்ள திடல்
23. முதுகை வளைத்து கூனிக் கொள்
24. புலிகளின் ஒரு வகை

### மேலிருந்து கீழ்

1. புத்திக் கூர்மை
2. வாட வை
3. பருமை
4. சுந்தரன்
5. வதனம்
6. யானையின் விசேட உறுப்பு
10. மகள்
13. குளிர்மை
14. கற்புடையவள்
16. வேறு ஒன்றாய்ப் பாவனை செய்தல்
17. பாக்குத் தரு
18. படுதா
19. நீரைத் தேக்கி வைக்கும் இடம்
21. உயிரின் ஆரம்ப நிலை
22. ஒரு காட்டு மிருகம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 399 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**
(1) அசம்பாவிதம் (6)கனி (7)மதலை (9) அரம் (10)ஆல் (11) பாவலன் (13)படகு (14)வடம் (15) கோலம் (16) புதன் (18) பகு (20) மதனி (21) காரம் (22) குடில் (23) குடும்பி

**மேலிருந்து கீழ்**
(1)அகம்பாவம் (2)சனி (3)பாமரன்(4)விதம் (5)தலை (8)நல்கு (9) அலம்புதல் (10)ஆடம்பரம் (12)வட(13) பல (15)கோன் (17)தனி ((19) கும்பி (20) மடி (21) காடு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.401
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (13.01.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 399 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
பொ.சஜீவன்,
30 வீட்டுத்திட்டம்,
விநாயகபுரம், துணுக்காய்.

**2 ஆம் பரிசு**
ஏ.டி தேவதாசன்,
முருங்கன் பிட்டி,
முருங்கன்.

**3 ஆம் பரிசு**
யூ.ஹரிஸ்மா பச்சேக்,
வங்காலை - 01,
மன்னார்.

**4 ஆம் பரிசு**
யூ.வி.இன்பன் செறோன்,
இல. 09, விதானை வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
அ.மேரி ஏஞ்சல்,
இல.41/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

செல்வி க.மதுமதி,
தரம் 8, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்.

இந்துஜா அருள்லிங்கம்
இல.364/8, சாந்தசோலை வீதி,
தம்பனைச்சோலை, வவுனியா.

ஆ.விஸ்வநாதசர்மா,
இல. 271/7, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.401இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 17.01.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 399 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# மேக்கப் போடுவது ஒரு தனிக் கலை



எல்லோருக்கும் தெரிந்தது தான் பவுன்டேன், ஐலைனர், பவுடர் ஆகியவை. ஆனால் அதன் திறமையான உபயோகம் ஒருவர் தோற்றத்தையே மாற்றக்கூடியது என்பது பலருக்கும் தெரியாத ஒன்று. உங்களை அழகாகவும் இளமை யாகவும் தோன்ற வைக்கக் கூடியதும் மேக்கப் தான்.

**பவுன்டேன்:**
இதை லேசாக பயன்படுத்துவது நல்லது. அதி கப்படியான மேட் பவுன்டேன் முகத்தின் கோடுகளை வெளிப்படுத்திக்காட்டும். மேலும் முகத்தில் சுருக்கங்கள் இதன் அதிகப்படியான உபயோகத்தின் பின் விளைவு ஆகும்.

**கண்களில் ஒளியை ஏற்படுத்துங்கள்:**
நல்ல 'ஐ ஷடோவை' அடிப்படையாக பயன்படுத்துவதால் கண்களுக்கு அதிகப்படியான ஒளி கிடைக்கிறது. பளபளக்கும் வெளிர் நிறங்களை பயன்படுத்திப் பாருங்கள். உங்கள் கண்களின் ஒளியையும் அதிகரிக்கும்.

**'ஹைலைட்டர்' உபயோகியுங்கள்:**
வெளிர் நிற அல்லது பளபளக்கும் ஐஷடோ அல்லது கிரீம் ஹைலைட்டரை கன்னங்களின் மேற் பகுதியில், இமைகளுக்கு மேல் எலும்புப் பகுதியில் மற்றும் உதட்டின் மேற்பகுதியில் தடவினால் முகத்தின் பளபளப்பு அதிகமாகும்.

## லிப்ஸ்டிக் பற்றிய சந்தேகங்கள்

லாங் லாஸ்ட்டிங் லிப்ஸ்டிக்குகள் 5 முதல் 8 மணி நேரம் நீடிக்கும். ஆழமான நிறத்தைத் தரும், எளிதில் அழிந்துவிடாது. ஆனால் உதடுகளை உலர வைக்கும். இதனைப் பயன்படுத்தும் போது உதடுகள் உலர்ந்து விட்டதைப் போல் தோன்றினால் கன்டினர் தடவலாம்.
திரவ வடிவில் இருக்கும் இந்த லிப்ஸ்டிக்குடன் அதைத் தடவ சிறிய பிரஷ் இருக்கும். நீண்ட நேரத்துக்கு அழியாமல் இருக்கும். பளபளப்பு தேவையென்றால் இதன் மேல் லிப் கிளாஸ் தடவலாம். இது விரைவில் உலர்ந்து விடுவதால் இதைப் பயன்படுத்தும் போது கவனம் தேவை.
லிப் பென்ஸில் உதடுகளை மேலும் அழகாக்குகிறது. லிப்ஸ்டிக்கின் நிறத்தை அதிகமாக்க, லிப்ஸ்டிக் தடவுவதற்கு முன் லிப் பென்ஸில் தடவலாம். லிப் பென்ஸிலால் தடவுவதால் லிப்ஸ்டிக் உதடுகளைவிட்டு வெளியே பரவாமல் இருக்கும்.

# பலாப்பழ அல்வா





**தேவையான பொருள்கள்:**

பலாப்பழம் - 25
நெய் - 100 கிராம்
முந்திரி - 10
ஏலக்காய்த் தூள் - 6
திராட்சை - 10
சீனி - 250 கிராம்
பச்சரிசி மா - கால் கப்
சோளமா - 2 கரண்டி
பால் - கால் லீற்றர்
உப்பு - தேவைக்கேற்ப

**தயார் செய்துகொள்ள வேண்டியவை:**

பலாபழத்தை வேக வைத்துப் பிசைந்து வைத்துக் கொள்ளவும்.
அரிசி மா, சோள மா தனித்தனியாக சட்டியில் போட்டு வறுத்துக் கொள்ளவும்.
ஒரு கிண்ணத்தில் இரண்டு மேசைக் கரண்டி சோளமா, கால் கப் அரிசி மா மற்றும் இதனுடன் பால் சேர்த்துக் கலந்து தனியாக வைத்துக்கொள்ளவும்.

**செய்முறை:**
ஒரு சட்டியில் நெய் விட்டு முந்திரி, திராட்சை சேர்த்து வறுத்து எடுத்துக் கொள்ளவும்.
ஒரு சட்டியில் நெய்விட்டு கலந்து வைத்துள்ள பால் கலவையைச் சேர்த்து நன்றாக 15 நிமிடம் பொறுமையாகக் கிளறவும். பிறகு கொஞ்சம் நெய் சேர்த்துப் பிசைந்து வைத்துள்ள பலாச் சுளையைச் சேர்த்து மீண்டும் ஒரு 5 நிமிடம் கிளறவும்.

பின்னர் தேவையான சீனியைச் சேர்த்து 10 நிமிடம் கிளறவும். பின்னர் ஏலக்காய்த்தூள், ஒரு சிட்டிகை உப்புச் சேர்த்துக் கிளறவும். பின்னர் வறுத்து எடுத்து வைத்துள்ள முந்திரி, திராட்சை போட்டு பரிமாறவும்.

# முடி வளர்வதற்கான உணவு முறை

பெரும்பாலும் முடி கொட்டுவதைத் தவிர்க்க ஷாம்புவை மாற்றுவோம் அல்லது பல்வேறு கலவைகளை நமது தலையில் மெழுகிக் குளிப்போம். இவை எல்லாமே மேல் வேலைகள் தான். எவ்வளவுதான் செடிக்குத் தண்ணீர், உரம் போட்டாலும், வேரில் தானே விடயம் இருக்கிறது. அதுபோலOதான், உங்கள் உடல் நலனில் தான் முடி வளர்ச்சியும் அடங்கியுள்ளது. அதிகமாக முடி கொட்டுபவர்கள் மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெறுவது நல்லது. ஏனெனில் நமது உடலில் சுரக்க வேண்டிய சில ஹோர்மோன் பற்றாக்குறையாலும் முடி கொட்டலாம் என்கிறது மருத்துவம்.
ஹோர்மோன் சுரப்பிகளைச் சரி செய்ய நமது உணவிலேயே மருந்து உள்ளது. புரதம் நிறைந்த பருப்பு, கீரை, கரட், பீட்ரூட், கருவேப்பிலை, செங்கீரை, இரும்புச்சத்து நிறைந்த பனைவெல்லம், கேழ்வரகு, பால், அசைவ உணவு சாப்பிடுபவர்கள் எலும்பு சூப் மாதிரியான சமச்சீரான உணவுகளைச் சாப்பிட்டு வந்தாலே முடி உதிர்வதைத் தடுக்கலாம்.



■ தில்லாலங்கடி

# இயக்கங்கள் கடத்தியவர்களுக்கு நடந்தது என்ன?

**1990** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி மேசன் வேலைக்குச் சென்ற எனது சகோதரனை வெள்ளை வானில் வந்த, முகமூடி அணிந் தவர்கள் கடத்திச் சென்றார்கள். அசோக்கா ஹோட்டலில் அப்போதிருந்த ஆயுதக் குழுவே சகோதரனை கடத்திச் சென்றது. அசோக்கா ஹோட்டலில் எனது தம்பி கடத்தி வைக்கப்பட்டிருக்கும் போது ஒரு நாள் கண்டேன். இதன் பின்னர் வேலணை வங்களாவடியில் முகாம் ஒன்றில் எனது தம்பியும், அவனுடன் வேறு பல இளைஞர்களும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். 25 வருடங்களாகியும் இன்றும் எனது தம்பியைத் தேடிக் கொண்டிருக்கின்றேன்".

யாழ்.மாவட்டத்தில் காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றபோது மேற்கண்டவாறு ஒருவர் சாட்சியமளித்திருந்தார்.



### ஆயுதக் குழுக்களின் தோற்றம்

தமிழ் மக்களின் விடுதலை – உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகப் பல்வேறு ஆயுதக் குழுக்கள் புறப்பட்டன. கால ஓட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய ஆயுதக் குழுக்கள் அனைத்தும், தமது சுயநலனுக்காக – தங்களின் இருப்புக்காக – தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, எந்த மக்களுக்காக ஆயுதம் ஏந்தினார்களோ அந்த மக்களுக்கு எதிராகவே ஆயுதங்களைத் திருப்பினர்.

தமிழ் மக்களைப் பாதுகாத்தல் என்ற பொது நலனிலிருந்து விடுபட்டு தங்களைப் பாதுகாத்தல் என்ற சுயநலத்துக்குள் அந்த ஆயுதக் குழுக்கள் தங்களைச் சுருக்கிக்கொண்டன. சுயநலத்தை இலக்காக்கிக் கொண்டதால், சகோதரப் போர் மூண்டது.

இந்தப் போரின் பெறுபேறு, கடத்தல்கள் – கொலைகள் – கப்பம் கோருதல் என்று தமிழ் மக்கள் மீது படர்ந்தது. சிங்களப் பேரினவாதம், தமிழ் மக்கள் மீது வீசிய கொடூரப் போர்வாளுக்கு, சற்றும் சளைக்காமல் இந்த ஆயுதக் குழுக்களும் தமிழ் மக்கள் மீது கொடூரங்களைப் புரிந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரம் வரிந்து கொண்ட கொள்கையிலிருந்து இம்மியளவும் விலகவில்லை. இதனால் தமிழ் மக்கள் அவர்கள் பின்னால் அணி திரள, தமிழ் மக்களுக்கு எதிராக இந்த ஆயுதக் குழுக்கள் அணி திரண்டன. எதிரிக்கு எதிரி நண்பன் போல, தமிழ் மக்களுக்கு எதிராக திரண்ட இந்த ஆயுதக் குழுக்கள், காலத்துக்கு காலம் ஆட்சியிலிருந்த அரசுகளுடன் ஒட்டியிருந்தன. இராணுவத் துணைக் குழுக்களாக – ஒட்டுக் குழுக்களாகச் செயற்பட்டு தமிழ் மக்களை வேறறுத்தன.

புளொட் அமைப்பு வவுனியாவிலிருந்து கொண்டும், ரெலோ வன்னியிலிருந்து கொண்டும் செயற்பட்டன. சங்கிலியன் என்ற புளொட் அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் செட்டிக்குளத்தில் முகாம் வைத்து இயக்கிக் கொண்டிருந்தார்.

### கடத்தப்பட்டவர்கள் எங்கே?

யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு இயங்கியது. இந்திய இராணுவத்துடன் இணைந்து அந்த அமைப்புச் செயற்பட்டது. அசோக்கா ஹொட்டலில் ஒரு முகாம், மருதனார்மடத்தில் இன்னொரு முகாம், கோப்பாயில் இன்னொரு முகாம் என்று அந்த அமைப்பு யாழ்ப்பாணத்தில் தீவிரம் காட்டியது. தமிழ்த் தேசிய இராணுவத்துக்கு ஆள்களைப் பிடிக்கின்றோம் என்று, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு இளைஞர்களை விரட்டியது. இவ்வாறு விரட்டிப் பிடிக்கப்பட்ட இளைஞர்கள் பலர் இன்று வரை வீடு திரும்பவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு இந்திய இராணுவமோ? ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்போ இன்று வரை எந்தப்பதிலும் சொல்லவில்லை.

காணாமற் போனோர் தொடர்பிலான விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு வடக்கு – கிழக்கில் நடத்திய அமர்வுகளில், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ மற்றும் ஈ.பி.டி.பி. ஆகிய அமைப்புக்களுக்கு எதிராக பொதுமக்கள் சாட்சியமளித்திருந்தனர். குறித்த அமைப்புக்களால் தங்கள் சொந்த உறவுகள் கடத்திச்செல்லப்பட்டதையும், இன்று வரையில் அவர்களைத் தேடிக் கொண்டிருப்பதையும் குறிப்பிட்டிருந்தனர்.

ஒட்டுக்குழுக்களாக – இராணுவத் துணைக்குழுக்களாகச் செயற்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ரெலோ ஆகிய அமைப்புக்கள் 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தின் போது அதில் இணைத்துக் கொள்ளப்பட்டன. ஆனால் புளொட் மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியன தமிழீழ விடுதலைப்புலிகள் தாயகத்தில் மௌனிக்கப்படும் வரையில் அரசுடன் இணைந்தேயிருந்தன. புளொட் அமைப்பு, 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் உள்வாங்கப்பட்டது. ஈ.பி.டி.பி., மகிந்த ராஜபக்ஷ அரசு இருக்கும் வரையில் அதனுடன் ஒட்டியிருந்தது. இன்று உள்ளேயும் இல்லாமல் வெளியேயும் இல்லாமல் சேடம் இழுத்துக் கொண்டிருக்கின்றது.

### வருத்தப்படாத இயக்கங்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்வாங்கப்பட்டு – ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்ததாகச் சொல்லிக் கொள்ளும் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட் ஆகிய அமைப்புக்கள் இன்று வரையில் தங்களால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளுக்காக வருந்தவில்லை. இந்த அமைப்புக்களால் கடத்திச்செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இன்று வரையும் சொல்லவில்லை. சொல்வதற்கு எத்தனிக்கவும் இல்லை.

போர் 2009ஆம் ஆண்டு மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்புக் கூறலுக்கு இலங்கை அரசை வலியுறுத்தி வருகின்றது. சர்வதேச சமூகத்துடன் இணைந்து 2009 ஆம் ஆண்டு போரின் இறுதிக் கட்டத்தில் நடந்தேறிய சம்பவங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் மேல் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு – சரணடைந்து காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதும், போரின்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த பின்னர் காணாமற் போனவர்கள் எங்கு போனார்கள் என்பதும் இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டியவை என்று கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது. தமிழர்கள் மீது நடந்தேறிய சகல வன்கொடுமைகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டிய கட்டாயம் உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசிடம் பொறுப்புக் கூறலுக்கு வலியுறுத்தும் அதேவேளையில், தனது கூட்டமைப்பிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட் ஆகிய இயக்கங்களிடமும் பொறுப்புக் கூறலை வலியுறுத்தியிருக்க வேண்டும்.

> **தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரம் வரிந்து கொண்ட கொள்கையிலிருந்து இம்மியளவும் விலகவில்லை. இதனால் தமிழ் மக்கள் அவர்கள் பின்னால் அணி திரள, தமிழ் மக்களுக்கு எதிராக இந்த ஆயுதக் குழுக்கள் அணி திரண்டன. எதிரிக்கு எதிரி நண்பன் போல, தமிழ் மக்களுக்கு எதிராக திரண்ட இந்த ஆயுதக் குழுக்கள், காலத்துக்குக் காலம் ஆட்சியிலிருந்த அரசுகளுடன் ஒட்டியிருந்தன.**

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், திருகேதீஸ்வரத்தில் மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டபோது அதற்கு அருகில் இருந்த தேவாலயத்தில் நடந்த கூட்டுப் பிரார்த்தனையின் போது முக்கிய விடயம் ஒன்றை முன்வைத்திருந்தார். தென்னாபிரிக்காவில், கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் முன்பாக கடத்தியவர்கள் கதறி அழுது, கடத்திச் சென்றவர்களுக்கு என்ன செய்தோம் என்று சொல்லி தங்களை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டனர். அதேபோன்று இங்கும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

சிங்களத் தலைவர்கள், தங்களிடம் கையளிக்கப்பட்டு காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்று சொல்வதற்கு முன்னர், அவர்களுக்கு முன்னுதாரணமாக இந்த இயக்கங்களின் தலைவர்கள் தங்கள் அமைப்புக்களினால் கடந்த காலங்களில் கடத்திச் செல்லப்பட்டவர்கள் எங்கே என்பதை தமிழ் மக்கள் முன்பாகச் சொல்ல வேண்டும். பொறுப்புக் கூறலை எங்களிடத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்த விடயத்தை இதுநாள் வரையில் வலியுறுத்தவுமில்லை என்பதுடன் இதைப் பற்றி வாயே திறக்காமல் இருக்கின்றது. புதிதாக உதித்துள்ள மக்கள் பேரவையாவது, தமிழ் மக்கள் நலனில் இதயசுத்தியுடன் அக்கறை கொண்டவர்களாக இருந்தால், இந்த இயக்கத் தலைவர்களை பொறுப்புக் கூற வைக்க வேண்டும். அவர்களை சுத்திகரிப்புச் செய்த பின்னரே சேர்த்துக் கொள்ளவேண்டும். கூட்டமைப்பு விட்ட தவறை விடக்கூடாது. பின்னர் கூட்டமைப்புக்குச் செய்யும் துரோகத்தையே இவர்கள் பேரவைக்கும் செய்வார்கள்.



# ஓம்

பொன்னி செல்வநாதன்

சூரியனைப் பற்றி ஆய்வு செய்துவருகின்ற நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் மிகவும் அற்புதமான தகவல் ஒன்றினை அண்மையில் வெளியிட்டுள்ளதாக இணையதளங்கள் பகிர்ந்து கொண்டிருக்கின்றன. சூரியனிடமிருந்து சேகரித்த சில நுண்ணிய அதிர்வலைகளை நாசா ஆராய்ந்தபோது, ஓம் என்ற ஓசை அதாவது ஓம்/அம் போன்று ஒலிப்பதாக குறிப் பிட்டிருக்கின்றதாம்.

நாசாவின் இந்தக் கண்டுபிடிப்பை, அதாவது சூரியன் எழுப்புகின்ற ஒலியினைப் பல இணையதளங்களும் வெளியிட்டிருக்கின்றன. சூரியனுடைய ஓசை பற்றி அறிந்திடும் நோக்கில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்ற விஞ்ஞானிகள் மற்றும் ஆய்வறிஞர்களின் மத்தியில் இந்த அரிய தகவலானது பெரும் ஆச்சரியத்தையும் வரவேற்பையும் பெற்றிருப்பதாக சொல்லப்படுகின்றது.

நாசாவின் கண்டுபிடிப்பாகிய ஓம்/அம் என்ற ஓசையானது வடக்குத் தமிழர்கள் எப்போதும் பயன்படுத்தி வரும் சொல்தான். பிரணவத்தின் மந்திரம்.

புனித மந்திரங்களின் அடிப்படை மூலமே ஓம் என்ப தாகும். ஒன்று ஓமிலிருந்து ஆரம்பிக்கும் அல்லது ஓமுடன் முடிவு பெறும். பிறிதொரு நேரங்களில் சொல்லப்படும் கடவுள் மந்திரங்களானவை ஓமுடன் ஆரம்பித்து, ஓமுடன் முடிவுறும். இவற்றிற்கு எடுத்துக் காட்டாக, ஓம் நம சிவாய! சிவாய நம ஓம்! ஓம் சக்தி ஓம்! போன்ற மந்திரங்களைச் சுட்டிக்காட்டிடலாம். இந்த நிலையில், நாசா ஆய்வின் மூலம் சூரியனின் ஒலியானது ஓம்-ஐ தழுவியிருப்பதை உலகோர் முன் எடுத்துச் சொல்லிவிடும்போது அனைவரின் கவனமும் நம்புறத்தே திரும்புவது இயற்கை தானே!

அனைத்து இறையம்சங்களுக்கும் தனித்தனியே வேத மந்திரங்களும், போற்றிகளும், வழிபாட்டு முறைகளும் உள்ளதைப் போலவே சூரியனுக்கும் இருக்கிறது. உதாரணத்திற்கு சூரிய காயத்ரி, சூரிய அக்ஷ்டகம் போன்றவற்றினைக் குறிப்பிட்டுச் சொல்லிவிடலாம். மேலும் சூரிய உபநிதத்து, சூரிய சித்தாந்தம், சூரிய சதகம் போன்ற ஆய்வு நூல்களும் உள்ளன.

மேற்கண்ட நிலையில்தான், சூரியனைப் பற்றியும் அதனிடமிருந்து கேட்கக்கூடிய ஒலி பற்றியும் நுணுகி ஆராய்ந்துப் பார்த்திடும்போது வியக்கத்தக்க வகையில் பற்பல செய்திகள் கிடைக்கின்றன.

முதலில், நம்முடைய அண்டவெளி தோன்றிடுவதற்குக் காரணமாக விளங்கிட்ட பெருவெடிப் பின்போது ஒளியுடன் சேர்ந்து ஒலியும் ஏற்பட்டதை சாத்திர ஏடுகளும், உலகின் பல்வேறு நாடுகளின் ஆராய்ச்சியாளர்களும் ஆமோதித்துக் குறிப்பிடுவதையும் அறிவோம்.

எனவேதான், சூரிய மண்டலத்தில் நடு நாயகனாக விளங்கிடும் சூரியனே, பேரொளி நாயகனே, இன்று இப்பிரபஞ்சத்தை ஆட்டுவிக்கிறான் போலும். இதனை உறுதிப்படுத்திடும் வகையில் ரிக் வேதமானது "சூரிய ஆத்ம ஜகதாஸ்தாஸ்து சாஸ்ச்ச" என்று குறிப்பிடுவதாக சான்றோர் பெருமக்கள் குறிப்பிடுகின்றனர். மேலும், அதர்வண வேதத்தில் வரக்கூடிய சூரிய உபநிடதத்திலும் மேற்கண்ட கூற்றினைக் குறிப்பிடுவதாக ஆய்வுச் செய்திகளில் காணப்படுகின்றன.

எந்தவொரு நவீன தளங்களோ, கருவிகளோ இல்லாதவொரு காலத்தில் அண்டத்தின் ஒலியை இந்தியர்கள் எங்ஙனம் கண்டறிந்திருக்கக்கூடும்? இதையே சூரிய ஒலியின் ஆய்வினை மேற்கொண்டு வரும் ஆய்வறிஞர்களும் வினவுகின்றனராம்.

மேற்கண்ட நிலையில், ஒளி-ஒலி ஏற்பட்ட நிகழ்வு பற்றி குறிப்பிடும் 'பிக்பேங் தியரி' எனப்படுகின்ற பெருவெடிப்பினைத் தொடர்ந்து நம்முடைய இறைஞானியர்கள் அண்டவெளியின் முதல் ஒலியானது ஓம் என்றும் அதனைப் பற்றி கிடைத்தற்கரிய தகவல்களை எல்லாம் சேகரித்து எதிர்காலத்தினருக்காக விட்டுச் சென்றுள்ளனர்.

ஆகவே, அண்டத்தின் ஆரம்ப ஓசையே ஓம் என்ற ஓங்கார நாதம்தான் என்று நம்முடைய இறைஞானிகள் பல நிலைகளில் குறிப்பிட்டு வலியுறுத்திடும்போது, இன்று சூரியனிடமிருந்து ஓம் ஒலி கேட்கிறது என்ற கண்டுபிடிப்பில் யாதொரு வியப்புமில்லை என்று தோன்றுகிறதல்லவா?

சூரியன் என்ற இந்த நெருப்புக்கோளானது தகதகவென தகிக்கின்ற நெருப்பையே பிரதானமாகக் கொண்டுள்ள கிரகமாகும். நாசாவின் ஆய்வுக்கூடம் சூரியனுடைய மேற்பரப்பிலிருந்து வெளியே உமிழப்படுகின்ற நெருப்புப்பிழம்பிலிருந்து உண்டாகும் அலைகளைச் சிறுகச் சிறுக, அதாவது சுமார் 40 நாள்கள் வரை தொடர்ந்து சேகரித்து - பின்னர் அவற்றினை ரேடியோ அலைகளாக, காதால் கேட்கும் நிலைக்கு மாற்றிடும்போது அந்த அலைக்கற்றைகள் ஓம்/அம் என வரக்கூடிய ஓசையைப் புலப்படுத்தியிருக்கின்றன.

இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துள்ள சூரிய ஒலியைக் கேட்ட ஆய்வாளர்களுக்கு அந்த ஓசை சூரிய பீஜ மந்திரத்துடன் சற்றே ஒத்துப்போவதைக் கண்டு திகைத்துப் போயினராம். மேலும், சூரியனிலிருந்து பெறப்பட்ட இந்த அலைக்கூறுகளின் வெளிப்பாட்டை உற்றாய்ந்திடும்போது, அவை ஒரு குறிப்பிட்ட தாளக்கட்டுக்குள் அடங்கியிருப்பதைக் கண்ட விஞ்ஞானிகள் வெகுவாக வியந்து போயினராம்.

சூரியனின் மேற்பரப்பில் ஏற்படக்கூடிய நெருப்பின் கொந்தளிப்பு மற்றும் அதனால் விளைகின்ற அலையதிர்வுகளையும் பற்றி ஆய்வுகளைச் செய்கின்ற பிசிஸ்ட் டான் கெம்மட் தன்னுடைய வாயேஜர்-1 ஆய்வின்போது விண் ஏற்படுத்தக்கூடிய ஒலியினைக் கேட்கும் விதத்தில் முயற்சித்துப் பார்த்தால், கண்டிப்பாக அது வெளிப்படுத்துகின்ற ஒலியைக் கேட்க முடியும் என்று தம் கருத்தினை எதிர்காலத்தினருக்காகப் பதிவு செய்திருக்கின்றாராம்.

நம் ஞானியர்கள் ஓம் என்று அப்போதே குறிப்பிட்டு அதனைப் பிரணவ மந்திரமாக அன்றாட சமய வழிபாட்டில் கொண்டு சேர்த்திருப்பதை நினைக்கும்போது மெய்சிலிர்க்கின்றது. மேலும், அனைத்து மக்களையும் அன்றாட வாழ்வியலில் ஓம் என்ற திருமந்திரத்தை உச்சரித்து இயற்கையுடன் இயைந்திட வைத்துள்ளதை என்னவென்று சொல்வது? இத்தகைய மந்திரச் சொல்லே விண்மொழியின் மூலநாதமாகக் கொண்டிலங்குகின்றது என்பது திண்ணமாகிறது. இன்னும் சொல்லப்போனால், ஓம் என்பதே ஒரு விஞ்ஞான நுட்பம்தான் என்கின்றனர்.

ஆக, அண்டவெளியின் முதல் ஓசையே ஓம் என்று ஆய்வறிஞர்கள் உறுதிப்பட குறிப்பிடுகின்ற நேரத்தில், சூரியனிலிருந்து உமிழப்படுகின்ற அலைக்கற்றைகளினால் வெளிப்படுகின்ற ஓசையும் ஓமுடன் ஒத்துப்போவதை கேள்வியுறும்போது அன்று நம்முடைய இறைஞானியர்கள் சுட்டிக்காட்டியுள்ள ஓம் என்ற விண் மொழிக்கு இதுவே மிகப் பெரிய சாட்சியமாகிறது.

அதிரன்

# அ.தி.மு.கவுக்கு இந்த முறை கூட்டணி தேவை

இந்த ஆண்டு நடக்கவிருக்கும் தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க-பா.ஜ.க கூட்டணி ஒரு பக்கமும், தி.மு.க-தே.மு.தி.க கூட்டணி மறுபக்கமுமாகப் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவை தவிர மக்கள் நலக்கூட்டணி மூன்றாவது அணியாகவும் பா.ம.க. தனியாகவோ அல்லது பா.ஜ.கவுடனோ கூட்டணி அமைத்தும் போட்டியிடக் கூடும் என்றும் எதிர்பார்ப்பு உள்ளது.

மக்கள் நலக்கூட்டணியில் இடதுசாரிகள் மட்டும் உறுதியாக இருப்பார்கள். வை.கோவின் ம.தி.மு.கவும் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் அந்தக் கூட்டணியில் நீடிப்பார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாது.

கண்ணுக்கெட்டியதூரம் வரை அ.தி.மு.கவுக்கு எதிரிகளே தென்படவில்லை என்று கூறிவந்த அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழக முதல்வருமான ஜெயலலிதா கடந்த வியாழக்கிழமை நடந்த கட்சியின் பொதுக்குழுவில் தமிழக சட்டமன்றத் தேர்தலில் சூழலுக்கு ஏற்ப கூட்டணி வியூகம் வகுக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

கடந்த ஆண்டு நடந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தனித்தே போட்டியிட்டு 37 இடங்களில் அ.தி.மு.க வெற்றி பெற்றது. அண்மைய சென்னை பெரு வெள்ளத்தைத் தொடர்ந்து அ.தி.மு.க அரசுமீதுபொதுமக்களிடம்ஏற்பட்டிருக்கும் கடுமையான அதிருப்தியைச் சமாளிக்க வேண்டுமானால் இந்த ஆண்டு நடக்கவிருக்கும் சட்டசபைத் தேர்தலில் அதற்குக் கூட்டணி தேவை என்று ஜெயலலிதா நினைப்பதையே அவரது பொதுக்கூட்டப் பேச்சு குறிப்புணர்த்துவதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

கூட்டணி அமைப்பது என்று அ.தி.மு.க முயலும்போது பா.ஜ.கவே அதன் முதன்மைத் தெரிவாக இருக்கும் என்கிறார்கள் அவர்கள். 1998 ஆம் ஆண்டு அ.தி.மு.கவுக்கும் பா.ஜ.கவுக்கும் இடையில் ஏற்பட்ட தேர்தல் கூட்டணியும் பரஸ்பர புரிந்துணர்வும் அந்த இரு கட்சிகளுக்கும் இடையில் இன்றுவரை தொடருவதாக அ.தி.மு.க வட்டாரங்கள் கூறுகின்றன.

இடையே சிலவேளைகளில் அ.தி.மு.க-பா.ஜ.கவுக்கு இடையில் கடுமையான அரசியல் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தாலும் இருகட்சிகளும் கொள்கையளவில் இயல்பான, இயற்கையான கூட்டணிக் கட்சிகளாகவே நீடித்து வருவதாகவும் அந்த கட்சிகளுக்கும், அவற்றின் தலைமைகளுக்கும் இடையிலான நட்பும், பரஸ்பர புரிந்துணர்வும் எந்தச் சூழ்நிலையிலும் தொடரும் என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அது தவிர ஜெயலலிதாவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் நிலவும் தனிப்பட்ட நட்பும் அ.தி.மு.க-பா.ஜ.க. கூட்டணிக்கு இடையிலான கூட்டணி அமைவதற்கான சூழலை அதிகப்படுத்தும்.

தி.மு.கவும் இந்தத் தேர்தலில் கூட்டணி அமைத்தே தீரவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. தே.மு.தி.க.வையும் காங்கிரஸ் கட்சியையும் தன் கூட்டணியில் சேர்க்கும் முயற்சியில் அந்தக் கட்சி தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

தே.மு.தி.கவைப் பொறுத்தவரை அந்தக் கட்சி 2006 தேர்தலில் தனித்து நின்றபோது ஒரே ஒரு சட்டசபை உறுப்பினரை மட்டுமே பெற்றதையும், 2014 ஆம் ஆண்டு மூன்றாவது அணி அமைத்து அந்த அணியில் அதிக இடங்களில் தே.மு.தி.க போட்டியிட்டபோது அந்தக் கட்சி ஒரே ஒரு இடத்தில்கூட வெல்லவில்லை. இதற்கு மாறாக 2011 ஆம் ஆண்டு அ.தி.மு.க என்ற பெரிய கட்சியுடன் கூட்டணி அமைத்தபோது மட்டுமே தே.மு.தி.க சட்டசபை எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைப் பெறும் அளவுக்குச் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றது.

இந்த மூன்றுதேர்தல் அனுபவங்களையும் வைத்துப் பார்க்கும்போது, தே.மு.தி.கவுக்கு இந்தத் தேர்தலில் தி.மு.கவைப் போன்ற ஒரு பெரிய கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதே அரசியல் ரீதியில் பலன்கொடுக்கும் தேர்வாக இருக்கும். தி.மு.கவும் தே.மு.தி.கவைத் தன் கூட்டணிக்குள் கொண்டுவருவதற்குத் தீவிரமாக முயல்வதால் தி.மு.க -தே.மு.தி.க கூட்டணி அமைவதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

பா.ம.கவைப் பொறுத் தவரை அன்புமணியை முதல்வர் வேட்பாளராக ஏற்பவர்களுடன் மட்டுமே கூட்டணி என்பதில் உறுதியாக இருப்பதால் அது தனியாகவே போட்டியிடும் என்றும் ஒருவேளை அ.தி.மு.க-பா.ஜ.க கூட்டணி உரு வாகாமல் போகும்பட்சத் தில் பா.ஜ. கவுடன் கூட்டணி அமைப் பதற்கான வாய்ப்பு அதற்கு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அ.தி.மு.க கூட்டணியில் பா.ஜ.க. இடம் பிடிக்காத சூழலில் மனிதநேய மக்கள் கட்சியும் ஜி.கே.வாசன் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியும் அ.தி.மு.க கூட்டணியில் சேரக்கூடும் என்றும் சொல்லப்படுகின்றது.



> எது எப்படியானாலும் முதல்வர் ஜெயலலிதாவுக்கே இம் முறையும் வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளதாகவும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டாலேயே அவரால் அதிக இடங்களில் வெல்ல முடியும் என்றும் தமிழக அரசியல் வட்டாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. தேர்தல் காய்ச்சல் தமிழகத்தில் இப்போது சூடு பிடித்துள்ளது. எதிர்வரும் வாரங்களில் அது மேலும் அதிகரித்து தமிழக அரசியல் மேலும் சூடேறும் என்பதில் ஐயமில்லை.

இதேவேளை, தமிழகத்தில் சட்டபேரவைத் தேர்தல் ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் தொடங்கியுள்ளது. தேர்தல் ஒரு சில மாதங்களில் நடைபெற உள்ள நிலையில், 3 ஆண்டுகள் ஒரே இடத்தில் பணிபுரியும் அதிகாரிகளை இடமாற்றம் செய்யத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் கட்ந்த 2011 இல் மே மாதத்தில் சட்டசபை தேர்தல் நடந்தது. அந்த தேர்தலில் அ.தி.மு.க பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்தது.

இதனை தொடர்ந்து கடந்த 2011 இல் மே 23 ஆம் திகதி சட்டசபை கூடியது. முதல் சட்டமன்ற கூட்டம் நடந்த மே 23 ஆம் திகதியுடன் தற்போதைய ஆட்சி காலம் முடிவடைகிறது. எனவே, அதற்கு முன்னதாக புதிய சட்டசபைக்கான தேர்தலை நடத்தி முடித்து, புதிய ஆட்சி அமைக்க வேண்டும். எனவே, தற்போது முதல் இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்ய வேண்டியுள்ளது.

தமிழகம் உட்பட புதுச்சேரி, மேற்கு வங்காளம், கேரளா, அசாம் ஆகிய 5 மாநிலங்களில் தேர்தல் நடக்கிறது. இதனால், தேர்தல் ஆணையத்தின் சார்பில் எப்போது தேர்தல் நடத்தவேண்டுமென்பது குறித்து மேற்கு வங்காளம், அசாம் மாநிலங்களில் உள்ள அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியது. இதனை தொடர்ந்து வரும் ஜனவரி மாதத்தில் சென்னைக்கு தலைமைத் தேர்தல் ஆணையர் தலைமையிலான குழுவினர் வருகின்றனர்.

இந்தக் குழுவினர் தமிழக தேர்தல் அதிகாரி, பொலிஸ் அதிகாரிகள், அனைத்துக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்துகின்றனர். அப்போது, தேர்தலை எத்தனை கட்டங்களாக நடத்தவேண்டுமென்பது உட்பட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனையில் ஈடுபடுகின்றனர். இதனை தொடர்ந்து சட்டசபை தேர்தல் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

எது எப்படியானாலும் முதல் வர் ஜெயலலிதாவுக்கேஇம் முறையும் வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளதாகவும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டாலேயே அவரால் அதிக இடங்களில் வெல்ல முடியும் என்றும் தமிழக அரசியல் வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

தேர்தல் காய்ச்சல் தமிழகத்தில் இப்போது சூடுபிடித்துள்ளது. எதிர்வரும் வாரங்களில் அது மேலும் அதிகரித்து தமிழக அரசியல் மேலும் சூடேறும் என்பதில் ஐயமில்லை.

# மனிதம் வாழப் பாடுவேன்

தமிழ்ப் பேசும் குழுமத்தில் பிறந்ததால்
தமிழனாய் வாழ்ந்தாலும் மனிதனாமே!
இமிழ்த்திரை உலகமெலாம் இனபேதத்தை
உமிழ்தலே மனிதரிடத்து குழப்பங்கள்!

நான் வாழும் தேசத்தில் சிங்களமே
தான்பேரின மென்பதால் ஆளுகின்றது!
கோன்வழி ஜனநாயகக் கோட்பாடு
கூன்விழும் இனவெறிச் சமுதாயம்!

சிங்களம் தனுக்காகச் சிங்களரும்
அங்ஙனமே தமிழர்கள் தமிழுக்குமாம்!
பொங்குமின மோதல்களில் மாய்ந்திடல்
எங்ஙனம் மனிதத்தை வளர்த்திடும்?

மொழியுணர் வோடுதான் இலக்கியம்
வழிமொழி வேனாகில் மனிதனாமோ?
பழியதும் எம்மொழி தனையுமாம்
இழிவுமே படுத்தற்கு ஒவ்வாததோ?

மனிதனின் உணர்வையே நெறிப்படுத்தும்
புனிதமாம் பணியதைத் தொட்டிடல்
இனியெனது இலட்சியம்; கடமையுமாம்
தனிவழிசெல் வதாயினும் துஞ்சிடன்பணி!

தமிழனோ இவன்தாய்த் தமிழினையே
குழிதோண்டிப் புதைத்தான் என்றென்னை
பழிசொல்சமு தாயத்தை ஏற்கேனே
தெளிவுறவே சிந்திக்கும் கவிஞனானேன்!

என்னுடைய படைப்புக்கள் மனிதமுயர
உன்னிப்பாய் வழிநடத்த வேண்டுமாம்!
கன்னலிடு மனிதவர்க்கப் படைப்புக்களை
பொன்னைக் கூலி வழங்கினும் படையேனே!

உலகமெலாம் வாழ்கின்ற மனிதகூட்டம்
விலகிவிலகிச் செல்வதும்; சென்றதும்
அலகிடுமாம் பலப்பலவழி சிந்தனைகள்
உலவிடும் ஊடகங்கள் உருவாக்கினவே!

மொழியெழுத்து மதங்களாம் அனைத்தையுமே
வழிதனிலே வேறுபடுத்தும் ஊடகங்கள்!
பழியெதுமாம் தெரிந்திருக்கா மனிதர்களை
குழிவீழ்த்த ஊடறுக்கும் ஊடகங்கள்!

ஊடகவழி உருவேற்றி உன்மத்தமாய்
கேடதனில் இனங்களையே மனிதருள்ளே
மூடத்தனமா உருவாக்கிய வரலாற்றைக்
காடனுப்பி புதியுகம் புதுக்கவாரீர்!

வேறொரு கருத்தினைக் கேட்கவும்
வேறொரு பக்கத்தைப் பார்க்கவும்
மீறாதொரு சிறைவைத்துப் பூட்டுகிறார்.
மாறொரு மதத்தினைப் புகட்டுவோர்!

பொது அறிவு வளர்த்திடல் எங்ஙனம்?
எதுசரியோ பிழையோ என்றறியும்
முதுசமும் மறுத்திடல் என்னநீதி?
இதுவேமத வாதிகளின் அணுகலாகும்!

மதமொரு போதைவஸ்த் தென்கின்றார்
பொதுவுடமை கருத்ததை கூறிப்போந்த
முது அறிஞர் கார்ல்மாக்ஸ்: சொன்னவையோ
புதுநாக ரிகவழியினை காட்டுதற்கே!

மனிதனெவன் மற்றுமோர் உயிரினத்தில்
புனித அன்பை செலுத்தாமல் வாழுகின்றான்?
மனிதனுக்கு மனிதனேன் முரண்பட்டும்
தனித்தனிவழி செல்லலுற்றான் சிந்தியுங்கள்!

ஆயிரமாயி ரமாமொழிகள் தோன்றட்டும்
ஆயினுமது ஆற்றல்களை வழிவிடட்டும்
கோயில்கள் எம்மதத்தும் கொண்டெழட்டும்
தேயுங்கெடு புத்தியதால் ஊடவேண்டாம்!

எம்மனமே கவர்ந்ததை ஏற்றல் நலம்
எம்மதமும் சம்மதமே எனுங்கூற்றை
இம்மண்ணில் மனிதஇனம் அத்தனையும்
சும்மாத்தையா எண்ணிடினே விடவுமில்லை!

அதற்காக அத்தனையாம் மதங்களையே
இதத்துள் ஏற்றிடவும் தேவையில்லை!
அததனில் பிடித்ததெது ஒன்றையேர்
மதவாதி யெனமட்டும் வாழ்ந்திடாதே!

மொழிவழி இனமொன்றே குழுமமாகும்
கழியதில் உற்றுவாழல் பிழையில்லை!
மொழிவெறி உற்றுவேறு குழுமங்களை
அழிக்கின்ற துட்டகுணம் மனிதருக்கிலை!

ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகற்றல்
ஒன்றுக்குமே உதவாத செயலுமல்ல!
என்றைக்கும் ஓர்மதமா வாழ்தல்கூட
உன்னிப்பா உறுத்தப்படத் தேவையில்லை!

எல்லோரும் இந்நாட்டில் மனிதரென்னும்
இல்லாததா புதிதாகப் படிக்கவேணும்?
கொல்லாமல் மனிதத்துச் சுதந்திரத்தை
எல்லாரும் எல்லாரிடத்து மனுகலாமே!

இவ்வுலகில் பொதுவுடமைச் சமுதாயம்
பவ்வியமா தோன்றிடினே மனிதரிடம்
செவ்வையா நற்குணங்கள் வந்திடுமாம்
அவ்வரிதா முலகைச் சேர ஒன்றிணைவீர்!

மனிதத்தை மனிதனும் அடைவதெனின்
புனிதமாம் பொதுவுடமைப் பாதையேகி
இனியாகில்அடிவைக்கும் சுவடுகளும்
தனியாகப் புனிதமதைப் பதிக்குமாமே!

பதித்தலிலா சமுதாயத்து மறுமலர்ச்சி
சிதிலமடை நிலையல்லால் வேறுண்டோ?
புதியதான மானிடமும் எழுகமாதோ!
அதிலிருந்த மூடவாழ்க்கை அழிகமாதோ!

நவாலியூர்க் கவிராயர்



# தூவானம்

உன்னை என்னால்
உயிருள்ளவரை மறக்க முடியாது -
ஏனெனில்
நீ நடுக்கடலில் விட்ட - என்
துடுப்பையும் பறித்துக் கொண்ட
துரோகியல்லவா.....

நல்லவேளை நான்
நம்பிக்கெடவில்லை - என்
நம்பிக்கையும் கெடவில்லை - ஆம்
நீ நஞ்சைக் கக்கும் நாகம் என்பது
எனக்கு என்றோ தெரியும்
அதனால் தப்பித்தேன்

கைகேகி இராமனைக் .
காட்டுக்கு அனுப்பினாள் - நீயோ
என்னை வீட்டுக்குள் முடங்க வைத்து
எக்காளமிட நினைத்தாய்
ஒரு வகையில் கைகேகியும் நீயும்
ஒரே இனம்தான்
இருவரும் குணத்தால் ஏழைகள்

உனக்குத்தான் உலகின்
பழமொழிகள் அனைத்தும் அத்துப்படியே
எனக்குத் தெரிந்த பழமொழி ஒன்றை
உனக்கு ஞாபகமூட்டுகிறேன்
அரசன் அன்றறுப்பான்
தெய்வம் நின்றறுக்கும்

என்வரைக்கும் என்துயரம்
கலைந்து விட்டது
ஆனால் மழைவிட்டும் - தூவானத்தில்
நனையப் போவது என்னவோ
நீதான்! மறந்து விடாதே!



# வரட்டும் தெய்வீகப் பிரளயம்

என் கல் மனம்
ஒரு பிரளயத்தால்
கரையத்தான் வேண்டும்
காமத்தின் தடங்கள்
சூழ்ச்சியின் தடங்கள்
துரோகத்தின் தடங்கள்
அதில் கடினமாய்
படிந்துள்ளன
படைத்தல்
காத்தல்
அழித்தல்
இந்த மூன்றும்
நான்தானென்று
என் அகங்காரம்
பறநாகமாய்
படமெடுக்கின்றது
என் அழிவின்•
எல்லைகூட - என்
கண்ணுக்கு
இன்னும் புலப்படவில்லை
ஒருபோதும்
அடிபட்டுப் போகாத
அதர்மமாய்
நான் தெரிகின்றேன்
வரட்டும்
தெய்வீகப் பிரளயமொன்று
என்னை நோக்கி

- சாம் ரமேஸ்குமார்

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 650 | 700 |
| நண்டு | 250 | 400 | 350 | 300 | 300 | 250 |
| கணவாய் | 500 | 600 | 500 | 600 | 600 | 500 |
| பாரை | 500 | 500 | 500 | 500 | - | 400 |
| சுறா | 300 | 600 | 600 | 600 | 1000 | 600 |
| சீலா | 200 | 400 | 350 | 400 | 400 | 350 |
| விளை | 600 | 450 | 250 | 450 | 400 | 400 |
| முரல் | 300 | 350 | 300 | 300 | 350 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 300 | 400 | 400 | 400 |
| கிழாக்கன் | 400 | 800 | 400 | 400 | 350 | 400 |
| ஓரா | 300 | 400 | 350 | 400 | 300 | 300 |
| திரளி | 250 | 300 | 200 | 350 | 250 | 200 |
| நகரை | 200 | 300 | 250 | 300 | 250 | 200 |
| ஆடை | 150 | 150 | 100 | 120 | 150 | 200 |
| ஒட்டி | 250 | - | 200 | 300 | 200 | 150 |
| திருக்கை | 300 | 350 | 300 | 300 | 400 | - |
| மதனம் | 300 | 350 | 300 | 400 | 400 | 150 |
| கொய் | 150 | 150 | - | 350 | 100 | 100 |
| பாலை | 100 | 200 | 100 | 100 | 250 | 300 |
| வாளை | 150 | 150 | 200 | 250 | - | 150 |

# ஆடைகளுக்கு அழகு சேருங்கள்

அலுமாரி முழுவதும் ஆடைகள் நிரம்பி வழிந்தாலும் "இன்றைக்கு அணிந்து கொள்ள எதுவுமே இல்லை" என ஒவ்வொரு பெண்ணும் புலம்புவது வழமையான விடயம் தான். உண்மையில் ஒவ்வொரு முறையும் புத்தம்புது உடைகள் வாங்க வேண்டிய அவசியமில்லை. ஒரு சிறந்த உடை இருந்தாலே போதும். சிலவற்றின் கலவையுடன் காண்போரை அசத்தலாம்.



### சன் கிளாஸ்

குளிர் கண்ணாடிகள் ஸ்ரைலுக்கு மட்டுமல்ல... சூரியனின் புற ஊதாக் கதிர்களிலிருந்தும் கண்களைப் பாதுகாப்பதால் சிறந்த பயன்பாடு உண்டு.

### நகைகள்

தோடுகள், வளையல்கள், ஜிமிக்கிகள், காதணிகள், மாலைகள், மோதிரங்கள் ஆகியவற்றைப் பல்வேறு வண்ணங்களிலும், பளபளக்கும் கண்கவர் வடிவங்களிலும் அணிந்து கொண்டு, வழக்கமாக நீங்கள் அணியும் ஆடையையே மேலும் மெருகேற்றலாம். அளவில் சிறிதாக இருந்தாலும், நகை களில் வேலைப்பாடு கூடுதலாக இருப்பது அழகு தரும்.

### காலணிகளும் கைப்பைகளும்

எண்ணிக்கையில் அடங்காத ஏராளமான காலணிகளும் கைப்பைகளும் உங்களுக்காக அணிவகுத்துக் காத்திருக்கின்றன. கைப்பைகளைத் தேர்ந்தெடுக்கும் போது, உங்களது உடல்வாகுக்கு ஏற்பவும், செல்லும் நிகழ்ச்சிக்கு ஏற்பவும் பொருத்தமானதை எடுத்துச் செல்லுங்கள். காலணிகளைத் தேர்ந்தெடுக்கும்போது, வசதி மற்றும் தோற்றத்துக்கு ஏற்ப அணிவது சிறந்தது. நிகழ்ச்சிக்கு ஏற்ற வண்ணங்களும் வகைகளும் காண்போரை வியக்க வைக்கும்.

### கடிகாரம்

உங்களது தனிப்பட்ட பாணியின் பிரதிபலிப்பாகவே நீங்கள் அணியும் கைக்கடிகாரம் விளங்கும். மெல்லிய உலோகப் பட்டை கொண்ட கைக்கடிகாரம் சிலருக்குப் பொருந்தும். சிலருக்கோ மிகப்பெரிய முகப்புக் கொண்ட அல்லது வண்ண வண்ண கைக்கடிகாரங்கள் அழகுக்கு அழகு சேர்க்கும்.

# வீட்டுக்கு அலுமாரிகள் தெரிவு செய்வது எப்படி?

வீட்டை அழகாகக் காட்டுவதில் அலுமாரிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. அலுமாரிகளை வாங்கும்போது சில முக்கிய விடயங்களைப் பின்பற்றுவது மிகவும் நல்லது. சில விடயங்களை முன்னதாகவே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். விலை, அளவு, நிறம், தரம், வடிவம் மற்றும் தேவை ஆகியவற்றைத் தீர்மானிக்க வேண்டும். விலையைப் பொறுத்து மரத்தில் வாங்குவதா? அல்லது உலோகத்தில் வாங்குவதா? எனத் திட்டமிடுங்கள்.

அறையின் நீள அகலத்துக்கு ஏற்ப அலுமாரிகளை வாங்குவது நல்லது. அறையை அடைத்துக் கொள்ளும் வகையில் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அலுமாரிகள் வாங்கும்போது அதன் கால எல்லையை கணக்கில் கொள்ளவும்.

நீண்டகாலம் உழைக்கக் கூடிய பொருள்களை வாங்க அதிக செலவு ஆகும் என்றாலும், அது பராமரிப்புச் செலவைக் குறைக்கும். இதையும் கவனத்தில் கொள்ளவும். விலை குறைவு என்ற காரணத்துக்காக தரத்தில் குறைவான அலுமாரிகளை வாங்கினால் பிறகு கஷ்டப்படப் போவது நாங்கள் தான்.

விலையைப் பார்க்காமல் தரத்தையும் கருத்தில் கொள்ளுங்கள். தள்ளுபடி விலையில் வாங்கும் போது சில விடயங்களைக் கவனிக்க வேண்டும். அவை பழுதுள்ளவையாக இருக்கின்றனவா என்பதைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். உங்கள் வீட்டில் பூசியுள்ள சுவரின் வண்ணத்துக்கு ஏற்ற வகையில் அலுமாரியின் வண்ணத்தை தெரிவு செய்யுங்கள்.

வாடகை வீட்டில் வசிப்பவர்கள் எளிதாக கையாளக் கூடிய அலுமாரிகளை வாங்கலாம். அடிக்கடி வீடு மாற்ற வேண்டிய அவசியம் இல்லாத பட்சத்தில் அதற்கேற்றாற் போல் உறுதியானவற்றைத் தேர்ந்தெடுக்கலாம்.



# பப்பட வடை



சமைப்போம் வாங்க

**தேவையானவை:**

பப்படம் - 4,
அரிசி மா - 2 கப்;
மிளகாய்த்தூள் - அரைக்கரண்டி
கறுப்பு எள் - 1 கரண்டி
பெருங்காயம் - சிறிதளவு
உப்பு - தேவைக்கு
எண்ணெய்- பொரிப்பதற்கு.

**செய்முறை**


வெயிலில் 15 நிமிடம் பப்படங்களை வைக்கவும். பெரிய பாத்திரத்தில் அரிசி மா, எள், பெருங்காயம், மிளகாய்த்தூள் மற்றும் உப்பு அனைத்தையும் சேர்த்து நன்றாகக் கலக்கவும். தண்ணீர் சிறிது சிறிதாகச் சேர்த்து பஜ்ஜி செய்வதற்கான மாப்பதத்தில் வைத்துக் கொள்ளவும். இந்த மாவில் பப்படத்தின் இரு பக்கங்களையும் தோய்த்து சூடான எண்ணெயில் சிவப்பு நிறம் வரும் வரை பொரிக்கவும்.

## நாளை

மார்கழி -19
திங்கட்கிழமை 04.01.2016
தீதி: தசமி: பி.கி. 04.45
நட்சத்திரம்: சுவாதி பி.கி. 05.07
ராகுகாலம்: 08.01 - 09.31
சுபநேரம்: 12.31 - 02.01 வரை

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 130 | 100 | 100 | 140 | 100 | 120 | 100 |
| கத்தரி | 250 | 160 | 180 | 200 | 200 | 160 | 120 |
| கரட் | 170 | 250 | 200–300 | 200 | 340 | 300 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 30 | 20 |
| பயிற்றை | 250 | 160 | 250 | 180 | 220 | 300 | 150 |
| பாகல் | 260 | 250 | 180 | 200 | 220 | 380 | 240 |
| கருணைக்கிழங்கு | 90 | 100 | 80 | 80 | 80 | 120 | 50 |
| பெ.வெங்காயம் | 100 | 70 | 100 | 90 | 90 | 100 | 60 |
| சி.வெங்காயம் | 140 | 140 | 120 | 140 | 130 | 180 | 130 |
| பூசணி | 60 | 40 | 60 | 50 | 40 | 80 | 60 |
| தக்காளி | 120 | 140 | 120 | 130 | 140 | 140 | 130 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 50 |
| கீரை | 40 | 50 | 50 | 20 | 30–40 | 50 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20–30 | 40 | 45 |
| பச்சை மிளகாய் | 800 | 600 | 800 | 500 | 600 | 1000 | 800 |
| புடோல் | 80 | 100 | 80 | 120 | 70–80 | 160 | 130 |
| கோவா | 120 | 140 | 120 | 160 | 140 | 160 | 150 |
| வெண்டி | 150 | 120 | 120 | 120 | 100 | 120 | 130 |
| போஞ்சி | 200 | 150 | 240 | 180 | 240 | 320 | 200 |
| லீக்ஸ் | 100 | 160 | 140 | 180 | 160 | 200 | 170 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50–60 | 60 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 80 | 100 | 90 |
| தேசிக்காய் | 110 | 150 | 120 | 120 | 160 | 120 | 120 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 30 |
| கறிமிளகாய் | 250 | 300 | 300 | 120 | 300 | – | 250 |
| இராசவள்ளி | 150 | 170 | 150 | 170 | 160 | 160 | 180 |



கோழியும் பன்றியும் காதலித்தன.
ஒரு நாள் இரண்டும் முத்தமிட்டன.
இதன் விளைவாக கோழிக்குப் பன்றிக்காய்ச்சல்.
பன்றிக்கு பறவைக்காய்ச்சல்.
இறுதியில் இரண்டும் இறந்துவிட்டன
முடிவு: பொருந்தாக் காதல் அழிவில் முடியும்

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | 2 | | | | |
| | | | | | 4 | 7 | | 1 |
| | 2 | | 7 | 1 | 5 | | | |
| | 5 | 8 | | | | 6 | | |
| 6 | 1 | 4 | | | | 3 | | 9 |
| | 3 | 2 | | | | 4 | 1 | |
| | 9 | 7 | 6 | 8 | | | 4 | |
| 2 | | 3 | 5 | | | | | |
| | | | | 9 | | | 7 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 9 | 3 | 1 | 4 | 8 | 6 | 2 |
| 6 | 4 | 3 | 8 | 9 | 2 | 1 | 5 | 7 |
| 1 | 2 | 8 | 6 | 7 | 5 | 4 | 9 | 3 |
| 4 | 1 | 5 | 2 | 6 | 7 | 9 | 3 | 8 |
| 3 | 6 | 2 | 5 | 8 | 9 | 7 | 1 | 4 |
| 8 | 9 | 7 | 4 | 3 | 1 | 6 | 2 | 5 |
| 7 | 3 | 4 | 1 | 2 | 6 | 5 | 8 | 9 |
| 2 | 5 | 6 | 9 | 4 | 8 | 3 | 7 | 1 |
| 9 | 8 | 1 | 7 | 5 | 3 | 2 | 4 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட் டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றைநிரப்பவேண்டியதேவேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலகஅளவில் பிரபல்யமானது.




கா வேட்டி காரன் Dec 10
இந்த உலகின் எந்த மூலையிலும்
தமிழுக்கு தமிழ் என்று தான் பெயர்...
ஆனால் உலகப் பெரு மொழியாம்
இங்லீஷுக்கே ஆங்கிலம் என பெயர்
வைத்தவன்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தினர் மீது அன்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். பெண்களுக்கு பொன், பொருள் சேரும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**இடபம்:** பிறரது எதிர்ப்பைப் பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில், வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள் இரவலாகப் பொருளை கொடுக்க, வாங்க வேண்டாம். உடல் நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

**மிதுனம்:** மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்குத் தகுந்த பயன் கிடைக்கும். குடும்பச் செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்க்கவும்.

**கடகம்:** நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில், உபரி வருமானம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்ப்பு நிறைவேறும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**சிங்கம்:** விவேகத்துடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள் சிக்கனமாகச் செலவழிப்பர். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**கன்னி:** நற்செயலில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும். ஆதாயம் கூடும். பணியாளர்கள் வெளியூர் செல்ல நேரிடும். பெண்கள் விருந்து விழாவில் பங்கேற்பர்.

**துலாம்:** சாதுர்யமாகப் பேசி, காரியம் சாதிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். அரசியல்வாதிகள் புதிய முயற்சியில் ஈடுபடுவர்.

**விருச்சிகம்:** மதிநுட்பத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில், மகிழ்ச்சி நிலைக்கும். பெண்களுக்கு, ஆடை ஆபரணங்கள் சேரும்.

**தனுசு:** சமூகத்தில் நல்லமனிதராகத் திகழ்வீர்கள் . தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். பிள்ளைகள் பெற்றோருக்குப் பெருமை தேடித் தருவர்.

**மகரம்:** நண்பருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், முதலீட்டை அதிகப்படுத்துவீர்கள். வாகனப் பயணத்தில் மிதவேகம் அவசியம். பெண்கள், குடும்ப நலனில் அக்கறை செலுத்துவர்.

**கும்பம்:** எதிர்கால நலன் குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், இடையூறு நீங்கும். இலாபம் உயரும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் ஏற்படும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மீனம்:** சாதனை முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் சீராகும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவர்.

# 204 படங்களில் 20 தான் ஹிட்; தொடரும் தமிழ் சினிமா அவலம்


வருடத்துக்கு ஒரு படம் அல்லது 3 வருடத்துக்கு ஒரு படம் எனக் கடைப்பிடித்த கமல், ரஜினி, ஆகியோர் 2015 ஆம் ஆண்டு அதை மாற்றிக் கொண்டனர். உத்தம வில்லன், பாபநாசம், தூங்காவனம் எனக் கமலின் 3 படங்கள் கடந்த வருடம் வெளியாகின. விஜய் நடித்து புலி மட்டும் வெளியானது. என்னை அறிந் தால், வேதாளம் என 2 படங்கள் அஜீத் நடித்து திரைக்கு வந்தன. "காஞ்சனா 2" மெகா ஹிட்டானது. "பாகுபலி" தமிழில் வெளியாகி வெற்றி பெற்றது. விக்ரம் நடிப்பில் ஐ, 10 எண்றதுக்குள்ள, படங்கள் வந்தன. சூர்யா நடித்த மாசு, பசங்க என 2 படங்கள் வெளியாகின. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஜோதிகாவும் 36 வயதினிலே பட மூலம் வெளிவந்தார்.
தனுஷுக்கு அநேகன், மாரி, தங்கமகன் படங்கள் கைகொடுத்தன. ஆக,




கடந்த ஜனவரி தொடங்கி டிசெம்பர் வரை 204 படங்கள் வெளிவந்துள்ளன. இதில் வெறும் 20 படங்கள் தான் வெற்றிப் படங்களாக அமைந்தன.

# இந்தியப் பிரதமரின் திடீர் பாக். பயணம்

## பிராந்திய அமைதிக்கு வித்திடுமா?



**ரெங்கன்**

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பாகிஸ்தானுக்கு திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டு அந்த நாட்டு பிரதமர் நவாஸ் ஷெரிப்புடன் கைகுலுக்கி பேச்சு நடத்தியிருப்பது இரு நாடுகளுக்கும் இடையிலான வருங்கால நல்லுறவுக்கான நல்ல சகுனமாக அமையும் என்று எல்லோராலும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டின் இறுதிக் கட்டத்தில் 2016ஆம் ஆண்டு ஆரம்பமாக இருந்த தருணத்தில் இந்த முக்கிய சந்திப்பு நிகழ்ந்திருக்கின்றது. இந்தியா 1947ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதிலிருந்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் மூன்று தடவைகள் பெரும் போர்கள் நடைபெற்றுள்ளன. சமீப காலத்திலும்கூட காஷ்மீர் எல்லையில் இரு நாட்டுப் படைகளுக்கும் இடையில் தொடர்ச்சியான மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

பாகிஸ்தானில் நிலைகொண்டுள்ள தீவிரவாதிகள் அடிக்கடி இந்தியாவுக்குள் பிரவேசித்து எல்லையோரப் பகுதிகளில் மட்டுமன்றி வேறுபல நகரங்களிலும் திடீர் தாக்குதல்களை நடத்தியிருப்பது இரு நாடுகளுக்கும் இடையில் கசப்புணர்ச்சிகளை அதிகமாக்கியுள்ளன. இந்தச் சம்பவங்களில் இரு தரப்பிலிருந்தும் கடுமையான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு முள்ளன.

இந்த நிலைமையில் இந்திய பிரதமர் நரேந்திரமோடி பாகிஸ்தானுக்கு திடீர் பயணம் ஒன்றை, முன் ஏற்பாடு எதுவும் இல்லாமலே மேற்கொண்டிருப்பதானது ஆச்சரியத்தைவிளைவித்திருந்தாலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சீர்படவும் முறிந்து போயுள்ள பேச்சுக்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதற்கும் உதவியாக இருக்கும் என்றும் கருதப்படுகின்றது.

இவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை மோதல்கள் தவிர்க்கப்பட்டு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள பேச்சு தொடரவேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் பல தடவைகளிலும் வற்புறுத்தி வந்துள்ளார். பிரதமர் மோடியின் பாகிஸ்தான் பயணத்தை ஐ.நா. வட்டாரங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்க முடியும். அதேசமயம் அமெரிக்கத் தரப்பில் ஏற்கனவே இந்தப் பயணம் வரவேற்கப்பட்டுள்ளது. இந்த இரு அணு ஆயுத நாடுகளுக்கும் இடையில் அமைதி நிலவுவது பிராந்தியத்தின் அமைதிக்கு உதவியாக இருக்கும் என்பதும் ஒரு நம்பிக்கையாகும்.

இந்தியப் பிரதமர் கடந்த வாரம் ஆப்கானிஸ்தானுக்கு பயணம் ஒன்றைமேற்கொண்டபோது பாகிஸ்தான் பிரதமருடனான ஒரு சந்திப்பை மேற்கொள்ள இருக்கிறார் என்று தனது ருவிற்றர் தளத்தில் திடீரெனப் பதிவு செய்திருந்தார். ஆனால் இந்தச் சந்திப்பு ராஜதந்திர முறையில் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

பிரதமர் நவாஸ் ஷெரிப்பை திடீரென்று சந்தித்தாலும் அவருக்கு பரிசாக ராஜஸ்தான் தலைப் பாகையொன்றை மோடி பரிசளித்திருப்பது பயணம் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருக்கவேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவதாய் இருந்தது.

ஆப்கானிஸ்தானிலிருந்து நாட்டுக்குத் திரும்புவதற்கு ஜெற் விமானம் ஏறுவதற்குமுன் மோடி பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். தாயகம் செல்லும் வழியில் சில மணி நேரம் அவர்கள் நாட்டில் தங்கலாமா என்று கேட்டார். அதற்கு ஷெரிப் நீங் கள் எங்கள் விருந்தாளி தயவுசெய்து வாருங் கள். என்னுடன் தேநீர் அருந்துங்கள். என்று விடை யளித்தார்.

நட்புகரமான ஒரு சந்திப்பில் இரு தலைவர்களும் தங்கள் நாட்டு மக்களின் நலனுக்காக உழைப்பதென ஒப்புக் கொண்டார்கள் என்று அந்த நாட்டு வெளியுறவு செயலர் அயிலாஸ் அகமது சவுத்ரி தெரிவித்தார்.

மோடி லாகூரில் இறங்கியதும் இரு தலைவர்களும் ஹெலிகொப்டர் மூலம் ராய்விந்திலுள்ள ஷெரிப்பின் மாளிகைக்கு ஒன்றாகப் பயணம் செய்தார்கள். இவ்வாறு இரு நாட்டுத் தலைவர்களும் பயணம் செய்திருப்பது இதுவே முதல்தடவை. அத்துடன் 11 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய பிரதமர் ஒருவர் பாகிஸ்தான் சென்றிருப்பதும் இதுவே முதல் முறை. இரு நாடுகளுக்குமிடையில் நல்லவித அண்டை நாட்டு உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு இரு தலைவர்களும் முடிவு செய்துள்ளார்கள் என்று தகவல்கள் கூறின.

## உலக நடப்பு

**மேற்குலகுக்கு ஐ.எஸ். அச்சுறுத்தல்**

இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.) அமைப்பின் தலைவர் பக்தாதி விடுத்துள்ள ஒலிநாடா அறிக்கையொன்றில் சவூதி அரேபியாவில் கிளர்ச்சியொன்றுக்கு அழைப்பு விடுத்திருப்பதுடன் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மீதும் மேற்குலகின் மீதும் தாக்குதல் நடத்தப்படும் என்று அச்சுறுத்தியுள்ள பக்தாதி தாம் ஒருகணமேனும் பலஸ்தீனத்தை மறப்பதில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

இறைவனின் ஆசியுடன் மிக விரைவில் முகைதீன்களின் காலடி ஓசையைக் கேட்பீர்கள். தினம், தினம் உங்களை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார் அவர். சவூதி அரேபியாவின் தலைமையில் ஐ.எஸ். எதிர்ப்பிலுள்ள 35 நாடுகளின் கூட்டமைப்பையே அவர் குறிவைத்திருக்கிறார் என்று கருதப்படுகின்றது.

## குறிக்கோள் முக்கியம்!

(31 பக்கத் தொடர்ச்சி)

**சோகத்தை ஒழிக்கும் வழி**

என்ன கொடுக்கலாம்? ஒவ்வொருவரிடமும் கொடுக்க நிறைய உள்ளது. பெரிதாகப் பணம் இருக்கவேண்டும் என்று அவசியமே இல்லை. பார்வையற்றவருக்குப் படித்துக் காட்டுங்கள். உங்கள் பணியாளர் குழந்தை களுக்குப் பாடம் எடுங்கள். உறுப்பு தானம் செய்யலாம். நீங்கள் பயன்படுத்தாத பல பொருள்களை நல்ல நிலையில் இல்லாதவருக்குக் கொடுக்கலாம். ஆல யத்தைச் சுத்தப்படுத்தலாம். முதியோர் இல்லத்தில் சென்று அவர்களுடன் அன்பு பாராட்ட. கல்விக்குப் பணம் கட்ட முடியாதவருக்குப் பணம் கட்டலாம். மனம் சோர்ந்தவர்களிடம் உற்சாக வார்த்தைகள் பேசலாம். ஆலோசனை சொல்லலாம்.

வசதி உள்ளவர்கள் சேவை மனப்பான்மை கொண்டவர்களுக்கு நிறையச் செய்யலாம். கொடுப்பது என்பதுதான் முக்கியம். யாருக்கு எதைக் கொடுப்பது என்பது அவரவர் தெரிவு. கொடுப்பது துக்க நிலையை மாற்றும். துக்கம் சுய நலமான உணர்வு. எனக்கு இது இல்லையே என்ற சுய பரிதாபம் தரும் சோகம்தான் துக்கத்தில் முதன்மையான பகுதி. தன் மேலுள்ள சிந்தனையை மாற்றப் பிறருக்கு உதவ ஆரம்பியுங்கள். துக்கம் விலகும். புதிய நம்பிக்கைகள் பிறக் கும். பல பிடிமானங்கள் வாழ்க்கையில் உள்ளது தெரியும்.

சொந்த வாழ்வில் சோகங்கள் இல்லாதவர்கள் யார்? ஆனால் பிறரின் சோகத்தைத் துடைக்கத் துணிகையில் சொந்த சோகம் இடம் தெரியாமல் போகும். எல்லா உலகத் தலைவர்களும் இதை உணர்ந்தவர்கள்தான். டால்ஸ்டாய் மோசமான தாம்பத்திய வாழ்க்கையை அனுபவித்தவர். ஆனால் இலக்கியம் அவரை இளைப்பாற்றியது. இந்தியாவின் தந்தை காந்தியின் புதல்வர் ஹரிலால். அவருக்கும் காந்திக்கும் ஒரே மோதலும் முரண்பாடும்தான். ஆனால் தேசப்பணி காந்திஜியைச் சோகத்தில் ஆழ்ந்து விடாமல் பார்த்துக் கொண்டது.

**தற்கொலை தீர்வா?**

படிப்பில்லை. பணமில்லை. சொந்த பந்த ஆதரவில்லை. பிள்ளைகள் சரியில்லை. நோய்கள். பணியில் பிரச்சினைகள். யாருக்குத்தான் சோகமில்லை? ஆனால் சாவு அதற்குத் தீர்வில்லை.

வாழ்க்கையில் நம்பிக்கைகள் முக்கியம். நமக்கேற்ற பிடிமானங்களைத் தெரிவு செய்துகொள்வது மிக முக்கியம். அது மதமோ, விளையாட்டோ, அரசியலோ, சினிமாவோ, இலக்கியமோ, சமூக சேவையோ, வேலையோ ஏதோ ஒன்றாக இருக்கட்டும்.

வாழ்வின் இன்பங்கள் விரைவில் திகட்டி விடும். துக்கங்கள் என்றும் தொடர்ந்து வரும். ஆனால், வாழ்வில் நாம் வைத்துள்ள குறிக்கோள் நம்மைச் சீராக இயக்கிச் செல்லும். சொந்த வாழ்வின் சோகங்களையும் புறந்தள்ள வைக்கும். உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன என்று யோசியுங்களேன்!

ICC WORLD TWENTY20 INDIA 2016

# விளையாட்டு உலகில் இந்த வருடத்தில் சிறப்பு அம்சங்களாக அமைபவை எவை?

பிரகாஸ்

நான்கு வருடத்துக்கு ஒருதடவை நடைபெறும் பழைமையான பாரம்பரியத்தைக் கொண்ட ஒலிம்பிக் தொடர் இந்த வருடத்தில் நடைபெறவுள்ளமை விளையாட்டு உலகில் சிறப்பு அம்சங்களில் பிரதானமானதாக அமைந்துள்ளது. தவிரரி-20உலகக்கிண்ணமும்நடைபெறவுள்ளமை கிரிக் கெட் ரசிகர்களிடையே சிறிது எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் இந்த வருடம் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. தொழில்நுட்பங்களில் பல்வேறு புரட்சிகளுடன் இந்தத் தொடர் அரங்கேற இருப்பதால் உலகமே ரியோ ஒலிம்பிக்கை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் காத்துள்ளது. குறிப்பாக நீர் விளையாட்டுக்களின் மீது ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கள் எகிறியுள்ளன. அரசின் அனுமதியுடன் ஊக்கமருந்தை உபயோகப்படுத்தியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்ட ரஷ்யாவும், கென்யாவும் தொடரில் பங்கேற்பது சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது. பெரும்பாலும் இந்த இரண்டு நாடுகளுக்கும் தடை விதிக்கப்படலாம் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. மட்டுமல்லாது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் மக்கள் அதிகமாக குவியும் விளையாட்டு நிகழ்வுகளையும் தமது பிரதான இலக்குகளாக கொண்டுள்ளதால் பாதுகாப்பும் வரலாறு காணாத அளவுக்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் இலங்கை களமிறங்குகிறது. ஆனால் இலங்கை அணியால் கிண்ணத்தை தக்க வைக்க முடியுமா என்பது இலங்கை ரசிகர்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது. சங்கா, மகேல காலத்தில் இருந்த இலங்கை அணியுடன் இப்பொழுது இருக்கும் இலங்கையை ஒப்பிடும்பொழுது கிண்ணம் தங்குவது கேள்விக் குறியே. ஆசியாக் கிண்ணமும் இந்த வருடமே நடைபெறவுள்ளது. ஆசியக் கிண்ணத்தொடர் பங்பகளாதேஷில் நடைபெறுகின்றது. இதுவரை காலமும் 50 பந்துப்பரிமாற்றங்களாக நடைபெற்றுவந்த இந்தத்தொடர் இந்த வருடம் ரி-20 தொடராக நடைபெறவுள்ளமை சிறப்பம்சம். மொத்தத்தில் இந்த வருடத்தில் ரி-20 ஆட்டங்களுக்கு பஞ்சமில்லை.

ஐ.பி.எல். தொடரில் சென்னை, ராஜஸ்தான் அணிகள் இந்தமுறை களமிறங்காவிடினும் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட புனே, ராஜ்கோட் அணிகளின் மீதான எதிர்பார்ப்புக்கள் எகிறியுள்ளன. எனினும் இந்தமுறை சென்னைக்கு விசில் போட முடியாதது ஏமாற்றமே. புனே அணியில் டோனியும் அஸ்வினும் களமிறங்குவதால் சென்னை ரசிகர்களில் பலரதும் ஆதரவு புனேக்கு இருக்கும் என்பது வெளிப் படையானதே. மட்டுமல்லாது டெல்லி அணி யுவராஜ் சிங்கை அணியில் இருந்து நீக்கியுள்ளது. முன்பு புனே வாரியர்ஸ் என்ற அணி ஐ.பி.எல். தொடரில் இருந்த பொழுது அந்த அணிக்கு யுவராஜ் தலைவராக செயற்பட்டார். இதனால் புனே யுவராஜ்ஜை வேண்ட முனைப்புக் காட்டும். அவ்வாறு நடைபெற்றால் டோனியும், யுவராஜ் சிங்கும் ஒரே அணியில் விளையாடும் நிலை ஏற்படும்.


அத்துடன் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டுவரும் இந்தியா -பாகிஸ்தான் தொடர் இந்த வருடத்தில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் அட்டவணை மிகவும் இறுக்கமாக உள்ளது. இந்த வருடத்தில் அந்த அணிக்கான ஓய்வுக்காலம்மிகமிகக்குறைவு. ஆதலால்ஜூன்மாதம் நடைபெறவுள்ள சிம்பாப்வேக்கு எதிரான தொடரைக் கைவிட்டு பாகிஸ்தானுடன் விளையாடக்கூடும். இல்லாவிட்டால் இங்கிலாந்து - பாகிஸ்தான் தொடர் இந்தியாவையும் சேர்த்து முத்தரப்பு தொடராக நடைபெறவும் வாய்ப்புக்கள் உள்ளன.

இவற்றைவிட வருடாவருடம் நடைபெறும் கிரிக்கெட் தொடர்கள், சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்கள், நாடுகளின் ரென்னிஸ் தொடர்கள், லா லிகா கால்பந்தாட்டத் தொடர், ஐரோப்பிய கால்பந்தாட்டத் தொடர், சர்வதேச அந்தஸ்துபெற்ற பூப்பந்தாட்டத் தொடர்கள், ஸ்குவாஷ் தொடர்கள், ஹொக்கித் தொடர்கள் ஆகியனவும் நடைபெறவுள்ளன. ரென்னிஸ் தொடர்களில் முதலாவதாக ஆஸ்திரேலிய தொடர் இந்த மாதம் மத்தியில் ஆரம்பமாகிறது.

vivo IPL





## இலங்கைக்குச் சீனா 50 மில். டொலர் உதவி

கொழும்பு,ஜன.3

நாட்டின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காக 50 மில்லியன்அமெரிக்கடொலரை நன்கொடை நிதியாக வழங்குவதற்கு சீன அரசு தீர்மானித்துள்ளது என்று சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சுதெரிவித்துள்ளது. இந்த நிதியில் பெரும்பா லான பகுதி சுதேசமருத்துவத்துறையின் மேம்பாட்டுக்கு பயன் படுத்தப்படவுள்ளது என்றும், மற்றைய பகுதி அரச வைத்தியசாலைகளின் அபிவிருத்தி உட்பட சுகாதார துறைகளின் ஏனைய மேம்பாட்டுக்குப் பயன்படுத்தப் படவுள்ளது என்றும் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. அத்துடன் சீன நன்கொடை நிதியைப்பயன்படுத்திக்கொள்வதற்கான செயற்றிட்டமொன்றைதயார்செய்து சமர்ப்பிப்பது தொடர்பான அறிவுறுத்தலை சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரமவிடம் முன்வைத்துள்ளார்என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-ரி2)

## மரண அறிவித்தல்

### திருமதி லீலாவதி கந்தசாமி

பிறப்பு 09 . 06 . 1947



இறப்பு 31 . 12 . 2015

வேலணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி கந்தசாமி 31.12.2015 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமநாதன் - நாகம்மா தம்பதிகளின் மருமகளும், கந்தசாமியின் அன்பு மனைவியும், சசிகுமார் (ஜேர்மனி),சசிகலா (நோர்வே), சாந்தநிதி (லண்டன்), சந்திரகுமார் (கொழும்பு), சரண்யா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சோபனா (ஜேர்மனி), மதியழகன் (நோர்வே),காந்தரூபன் (லண்டன்), சாந்தினி (கொழும்பு), ரஜீந்திரன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், புனிதவதி, இந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தம்பிஐயா, காலஞ்சென்ற சிவபாலன், இரத்தினசிங்கம் (சுவிஸ்), கனகாம்பிகை (சுவிஸ்), அம்பிகாவதி (நோர்வே), சரோசா தேவி (இலங்கை), தவமணி ஆகியோரின் மைத்துனியும், கௌசிகா, டிலக்சனா, லதீசன், நிரூஷன், விதுஷா, விரிஜா, கனிஷ்கா, துசாந், டவிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (02.01.2016) சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து இரவு 7.00 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் இன்று (03.01.2016) ஞாயிற்றுக்கிழமை முதல் வேலணையிலுள்ள (3ஆம் வட்டாரம்) அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (04.01.2016) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(67280)
(11,15,18)

| | | |
|---|---|---|
| இல.29, கிராண்ட்பாஸ் றோட், கொழும்பு - 14 | 011 245 4723, 077 448 1213 | தகவல்: கந்தசாமி (கணவர்), பிள்ளைகள் |

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை - பாலசுப்பிரமணியம்

(முன்னாள் வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்க லொறிச் சாரதி)



பிறப்பு: 18.06.1942

இறப்பு: 24.12.2015

யாழ். புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் 24.12.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் வாகீசன்(இலங்கை), தாரினி(சுவிஸ்), யாழினி(இந்தியா), தியாளினி(சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), பகீதரன்(பிரான்ஸ்), தமிழினி( பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்ஷினி( இலங்கை), இராசேந்திரம்(சுவிஸ்), கருணாகரன்(இந்தியா), பாஸ்கரன்(சுவிஸ்), நிஷாந்தினி (பிரான்ஸ்), தமிழ்வேணி(பிரான்ஸ்), ஜனகன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லோவிதா(பிரான்ஸ்), யதுஷா, பிரதீபா, தனுஷாந்த் (இலங்கை), கிஷாந்த், நிருஷாந்த் (சுவிஸ்), நிரோஜன்(பிரான்ஸ்), வரப்பிரஷாத், அவிநயா (இந்தியா), யதுர்ஷிகா(சுவிஸ்), சரண்(பிரான்ஸ்), அபியன்( பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான தம்பு, சபாபதி, கற்பகம், ஐயம்பிள்ளை, கனகம்மா, நடராசா, செல்லம்மா, இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை மற்றும் சந்திரவதனா, பத்தினிப்பிள்ளை காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் சரஸ்வதி காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் மகாலெட்சுமி, வேவி, சரவணமுத்து காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி, ஜெயலட்சுமி, நாகலட்சுமி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான செல்லையா, மகாலட்சுமி, நாகரத்தினம், கனகேஸ்வரி, திருநாவுக்கரசு மற்றும் சற்குணம் காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் நித்தியலட்சுமி காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் தவகுலராணி, இராசலிங்கம், மகேஸ்வரி, சாந்தலிங்கம், காலஞ்சென்ற சரசமலர் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2016) திங்கட்கிழமை Maison Funeraire de villetaneuse, 95 Rue Marcel Sempat 93430 Villetaneuse, France இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| 195, சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம். | தகவல்: குடும்பத்தினர். |

## மரண அறிவித்தல்

### திருமதி விக்ரோறியா அப்சலோம் முத்துராஜா

(4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை)

பிறப்பு 04.01.1928

இறப்பு 30.12.2015



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட விக்ரோறியா அப்சலோம் முத்துராஜா 30.12.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து- றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், அப்சலோம் முத்துராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெனிலியம்மா,றோசலின்,யோசப் மற்றும் லில்லி மற்றில்டா ஆகியோரின் அன்புச் சகோதரியும், புளோரன்ஸ்ராணி (பருத்தித்துறை), மலர்ராணி (கொழும்பு), ஹேபேட் (கனடா), ஜேம்ஸ் (கனடா), சுகிர்தராணி (யாழ்ப்பாணம்), ஜேக்கப் (கனடா),ஜெயராணி (கனடா), புஸ்பராணி (கனடா), கயிற்றஸ் (அமெரிக்கா), தேவராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இருதயராஜா, யோசப், மேசி, டயனி, காலஞ்சென்ற ஜெறோமியாஸ் மற்றும் அமலி, கிறிஸ்ரி, செபமாலை முத்து, பிரியா, மறினா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சித்ராணி மற்றும் விஜயா,திவ்வியன், தர்ஷினி, வினோதினி, றெட், ரஞ்ஜித், அஜித், எவோடி, ஒட்றி, ஆன்றிஸ்ரா, செந்தூரன், தேனுகா, டிலான்,தினேஷியா, ரதிகா, ரஜீவ், சறோன்,றியா, ஜோஜல், ஜொனதன், ஜொலின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(04.01.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.45 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு 11 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

இருதயராஜா - பருத்தித்துறை - 077 631 0018, யோசப் - கொழும்பு - 077 345 1383, ஹேபேட் - கனடா - 905 460 0970,
ஜேம்ஸ் - கனடா - 905 702 9890, சுகிர்தராணி - யாழ்ப்பாணம் - 077 162 7545, ஜேக்கப் - கனடா - 416 473 7761,
ஜெயராணி - கனடா - 905 915 1162, புஸ்பராணி - கனடா - 905 794 8728, கயிற்றஸ் - அமெரிக்கா - 134 762 4535, தேவராஜா - லண்டன் - 442 085 093 674.

தகவல்:குடும்பத்தினர்.
4ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

(f/28238)(11,15)

# இனந் தெரியாத குழுவினரால் சேதமாக்கப்பட்ட குடிசைகள்

## மாவடிவேம்பில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜன.3

மட்டக்களப்பு ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி -1 மற்றும் மாவடி வேம்பு ஆகிய கிராம சேவகர் பிரிவுக்குப்பட்ட பொது மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் அத்துமீறி நுழைந்த ஒரு குழு அங்கிருந்த குடிசைகளைச் சேதமாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளதாவது- அத்துமீறி குடியிருப்புக்குள் புகுந்தவர்கள் குடிசைகளை சேதமாக்கியதுடன் பயிர்கள், வேலிகளையும் பிடுங்கி எறிந்தனர். அத்துடன் மக்களை உடனடியாக வெளியேறு மாறும் உத்தரவிட்டனர். வெளியேறாவிட்டால் குடிசைகளை எரிப்போம் எனவும் அச்சுறுத்தினர்.

குறித்த நிலப்பகுதி தனக்கு சொந்தமானது என்று வந்த பெண் தன்னுடன் பல குண்டர்களைக் கொண்டுவந்து குடியிருப்புக்களை நாசமாக்கியதாக ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம். நாங்கள் நிலத்தின் உரிமையாளர் ஊடாக உரிய முறையில் தேவையான நிலத்தை அளந்து அதற்கான பெறுமதியைக் கொடுத்து உறுதிப்பத்திரம் கூட சட்டபூர்வமாக பெற்றுள்ளோம். நாங்கள் சித்தாண்டியில் தாழ் நிலப் பிரதேசங்களில் இருப்பவர்கள். எங்கள் பகுதியில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதனால் நாங்கள் அடிக்கடி இடப்பெயர்வுக்கு உள்ளாகின்றோம். இந்தக் காணியை வாங்கி அதற்கு அதிக பணம் செலவு செய்து துப்புரவு செய்து வேலி, குடிசை மற்றும் வீட்டுப் பயிர்கள் வளர்த்து பராமரித்து வரும் நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.- என்றனர்.

சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-10)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் கந்தையா லோகநாதன்**

தோற்றம் 1941.07.16

மறைவு 2014.12.16

ஆண்டாண்டு காலம் அழுதாலும் தீருமோ ? அப்பா உங்கள் இழப்பு !
ஓராண்டு காலம் ஓடிமறைந்து விட்டது ! - ஆனால்
உங்கள் நினைவு எம் நெஞ்சில் நீக்கமறக் கலந்துள்ளது
காலங்கள் மறையலாம் எம் கனவுகளைச்சுமந்த
எம் அப்பாவின் நினைவுகள் மாறாது

40/2, [illegible]

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

---

## 16ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி **சிவலோகநாயகி குணபாலசிங்கம்**

திதி:நவமி

மலர்வு 28.05.1937

உதிர்வு 31.12.1999



அன்போடு அரவணைத்த அன்னையே!
பண்போடு வளர்த்து பரமனடி சேர்ந்தீரோ?
எந்நாளும் உம் நினைவே உள்ளத்தில் மலர்கிறதே!
இந்த நாளில் ஆத்மா சாந்தியடைய
வேண்டுகின்றோம்.

உசன், மிருசுவில்.

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(67220) (11,15,18)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் நாகலிங்கம் செல்வநாயகம்**

கடந்த 05.12.2015 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் நாகலிங்கம் செல்வநாயகம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உறவினர்கள், நண்பர்களுக்கும், துண்டுப் பிரசுரம் மற்றும் பத்திரிகை மூலம் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் மற்றும் நேரடியாக வந்து சரீர உதவி மற்றும் பிற உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு,

இன்று (03.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(67257) (11,15,17,18)

குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மாவதி சிதம்பரநாதன்



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வவுனியா கதிரேசன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சிதம்பரநாதன் 25.12.2015 வெள்ளிக்கிழமை நள்ளிரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் சிதம்பரநாதன் (PWD - Officer) அவர்களின் அன்பு மனைவியும் பிள்ளைகளான சிறிகாந்தன் (ஓய்வு பெற்ற R.I - வலி மேற்கு பிரதேசசபை), சிறிகரன்(ஆஸ்திரேலியா), சிறிமோகன் (The Finance Company, யாழ்ப்பாணம்) சிறிரஞ்சன் (அபிராஸ் Pharmacy - வவுனியா), ஞானகௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும் தாழநாயகி, சிவானி, கலாநிதி, கந்தகௌரி, யோகராஜா(யாழ்ப்பாணக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் தேவிகா(ஆசிரியை - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்), சுபோதினி(ஆஸ்திரேலியா), சேயோன், சிறிகஜன், சிறிஅபிராம், கௌதமி(கனடா), சிறிராகவன், கௌசிகா, கௌசாளினி, கேசவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.அன்னார் பிரதீபனின் அன்புப் பேர்த்தியும் அக்ஷயாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 25.12.2015 அன்று இளைய சகோதரன் சிறிரஞ்சனின் இல்லத்தில்(இல -27, கதிரேசன் வீதி, வவுனியா) இடம் பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (67303)(14,16)

| | | |
|---|---|---|
| அத்தியடிப்பிள்ளையார் கோயிலடி, வட்டுக்கோட்டை. | தகவல்: T.S சிறிகாந்தன் (மகன்) | தொடர்புகளுக்கு: 077 746 3630 024 222 2592 |

---

### கணபதி கந்தையா (பிள்ளையாரப்பா)



பிறப்பு 1937.09.14

இறப்பு 2015.12.30

யாழ்.அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை நிலாவெளி மற்றும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கந்தையா 30.12.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பொற்கொடியம்மா அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னுராசா, ரத்தினம் மற்றும் முத்துராசா, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரேணுகாதேவி, சந்திரசேகரம், தேவிகாதேவி, சிவனேசன், ஞானசேகரம், கர்ணசேகரம், சோதிசேகரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனநாயகம், யசிநந்தினி, நவரட்ணசாமி, சுகிர்தா, ஜெயந்தா, தர்மினி, ஜேந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரஞ்சினி - திலீபன், பவித்திரா - சிவனேஸ்வரன், விக்ஷன், அனோஜன், யதீபன், திவ்யா, கிதுசன், தரங்கினி, ஏஞ்சலா, சுப்ரயா, திவிசன், ஆதீஸ், பிறின்ஸ், மதுஸ், அனிஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் அக்ஷிகா அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.01.2016 திங்கட்கிழமை மதியமளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| தகவல் தனநாயகம் ரேணுகாதேவி குடும்பத்தினர். | தொடர்பு: 077 128 8924 |

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி (குஞ்சு) பாலசிங்கம்



கொக்குவில் மேற்கு, வராஹி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி (குஞ்சு) பாலசிங்கம் 01.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கு.பாலசிங்கத்தின் (பற்பநாதன் - மரக்காலை உரிமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குழந்தை - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், பாஸ்கரன் (தயா-பிரான்ஸ்), சுவேகரன் (வவா), தனேஸ்வரன் (சின்னக்குஞ்சு), தர்சினி (பாமா),மனோகரன் (ஜீவா- பிரான்ஸ்), சுதாகரன் (சாந்தன் - பிரான்ஸ்),கோணேஸ்வரன் (றூபன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகந்தினி (பிரான்ஸ்),பார்வதி (செல்வி), விஜேந்திரன் (விஜி) ஆகியோரின் அன்பு மாமியாரும், புண்ணியமூர்த்தி, சின்னக்கிளி, யோகராசா, ராசாத்தி, அரியராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகிந்தன், அமிசா, மிற்றோசன், கிஷான், ஹன்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| வராஹி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு. (67304)(11,15,18) | தகவல்: குடும்பத்தினர். |

---

### சி. சிவசுப்பிரமணியஐயர்

(வள்ளக்குளம் மணிஐயா)



பிறப்பு 1923 . 02 . 15

இறப்பு 2016 . 01 . 01

யாழ்.ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் மறவன்புலோ மத்தியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரைஐயா சிவசுப்பிரமணிய ஐயா 01.01.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரைஐயா- தங்கம்மா தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி அம்மாவின் கணவரும் ஜெகன்நாதசர்மா, சந்திராதேவி, காலஞ்சென்ற அருணாதேவி மற்றும் கலாமணி, ஜெயகாந்தன், காலஞ்சென்ற கேதீஸ்வரசர்மா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இராஜராஜேஸ்வரி, தியாகராஜசர்மா, சண்முகநாதசர்மா , வஸ்சலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 .00 மணியளவில் மறவன்புலோ மத்தியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மறவன்புலோ தனிப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| மறவன்புலோ மத்தி, சாவகச்சேரி. | தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள் |

# இடர் காவு கொண்ட சமூக உளம்

மருத்துவர் யமுனாநந்தா

(இடர்காவு கொண்ட சமூக உளம் என்ற தலைப்பில் கடந்த வாரம் பிரசுரமான கட்டுரையின் தொடர்ச்சி இது. இடரினால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு வட்டம் குறித்து கடந்த தொடரில் பார்த்தோம்.)

ஆதரவான சமுதாயத்தைக் கட்டி எழுப்ப ஒழுங்கான தலைமைத்துவம் இன்றேல் சமுதாயம் பல கூறுகளாகப் பிரிந்து, பிணக்குகள் அதிகரிக்கும். இதனால் அந்தச் சமுதாயத்தின் ஆதரவளிக்கும் வல்லமை அற்றுப்போகும்.

**சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் தலைமைத்துவம்.**

**சமூக உதவியாளர், சமூகத் தொண்டர்**

ஒவ்வொரு சமூகமும் தனது சொந்த வழியில் எதிர்கொள்ளும். இதற்கு உள்ளூர் மக்களின் பங்களிப்பு அவசியம். ஏனெனில் அவர்களுக்கே இடங் கள் தெரியும். உறவு உள்ளவர்கள் உளவியல் பிரச்சினைகள் ஆரம்பத்தில் புறக்கணிக்கப்பட்டு இருக்கும்.

ஆரம்பத்தில் இவற்றை அடையாளம் கண்டு உதவ வேண்டும். ஆரம்பத்தில் விருப்பத்துடன் அனுபவங்களைக் கூறுவர். காலப் போக்கில் சம்பவங்களைக் கூறத் தயங்குவர். ஆரம்பத்தில் உளவள ஆலோசனை வழங்கல் நல்லது. பொதுவாக உளத்தாக்கங்கள் பற்றிக் கதைக்கமாட்டார்கள். ஆனால் அவர்களிடம் விசேட கவனம் செலுத்தினால் கதைப்பர்.

ஒழுங்கான தரிசிப்புக்கள் மூலம், சமூக உள உதவிகளை வழங்கலாம். க்தைத்தல், உணர்வுகளை வெளிப்படுத்தல், பிரச்சினைகளை ஆராய்தல். கூட்டம் கூட்டி விளக்குதல்.

**சமூக உளவள மேம்படுத்துநர்**

1. மனதிலும் உடலிலும் ஏற்படும் மாற்றங்களை அறிதல்
   இடரினால் உணர்வுகளிலும் உடற்றொழிலிலும் மாற்றங்கள் ஏற்படும்.
2. சமூக உள ஆதரவால் உடற்றொழிலியலின் உணர்வுபூர்வமான மாற்றங்களைக் குறைத்தல்.
   உணர்வுபூர்வமான ஆதரவு வழங்கல், உறவுகளை வளர்த்தல், அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் வெளிக்கொணரல்.
3. ஆதரவு கொடுத்தலும் மீளக் கட்டி எழுப்பலும்.

நட்டஈடு பெற்றுக் கொடுத்தல். வீட்டைக் கட்டிக்கொடுத்தல் வீட்டுப்பொருள்களைப் பெற்றுக் கொடுத்தல். உதவிகளை வழங்கக் கூடிய வர்களை அதிகம் பாதிக்கப் பட்டவருக்கு உதவ வழி அமைத்தல். மருத்துவ உதவி வழங்கல். இவ்வாறு பல வழிகளில் உதவி செய்யும் போது அவர்கள் பல வழிகளில் மீள உதவும்.

**செய்ய வேண்டியவை.**


1. ஒழுங்காகக் குடும்பங்களைப் பார்வையிடல்.
2. மருத்துவ உதவி வழங்கல்.
3. உறவினர்களைத் தொடர்புகொள்ள உதவுதல்.
4. நடைமுறைப் பிரச்சினைகளான நட்டஈடு பெறல், வீடமைப்பு, கல்வி, பாதுகாப்பு என்பவற்றில் உதவுதல்.
5. பாதிக்கப்பட்ட மற்றையவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உதவுதல்.
6. தீர்வுகூறப் போகக் கூடாது. நடுநிலையாக செயற்படல்.

**செய்யக் கூடாதவை.**

1. தவறான வாக்குறுதிகளை வழங்கக் கூடாது.
2. பாதிக்கப்பட்டவர்கள் சார்பாகத் தீர்மானம் எடுக்கக் கூடாது.
3. சமுகமளிக்காது விடக் கூடாது.
4. நடத்தையால் பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது.
5. வேலைப்பளு ஏற்படக் கூடாது.
6. பக்கச் சார்பாக நடக்கக் கூடாது.

**சமூக உள இடை உதவல்கள்.**

சாதாரண சூழலில் மக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தாமாகவே தீர்த்துக் கொள்வர். ஆனால் இந்த இடர்ச் சூழலில், மக்களின் சமநிலை பாதிக்கப்பட்டு, உணர்வு மாற்றங்களைக் காட்டும். அவர்கள் வெற்றிகரமான எதிர்கொள்ளலை அடையும் வரை உணர்வு ரீதியான ஆதரவு தேவை. விழுந்து கிடப்பவனை இருந்து எழும்பி சுயமாக நடக்க வைக்கும் நிலைக்குக் கொண்டு வேண்டும்.




மேற் கூறிய மூன்றும். உணர்வு அசௌகரிய நிலையை அனுசரித்து எதிர்கொள்ள உதவும்.

**உளவியல் முதல் உதவி. இடரின் நிலை.**

1. உடனடித் தேவைகளைக் வழங்கல். உணவு, உடை, உறைவிடம், மருந்து
2. பாதிக்கப்பட்டவருடன் உரையாடல்
3. குடும்ப அங்கத்தவர்களை இணைத்தல்
4. நிவாரணம் பெற உதவல்.
5. மருத்துவ தேவைகளைக் கவனித்தல்

**சமூக உள பராமரிப்பில் ஏழு அம்சங்கள்.**

இடரில் உபயோகிக்கக் கூடிய 7 முறைகள்.

1. உணர்வுகளை வெளியேற்றல்.
2. உள்ளார்ந்த உணர்வு
3. உயிர்ப்பான செவிமடுத்தல்
4. சமூக ஆதரவு
5. தளர்வாதலும் பொழுதுபோக்கும்
6. ஆன்மிகம்
7. உள்ளார்ந்த உணர்வு

1. உணர்வுகளை வெளியேற்றல்

பகிர்வதால் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கதைத்து அனுபவங்களைப் பகிரல். இழப்புக்களைப் பற்றிக் கதைப்பதால் சுகமடைவர். அழுத்தத்தைக் குறைக்க உதவுவர். இது மிகவும் முக்கிய மானது.


நெருக்கீட்டுக்கு உட்பட்டோர் சாந்தமடையக் கஷ்டப்படுவர். வேறு அறி குறிகள் காணப் படலாம்.

1. அவதானமாகச் செவிமடுத்தல்
2. கண் தொடர்பைப் பேணல்.
3. அசௌகரியங்களை ஏற்றுக் கொள்ளல்.
4. குறுக்கிடக்கூடாது.
5. அழுவதை நிறுத்துமாறு கூறக் கூடாது.
6. கையைப் பிடித்து, தோளைத்தட்டி ஆறுதல் கூறலாம். சமூகத்தின் கலாசாரத்துக்கு ஏற்பப் பேசுதல்

2. அதனாலாதல் / உள்ளார்ந்த உணர்வு

நாம் மற்றவர்களைப் பார்க்கும்போது அவர்களின் வெளித்தோற்றமே எமக்குத் தெரியும். ஆனால் நாம் முயற்சி செய்தால் அவர்களின் மனநிலையை அறியலாம்.

மற்றவர்களின் துன்பத்தைத் தமது துன்பமாக உணரும் நிலையிலேயே உணர்வுகளைப் பகிரமுடியும். இதனைத் துணை நாடி உணரக்கூடியதாக இருக்கும்.



3. உயிரோட்டமான செவிமடுத்தல்

சரியான செவிமடுத்தல், உணர்வுபூர்வமான ஆதரவுக்கு மிகவும் முக்கியமானது. சமுதாயத்தில் இடரின் பின் இரகசியம் கதைப்பதற்கான வெற்றிடம் காணப்படும் சூழல் இருக்கும்.

கண்தொடர்பைப் பேணலின்போது, இடைக்கிடை தலையசைத்தல், ஆம் எனல் செவிமடுத்தல், குறுக்கிடுவதைத், தவிர்த்தல், கூறுவதை அப்படியே ஏற்றல். உள்ளார்ந்த உணர்வுக்குட்படல், உணர்ந்ததாகக் கூறல்.

4. புறக்காரணிகளில் கவனத்தைத் திருப்பல்.

வேறு தொழில்களில் ஈடுபட ஊக்குவித்தல். மீளலில் உதவும் மக்கள் வேலை செய்யும்போது மனம் பிரயோசனமாகச் செயற்படும். இதனால் அவர்கள் ஆறுதலாக இருப்பர்.

வேலை செய்தல் நல்லது, கால்நடை வளர்த்தல்

5. சமூக ஆதரவு; உணர்ச்சி பூர்வமான ஆதரவு இது சூழலில் இருந்து கிடைக்கும் போது திருப்தியாக இருக்கும்.

**சமூக ஆதரவு**

இடரின் பின் அழிந்து காணப்படும் புதிய இடத்துக்குப் போகும்போது படிப்பதற்கு, வேலை செய்வதற்கு பாதுகாப்பின்மை, தனிமை, பயம் என்பன ஏற்படுகின்றன. அங்கு எம்மைத் தெரிந்தவரைக் கண்டவுடன் சந்தோசம் ஏற்படுகின்றது. அதே போன்ற சூழலை அமைக்க வேண்டும். அதனாலேயே பாதிக்கப்பட்டவர்கள் மனத் தாக்கத்துக்கு உட்படல் குறையும் பாதுகாப்பை உணர்வார்.

6. சாந்த வழிப்படுத்தலும் பொழுது போக்குக்களும்

சாதாரண வழமைக்கு திரும்ப, ஒருவரது மனதில் உள்ள நெருக்கீட்டின் உணர்ச்சிகளை மாற்ற வேண்டும். சாந்த வழிப்படுத்தலும் பொழுதுபோக்கு வசதிகளும் நெருக் கீட்டைக் குறைத்து மீள்நிலைக்கு கொண்டு வரும். பொழுதுபோக்கு நடவடிக்கையில் ஈடுபடும்போது மிகவிரைவில் மீளக் கூடியதாக இருக்கும். விளையாட்டுக்கள் சங்கீதம், சுவாசப்பயிற்சிகள், சாந்த வழிகள் மூலம் பதகளிப்பைக் குறைக் கலாம்.

**சுவாசப் பயிற்சி**

நிலத்தில் இருந்து கொண்டு, கையை முழங்காலில் வைத்து ஆழமாக மூச்சு எடுத்து, சில செக்கன்கள் மூச்சை விடாது பின் படிப்படியாக வெளிவிடல். 5-10 நிமிடங்களுக்கு மீளவும் செய் யவும். ஒரு நாளைக்கு காலை, மாலை இரு தடவைகள் செய்யவும். நிலத்தில் படுத்து இருந்தும் செய்யலாம்.

**7. ஆன்மிகம்**

சமய நம்பிக்கையை வலுவூட்டல்

எல்லாவற்றுக்கும் மேலான சக்தியில் நம்பிக்கை வைத்தல். அவரவரது சமய நம்பிக்கைகள், சடங்குகளை இதில் தனிப்பட்ட குடும்ப, சமூக மட்டத்தில் பயன்படுத்தலாம்.

**தனிநபர்களுடன் வேலை செய்தல்**

1. கதைக்க விரும்புவர்களுடன் அவர்களது பேச்சைச் செவிமடுத்தல்
   குறுக்கீடு இன்மை, துன்பத்தை விளங்கிக் கொண்டதாகக் கூறல். கண்களைப் பார்த்துத் தேற்றுதல். கதைக்கும்போது ஏற்படும் நிசப்தத்தை கதைப்பதால் குழம்பாதீர்கள். நாம் உம்முடன் உள்ளோம் எனக்கூறல். அழுவதை நிறுத்துமாறு கூற வேண்டாம்.
2. கதைக்க விரும்பாதவர்களுடன் உதவ வந்துள்ளதாகக் கூறவும்.
   தொடர்பை ஏற்படுத்த காலை, மாலை வந்தனம் தெரிவிக்கவும். அவர்களது நலன்கள் பற்றிக் கேட்கவும். பிரிவுத் துயர், தனிமை என்பவற்றின் வேதனையைப் பற்றிய அறியவும். துன்பங்களை, விரக்தியை, வெறுமையை உணர் தாகக் கூறவும். இழப்பால் ஏற்பட்ட வெற்றிடம் ஏற்படுத்திய கோபம் அது.

**துன்பத்தைப் பகிரல்**

அன்புக்குரியவர்களின் இழப்புப் பயங்கரமானது; துர்ப்பாக்கியமானது எனக்கூறல்.

இந்த நிலைக்கு அவர்கள் காரண மில்லை என விளக்கி குற்ற உணர்வை நீக்கல். கதைக்காது இது சாத்தியமில்லை.

இவர்களுடன் வாழ்ந்த நினைவுகள் ஞாபகத்தில் உயிருடன் இருக்கும். இவை மீண்டும் வரும். இதனால் பதற்றம் ஏற்படும். அவற்றை வெளிக்கொணர உதவுதல் வேண்டும். சிறுபிள்ளைகளுடன் சித்திரம் வரைதல், களிமண் விளையாட்டு, மணல் விளையாட்டு என்பவை ஆற்றுப் படுத்த உதவும். ஒருவர் கதைக்கத் தொடங்கியவுடன் பின்வருவனவற்றைக் கதைக்கலாம்.

எப்படி இருக்கின்றீர்கள்?, குடும்ப அங்கத்தவர்கள் எப்படி?, உமது குடும்பத்துக்கும் உமக்கும் ஏற்பட்ட இழப்புக்கள் எவை?, இடரின் பின் உதவியவர்கள் யார்?, நீங்கள் மீள்கின்றீர்களா?, நிலைமையை எவ்வாறு சமாளிக்கின்றீர்கள்?, உடல் ஆரோக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கம் எவை?, நித்திரையில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?, எதிர் காலத்தை எவ்வாறு பாக்கின்றீர்கள், வேறு என்ன உதவிகள் தேவை? என்று கேட்கலாம்.

(தொடரும்)



அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

# இறை இரக்கத்தின் ஆண்டாகியது 2016

**2015** ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி தூய கன்னிமரியாவின் அமல உற்பவ பெருவிழாவன்று முதல் - 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி கிறிஸ்து அரசர் பெரு விழாவரை இரக்கத்தின் புனித ஆண்டைக் கொண்டாடும்படி பிரான்சிஸ் பாப்பரசர் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். இந்த இரக்கத்தின் புனிதஆண்டுகுறித்துமேலும்விளக்குகிறது இந்தக் கட்டுரை.

**தந்தையைப் போல் இரக்கமுள்ளவராய் - புனித ஆண்டுக் கருப்பொருள்**

பாப்பரசர் பிரான்சிஸ் பதவி ஏற்ற இரண்டாம் ஆண்டு (2013 - 2015) நிறைவில் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் நிறைவுற்றஐம்பதாம் ஆண்டு (8 டிசெம்பர் 1965 - 8 டிசெம்பர் 1965) நிறைவு தினத்தில், வழக்கத்துக்கு மாறான இந்த இரக்கத்தின் புனித ஆண்டு தொடங்கப்படுகிறது. வழமையாக 25 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் இந்த யூபிலி புனித ஆண்டு, கடந்த தடவை 2000ஆம் ஆண்டு மறைந்த புனிதர் 2ஆம் போண் போல் பாப்பரசரால் பிரகடனப்படுத்தப்பட்டது. இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம், நிறைவுற்ற ஐம்பதாம் ஆண்டு நிறைவை 2015இல் நினைவு கூரும் விதமாக 25 ஆண்டுகள் நிறைவாகும் முன்னர் இப்புனித ஆண்டு அறிவிக்கப்படுவதால், இது வழக்கத்துக்கு மாறான புனித ஆண்டாக அமைகிறது. புனித பவுல் எபேசியருக்கு எழுதிய மடலில் கடவுள் மிகுந்த இரக்கமுடையவர் (எபேசியர் 2:4) என்று தெரிவித்த வசனங்களே இந்த இரக்கத்தின் புனித ஆண்டின் கருப்பொருளாகிறது. உங்கள் வானகத் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல, நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள். (லூக்காஸ் 6:36) என்ற விவிலிய வசனங்களில் இருந்து, தந்தையைப்போல் இரக்கமுள்ளவராய் என்றவார்த்தைகளே இந்த இரக்க ஜூபிலி புனித ஆண்டின் விருது வாக்காகிறது. இந்த விவிலிய திருச்சொற்கள், இந்த ஜூபிலி புனித ஆண்டில் இரக்கம் உள்ளவர்களாய் இருக்க எமக்கும் அழைப்பு விடுக்கிறது.

**கருணையின் வடிவே கடவுள் என்பதை எல்லா மதங்களும் சொல்கின்றன**

கருணையின் வடிவே கடவுள் என்பதை எல்லா மதங்களும் ஆணித்தரமாகச் சொல்கின்றன. கருணையே வடிவான கடவுளைக் கொண்டாட திருஅவை எம்மை இன்று அழைக்கிறது என உயிர்ப்பு விழாவுக்கு அடுத்து வரும் இறை இரக்க ஞாயிறு அல்லது கடவுள் கருணையின் ஞாயிறு அன்று திருவிழிப்பு நிகழ்ச்சியின்




போது திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். உலகின் நான்கு மதங்களையும் கொண்ட நாடு இலங்கை. இங்கு இரண்டு இனங்கள் மட்டுமே வசிக்கின்றன. இங்கு மதங்களுக்கு இடையிலான ஒற்றுமையும், இனங்களுக்கு இடையிலான ஒருமைப்பாடும் மிகவும் தேவையாக உள்ளது. கருணையின் வடிவே கடவுள் என்பதை எல்லா மதங்களும் ஆணித் தரமாகச் சொல்கின்றன என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவிப்பது இங்கு மீள வலியுறுத்தப்பட வேண்டும். இலங்கையில் மத ஒற்றுமையும், இன ஒருமைப்பாடும் ஏற்பட திருத்தந்தை அறிவிக்கும் இறை இரக்கத்தின் ஆண்டு சிறப்பான விதமாக பயன்படுத்தப்பட வேண்டும். இலங்கை அரசியலில் நல்லெண்ணத்துக்கான ஒரு சிறிய சமிக்ஞை தோன்றியுள்ள நிலையில், அதனை வைத்து சுபீட்சமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப சம்பந்தப்பட்ட அனைவரும் உழைக்க வேண்டும்.



**இந்த இரக்கத்தின் புனித ஆண்டு இன்றைய காலத்தின் அவசர தேவை**

இந்த இரக்கத்தின் புனித ஆண்டை திருத்தந்தை அறிவிப்புச் செய்தமை, இன்றைய காலத்தின் அவசர தேவையும், இன்றைய வாழ்நிலைக்கு மிகவும் பொருத்தமும் கொண்டதாக உள்ளது. இன்று எம்மைச்சுற்றி நடக்கும் நிகழ்வுகள் அனைத்தும் மனித மனங்களின் இரக்கமில்லாத் தன்மையையே பெரிதும் படம் பிடித்துக் காட்டுகின்றன. உங்கள் பரலோக தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பதுபோல, நீங்களும் இரக்கம் உள்ளவராய் இருங்கள் என்ற போதனை இன்று பலருக்கு அர்த்தமற்றதாகி விட்டது. எங்கு திரும்பினாலும், எந்த ஊடகத்தைப் பார்த்தாலும் உன்னைப் போல் உன் அயலானை அன்பு செய் என்ற வார்த்தைகளுக்கு எதிரான செய்திகளையே படிக்கவும், கேட்கவும் முடிகிறது. அயலவனை அழிக் கும் நிலை இன்று மாறி குடும்பத்தவர்களை அழிக்கும் நிலைக்கு இந்த இரக்கமில்லாத தன்மை பரவியுள்ளமை மிகவும் வேதனைக்கு உரியதாகும். சகோதரர்கள் அடிபட்டுக் கொள்வதும், ஒருவரை ஒருவர் கொலை செய் வதும், தாய் தந்தையரைத் தாக்குவதும், சிறிய விடயங்களுக்கும் அவர்களைக் கொலை செய்வதும் இன்று அதிர்ச்சி தரும் விடயங்கள் ஆகிவிட்டன. 30 ஆண்டு கால கொடிய போரில் மலிந்து போன மரணங்களின் கதை, இன்று வேறு வடிவில், வேறு விதங்களில் தொடரவே செய்கிறது. கருணையின் வடிவே கடவுள் என்பதை எல்லா மதங்களும் ஆணித்தரமாகச் சொல்கின்றன. எல்லா மதத்தவரும் கருணையின் வடிவே கடவுள் என்பதை தம் வாழ்வு அனுபவத்தில் உணர்ந்து வாழ்ந்து, மற்றவர்களோடு பகிர்ந்து, இந்த உலகை மனிதர்கள் வாழும் புனித பூமியாக, மனிதம் மலரும் ஓர் இடமாக மாற்ற முயல வேண்டும். இந்த ஆண்டு முழுவதிலும் இறைவனின் இரக்கத்தை மனிதர்கள் பெற்று, அதனை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் காலமாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இறை இரக்கத்தை மனிதர்கள் இன்னும் அதிகமாக தம் வாழ்வு அனுபவங்களில் பெறவும், அந்த இரக்கம் அவர்களிடமிருந்து தம்மோடு வாழும் மனிதர்களை நோக்கிப் பாய்ந்தோடவும் வேண்டும் - இறை இரக்கப் பக்தி, இறைவனின் அளவற்ற இரக்கம் பற்றியே எடுத்துரைக்கிறது.

திருத்தந்தையர்கள் 2 ஆம் ஜோன்போல் மற்றும் 23 ஆம் ஜோன் ஆகியோரைப் புனிதர்களாக உயர்த்த, திருத்தந்தை பிரான்சிஸ் இறை இரக்கத்தின் ஞாயிறை ஏன் தேர்ந்தெடுத்தார் என்ற கேள்வி எழுப்பப்பட்ட போது, அவர் கொடுத்த பதில் இன்றைய உலகில்இறைஇரக்கத்தின்தேவையைத் தெளிவாக விளக்குகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வுலகம் என்றுமில்லாத அளவுக்கு இரக்கத்தை இழந்து தவிக்கிறது.

> இலங்கையில் மத ஒற்றுமையும் இன ஒருமைப்பாடும் ஏற்பட திருத் தந்தை அறிவிக்கும் இறை இரக்கத்தின் ஆண்டு சிறப்பான விதமாக பயன்படுத்தப்பட வேண்டும்.

எனவே நாம் வாழும் உலகுக்கு இரக்கத்தின் காலம் மிக அதிகமாகத் தேவைப்படுகிறது" என்று பதில் அளித்தார். இரக்கம் காட்டுவதில் இறைவன் சலிப்படைவதே இல்லை என்பதைத் திருத்தந்தை பிரான்சிஸ் தன் போதனையாலும் சாதனையாலும் செய்து காட்டிக் கொண்டே இருக்கிறார். இவ்வுலகம் ஏங்கித் தவிக்கும் இரக்கத்தையும், அந்த இரக்கத்தின் ஊற்றான இறைவனையும் கொண்டாட ஒரு சிறப்பு ஆண்டை ஒதுக்கி, அதை "இரக்கத்தின் புனித ஆண்டு" என திருத்தந்தை பிரான்சிஸ் அண்மையில் அறிவித்துள்ளமை மிகப் பொருத்தமானதே.

**2016 புத்தாண்டு இறை இரக்கத்தை நிறைவாய்த் தரட்டும்**

2016 புத்தாண்டுப் பெருவிழா - இறைவனின் அன்னையாகிய தூய கன்னி மரியாவின் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. திருக்குடும்ப பெருவிழா, அன்னை மரியாவும் - சூசையப்பரும் - இயேசுவும்திருக்குடும்பமாக வாழ்ந்த வாழ்வை எமது மனக் கண்முன் கொண்டு வந்து, அந்த வாழ்வை எமது குடும்பங்கள் அனைத்தும் வாழ வேண்டும் என அழைப்பு விடுத்து நிற்கிறது. இன்று மனிதர்கள் எதிர்நோக்குகின்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும், குடும்பமே காரணமாக அமைகிறது. குடும்பத்தில் பிள்ளைகள் எவ்வாறு வளர்க்கப்படுகிறார்கள், அவர்கள் முன்பாக பெற்றோர் எவ்வாறு முன்மாதிரியான வாழ்வு வாழ்கிறார்கள், அவர்களுக்கு என்ன விழுமியங்களைக் கற்றுத் தருகிறார்கள், அவர்களை எவ்வாறு எதிர்கால நற்பிரசைகளாக உருவாக்கி விடுகிறார்கள் என்பவை எல்லாம் மிகவும் முக்கியமானவை என இவ்விழா சொல்லி நிற்கிறது. இளைஞர்கள் தாம் எதையும் செய்யலாம், எதற்கும் சுதந்திரம் உண்டு என்ற ஒரு போக்கில் செயற்பட, குற்றச் செயல்கள், கலாசார சீர்கேடுகள் என வன் செயல்கள் பெருகிக்கொண்டே செல்கின்றன. இந்த நிலையில் இவர்களை எப்படி வழிப்படுத்துவது, தமிழ்ச் சமூகத்தை எப்படிக் கட்டியெழுப்புவது என்ற பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இவை எல்லாவற்றுக்கும் தீர்வு முதலில் குடும்பத்திலேயே காணப்பட வேண்டும்.

**2016 ஆம் புதிய ஆண்டு இரக்கத்தின் புனித ஆண்டு**

2016 ஆம் புதிய ஆண்டு, இரக்கத்தின் ஆண்டாக, அமைதியின் ஆண்டாக, அன்பின்ஆண்டாக, அருளின்ஆண்டாகஅனைவருக்கும் அமைய வேண்டுவோம்.

மூன்று தசாப்தகாலப் போர் முடிந்து, இன்னமும் நிலைமை முழுமையாக வழமைக்குத் திரும்பவில்லை. இடம்பெயர் முகாம்களில் வாழுகின்ற மக்கள் மகிழ்வோடும், மனத்திருப்தியோடும், தம் சொந்த மண்ணில், தம் சொந்த வீடுகளில் குடியமர வேண்டும். அரசியல் கைதிகளாக அன்றாடம் உடல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாதிப்படைந்து வேதனை அடைவோர் விடுதலை பெற்று புதிய வாழ்வைத்தொடங்கவேண்டும். மண்ணின் விடுதலைக்காய் போராடி அங்கவீனமுற்றோர், உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்தோர், வாழ்வாதார வழிகள் இன்றி அல்லலுறுவோர் அமைதியான வாழ்வை வளமோடு பெற்றுக்கொள்ள வேண்டும். புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னரும் அமைதியாக வாழ முடியாமல் அல்லலுறுவோர், ஆறுதலும், அமைதியும் பெறவேண்டும். நீண்டகாலப்போரினாலும் அடிக்கடி நிகழ்ந்த இடம்பெயர்வுகளினாலும், வாழ்வின் அனைத்து வ்ளங்களையும் இழந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டோர் திரும்பவும் ஒளியையும், அமைதியையும் பெற வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்கள் எல்லோரும் நீண்ட போராட்டத்தின் மத்தியில் அனைத்தையும் இழந்து அநாதைகளாகவும், அகதிகளாகவும், சுதந்திரம் அற்றவர்களாகவும் வாழுகின்ற நிலைமாறி, எல்லா மக்களும் ஒன்றாக வாழக்கூடிய நல்ல தீர்வைத் தரக்கூடிய தீர்வுத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். அரசியல் யாப்பு மாற்றியமைக்கப்பட்டு, இலங்கையில் வாழுகின்ற இரண்டு இணங்களும், சம உரிமையுடனும் சகோதர உணர்வுடனும் வாழக்கூடிய நிலை வேண்டும். புதிய ஆண்டு இந்த எண்ணங்களுக்கும் ஏக்கங் களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் வழி விடும் விதமாக வந்து பிறந்து அனைவர் உள்ளங்களையும் இல்லங்களையும் ஊரையும் நகரையும் நாட்டையும் மகிழ்வு மிக்கதாய் மாற்ற இறை அருள் வேண்டுவோம்.





கனகராயன்குளம்பகுதியில்உள்ளஆலங்குளம்கிறிஸ்தவஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற நத்தார் தின ஆராதனை நிகழ்வுகள். (ஐ)



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான சர்வதேச சிறுவர் முதியோர் மற்றும் மாற்றுவலுவுள்ளோர் தின விழா அண்மையில் பிரதேச மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் சிறுவனுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்தார். (ஐ-9)






திருகோணமலைகுச்சவெளிகோட்டத்திலுள்ள ஆயிரத்து 500 வறிய மாணவர்களுக்குச் சிறுவர் அபிவிருத்தி நிதியம் (சி.டி.எப்.) நிறுவனம் கடந்த வாரம் ஐந்து நிலையங்களில் வைத்து கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தது.(ஐ-40)



வவுனியாசிவபுரத்தில்கடும்மழையினால்வீடுகள் பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கு நியூசிலாந்தில் வசிக்கும் சூபாரராஜனின் நிதி அன்பளிப்பு மூலம் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் ஊடாக உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ)



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, வவுனியா வடக்கு நெடுங் கேணி பிரதேசத்தில் விசேட தேவைக்குட்பட்டோரின் அமைப்பான இணையும் கரங்கள் அமைப்பில் அங்கத்துவம் பெறும் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளுக்கேகற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், வன்னி மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (ஐ-402)



போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனடா உறங்கா விழிகள் அமைப்பு 2 லட்சத்து 45 ஆயிரம் பெறுமதியான உதவிகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஊடாக வழங்கியுள்ளது.
மேற்படி உதவிகள் பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர்கல்வி மற்றும் பாடசாலைக் கல்வி, மருத்துவ சிகிச்சை, வாழ்வாதாரம் போன்ற தேவைகளுக்கான மாதாந்த கொடுப்பனவுகளாகவும் கல்வி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் இலவசக் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளுக்காகவும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)



வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வுகள் அண்மையில் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றபோது கரைச்சி பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் ப.சிவகரன்மாற்றுவலுவுள்ள பெண்ணுக்குபரிசில் வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம். (ஐ-9)



வழிகாட்டும் உயிர்பூக்கள் அமைப்பினரின் நிதி உதவி மூலம் வவுனியா மாவட்டத்தில் உள்ள ஓமந்தைப்பகுதியில் உள்ள மாவட்டங்குளம் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா இந்த மக்களுக்கான உலர் உணவுப்பொதிகளை வழங்கினார். (ஐ-402)



வடமராட்சி கல்வி வலயத்தினால் கடந்த வாரம் பௌர்ணமி விழா பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் நடன நிகழ்வில் பங்குபற்றிய வடமராட்சி ஆசிரியர்களைப் படத்தில் காணலாம். (ஐ-422)



அண்மையில் பெய்த பெரு மழையால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களின் மாணவர்களுக்கு கற்றல் உப்கரணங்கள் வழங்க புலம்பெயர் நாடுகளில் உள்ள உறவுகள் முன்வந்துள்ளன. இதனடிப் படையில் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் வைத்து அந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன்,முன்னணியின் இளைஞர் அணித் தலைவர் ஆகியோர் வழங்கினர். (ஐ-9)



சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேர்த்திருவிழாவின் போது. (ஐ-9)



போரால் பாதிக்கப்பட்ட மாற்று திறனாளிகளின் பிள்ளைகளுக்கு பாடசாலை அப்பியாசக் கொப்பிகளை நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிமலநாதன் வழங்கிவைத்தார். மன்னார் பாப்பாமோட்டை றோ.க.த.க. பாடசாலை மாண வர்கள் 120 பேருக்கு தலா ஒருவருக்கு 10 அப்பியாசக் கொப்பிகள் என்ற அடிப்படையில் வழங்கிவைக்கப்பட்டது. (ஐ-21)



வடமாகாணசபை உறுப் பினர் எம். பி.நடராஜின் மாகாண சபை குறித்து ஒதுக்கப்பட்ட நிதிப்பங் களிப்புடன் அமைக்கப்பட்ட வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் புதிய பெயர்ப் பலகை திறந்து வைக்கப் பட்டது. (ஐ-402)



ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலகத்தில் இடம் பெற்ற தேசிய நூலக வார நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வும் பரிசில்கள் வழங் கலும் அண்மையில் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றன. பிரதேச சபை செயலாளர் க.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தி னராக அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் சி.காராள பிள்ளையும் சிறப்பு விருந்தினராக அனலைதீவு வைத்தியசாலை பொறுப்பதி காரி மருத்துவர் க.அற்புதராஜாவும் கலந்து கொண்டனர். (ஐ-9)



காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவ பஞ்சரத பவனி பல் லாயிரக்கணக்கான பத்தர்களின் அரோகராக் கோஷத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நடராஜப்பெருமான் பஞ்சமூர்த்திகளுடன் பத்தர்கள் புடைசூழ தேருக்கு எழுந்தருளுவதையும், பஞ்சரதங்கள் பவனி வருவதையும் படங்களில் காணலாம். (ஐ-250)



மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் திரு விழாவில் இடம்பெற்ற சப்பறம் மற்றும் தேர்த் திருவிழாக் காட்சிகள். (ஐ-131)

# ஹெல உறுமயவை சிதைக்க கூட்டு எதிர்க்கட்சி முயற்சி

கொழும்பு, ஜன.3

தேசிய அரசின் பங்களாளிக் கட்சியான ஜாதிகஹெலஉறுமய கட்சிக்குள்அண்மைக் காலமாக கருத்து முரண்பாடுகள் நிலவிவரும் நிலையில், அக்கட்சியில் உள்ள பல முக்கிய உறுப்பினர்களைக் கூட்டு எதிர்க்கட்சியில் இணைத்துக் கொள்ளும்முயற்சிகள்மேற் கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜாதிக ஹெல உறுமயவின்பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்கவுக்கும் அக்கட்சி நாடாளுமன்றஉறுப்பினர்ரத்னதேரருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள்நிலவுவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தநிலையில், சிங்களஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்த ரத்ன தேரர், தனக்கும் சம்பிக்கவுக்கும் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் அது கட்சிக் கொள்கைகளுக்கு முரண்படாது என்று கூறியுள்ளார்.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க வகித்து வந்த மேல்மாகாணஅமைச்சுப் பதவி பறிபோயுள்ள நிலையில்அவரது அமைச்சைமேல் மாகாணமுதலமைச்சர் பொறுப்பேற்றுள்ளார். இதனையடுத்துஜாதிகஹெல உறுமய அரசின் பங்காளியாக இருந்தும் அமைச்சுப் பதவி பறிபோயுள்ளமை தொடர்பில் தனக்கு நியாயமானதீர்வைப் பெற்றுத்தரவில்லை என்று நிஷாந்தஸ்ரீ வர்ணசிங்க தனது கட்சியுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

இவ்வாறுஜாதிக ஹெலஉறுமயவுக்குள்கருத்துமுரண்பாடுகள் வெடித்துள்ள நிலையில், அக்கட்சியின்முன்னாள்உறுப்பினரும் தற்போது கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய செயற்பாட்டாளராகவும்இருக்கும் ஒருவரினால், கூட்டுஎதிர்க்கட்சியில் இணைந்து கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத்தகவல் கிடைத்துள்ளது.

இந்தத் தகவலின் உண்மைத் தன்மை தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இருதரப்பு உறுப்பினர்களையும் நேற்றுத்தொடர்புகொண்ட போதிலும் அது பலனளிக்கவில்லை. (கு-சி)

## மரண அறிவித்தல்கள்



### கந்தசாமி பூபாலரத்தினம்

பருத்தித்துறை புலோலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பூபாலரத்தினம் நேற்று (02.01.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாசிலாமணி- றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக்கணவரும், ரமணன் (சுவிஸ்), செந்தில் (இத்தாலி), பவானி (லண்டன்), ஜெயகணேஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்: குடும்பத்தினர்.
077 4119887, 077 9667849

### நாகலிங்கம் இரத்தினசிங்கம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வவுனியா தவசிகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இரத்தினசிங்கம் 31.12.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்- சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், சுகிர்தமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நிருஜா மற்றும் தருஜா (லண்டன்), நிரூஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவமணி, காலஞ்சென்ற கந்தையா மற்றும் குமாரசிங்கம், சந்திரபாலன், செல்வமணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற மருதனார்மடம் செல்லத்துரை- அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், இரத்தினசிங்கம் சசிகுமாரின் (லண்டன்) அன்பு மாமனாரும், செல்வமலர், பேரின்பநாதன், விமலநாதன், காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், சற்குணநாதன், யோகநாதன் மற்றும் சண்முகநாதன் ரஞ்சிதமலர், திருலோகநாதன், தங்கேஸ்வரநாதன், ரவீந்திரநாதன் (பிரான்ஸ்), பரிமளநாதன் (லண்டன்), திரியோகமலர்,புஸ்பமலர் (ஜேர்மனி), தங்கமலர் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தவசி குளத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக கந்தபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவசி குளம்,
வவுனியா. (66668) (11,15,17)

தகவல்:
ரவீந்திரநாதன் (பிரான்ஸ்) மைத்துனர்.

மண்ணில் 1938 . 06 . 11



விண்ணில் 2015 . 12 . 31

### திருமதி மாக்கிறேட் யேசுரட்ணம்

4ஆம் கட்டை ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி மாக்கிறேட் யேசுரட்ணம் கடந்த (31.12. 2015) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுமுத்து-மரியம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், யேசுரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மனுவல்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சவரிமுத்து மற்றும் குணம் (யேசுதாசன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லூர்த்து ஜெயமலர் (றதி), பிரான்சிஸ்குமார் (சுவிஸ்), உதயகுணசீலன் (சுவிஸ்), றஞ்சித் ஜெயமலர் (றட்ணி-சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், மரியதாஸ் (இலங்கை வங்கி, மானிப்பாய்), மேரி மெக்டலின் (பேபி-சுவிஸ்), ஆஷா (சுவிஸ்), மத்தியூஸ் (சுவிஸ்), றஜனி (டென்மார்க்), றமணி (கனடா), றொபின்ஷன், றொக்ஷினி, ஜோன்சன், அசம்ரா, றொசிற்ரா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற றெஜினா மற்றும் செபமாலையம்மா ஆகியோரின் மைத்துனியும், சூசைப்பிள்ளை, டெனிஸ், அருள்ஞானரட்ணம் (தாதிய போதனாசிரியர்), சுகிர்தா, அலன், சுவேந்தினி ஆகியோரின் பெரியதாயாரும், ஜோன்சன் மரீன், வினுசா, ஜெனோல்ரன் (சுவிஸ்), பிரான்சிஸ்கா (சுவிஸ்), சுஜிவன் (சுவிஸ்), கஜந் தன்(சுவிஸ்), ஜெனிக்சன் (சுவிஸ்), மௌலிகா (சுவிஸ்), கலோ ஜெறோ (கனடா), டெனி (டென்மார்க்), ஆன்லிசா, அனனி, ஆன்சிக்கா, அஸ்ரன், அரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (04.01.2016) திங்கள் காலை 9.00 மணியளவில் இரங்கல் திருப்பலிக்காக மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியினை தொடர்ந்து காக்கைதீவு புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. 077 1532463, 021 3200518

## மரண அறிவித்தல்கள்



### திருமதி லீலாவதி முருகேசு

மலேசியாவை பிறப்பிடமாகவும் மாப்பாணவூரி காரைநகரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி முருகேசு (01.01.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வித்துவான் முருகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், தில்லைக்கரசி, சிவசோதி, செல்வலட்சுமி, சிவநேசன் , சிவானந்தன், காலஞ்சென்ற லலிதா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் பொன்னம்பலம் காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் ஜெயந்தினி, வசந்தா, லோகநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற நேசம்மா மற்றும் Dr.குணரட்ணம், காலஞ்சென்ற கமலாவதி மற்றும் சிவபாக்கியம், சிவராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரமணன், ரமேஸ், பிரியதர்சினி, கேதாரிணி, கேதாரநாதன், யசோதினி, கபிலன், காயத்திரி, திவ்வியன், தீபன், தயாளன், தனஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தருணிகா, பிரணவி, அனுக்கிரகா, கிருசா, அக்சரா, ஆதித்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2016) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாப்பாணவூரி, காரைநகர்.
021 790 1237

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி மகேஸ்வரி நடேசு



வேலணை 06 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 32, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நடேசு 31.12.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணன் - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் நடேசுவின் அன்பு மனைவியும் மகேந்திரன் (யாழ்ப்பாணம்), ரட்ணபவானி (வேலணை), செல்வராணி (கொழும்பு), ரவீந்திரன்(சுவிஸ்), ரட்ணசிறி (பிரான்ஸ்), காந்தன் (ராசன் ரயர்க்கடை - வேலணை), ரட்ணரூபி (யாழ்ப்பாணம்), ரட்ணறாஜி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் பேரின் பரதி, சிவராசா, காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் இந்திரலதா, ஜெயகாந்தன் (ஜெயா பான்சி கவுஸ்) காலஞ்சென்ற ரஞ்சிதா மற்றும் வசந்தி, ஸ்ரீஸ்கந்தராஜா, புஸ்பநாதன் (ரவி) ஆகியோரின் அன்பு மாமியாரும் வைஸ்ணவி, பாலசிறி, அன்பழகன் (சுவிஸ்), அமுதஸ்ரீ, ஜனனி (பிரா ன்ஸ்), ஜெனி, ஜெனித்தா, S.K கிருஷ்ணா (R.K Stores - Colombo) சரண் (லண்டன்), மதிவதனா (லண்டன்), குகமதி (லண்டன்), துஸ்யந்தன் (சுவிஸ்), சோபிகா (சுவிஸ்), கௌசிகன் (சுவிஸ்), சசிரேகா (சுவிஸ்), சசிரூபன் (பிரான்ஸ்), ஜகிர்த்தன் (பிரான்ஸ்), நிதர்சன் (பிரான்ஸ்), ஜெகானி (பிரான்ஸ்), விதுஷன், மிதுஷன், துவாரகன், அஸ்வின் (சுவிஸ்), அட்சாய் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் (வேல ணை கிழக்கு) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு : 077 0488 544
077 6933 180

தகவல்:
குடும்பத்தினர்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது அரசு

கொழும்பு, ஜன.3

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக, நாடாளுமன்றத்தை அரசமைப்பு பேரவையாக மாற்றும் நடவடிக்கை எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகிறது.

எனினும் தற்போதுள்ள அரசமைப்பை மீறிச் செல்வதாக இது அமையாது என்று, அரசமைப்பு நிபுணர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பை நடைமுறைப் படுத்துவதற்கு, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன், பொதுசன வாக்கெடுப்பு அவசியம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புதிய அரசமைப்புக்கு பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள 20 பேர் கொண்ட குழு தமது பணிகளை முன்னெடுத்து வருகிறது.

எதிர்வரும் 3 மாதங்களுக்குள் அதன் அறிக்கை, அரசமைப்பு தொடர்பான அமைச்சரவை உபகுழுவிடம் கையளிக்கப்படும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)


## கண்ணீர் அஞ்சலி

யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த இசை ஆசிரியர்
சபாநாயகம் சசிதரனின்
(யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) தாயார்
திருமதி ஞானேஸ்வரி சபாநாயகம்
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

இசை ஆசிரியர் கழகம்
யாழ் கல்வி வலயம்



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 08.11.1933 | விண்ணில் 04.12.2015

### அமரர் செல்லப்பா தியாகராசா
(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து – எம்மை
சிறப்புடன் வாழவைத்துப் பார்த்திருந்த போது
அழைத்தானே ஆண்டவனும் அவசரமாய்
இவ்வுலகம் போதுமென்று போனீர்களே அப்பா
நிஜமாக நீங்கள் மறைந்து முப்பத்தொருநாள்கள் ஆனதுவோ
நீங்கள் இல்லாமனை பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்து தினம் தினம் நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
ஊருக்கொரு பெருவிருட்சம் உம் நிழலில் நாம் ஆற
கடமை முடிந்ததென்று காலனவன் அழைத்தானோ ?

கடந்த 04.12.2015 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (03.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி(உள்நாடு/ வெளிநாடு) , கண்ணீர்அஞ்சலி, மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிறுவிளான், இளவாலை. | குடும்பத்தினர். 077 940 9025, 077 610 3241



## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் (சின்னப்பிள்ளை) தங்கராசா
(நயினாதீவு - 07)



நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம்(சின்னப்பிள்ளை) தங்கராசா 01.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (67276)(14.16)

| | | |
|---|---|---|
| ...ம் வட்டாரம், ...வு. | தகவல்: க.அமிர்தராஜா(மகன் அப்பன்) அரிநயா ஸ்ரோர்ஸ், நயினாதீவு. | தொடர்புகளுக்கு: 077 188 4566 |


# சுவிற்சர்லாந்து செல்கிறார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜன.3

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த மாதம் சுவிற்சர்லாந்துக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

சுவிற்சர்லாந்தில் நடைபெறும் பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு செல்லவுள்ளார் என பிரதமர் அலுவலகத் தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன.



தற்போது பிரதமர் பிரிட்டனுக்கான தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)


## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் சின்னத்தம்பி

பிறப்பு 14 . 03 . 1941 | இறப்பு 02 . 01 . 2016



மாவடி வீதி, அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் சின்னத்தம்பி நேற்று (02.01.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலன் - சிவப்பி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னப்பொடி - வல்லாத்தை தம்பதியரின் மருமகளும் பசுபதி, தவமணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும் சுகுணா (சுவிஸ்), சுரேஸ் (ஜேர்மனி), சுதர்சன் (லண்டன்), சுமணா (சுவிஸ்), சுகர்ணா, சுபர்ணா ஆகியோரின் அன்புத்தாயாரும் அருண்தவச்செல்வன் (சுவிஸ்), பத்மயோகினி (ஜேர்மனி), விநோதினி (லண்டன்), சிறிதரன் (சுவிஸ்), சந்திரமோகன் (ஜேர்மனி), ஜெகதீசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அர்கவின், அர்வின், அபியானா, றெபேக்கா, ஷாம், ஜோதி, மீரா, றெசாந், ஷாரா, சௌமியா, அபர்ணா, கவிசா, பானிலா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


# மயில் மாளிகை விவகாரம்: லியனகேவுக்கு அழைப்பு

கொழும்பு, ஜன.3

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு, 730 மில்லியன் ரூபா மதிப்புள்ள தனது பீகொக் (மயில்) மாளிகையை கொடுக்க முன்வந்தமை தொடர்பில் விசாரிப்பதற்காக, இலஞ்ச, ஒழிப்பு ஆணைக்குழுவில் நாளை திங்கட்கிழமை முன்னிலையாகுமாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக, கோமஸ்வர வர்த்தகரும் இலங்கைத் தொழிலாளர் கட்சியின் தலைவருமான ஏ.எஸ்.பி லியனகே தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ கொழும்பில் தங்கி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக, ராஜகிரியவிலுள்ள தனது பீகொக் மாளிகையை அவருக்கு வழங்க ஏ.எஸ்.பி லியனகே முன்வந்திருந்தார்.

எனினும், இறுதி நேரத்தில் அந்த மாளிகையை மகிந்த ராஜபக்சவுக்கு கொடுக்கும் தனது முடிவை மாற்றிக் கொண்டதாக தெரிவித்த அவர், இது தொடர்பிலேயே தாம் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். (இ)

# ஜனாதிபதி முறைமையை ஒழிக்க மகிந்த அணி எதிர்ப்பு

கொழும்பு, ஜன.3

புதிய அரசமைப்புத் திருத்தத்துக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்க மகிந்த ஆதரவு அணியான கூட்டு எதிர்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

அரசமைப்புத் திருத்தம் எனும் பெயரில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறைமையை நீக்குவதாக தெரிவித்து நாட்டின் ஒருமைப்பாட்டை சீர்குலைக்க அரசு முற்படுவதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

அடுத்தவாரம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கும் கூட்டு எதிர்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

அரசின் புதிய அரசமைப்புத் திருத்த செயற்பாடுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# முதலாம் தரத்தில் மாணவர் அனுமதி; கல்வி அமைச்சுக்கு எதிராக வழக்கு

## தொடர்வதற்கு தீர்மானம்

கொழும்பு, ஜன.3

முதலாம் தரத்தில் வகுப்பு ஒன்றின் மாணவர்களின் எண்ணிக்கையை 35 இல் இருந்து 40 ஆக கல்வி அமைச்சு அதிகரித்தமைக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னர் கல்வி அமைச்சு, முதலாம் தரத்திற்கான வகுப்பு ஒன்றில் மாணவர்களின் எண்ணிக்கை 35, என சுற்றறிக்கையில் வெளியிட்டிருந்தது.

ஆனால் மீண்டும் அந்த எண்ணிக்கையை 40 ஆக அதிகரித்து, சுற்றறிக்கையை வெளியிட்டமையால் இந்த வழக்கு தொடர உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# கைதாவாரா ஹிருணிகா?

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர கைது செய்யப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகச் சட்ட மா அதிபர் திணைக்கள தகவல்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

தெமட்கொட பிரதேச இளைஞரைக் கடத்திய சம்பவத்துடன் ஹிருணிகாவிற்கு தொடர்பு உண்டு என்பதற்கான போதியளவு சான்றுகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (வ)

# கல்கிசைக் கடலில் மூழ்கி இளைஞர்கள் மூவர் சாவு

கல்கிசைக் கடலில் நேற்றுமுன்தினம் குளிக்கச் சென்ற மூன்று தமிழ் இளைஞர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மூவரில் ஒருவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது என்று கல்கிசைப் பொலிஸார் கூறினர்.

மஸ்கெலியா, பிரவுன்ஸ்வீக் தோட்டத்தைச் சேர்ந்த 21 வயதான ஜெயக்குமார் என்ற இளைஞரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

கடலில் மூழ்கி உயிரிழந்து காணாமற்போன லிந்துள்ள பகுதியைச் சேர்ந்த திருச் செல்வம் சரவண குமார் (வயது - 18) மற்றும் கொழும்பு ஜெம்பட்டா வீதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் (வயது - 21) ஆகியோரின் சடலங்களைத் தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று கல்கிசை பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (த-சி)

# 22 கர்ப்பிணித் தாய்மார்கள் எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்கு சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜன.3

எச்.ஐ.வி. தொற்றிய கர்ப்பிணித் தாய்மார்கள் 22 பேர் இலங்கையில் உள்ளதாக அடையாளம்காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்கள் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதனாலேயே இதனைக் கண்டறிய முடிந்ததாக தேசிய பாலியல் தொற்று நோய் தொடர்பான அமைப்பின் விசேட வைத்தியர் ஜீ. வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள மொத்த கர்ப்பிணித் தாய்மார்களுள் 2015 ஆம் ஆண்டு இரத்த பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோர் அரைவாசிப் பேர் மாத்திரமே எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

2016 ஆம் ஆண்டு சகல கர்ப்பிணித் தாய்மார்களினதும் இரத்தத்தில் எச்.ஐ.வி.



தொற்று காணப்படுகின்றதா என்பதைப் பரிசோதனை செய்வதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை இந்த அமைப்பு முன்னெடுக்கவுள்ளதாகவும் வைத்திய அதிகாரி கூறியுள்ளார்.

இவ்வாறு எச்.ஐ.வி. தொற்றிய தாய்மார்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சகல வசதிகளையும் வழங்க சுகாதார அமைச்சு தயாராகவுள்ளதாகவும் தேசிய பாலியல் தொற்று நோய் தொடர்பான அமைப்பின் விசேட வைத்தியர் ஜீ. வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். (வ)

# தமிழக மீனவர்களை விடுவிக்க மோடியிடம் ஜெயா கோரிக்கை

சென்னை, ஜன.3

அப்பாவித் தமிழக மீனவர்கள் பண்டிகை நாள்களில் தங்கள் குடும்பத்தினருடன் இல்லாமல் தவிக்க நேரிட்டுள்ளது துரதிர்ஷ்டமாகும் என, தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

புத்தாண்டு தினத்தன்றும் இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்களை பிடித்துச் சென்ற துரதிர்ஷ்டவசமான சம்பவத்தை உங்கள் கவனத்துக்கு கொண்டு வர இந்த கடிதத்தை எழுதுகிறேன்.

நாகை மாவட்டம் அக்கரைப் பேட்டையில் இருந்து 29 மீனவர்கள் 3 இயந்திரப் படகுகளில் கடந்த 27ஆம் திகதி அன்று மீன்பிடிக்கச் சென்றனர். அவர்களை 31ஆம் திகதி இரவு இலங்கைக் கடற்படை வீரர்கள் பிடித்துச் சென்று திருகோணமலையில் வைத்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையின் இந்தச் செயல் பாக் ஜலசந்தியில் மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களின் தினசரி வாழ்வாதாரத்தை கடுமையாக பாதிப்பதாக உள்ளது.

எனவே இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியான கச்சதீவை

> அப்பாவி தமிழக மீனவர்கள் பண்டிகை நாள்களில் தங்கள் குடும்பத்தினருடன் இல்லாமல் தவிக்க நேரிட்டுள்ளது துரதிர்ஷ்டமாகும்.

இலங்கையிடம் இருந்து திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

அத்துடன், 1974, 1976ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு அமைவாக கடல் எல்லையை ஏற்கக் கூடாது என்று நான் கூறி வருகிறேன். இது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இலங்கைச்சிறைகளில்ஏற்கனவே 55 மீனவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களது படகுகள் பருவமழையில் நனைந்து சேதமாகி விட்டன.

அப்பாவி தமிழக மீனவர்கள் பண்டிகை நாள்களில் தங்கள் குடும்பத்தினருடன் இல்லாமல் தவிக்க நேரிட்டுள்ளது துரதிர்ஷ்டமாகும். அவர்களது வாழ்வாதாரத்தை விரைவில் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

எனவே தாங்கள் இந்த விவகாரத்தில் தலையிட்டு, இலங்கைச் சிறைகளில் உள்ள 84 தமிழக மீனவர்களையும் அவர்களது 62 மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி வெளியுறவுத்துறைக்கு உத்தர விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த கடிதத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார். (வ)

## தேசிய அரசைக்

வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், கடந்த வாரம் அவசர கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின்முக்கியஉறுப்பினர்களையும், பாதுகாப்பு உயர் அதிகாரிகளையும் இதற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் விவசாய அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அரச தொழில் முயற்சிகள் மற்றும் அபிவிருத்தி அமைச்சருமான கபீர் ஹஸிம், அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், தலதா அத்துகோரள உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர் என்று ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின் பின்னரே கடந்த புதன் கிழமை, இரு பிரதான கட்சிகளின் பொதுச் செயலாளர்களும், அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும்ஜனாதிபதிசட்டத்தரணியுமான ஜயம்பதி விக்ரமரத்ன உள்ளிட்டவர்கள் அரச தகவல் திணைக்களத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த ஊடகச் சந்திப்பின்போது ஹக்கீம், துமிந்த, கபீர் மூவரும் அரசை யாராலும் கவிழ்க்கமுடியாதுஎன்றும், அதற்கானமுயற்சிகள் தோற்கடிக்கப்படும் என்றும் கூளுரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

## வட்டுவாகல் காணி

முதலே குழப்பம் நிலவியது.

குறிப்பாகச் சிங்கள மொழியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உரை நிகழ்த்த அதனை மொழிபெயர்த்த மாவட்ட செயலாளர் சுருக்கமாகக் கூற முற்பட்டவேளை முழுமையாகக் கூறுமாறு மக்கள் கோரினர்.

அதன் பின்னரும் மொழிபெயர்ப்பில் சில குறைபாடுகள் உள்ளதாக உரிமையாளர்கள் தரப்பில் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதோடு தமது கருத்தையும் உள்வாங்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அதன் பின்னர் காணி உரிமையாளர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த மேலதிக செயலாளர், முகாம் அமைந்துள்ள பகுதியின் காணி விடுவிப்புத் தொடர்பில் பெப்ரவரி மாத இறுதிக்குள் முடிவை வெளியிடுவதாகத் தெரிவித்ததோடு, பாதுகாப்புக் காரணங்களையும் கருத்திற் கொண்டே சில முடிவுகள் எட்டப்படும். காணி விடுவிப்பு தொடர்பிலும் முடிந்தளவு கவனத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் ஒருவர் தெரிவிக்கையில், இந்தக் காணியை இழந்து தற்போது அந்தரித்த நிலையில் வாழ்கின்றோம் . போரின் பின்னர் இந்தக் காணிக்காகப் பல தடவை அலைந்துவிட்டோம். இனியும் அலைய முடியாது. பாதுகாப்புக் காரணம் கூறப்படுகின்றது மக்களின் பாதுகாப்புக்குத் தான் படையினர் வேண்டும். மக்களை வெளியேற்றி என்ன பாதுகாப்பு முறைமை இருக்க முடியும்–என்று தெரிவித்தார். (த-101

## ஜனநாயகம்

டத்தை நாம் திரும்பிப் பார்க்கின்றபோது, இலங்கை மக்கள் என்றவகையில்நாம்மகிழ்ச்சியடையக்கூடிய பல்வேறு வெற்றிகளைப் பெற்றுள்ளோம். இந்த நாட்டில் ஆட்சிக்கு வந்த எல்லா அரச தலைவர்களும் அந்தந்தக் காலப் பகுதியில் தமது யுகப் பணியைச் சிறப்பான முறையில் நிறைவேற்றியுள்ளதுடன், எமது ஆட்சிக்காலப் பகுதியில் தாய் நாட்டை உலகின் ஒரு சிரேஷ்ட தேசமாகக் கட்டியெழுப்பும் பொறுப்பை நாம் நிறைவேற்றுவோம்.–என்றார். (த-4)

## தங்கத்தின்

தெரிவித்துள்ளார்.

தங்கம் இறக்குமதிக்கான வரியை 7.5 வீதத்தினால் குறைக்க அரசு முடிவு செய்துள்ளதால் இந்த விலை வீழ்ச்சி இருக்குமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய ஒரு பவுண் தங்கத்தின் விலை 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் வரை குறைவடையும் எனவும் தேசிய ஆபரணங்கள் அதிகார சபையின் முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார். (த-வ-10

## டிசெ. 31 முதல்

களைச் சட்ட ரீதியாகச் சுவீகரிக்கும்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பணிகளை அந்தந்தப் பிரதேச செயலாளர்களே முன்னெடுக்க வேண்டியிருந்ததால், கால தாமதம் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையில் அப்போதைய காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், வடக்கு – கிழக்கிலுள்ள ஒவ்வொரு மாவட்டச் செயலகங்களிலும், காணி சுவீகரிப்புக்குத் தனியான அலுவலகங்களைத் திறந்தார்.

யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களில், இந்த அலுவலகங்கள் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் திறந்து வைக்கப்பட்டன. பிரதேச செயலாளர்களிடமிருந்து காணி சுவீகரிப்பு அதிகாரம் பிடுங்கப்பட்டது. படையினர் கோரிக்கை விடுக்கும் காணிகளை விரைந்து சுவீகரித்துக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு, இந்த அலுவலகங்கள் செயற்பட்டன.

இதன் திணைக்களத் தலைவர்களாக ஓய்வுபெற்ற அதிகாரிகளே ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களின் ஒப்பந்தம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முடிவுறும் நிலையில் இருந்தது. ஆனால் திடீரெனக் காணி அமைச்சினால், அவர்களது ஒப்பந்தங்கள் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படுவதாகத் தெரிவித்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்த அலுவலகங்களின் பணிகள் மீளவும் பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## திருட்டு, கொள்ளைகளுடன்

அவர்களின் முகம் பதிவாகியிருந்தது. குறித்த முகத்தைப் பொலிஸார் ஊடகங்களில் வெளியிட்டிருந்தனர். கடந்த சில நாள்களாக குறித்த சந்தேகநபர்களைப் பொலிஸார் தேடி வந்த நிலையில் நேற்று மாலை வல்வெட்டித்துறை ஆதி கோவில் பகுதியில் குறித்த சந்தேகநபர்கள் பதுங்கி இருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீடின் தலைமையிலான பொலிஸ்குழு குறித்த சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

அவர்களிடம் தொடர்ந்த விசாரணையை அடுத்து வல்வெட்டித்துறைப் பகுதியில் அண்மைக் காலமாக பல்வேறு இடங்களில் திருடப்பட்ட அலைபேசிகள் மற்றும் பொருள்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவரும் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும்,16 மற்றும் 20 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் ஏற்கனவே திருட்டு, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டனரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணையை மேற் கொண்டு வருகின்றனர். (த-109)

## வலி வடக்கிலுள்ள

கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர், வலி. வடக்கில் பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். படிப்படியாக இது மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். இதற்கு இராணுவத் தரப்பினர், தமது முகாம்களை இடமாற்றம் செய்வதற்கு நிதி தேவை என்று கோரியுள்ளனர். இதற்கு மீள்குடியேற்ற அமைச்சு நிதி ஒதுக்கீடு தம்மிடம் இல்லை என்று தெரிவித்துள்ளது. இதற்கு ஜனாதிபதியின் செயலாளர், அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார். அத்துடன் இராணுவத்தினரின் முகாம்களை வேறு இடத்திற்கு மாற்றுவதற்குப் பொருத்தமான இடங்களைப் பார்க்குமாறு படைத் தலைமையிடம் கூறினார் என்று நம்பகரமாக அறியமுடிந்தது. (த-5)

## முதலாவது

பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெரும்பாலும் இன்று நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் பல அமைச்சர்கள் அமைச்சின் செயலாளர்கள் வருட இறுதியை முன்னிட்டு வெளிநாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளமையால் கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தை ஏற்பாடு செய்ய முடியாமல் போனது என அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (த-வ)


## உயர்தரப் பரீட்சை

வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம் பெற்ற ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை இலங்கைப் பரீட்சைகள் திணைக் களத்தின் இணையத்தளமான www.doenets.lk என்ற முகவரியில் இன்று பார்வையிட முடியும்.

அத்துடன் பரீட்சைப் பெறுபேறுகளை நாளை நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவைப்பதோடு தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அனைத்தையும் அவர்களின் முகவரிக்குத்தபால்மூலம் அனுப்பிவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


(த-வ)



# முடிவில்லாமல் முடிந்த ஆட்டம் மழையால் நியூசி. பாதுகாப்பில்

இலங்கை- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் மழை காரணமாக முடிவில்லாமல் முடிவடைந்துள்ளது.
ஆட்டம் ஆரம்பமாகும் முன்னர் இருந்தே கடும் மழை பொழிந்ததால் 24 பந்துப் பரிமாற்றமாக மட்டுப்படுத்தப்பட்டு தாமதமாக ஆரம்பிக்கப்பட்டது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மத்தியூஸ் களத்தடுப்பைத் தீர்மானிக்க முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 9 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 75-3 என்றிருந்தபொழுது மீண்டும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.
தொடரில் நியூசிலாந்து 2:1 என்று முன்னிலையில் இருப்பதால் குறைந்தபட்சம் தொடரைச் சமனிலையில் முடிக்க வேண்டுமாயின் நாளை மறுதினம் நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்தில் இலங்கை வென்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளது. (ம)

# விளையாடும் பதினொருவரில் இடம்பிடித்த மொகமட் ஆமிர்



ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் சிக்கி தண்டனையையும் தடைகளையும் கடந்து வந்த பாகிஸ்தானின் இடது கை வேகப் பந்து வீச்சாளர் மொகமட் ஆமீர் மீண்டும் ரி-20 மற்றும் ஒருநாள் அணிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
நியூசிலாந்து தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற லோட்ஸ் டெஸ்ட் ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் சிக்கிய ஆமிர் அதன் பிறகு 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டார். தற்போது மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார். இதனால் பாகிஸ்தான் அணி நிர்வாகம் உற்சாகம் அடைந்துள்ளது. ரியாஸும், ஆமீரும் ஒரு அபாயகரக் கூட்டணி அமைப்பார்கள் என்று பாகிஸ்தான் ரசிகர்களிடையே ஆர்வம் தலைதூக்கியுள்ளது. ரி-20 அணிக்கு அப்ரிடி தலைவராகவும், ஒருநாள் அணிக்கு அசார் அலி தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
மொகமட் ஆமிர் இதுவரை 14 டெஸ்ட் ஆட்டங்களில் 51 இலக்குகளையும், 15 ஒருநாள் ஆட்டங்களில் 25 இலக்குகளையும், 18 ரி-20 ஆட்டங்களில் 23 இலக்குகளையும் கைப்பற்றியுள்ளார்.
நியூசிலாந்துக்கு எதிரான தொடர் ஜனவரி ஆம் திகதி ஆரம்பமாகிறது. 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடர் முதலாவதாகவும், 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் இரண்டாவதாகவும் நடைபெறவுள்ளன.
பாகிஸ்தானின் ஒருநாள் அணி விவரம்: அசார் அலி (தலைவர்), அகமது செசாத், கபீஸ், மலிக், ஆசாத் சபிக், பாபர் ஆசம், சொயப் மக்சூத், கோசர், இமாத் வாஸும், அன்வர் அலி, சர்பராஸ் அகமது, வகாப் ரியாஸ், ரசத் அலி, மொகமது இர்பான், ரிஸ்வான், ஆமிர்.
பாகிஸ்தானின் ரி-20 அணி விவரம்: அப்ரிடி (தலைவர்), செசாத், கபீஸ், மக்சூத், மலிக், உமர் அக்மல், இப்திகார் அகமட், இமாத் வஸும், அன்வர் அலி, ஆமீர் யாமின், சர்பராஸ் அகமட், வகாப் ரியாஸ், உமர் குல், மொகமது ரிஸ்வான், சாத் நசீம், மொகமட் ஆமிர். (ம)

# இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்த எல்கருக்கு வில்லியர்ஸ் பாராட்டு



இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்டின் முதல் இன்னிங்ஸில் இறுதி வரை ஆட்டமிழக்காது களத்தில் நின்ற தென்னாபிரிக்க வீரர் எல்கருக்கு வில்லியர்ஸ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.
இந்த டெஸ்ட்டில் தென்னாபிரிக்கா 241 ஓட்டங்களால். படுதோல்வியடைந்தது. ஆனால் அந்த அணியின் ஆரம்ப வீரரான எல்கர் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துசகல இலக்குகளையும் இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 214 ஓட்டங்களில் சுருண்டது. அந்த அணியின் சார்பாக ஆரம்ப வீரராக களமிறங்கிய எல்கர் இறுதி வரை ஆட்டமிழக்காது 118 ஓட்டங்களைப் பெற்றார். இந்த அபார ஆட்டத்துக்கு வில்லியர்ஸ் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.
எல்கர் தொடர்பாக கருத்துத் தெரிவித்த வில்லியர்ஸ் - எல்கரின் போராட்டத் தன்மையுடன்கூடிய இன்னிங்ஸ் அபாரமாக அமைந்தது. (ம)





# மட்ரிட்டை முந்திய பார்சிலோனா

ஒருவருடத்தில் அதிக கோல்களைப் பதிவுசெய்ய கழகம் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளது பார்சிலோனா கழகம்.
ஒருவருடத்தில் அதிக கோல்களைப் பதிவுசெய்ய கழகம் என்ற சாதனையை 178 கோல்களுடன் ரியல் மட்ரிட் வைத்திருந்தது.
இந்தச் சாதனை 2014ஆம் ஆண்டில் பதியப்பட்டிருந்தது. இந்த சாதனையை முடியடித்த பார்சிலோனா கழகம் 180 கோல்களை கடந்த வருடத்தில் பதிவுசெய்துள்ளது. லா லிகா தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா, ரியல் பெடிஸ் அணிகள் பலப்பரிட்சை நடத்தின.
4:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றிபெற்றது. இதன்மூலம் கடந்த வருடத்தில் 180 கோல்களைப் பதிவுசெய்து ஒரு வருடத்தில் அதிக கோல்களைப் பதிவுசெய்த கழகம் என்ற சாதனையை நிலை நாட்டியுள்ளது. (ம)


# தலைக்கவசத்துடன் பணிபுரிந்த நடுவர்

## பாதுகாப்பே அவசியம் எனவும் தெரிவிப்பு

ஆஸ்திரேலிய நடுவரான ஜெராட் அபூட், கிரிக்கெட் ஆட்டங்களில் தலைக் கவசமணிந்து நடுவர் பணியில் ஈடுபட்ட முதலாவது நடுவராக மாறியுள்ளார். ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவரும் கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடரில் மெல்பேர்ண் றெனிகேட்ஸ் அணிக்கும் பேர்த் ஸ்கோர்சர்ஸ் அணிக்குமிடையிலான ஆட்டத்திலேயே அவர் இவ்வாறு தலைக்கவசத்துடன் பணிபுரிந்தார்.
இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் - வீரர்களுக்கு மட்டுமல்ல நடுவர்களுக்கும் பாதுகாப்பு அவசியம். அதிலும் குறிப்பாக ரி-20 ஆட்டங்களில் நடுவர்கள் கட்டாயம் தலைக்கவசம் அணியவேண்டும். ஏனெனில் ரி-20 ஆட்டங்களில் வீரர்கள் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி வருகின்ற நிலையில், அதிக பலத்துடனும் பந்தை அடிக்கின்றனர்- என்றார்.
துடுப்பாட்ட வீரர்கள் பயன்படுத்தும் தலைக்கவசத்தையே அவர் அணிந்திருந்த போதிலும், ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை, இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை, சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஆகிய மூன்றும் இணைந்து நடுவர்களுக்கான தலைக்கவசமொன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. (ம)



# பீபாவைப் பிரித்து நிர்வகிக்க இப்ராகிம் காலிபா திட்டம்



பெப்ரவரியில் இடம்பெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத் (பீபா) தேர்தலில்தாம் வெற்றிபெற்றால் அச்சம்மேளனத்தை இரண்டாகப் பிரித்து நிர்வகிக்க திட்டமிட்டுள்ளதாக முன்னணி வேட்பாளரான சேக் சல்மான் பின் இப்ராகிம் அல் காலிபா தெரிவித்துள்ளார்.

ஊழல், மோசடிகள் காரணமாக பலத்த எதிர்ப்புக்களையும் சவால்களையும் எதிர்கொள்ளும் பீபா, தனது புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை பெப்ரவரியில் நடத்தவுள்ளது. இந்தத் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான அதிக வாய்ப்புக்களைக் கொண்டவராக சேக் சல்மானே கருதப்படுகிறார். இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அவர் நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்காக, பீபாவை இரண்டாகப் பிரிவுபடுத்துவதே தனது நோக்கம் எனத் தெரிவித்தார். விளையாட்டின் நிர்வாகத்துக்காக ஒரு பிரிவும், வணிகத்துக்காக மற்றொரு பிரிவுமாக, இது அமையுமென அவர் குறிப்பிட்டார். 'கால்பந்தாட்ட பீபா', 'வணிக பீபா' என அவை அழைக்கப்படுமெனவும், நிதியையும்வணிகத்தையும் வேறுவேறாக பிரிப்பதனூடாக மாத்திரமே, கால்பந்தாட்டம் சிறப்பான முறையில் நிர்வகிக்கப்படுவதை உறுதிப்படுத்த முடியுமெனவும் அவர் இதன்போதுதெரிவித்துள்ளார். ஊழல், மோசடிகள் காரணமாக சர்வதேசகால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவரான செப் பிளாட்டர், ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் பிளாட்டினி ஆகிய இருவருக்கும் தலா 8 வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



## இந்திய ஆடுகளங்களைப் பற்றி மிக்கி ஆர்தரின் கருத்து

இந்திய ஆடுகளங்களால் தென்னாபிரிக்க வீரர்கள் நம்பிக்கையை இழந்து விட்டனர் என்று அந்த அணியின் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார். இந்திய ஆடுகளங்களைப் பற்றி நேர்மறையான கருத்துக்களை ஆர்தர் எப்பொழுதும் கொண்டிருப்பவர் என்பதும் கவனிக்கத்தக்க விடயம்.

தென்னாபிரிக்க அணி சமீபத்தில் இந்தியா சென்று மூன்று வகை கிரிக்கெட்டிலும் விளையாடியது. ஒருநாள் மற்றும் ரி-20 தொடரை வென்ற தென்னாபிரிக்க அணிக்கு டெஸ்ட் தொடர் சோதனையாக அமைந்தது. டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி 0-3 என படுதோல்வியடைந்தது. அத்துடன் அந்த அணியின் வீரர்கள் முற்றிலுமாக நிலைகுலைந்து போனார்கள். அவர்கள் இந்திய பந்து வீச்சாளர்களைச் சமாளிக்க முடியாமல் திணறினார்கள். இந்த திணறல் தற்போது இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலும் நீடிக்கிறது. முதல் டெஸ்ட்டில் தென்னாபிரிக்க அணி 241 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. தொடக்க வீரர் எல்கர் மட்டும் சிறப்பாக விளையாடி முதல் இன்னிங்ஸில் சதம் அடித்தார். இருந்தாலும் இந்தியாவுக்கு எதிரான தோல்வி அதிர்ச்சியில் இருந்து வீரர்களால் முற்றிலுமாக மீளவில்லை. இந்த நிலையில்தென்னாபிரிக்க வீரர்கள் நம்பிக்கையை இழந்து விட்டனர் என்று அந்த அணியின் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆர்தர் தெரிவிக்கையில்; "இந்தியாவின் ஆடுகளம் மிகவும் கடினமாக இருந்தது. அதனால்தான் ஒட்டுமொத்த துடுப்பாட்ட வீரர்களும் தங்களது சுய நம்பிக்கையை எப்படி இழந்தார்கள் என்று எம்மால் பார்க்க முடிந்தது. நான் ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக இருந்தபோது இதுபோன்ற தோல்வி ஆஸ்திரேலியாவுக்கும் ஏற்பட்டது. இதுபோன்ற ஆடுகளம்தான் அப்போது இருந்தது. இதனால் ஆஸ்திரேலியாவும் 0-4 என மண் கவ்வியது. இரு நாட்டு அணி வீரர்களும் தடுமாறினார்கள். தீவுகளின் பயிற்சியாளராக இருந்தபொழுதும் இதே நிலைமையே- என்றார். (ம)

## நியூட்டனின் தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 3

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கில் உள்ள அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் மின் ஒளியில் நடத்தும் 7 வீரர்கள் பங்கு பற்றும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து கருணாகரன் அணி மோதிக் கொண்டது. இதில் டயமன்ஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கலைமதி அணி மோதிக் கொண்டது. இதில் கலைமதி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து சிறிஅம்பாள் அணி மோதிக்கொண்டது. இதில் பொம்மர்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் யங்கம்பன்ஸ் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் டயமன்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி அணியை எதிர்த்து கருணாகரன் அணி மோதிக் கொண்டது. இதில் கருணாகரன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23-422)

## இன்றைய மோதல்கள்

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சென்.ஜோசப் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து வேலணை ஐயனார் அணி மோதவுள்ளது.

**நியூட்டன் வி.கழகத் தொடர்**

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் மின் ஒளியில் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கருணாகரன் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து கலைமதி அணி மோதவுள்ளது. (ம-23)

**கரைச்சி கால்பந்தாட்டத் தொடர்**


கரைச்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையிலான 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் அணியை எதிர்த்து விளைபூமி அணியும், காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பளை ஐக்கிய அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணியும், காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கனகபுரம் அணியை எதிர்த்து லக் கிஸ்ரார் அணியும் முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயதாரகை அணியை எதிர்த்து இளைஞர் வட்ட அணியும் மோதவுள்ளன. (ம-23)

## ஆஸியின் அணுகுமுறையில் மாற்றம்; இரு சுழலுடன் இன்று களமிறங்குகிறது

ஆஸ்திரேலிய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் சிட்னியில் இன்று இடம்பெறவுள்ள நிலையில், இந்த ஆட்டத்தில் இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் ஆஸ்திரேலியா களமிறங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



சிட்னி ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமானதாக அமையுமென எதிர்பார்க்கப்படுவதோடு வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஓய்வளிப்பதற்காகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. பீற்றர் சிடிலும், கசில்வூட்டும் உபாதைகளுக்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியிருந்த நிலையில், அவர்களில் ஒருவருக்கு ஓய்வு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக கணுக்கால் உபாதையை வெளிப்படுத்திய பீற்றர் சிடில் இன்றைய ஆட்டத்தில் விளையாடமாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இத்தொடரின் பின்னர் ஆஸ்திரேலிய அணி இலங்கைக்கு வரவுள்ள நிலையில் இரண்டாவது சுழற்பந்து வீச்சாளரின் திறமையைப் பரிசீலிப்பதாகவும் இந்த முயற்சி அமையவுள்ளது. (ம)



# ஸ்ரெயினுக்குச் சிக்கல்

டெஸ்ட் ஆட்டங்களில் அதிக இலக்குகளை வீழ்த்திய தென்னாபிரிக்க வீரர் என்ற சாதனையை நிலைநாட்டுவதற்கு ஸ்ரெயினுக்கு இன்னும் 16 இலக்குகளே தேவைப்படுகிறது. ஆனால் இந்தச் சாதனையை தென்னாபிரிக்க - இங்கிலாந்து தொடரில் வைத்து நிலைநாட்ட அவருக்குச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

தென்னாபிரிக்க - இங்கிலாந்து தொடரில் முதலாவது டெஸ்ட்டில் தோள்மூட்டில் ஏற்பட்ட வலியினால் ஸ்ரெயின் பந்துவீச பெரும் சிரமப்பட்டார். இதனால் குறித்த ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் அவர் பந்து வீசவே இல்லை. தற்பொழுது தென்னாபிரிக்கா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் நடைபெற்று வருகிறது. இதில் ஸ்ரெயினுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆட்டத்தில் ஸ்ரெயின் களமிறங்கினால் இரண்டு ஆட்டங்களில் 16 இலக்குகளைக் கைப்பற்ற வேண்டிவரும். அதாவது ஓர் ஆட்டத்தில் சராசரியாக எட்டு இலக்குகளை வீழ்த்த வேண்டியிருக்கும். இவ்வாறான பெறுபேறை எட்டுவதற்கு பெரும்பாலும் சாத்தியம் இல்லை என்று சொல்லப்படுகிறது. இதனால் தென்னாபிரிக்க - இங்கிலாந்து தொடரில் ஸ்ரெயின் அதிக டெஸ்ட் இலக்குகளை வீழ்த்திய தென்னாபிரிக்க வீரர் என்ற மைல் கல்லை எட்டுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. 422 இலக்குகளை வீழ்த்திய பொலக் முதலிடத்திலும் 406 இலக்குகளை வீழ்த்திய ஸ்ரெயின் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். (ம)

# ரி-20 தொடரில் யுவராஜ் மீண்டும் வந்தது ஆஸிக்கு ஆபத்து என்கிறார் கில்கிறிஸ்ட்

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தமாதம் நடைபெறவுள்ள ரி-20 தொடரில் நீண்டகால இடைவெளியின் பின்னர் இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார் யுவராஜ். இந்திய அணியில் யுவராஜின் மீள்வருகை ஆபத்தான விடயம் என்று குறிப்பிட்டுள்ளார் ஆஸியின் முன்னாள் மிரட்டல் துடுப்பாட்ட வீரரான கில்கிறிஸ்ட்.



வீரர் ஒருவர் அணியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் மீண்டும் சேர்க்கப்பட்டமைக்கு அதிக அளவில் கிரிக்கெட் பிரபலங்கள் பலரும் கருத்துத் தெரிவிப்பது இதுவே முதல் தடவை. இந்தப் பட்டியலில் இணைந்துள்ளார் ஆஸியின் முன்னாள் வீரரான கில்கிறிஸ்ட். யுவராஜ் தொடர்பாக அவர் தெரிவிக்கையில் - யுவராஜ் ஓர் ஆபத்தான வீரர். அவரின் ஆட்ட நுணுக்கங்களை ஆஸியின் பந்துவீச்சாளர்கள் துல்லியமாக இனங்காண வேண்டும். ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் மிரட்டுகின்ற ஒரு சில வீரர்களில் யுவராஜ் முக்கியமானவர். அவரின் கடந்த கால பெறுபேறுகள் இதற்கு சாட்சி. யுவராஜின் மீள்வருகை ஆஸ்திரேலியாவுக்கு ஆரோக்கியமானது அல்ல. அதே நேரம் தொடரை ஆஸ்திரேலியா இழக்காது-என்றார். (ம)



கடந்த வருடம் நடைபெற்ற மாகாண மட்ட வேகநடைப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற மன்னார் பெரியகமத்தைச் சேர்ந்த சங்கருக்கு மன்னார் மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினால் காலணி வழங்கப்பட்டது. (ம-23)

# ஐ.பி.எல். தொடரில் அதிக சம்பளம் பெறும் வீரராக விராட் கோக்லி

ஐ.பி.எல். தொடரில் இந்த வருடம் அதிக சம்பளம் பெறும் வீரராக விராட் கோக்லி காணப்படுகிறார்.

நடப்பு வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் அணிகள் ஐந்து பேரை தக்க வைத்துக் கொள்ளலாம். அதன்படி முதல் நபரை 12.5 கோடி ரூபாவிலும், 2ஆவது வீரரை 9.5 கோடி ரூபாவிலும், 3ஆவது வீரரை 7.5 கோடி ரூபாவிலும், 4ஆவது வீரரை 5.5 கோடி ரூபாவிலும், ஐந்தாவது வீரரை 4 கோடி ரூபாவிலும் தக்க வைத்துக் கொள்ளலாம். அதன்படி ஒரு அணி தனது ஏலத் தொகையான 66 கோடி ரூபாவில் இருந்து ஐந்து வீரர்களுக்கு 40 கோடி ரூபா செலவழிக்க வேண்டும். மீதமுள்ள 26 கோடி ரூபாவில் மற்ற வீரர்களை ஏலத்தில் எடுக்க வேண்டும். அதன்படி விராட் கோக்லியை ரோயல் சலஞ்சர்ஸ் அணி முதல் நபராக 12.5 கோடி ரூபாவுக்கு தக்க வைத்துள்ளது. ஆனால் அவருக்கு உண்மையான சம்பளம் 15 கோடி ரூபா என்று குறிப்பிட்டுள்ளது. 12.5 கோடி ரூபாவுக்கு டோனியை எடுத்த புனே அணி அவருக்கும் கோக்லிக்கு நிகரான சம்பளத்தை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



# உதயசூரியனுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 3

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு பாரதி அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதிக் கொண்டது. இதில் உதயசூரியன் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

Personal Class-கணினி
உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
Ms office 2013, Internet & E-mail,
Web Design, Graphic Design,
DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker
TP:0779672038 ஆசிரியர்: KRC

வேலை வாய்ப்பு
தொலைத்தொடர்பு நிறுவனத்தில்
பணிபுரியக்கூடிய பெண் பணியாளர்கள்
தேவை. நேரில் வரவும்.
செல்வா தொலைத்தொடர்பு நிறுவனம்,
124 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(பொஸ்கோ பாடசாலை சந்தி)

விஞ்ஞான வகுப்புக்கள்
Tamil and English Medium Group Classes
College of Science - ஈச்சமோட்டை
(தரம் 06 - தரம் 11 வரை)
Brain Power Institute - குருநகர்
(தரம் 09 - தரம் 11 வரை, தனியாக அனுமதி வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு:
ஆசிரியர் S.Kobinath (St.Patrick's College)
077 225 9542

MBA
IIS CITY CAMPUS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
கல்வியாண்டு 2016/17 க்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆர்வமும் தகுதியும் உள்ள மாணவர்கள் தங்கள் பதிவுகளை 15/01/2016 க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
மேலதிக விபரங்களுக்கு
071 777 5666
021 4900 900
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

BTEC-HND in Business Management
IIS CITY CAMPUS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
கல்வியாண்டு 2016/17 க்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆர்வமும் தகுதியும் உள்ள மாணவர்கள் தங்கள் பதிவுகளை 15/01/2016 க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
மேலதிக விபரங்களுக்கு
071 777 5666
021 4900 900
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

FLC
FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற்கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி. French
0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி.
ஆரிய குளத்துக்கு அண்மையில்
ஆரம்பம் : 09.01.16 சனி 2 மணி
TP: 021 3202973
சாவகச்சேரி
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

இறுதிச் சந்தர்ப்பம்
CIMA-UK ENGINEERING-USA
BIT - University of Colombo
புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள்
கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள், பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர், வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும், மென்பொருள் நிறுவனங்களிலும் அதிக சம்பளத்துடன் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 10 ஜனவரி. புலமைப் பரிசிலிற்கும் மேலதிக விவரங்களுக்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி, பிறந்த திகதி என்பவற்றை 772395895 இற்கு sms செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக் கட்டணம், பரீட்சை கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விவரங்களை யாழ். பல்கலைக் கழகத்துக்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில். A/L 2015 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.